# இஸ்லாம்

## தரம் - 13



## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

சமயக் கல்வித் துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# இஸ்லாம்

## தரம் 13

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

(2010ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்)

**சமயக் கல்வித் துறை**
**கலைத்திட்ட அபிவிருத்திப் பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**2010**

© தேசிய கல்வி நிறுவகம்
முதலாம் பதிப்பு - 2010

சமயத்துறை
கலைத்திட்ட அபிவிருத்திப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

பதிப்பகம்:

# முகவுரை

தேர்ச்சிகளை அடித்தளமாகக் கொண்ட கலைத்திட்டத்தைப் பாடசாலை முறைமையில் அறிமுகம் செய்யும் பணி 13ஆந் தரத்துக்குரிய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை அறிமுகங் செய்வதுடன் பூர்த்தியடைகின்றது. 12ஆம் 13ஆந் தர மாணவ மாணவியர்கள் பல்கலைக்கழகப் பிரவேசத்துக்காக நிலவும் கடுமையான போட்டிக்கு உள்ளாவதால் நிதமும் கணிசமான அழுத்தத்துக்கு ஆளாகின்றனர். க.பொ.த. உயர் தரத்துக்காக புதிய கலைத்திட்டத்தை முதல் தடவையாகப் பயன்படுத்தும் நிலையில் அவ்வழுத்தம் மேலும் அதிகரிக்கும். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் உங்களது கைகளை அடையும் இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது பாடத்திட்டத்தைப் போன்றே முக்கியமான தாகும். இங்கு ஆசிரியர் முதன்மை யாகக் கவனத்திலெடுக்க வேண்டிய மூன்று அம்சங்கள் உள்ளன. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் பாடத்திட்டத்துடன் முழுமையாகப் பொருந்தியமைந்திருத்தல், கலைத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடிப்படையாகக்கொண்டு கலைத்திட்டத் தத்துவத்தையும் தூரநோக்கையும் முதன்மையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருத்தல், 12ஆம் 13ஆந் தர மாணவர்களிடத்தே எதிர்பார்க்கப்படும் அடைவு மட்டத்தை மனதிற்கொண்டு தயாரிக்கப்பட்டிருத்தல் ஆகியனவே அவையாகும். எனவே இதனை நன்கு உசாவுதல் ஆசிரியரின் இன்றியமையாத பணியும் பொறுப்புமாகும்.

மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களையும் உங்களது கவனத்துக்குக் கொண்டு வருதவற்காகத் தேசிய கல்வி நிறுவகம் 13ஆந் தரத்தில் கற்பிக்கும் சகல ஆசிரிய ஆசிரியைகளுக்கும் உரிய பயிற்சியை வழங்கும் பணிகளையும் செய்து வருகின்றது. தொடர்ச்சியாக நடத்தப்படும் இப்பயிற்சி அமர்வுகளில் ஆசிரியர்கள் பங்குபற்றுவது இன்றியமையாததாகும். இங்கு தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் கோட்பாடுகள், செயன் முறைகளை விளங்கிக்கொள்வதற்கு அப்பயிற்சி பெரிதும் துணையாக அமையுமென்பதே அதற்கான காரணமாகும். குறிப்பாக பாடசாலை மட்ட மதிப்பீட்டுச் செயற்பாடுகளை தேர்ச்சி விருத்திக்குத் துணையாகக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. கற்பித்தலைப் பாட விடங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்திவிடாது மாணவ மாணவியரது திறன்களுக்கு மெருகூட்டுதல் எனும் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு இவ்வெல்லாத் தலையீடுகளும் இன்றியமையாதவையாகும் என்பதை கல்வி மற்றும் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடும் நாம் அனைவரும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிக்கும் சிரமமிக்க பணியை நிறைவு செய்வதில் பங்களிப்புச் செய்ய தேசிய கல்வி நிறுவக கல்விசார் பணியணியினர் உட்பட ஏனைய சகல பணியணியினருக்கும் வெளிவாரியாகப் பங்களிப்புச் செய்த கல்விமான்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகும்.

**கலாநிதி உபாலி எம். சேதர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

# முன்னுரை

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி 2010ஆம் ஆண்டு தொடக்கம் 13ஆம் தரத்திற்குரிய கற்றல்-கற்பித்தல் செயன்முறையை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு உங்களுக்குத் துணையாக அமையும். இந்த வழிகாட்டி நூலைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பாடத்திட்டம் இதுவரையில் நடைமுறையிலிருந்த பாடத்திட்டங்களிலிருந்து வேறுபட்டது. இது தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டமாக அமைந்திருப்பதே அவ்வேறுபாடாகும். இங்கு தரப்பட்டுள்ள தேர்ச்சிகளை இத்தரத்திலேயே அடைய முடியாமற் போக இடமுண்டு. சிலவேளை, அதற்காக நீண்டகாலம் எடுக்கலாம். எனினும், தேர்ச்சி மட்டங்களையும் அந்தத் தேர்ச்சி மட்டத்தின் கீழ் தரப்பட்டுப்பட்டுள்ள கற்றற் பேறுகளையும் இத்தரம் முடிவடைவதற்குள் அடைதல் அவசியமாகும். எனவே, இத்தரத்திற்குரிய பாடங்களைத் திட்டமிட்டுக் கொள்வதற்கு அத்தேர்ச்சி மட்டங்களும் கற்றற்பேறுகளும் துணையாகும்.

இக்கற்றற்பேறுகளை கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் குறிக்கோள்களை வகுத்துக் கொள்வதற்கும் வகுப்பறை மதிப்பீட்டுக் கருவிகளை தயாரித்துக் கொள்வதற்குமான நியதிகளாகப் பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்துவீர்கள் என எதிர்பார்க்கிறோம். மேலும் இப்பாடத்தைப் பயிலும்போது உசாவுவதற்குரிய மேலதிக நூல்கள், இணைய வலை கடப்பிடங்கள் (Web Site) முதலானவை குறித்து மாணவர்களுக்கு அறிவூட்டம் செய்வதற்கு இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி துணையாக அமையும்.
நீங்கள் ஆக்கபூர்வமான ஆசிரியராகச் செயற்படுவீர்கள் எனும் எதிர்பார்ப்புடனேயே உத்தேச செயற்பாடுகள் இங்கு மாதிரிச் செயற்பாடுகளாகத் தரப்பட்டுள்ளன என்பதை கருத்தில் கொள்ளுங்கள். குறிப்பாக ஆசிரியர் - மைய வகுப்பறைச் செயன்முறையை மாற்றி மாணவர் - மையச் செயன்முறையாக அமைத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப் படுகிறது. எனவே, மாணவர் நூல் உசாவுகை, இணையப் பயன்பாடு முதலான தேடல்களில் கவனம் செல்லத்தக்கவாறு கற்றல் வாய்ப்புக்களை உருவாக்குவது குறித்து மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

கற்பித்தலின்போது மரபு ரீதியான முறையில் குறிப்பு வழங்குவதற்குப் பதிலான கவர்ச்சிகரமான வகையில் புத்தறிவு, கோட்பாடுகள் முதலானவற்றை முன்வைத்தல் வேண்டும். அதற்காக இப்புதிய வகுப்பறையில் தொழில்நுட்பத்தை உச்சளவில் உபயோகப்படுத்தும் தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்த வேண்டும். எனவே, புதிய தொழில்நுட்பச் சாதனங்களை இன்றளவுக்கு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவது அவசியமாகும். 13ஆம் தரத்தில் கற்கத் தொடங்கும் உங்கள் மாணவர்களுக்கு இப்பாடத்திட்டம் குறித்து தெளிவுபடுத்துவது பயனுடையதாகும். வருடத்துள் நடைமுறைப் படுத்த எதிர்பார்க்கும் உங்களது கற்றல்-கற்பித்தல் திட்டத்தை அறிமுகஞ் செய்வதால் கற்றலின்பால் அம்மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டலாம். மேலும் முழுப் பாடத்தையும் கற்பதற்காக மாணவர்களை பாடசாலையின்பால் ஈர்ப்பதற்கும் அது துணையாகும். புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பினூடாக வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் தெள்ளத் தெளிவான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இப்பாடத்திட்டத்தையும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியையும் பயன்படுத்தி உங்களது ஆக்கத் திறனை விருத்தி செய்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிப்பதில் பங்களிப்புச் செய்த கல்விமான்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தேசிய கல்வி நிறுவக அதிகாரிகளுக்கும் எனது விஷேட நன்றியைத் தெரிவிக்கின்றேன். இப்பணியில் வழிகாட்டல் வழங்கிய பணிப்பாளர் நாயகம் கலாநிதி உபாலி எம். சேதர அவர்களுக்கும் அச்சிட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள கல்வி வெளியீட்டு ஆணையாளர் உட்பட ஏனைய பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். இதில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை எனக்கு அனுப்பி வைப்பீர்களாயின் நன்றியுடையவனாவேன்.

**விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்
கலைத்திட்ட அபிவிருத்திப் பீடம்.
தேசிய கல்வி நிறுவகம்

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

| | | |
|---|---|---|
| **ஆலோசனையும் வழிகாட்டியும்** | : | கலாநிதி உபாலி எம். சேதர<br>பணிப்பாளர் நாயகம்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| | | திரு. விமல் சியம்பலாகொட<br>உதவிப் பணிப்பாளர் நாயகம்<br>மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **பணிப்பு** | : | கலாநிதி மாம்புல்கொட சுமனரதன தேரர்<br>பணிப்பாளர்<br>சமயக் கல்வித் துறை<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **இணைப்பாக்கம்** | : | ஜனாப் எஸ்.எம்.ஆர். சூதீன்<br>பிரதம செயற்றிட்ட அதிகாரி<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **விடய ஆலோசனை** | : | கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி - பணிப்பாளர்<br>நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை |
| | | அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் -<br>பிரதிப் பணிப்பாளர்,<br>நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை |
| | | அஷ்ஷெய்க் எம்.எஸ். அப்துல் பாரி<br>தலைவர், அரபு இஸ்லாமிய நாகரிகத்துறை<br>பேராதனை பல்கலைக்கழகம் |
| | | மௌலவி எம்.எச்.எம். லாபிர்<br>பிரதிநிதி, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா |
| **எழுத்தாளர் குழு** | : | ஜனாப் எம்.எச்.எம். நாளிர்<br>அஷ்ஷெய்க் எஸ்.எம்.எம். மஸாஹிர்<br>அஷ்ஷெய்க் என். கபூர்தீன்<br>ஜனாப் எம்.எஸ்.எம். அனஸ்<br>அஷ்ஷெய்க் எம்.எம். பஸ்லுர் ரஹ்மான்<br>அஷ்ஷெய்க் ஏ.பீ.எம். அப்பாஸ்<br>அஷ்ஷெய்க் ஏ.ஸீ. ஸாஜஹான்<br>ஜனாப் எம்.எஸ்.எம். பூஸரி<br>அஷ்ஷெய்க் எம்.எச்.எம். புஹாரி<br>ஜனாப் எஸ்.எம்.ஆர். சூதீன் |
| **மொழிச் செவ்வையாக்கம்** | : | எம்.எச்.எம். யாக்கூத் |
| **பதிப்பு** | : | ஜனாப் எஸ்.எம்.ஆர். சூதீன்<br>பிரதம செயற்றிட்ட அதிகாரி<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **கணினி வடிவமைப்பு** | : | எம்.டப்ளியூ.ஏ. அஸார்<br>எப்.ஏ.எப். நிஸ்மியா (தேசிய கல்வி நிறுவகம்) |
| **அட்டைப்படம்** | : | எம்.டப்ளியூ.ஏ. அஸார் |

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முகவுரை | i |
| முன்னுரை | ii |
| அறிமுகம் | iv |
| எழுத்தாளர் குழு | v |
| விடய வழிகாட்டித் தொடர் | 01 |
| பாடசாலை மட்டக் கணிப்பீடு | 182 |

**தேர்ச்சி 7.0 : இஸ்லாத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றியும் இலங்கையில் இஸ்லாம் அறிமுகமானமை பற்றியும் விளக்கி எடுத்துக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1:** இஸ்லாத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் விளங்கி முன்மாதிரிகளை எடுத்துக் கூறுவார்.

**காலம்** : 25 பாடவேளைகள்

**கற்றல் பேறு** :

- இஸ்லாம் தோன்றி வளர்ந்த பின்னணியை விளங்கி இஸ்லாத்தின் அவசியத்தை விளக்கமாக எடுத்துக் கூறுவார்.
- இஸ்லாத்தின் சமய, சமூக, அரசியல் வளர்ச்சியின் படித்தரங் களை வரலாற்று ரீதியாக விளக்கி கட்டுரை எழுதுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- **நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இஸ்லாத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**

  - இஸ்லாம் மனிதனின் தோற்றத்தோடு ஆரம்பமான ஒரு வாழ்க்கை முறையாகும். எல்லா நபிமார்களும் இஸ்லாத்தையே போதித்தார்கள். எல்லா நபிமார்களின் தீனும் இஸ்லா மாகவே இருந்தது. ஆனால், காலத்துக்கும் சமூக சூழலுக்கும் ஏற்ப அந்த தீனின் ஷரீஅத் மாற்றம் பெற்றது. இஸ்லாத்தின் 'தீன்' நிலையானதாக, 'ஷரீஆத்' காலத்துக்கும் சூழலுக்கும் ஏற்ப நெகிழ்வதாக இருந்தது. நபி (ஸல்) அவர்களது காலத்தோடு ஷரீஅத்தும் நிலையானதாக அமைந்துவிட்டது. எனவேதான் "அல்லாஹ்விடத்தில் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் இஸ்லாம்" (3:19) என்றும் முன்னைய நபிமார்களைப் போன்றே நபி (ஸல்) அவர்களுக்கும் ஷரீஅத் வழங்கப்பட்டதென்றும் (5:48) அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.
  - இங்கு நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஷரீஅத்துடனான இஸ்லாம் பற்றியே நாம் நோக்கவிருக்கின்றோம்.
  - நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கி.பி. 6ஆம் நூற்றாண்டின் 7ஆவது தசாப்தத்தில் பிறந்தார்கள். அவர்களது ரிஸாலத் 7ஆவது நூற்றாண்டின் முதல் தசாப்தத்தில் தோற்றம் பெற்றது.
  - நபி (ஸல்) அவர்களுக்கு முன்னர் உலகில் பல சமயங்கள் இருந்தன. அவற்றுள் சில வஹி மூலம் அல்லாஹ்வினால் அருளப்பட்டவை. அவற்றுள் தவ்றாத், ஸபூர், இன்ஜீல் என்பன நாம் அறிந்தவை. வேறு சில அல்லாஹ்வினால் அருளப்படாதவை; மனித சிந்தனையில் தோன்றியவை. உதாரணமாக சமணம், சொராஸ்டரியம், கன்பியூசியம் என்பவற்றைக் குறிப்பிடலாம். எனினும், அவை மனித ஆக்கம் என்பதால் குறைபாடு களுடன் காணப்பட்டன. அல்லாஹ்வினால் அருளப்பட்ட வேதங்கள் கூட றஸூல்மார்களின் மரணத்துக்குப் பின்னர் மனித செல்வாக்குக்குட்பட்டு திரிபுபடுத்தப்பட்டன. கிழக்கிலோ, மேற்கிலோ வஹி மூலம் அருளப்பட்ட வேதங்கள் சிதைவுற்ற நிலையில் ஒரு சில கருத்துக்களோடும் சம்பிரதாயங்களோடும் வெறும் சடங்குகளாகவே இருந்து வந்தன.
  - அதேநேரத்தில் அருளப்பட்ட வேதங்களைப் பொறுத்தவரை அவை தேசிய வேதங்களாகவே இருந்தன. உரோமப் பேரரசு தோன்றி வளர்வதற்கு முன்னர் நாடுகள் அனைத்தும் பிரிந்திருந்தன. கடல், மலை, பேராறு, காடு, பாலைவனம் போன்றவற்றைத் தாண்டக் கூடிய சாதனங்கள் காணப்படாமையால் அல்லது அவற்றுக்கான அறிவு கிட்டாமையால் தேசங்கள் தனித்தனியாகப் பிரிந்திருந்தன. மொழி, கலாசாரம், வாழ்க்கை

முறை போன்றன வேறுபட்டிருந்தன. இதனால்தான் சமகாலத்தில் பல நபிமார்கள் பணியாற்றியிருப்பதைக் காண்கிறோம். இப்றாஹிம் (அலை), லூத் (அலை) ஆகிய இருவரும் சமகாலத்தில் வெவ்வேறு பிரதேசங்களில் இருந்தனர். ஈஸா (அலை), யஹ்யா (அலை), ஷம்ஊன் (அலை) ஆகிய மூவரும் சமகாலத்தில் வாழ்ந்துள்ளனர்.

- உரோமப் பேரரசு விரிவடைந்தபோது, அரசியல், இராணுவ, வணிக நோக்கங்களுக்காக பாதைகள் வெட்டப்பட்டன. பாலங்கள் கட்டப்பட்டன. இதனால் குறுகிய எல்லைக்குள் அடைபட்டிருந்த சமூகங்கள் ஒன்றுடனொன்று தொடர்புகொண்டன. ஒருவர் மொழியை மற்றொருவர் அறியும் சந்தர்ப்பங்களும், ஒரு பகுதியாரின் வாழ்க்கை முறையை மறுபகுதியார் தெரிந்துகொள்ளும் வாய்ப்புக்களும் ஏற்பட்டன. இவை நாடுகளுக்கிடையிலான ஒரு சர்வதேச நபியின் தோற்றத்துக்கு கட்டியம் கூறின. எனவேதான் நபி (ஸல்) அவர்கள் மனித சமுதாயம் முழுவதற்குமான நபியாக (7:158)வும் இறுதி நபியாகவும் (33:40) அனுப்பப்பட்டார்கள். அவர்களுக்கு புர்கான் எனும் பெயரிலான வேதம் அருளப்பட்டது. அதன் தீன், முன்னைய வேதங்களைத் தழுவியதாக, ஷரீஅத் காலத்துக்குப் பொருத்தமானதாகக் கொடுக்கப்பட்டது.
- ஒரு முழுமையான தீனை வழங்குவதற்குப் பொருத்தமான இடமாக அறபு நாடு அமைந்தது. அன்று அறியப்பட்ட உலகின் மத்தியில் அமைந்தமை, உரோம பாரசீக பேரரசுகளின் ஆதிக்கத்துக்குட்படாமல் -பிற கலாசாரங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டிருந்தமை, அறபிகளிடம் காணப்பட்ட சுதந்திர வேட்கை, எளிமை, வீரம், வாக்குமீறாமை, விருந்தோம்பல், மொழிப்பற்று போன்ற பண்புகள் இஸ்லாத்தின் தோற்றத்துக்கு சாதகமாக அமைந்தமை, மக்களுக்கு நீண்டகாலமாக அறிமுகமாகியிருந்த கஃபா அமைந்திருந்தமை, இஸ்லாம் சொல்ல விரும்பும் கருத்தை முன்வைக்கக் கூடிய வளம் பொருந்திய மொழியாக அறபுமொழி இருந்தமை, அம்மொழி மீது பற்றுக் கொண்டு அதனை வளர்க்கும், காக்கும் பண்போடு அறபிகள் இருந்தமை போன்றன இதற்குக் காரணமாக இருந்திருக்க முடியும்.
- இஸ்லாத்தின் சமய, சமூக, அரசியல் வளர்ச்சியை நாம் மூன்று கட்டங்களாகப் பிரித்து நோக்கலாம்.
    1. நபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்க்கைக் கட்டம் (13 வருடம்)
    2. நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கைக் கட்டம் (10 வருடம்)
    3. குலபாஉர் ராஷிதீன்களின் காலகட்டம் (30 வருடம்)

## 1. நபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்க்கைக் கட்டம் (13 வருடம்)

**சமய வளர்ச்சி:** இங்கு இஸ்லாத்தின் அடிப்படைப் போதனைகள் பற்றிய விடயங்கள் முன்வைக்கப்பட்டன. நபி (ஸல்) அவர்கள் நபியாக அமர்த்தப்பட்டபோது, அல்லாஹ்வின் தூதை மக்களுக்கு எடுத்து வைக்க வேண்டிய பொறுப்பு அவர்களைச் சார்ந்தது. அதனை நபி (ஸல்) அவர்கள் மூன்று முறைகளில் எடுத்து வைத்தார்கள்.

i) உறவினர்களை விருந்துக்கழைத்து இஸ்லாத்தை அறிமுகப்படுத்தல்

ii) ஸபாக் குன்றில் ஏறி, அதன் அடிவாரத்தில் பொதுமக்களை ஒன்று கூட்டி தமது நுபுவ்வத்தை அறிமுகப்படுத்தல்.

iii) தனிநபர்களை சந்தித்து இஸ்லாத்தை அறிமுகப்படுத்தல்.

இவ்வறிமுகத்தில் இஸ்லாத்தின் அடிப்படைகளுள் மூன்றுக்கு முக்கியத்துவமளித்தார்கள்.

1. தவ்ஹீத்: அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு கடவுளர் இல்லை. இணைவைப்பு - ஷிர்க் கண்டிப்பாக ஒழிக்கப்பட வேண்டும்.
2. ரிஸாலத்: நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்பதை எடுத்துக் கூறல். அவர்களுக்கு வஹி மூலம் அறிவூட்டப்படுகிறது என்பதை எடுத்துரைத்தல். அவர்களைப் பின்பற்றுமாறு கோரல்.
3. மஆத்: மறுமை ஒன்று உண்டு. அது இம்மையின் செயற்பாடுகளுக்கு வெகுமதியும் தண்டனையும் வழங்கப்படுகின்ற இடமாகும். வெகுமதி சுவர்க்கத்தின் மூலமும் தண்டனை நரகத்தின் மூலமும் விசாரணைகளின் பின்னர் வழங்கப்படும்.

- இம்மூன்று அடிப்படைக் கோட்பாடுகளையும் ஏற்றுக் கொண்டவர்களைத் திரட்டுவதில் நபி (ஸல்) அவர்கள் தீவிர கவனம் செலுத்தினார்கள். எனவே, அவர்கள் கையாண்ட முதலிரு வழிமுறைகளையும் தவிர்த்து மூன்றாவது வழிமுறையான தனிநபர்களைச் சந்தித்து த..்வா செய்வதில் அதிக நேரத்தைச் செலவிட்டார்கள். பல சுதந்திர புருஷர்களையும் அடிமைகளையும் அவர்களுடன் இணைத்தார்கள். இஸ்லாத்தின் தோற்றத்துக்கு முன்னர் ஹனீபிய சிந்தனையில் நம்பிக்கை கொண்டவர்களை நபி (ஸல்) அவர்களின் போதனை கவர்ந்தது. சமூகத்தில் நல்லவர்களாகக் கணிக்கப்பட்டவர் கள், உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இஸ்லாத்தில் இணைந்து கொண்டமை பெரும் பலமாக அமைந்தது. பலர் முன்னைய வேதங்களில் தெரிவிக்கப்பட்ட முன்னறி விப்புக்கள், கனவுகள், அசரீரி மூலமான அறிவுறுத்தல்கள், அல்குர்ஆனின் மொழி ரீதியான அற்புதம், நபி (ஸல்) அவர்களின் நற்பண்புகள், குறைஷிகளின் எதிர்ப்பிரசாரம் ஏற்படுத்திய தாக்கம் போன்ற காரணங்களால் இஸ்லாத்தில் இணைந்து கொண்டனர்.
- இவர்கள் ஸபா மலையடிவாரத்தின் ஒதுக்குப் புறமாக இருந்த 'தாருல் அர்கம்' என்ற வீட்டில் ஆன்மீகப் பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டார்கள். அவர்கள் நீண்ட இரா வணக்கங் களில் ஈடுபட்டார்கள். (ஸூறா முஸ்ஸம்மில்). சூழல் தாக்கத்தால் அவர்களிடம் காணப் பட்ட ஜாஹிலிய்யாக் கால துர்ப்பழக்கங்கள் நீக்கப்பட்டன. நற்பண்புகள் மெருகூட்டப் பட்டன. இஸ்லாத்துக்காகத் தம்மை அர்ப்பணிக்கும் மனப்பாங்கு வளர்க்கப்பட்டது. மூன்றாண்டுகள் இரகசியப் பிரசாரத்திலீடுபட்ட நபியவர்கள் பின்னர் பகிரங்கப் பிரசாரத்தில் இறங்கினார்கள். இதனால் நபி (ஸல்) அவர்களும், அவர்களை நபியாக ஏற்றுக் கொண்டவர்களும் குறைஷிகளின் கடுமையான எதிர்ப்புக்கு உள்ளானார்கள். இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட அடிமைகள் முதலில் சித்திரவதை செய்யப்பட்டார்கள். தொடர்ந்து சுதந்திர புருஷர்களும் கொடுமைக்குள்ளானார்கள். சுமையா (ரழி), லுபானா (ரழி), உஸ்மான் (ரழி), முஸ்அப் (ரழி) ஹுபைப் (ரழி), ஹப்பாப் (ரழி) போன்ற பலர் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். சிலர் கொலைக்கும் உள்ளானார்கள். இதனால் நபியவர்களின் உத்தரவுக்கிணங்க சிலர் ஹபஷாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள்.
- மறுபக்கமாக, நபி (ஸல்) அவர்களின் பிரசாரத்தைத் தடுக்கவெண்ணி கவிஞன், குறிகாரன், மனநோயாளி என பிரசாரம் செய்தனர். அவர்கள் மீது பொடிக் கற்களை எறிந்தனர். அவர்கள் நடமாடும் வீதிகளில் முட்களைப் பரப்பினர். சீலையால் கழுத்தில் சுருக்கிட்டனர். ஸுஜூதில் இருக்கும்போது அழுகிய குடலை கழுத்தில் மாட்டினர். குப்பைகளை மேனியிற் கொட்டினர். சிலபோது அடிக்கவும் செய்தனர். கொலை செய்யவும் முயற்சித்தனர். இவற்றிலெல்லாம் தோல்விகண்டபோது அபூதாலிபிடம் முறையிட்டனர். பிரசாரத்தை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டனர். முடியாதெனின் நபியவர்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு விண்ணப்பித்தனர். நபியவர்களுடனான தொடர்பை துண்டித்துக் கொள்ளுமாறு எச்சரித்தனர். இந்த எதுவும் நிகழாதபோது, நபியவர்களைத் தனிமையாகச் சந்தித்தனர். பொன் வேண்டுமா, பெண் வேண்டுமா, மண் வேண்டுமா (அரசு), மருத்துவம்தான் வேண்டுமா அனைத்தையும் தருகிறோம். உங்கள் பிரசாரத்தை நிறுத்திக் கொள்ளுங்கள் என விண்ணப்பித்தார்கள். நபியவர்கள்

எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. எனவே அவர்களுடனான தொடர்பைத் துண்டிப் பதற்காக சமூகப் பகிஷ்கரிப்புக்கு உள்ளாக்கினார்கள்.

- நபியவர்களுடனும் பனூ ஹாஷிம், பனூ முத்தலிப் கோத்திரங்களுடனும் எவரும் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாதென பிரகடனம் எழுதி க.்.பாவில் தொங்கவிட்டனர். மூன்றாண்டு காலம் அவர்கள் போதிய நீரோ, உணவோ, ஏனைய வசதிகளோ இன்றிச் சிரமப்பட்டார்கள். இதனைச் சகிக்க முடியாத சில வாலிபர்கள் பிரகடனத்தைக் கிழித்தெறிந்தார்கள். அதற்குப் பின்னரே அடைபட்டிருந்த ஷி.்.பு அபூதாலிப் என்ற பள்ளத்தாக்கிலிருந்து வெளியேறினார்கள். இது நிகழ்ந்து சில வாரங்களில் அபூ தாலிபும், சில மாதங்களில் கதீஜா (ரழி) அவர்களும் வபாத்தானார்கள்.
- இதனால் கொடுமைகள் அதிகரிக்க ஆரம்பித்தன. எனவே மற்றொரு களத்தை (தாயிப்) நோக்கி நபியவர்கள் ஹிஜ்ரத் சென்றார்கள். எனினும் அங்கு வரவேற்புக்குப் பதிலாக ஏச்சுப் பேச்சுக்களும் கல்லடி தடியடிகளுமே கிடைத்தன. எனவே, மீண்டும் மக்காவுக்குத் திரும்பினார்கள். முத்இம் பின் அதீ என்பவரின் பாதுகாப்பில் தங்கினார்கள்.
- இந்தக் காலகட்டத்தில் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கான இரண்டு நிழ்ச்சிகள் இடம்பெறு கின்றன. ஒன்று நபி (ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் மதீனாவில் குடியேறுவதற்கான வாயில் திறக்கப்பட்டமை. அடுத்தது, கவலையுற்றிருந்த நபி (ஸல்) அவர்களுக்கு ஆறுதலளிப்பதாகவும், இஸ்லாத்தின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கான அறிவு பெறும் வழியாகவும் அமைந்த அல் இஸ்ரா-வல் மி.்.ராஜ் இடம்பெற்றமை.
- எனினும் இக்கால கட்டத்தில் சிறந்த ஆளுமையுடைய தனிநபர்களை நபியவர்கள் உருவாக்கினார்கள். இஸ்லாம் என்ற கட்டடத்தின் அத்திவாரத்திலிடக் கூடிய வைரஞ் செறிந்த கற்களாக அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டிருந்தார்கள். எந்தச் சடைவுமின்றி இஸ்லாத்துக்காக கடைசிவரை உழைக்கக் கூடிய பெருமக்களாக அந்த ஸஹாபாக்கள் பணியாற்றினார்கள்.
- புஆஸ் யுத்தத்தில் தோல்வியடைந்த கஸ்ரஜ்கள், போர் நிறுத்தம் செய்யப்பட்ட இடைக்காலத்தில் -புனித மாதத்தில் குறைஷிகளின் ஆதரவைப் பெற மக்கா வந்தனர். அவ்வேளை எதிர்பாராத முறையில் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்தனர். நபி (ஸல்) அவர்கள் அந்த மக்களிடம் இஸ்லாத்தின் தூதை எடுத்தோதியபோது அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர். ஏற்கனவே இறுதித் தூதர் பற்றி யூதர்கள் மூலம் அறிந்திருந்த அவர்கள், யூதர்கள் அவரை ஏற்குமுன் தாம் ஏற்றுக்கொள்வது சாதகமானது என்பதை உணர்ந்து கொண்டனர். இவர்கள் மதீனா சென்று புதிய நபியைப் பற்றி அறிவித்தனர். இதைக் கேள்வியுற்ற பன்னிருவர் அடுத்த யாத்திரைக் காலத்தில் மக்காவை அடைந்தனர். அகபா என்ற இடத்தில் நபியவர்களைச் சந்தித்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். நபியவர்களிடம் ஓர் உறுதிமொழியையும் அளித்தனர். இது முதலாவது அகபா உறுதிமொழி எனப்படுகிறது.
- இவர்கள் மதீனா மீண்டபோது, அங்கு இஸ்லாமிய த.்.வாவை எத்திவைப்பதற்காக முஸ்அப் இப்னு உமைர் (ரழி) அவர்கள் அனுப்பப்பட்டார்கள். இது ஒரு புதிய த.்.வா உத்தியாகும். அவர்கள் மதீனாவில் வாழ்ந்த பிரமுகர்களைச் சந்தித்தார்கள். இஸ்லாத் தைப் போதித்தார்கள். சிலர் அதனை ஏற்றனர். வேறு சிலர் எதிர்த்தனர். எனினும் தொடரான அவரது முயற்சி மதீனாவில் இஸ்லாத்தை அறிமுகப்படுத்துவதில் வெற்றி கண்டது. அடுத்த யாத்திரைக் காலத்தில் அவர் சுமார் 73 பேருடன் மக்கா வந்தார். நபி (ஸல்) அவர்களை மதீனாவுக்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்பது மதீனா மக்களின் நோக்கமாக இருந்தது. அவர்களும் அகபாவில் நபி (ஸல்) அவர்களை இரவு நேரத்தில் சந்தித்தார்கள். இரண்டாவது அகபா உறுதி மொழியை வழங்கினார்கள்.
- தமது உயிரைக் கொடுத்தேனும் நபி (ஸல்) அவர்களைப் பாதுகாப்பதாக அவர்கள்

உறுதியளித்தார்கள். அல்லாஹ்வின் உத்தரவு வரும்வரை தாமதிக்குமாறும், முஸ்லிம் களை அங்கு அனுப்பி வைப்பதாகவும் நபி (ஸல்) அவர்கள் அந்த மக்களுக்குப் பதிலளித்தார்கள். அவர்களில் 12 பேர் நகீப்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இதன் பின்னர் குறைஷியருக்குத் தெரியாமல் இரகசியமாக சிறு சிறு குழுக்களாக மதீனா சென்றனர். அபூபக்ர் (ரழி) அவர்களை மாத்திரம் நபியவர்கள் நிறுத்திக் கொண்டார்கள். இதையறிந்த குறைஷியர் நபியவர்களும் மதீனா சென்று விடக் கூடாது என்பதற்காக நபி (ஸல்) அவர்களைக் கொலை செய்யத் தீர்மானித்தனர்.

- இரவில் நபி (ஸல்) அவர்களின் வீட்டை முற்றுகையிட்டனர். அல்லாஹ் நபி (ஸல்) அவர்களை வெளியேறுமாறு அறிவித்தான். எதிரிகள் அறியாதவாறு வீட்டிலிருந்து வெளியேறி அபூபக்ர் (ரழி) அவர்களின் வீட்டையடைந்தார்கள். அங்கிருந்து தெற்குப் பக்கமாகப் பயணம் செய்து விடிவதற்குள் தௌர் குகையில் தங்கினார்கள். மூன்று நாட்கள் அங்கு தங்கியிருந்தபோது அபூபக்ர் (ரழி) அவர்களின் குடும்பத்தினர். பல வழிகளிலும் உதவினர்.
- மறுபக்கமாக குறைஷியர் வீதி வழியே தேடியலைந்தனர். தௌர் பக்கமாக அவர்கள் வந்தபோது அபூபக்ர் (ரழி) அவர்கள் நாம் இருவர் தாம் இருக்கிறோம் எனப் பயந்தார்கள். 'பயப்படாதீர்கள் அல்லாஹ்வும் எம்முடன் உள்ளான்' என நபி (ஸல்) அவர்கள் தைரியமூட்டினார்கள். அல்லாஹ் ஒரு சிலந்தியைக் கொண்டும் இரு புறாக்களைக் கொண்டும் அவர்களைப் பாதுகாத்தான். பின்னர் மாற்று வழிப் பாதையில் இருவரும் மதீனாவை அடைந்தனர். மதீனா சென்ற நபியவர்களையும் அபூபக்ர் (ரழி) அவர்களையும் மதீனா மக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள். இந்தப் பயணமே ஹிஜ்ரத் எனப்படுகிறது. இது ஒரு திடீர் நிகழ்வன்று; நபி (ஸல்) அவர்கள் திட்டமிட்டுச் சென்ற ஒரு பயணமாகும்.

**சமூக வளர்ச்சி**

- இஸ்லாம் அறிமுகப்படுத்தப்பட்டபோது நபி (ஸல்) அவர்களோடு கதீஜா (ரழி), அபூபக்ர் (ரழி), அலி (ரழி), ஸைத் (ரழி) ஆகிய நால்வரும் இஸ்லாத்தை ஏற்றனர். தொடர்ந்து அபூபக்ர் (ரழி) அவர்களின் முயற்சியால் அவரது நண்பர்கள் பலர் இஸ்லாத்தை ஏற்றனர். ஐந்து ஆண்டுகளின் பின்னர்தான் 40 பேர்களாக அவர்கள் அதிகரித்தனர். இக்கால கட்டத்தில் தான் ஹம்ஸா (ரழி) அவர்களும், உமர் (ரழி) அவர்களும் இஸ்லாத்தை ஏற்றனர். அதுவரை இரகசியமாக கஃபா சென்று வந்த முஸ்லிம்கள் பகிரங்கமாகச் செல்லும் நிலை ஏற்பட்டது. படிப்படியாக இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வோர் தொகை அதிகரித்தாலும் ஒரு சமூகம் என்று கூறத்தக்க அளவு மக்கள் தொகை அதிகரிக்க வில்லை.
- சமூகம் எனும்போது பொதுவாக மக்கள் தொகையை மட்டுமே கருதினாலும் ஒரு சமூகம் உருவாவதற்கு நான்கு விடயங்கள் தேவை.
    1. மக்கள்,
    2. மக்களை ஒன்றிணைக்கக் கூடிய பொது அம்சம். அது மொழியாகவோ இனமாகவோ சமயமாகவோ கொள்கையாகவோ இருக்கலாம்.
    3. அந்த மக்களை வழிநடத்தும் தலைமைத்துவம்
    4. அந்த மக்கள் சுதந்திரமாக வாழக் கூடிய பூமி அல்லது பிரதேசம்.

    இவற்றுள் முதல் மூன்றும் ஓரளவாகவேனும் காணப்பட்டன. ஆனால் நான்காவது அம்சம் இருக்கவில்லை. எனவே மக்காவில் ஒரு சமூகம் இருந்ததாகத் திட்டமாகக் கூற முடியாது. இதனால்தான் இக்காலகட்டத்தில் தனிநபர்களை உருவாக்குவதில் நபி (ஸல்) அவர்கள் அதிக கவனம் செலுத்தினார்கள் போலும்.
- அது இஸ்லாத்தின் ஆரம்பக் கட்டமாக இருந்தமையால் இஸ்லாத்தின் போதனைகள்

அதாவது அல்குர்ஆனின் வசனங்கள் மனிதர்களே என விளித்துப் பேசுவனவாக இருந்தன. ஈமான் தொடர்பான விடயங்களை வரலாற்றுக்கூடாக முன்வைத்தன. முஸ்லிம்கள் சிறுபான்மையினராக -பலமற்றவர்களாக- குறைஷிகளின் கொடுமைகளுக்கு உட்பட்டவர்களாக வாழ்ந்தனர். நபி (ஸல்) அவர்கள் கொடுத்த ஆன்மீகப் பயிற்சி - தஸ்கியதுந் நப்ஸ்- அவர்களைப் பண்படுத்தியிருந்தமையால் 'சிறுபான்மை' என்ற அச்சம் அவர்களைப் பாதிக்கவில்லை.

- இதற்கு மற்றொரு காரணம், முஸ்லிம்களும் காபிர்களும் ஒரே இனத்தவர்களாக - அறபிகளாக இருந்தமையும், கிட்டிய -தூரத்து உறவுகளாக அல்லது ஒரே கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தமையும் ஆகும் எனக் குறிப்பிடலாம். கூட்டாகச் செயற்படுவதற்கான மக்கள் தொகை, பாதுகாப்பு, அதிகாரம் போன்றன காணப்படாமையால்தான், இக்கால கட்டத்தில் கூட்டு வணக்கங்கள் கடமையாக்கப்படவில்லை எனக் கொள்ளலாம். இக்கால கட்டத்தில் முஸ்லிம்கள் தொழுதார்கள். ஸதகாக்களை வழங்கினார்கள். ஸுன்னத்தான நோன்புகளை நோற்றார்கள். அல்குர்ஆன் வசனங்களை மனனமிட்டார்கள்; ஓதினார்கள். ஸுன்னாவைப் பின்பற்றினார்கள். எனினும், மதீனாவுக்குச் செல்லும் வரை இவை பர்ளாக்கப்படவுமில்லை; கூட்டாக நிறைவேற்றும்படி கட்டளையிடப்படவுமில்லை.

### நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கைக் கட்டம்

- **சமய வளர்ச்சி:** மக்கா காலகட்டத்தில் நபி (ஸல்) அவர்கள் தனியாக நின்று இஸ்லாத்தைப் பிரசாரம் செய்தார்கள். ஆனால், மதீனா கட்டத்தை ஆரம்பிக்கும்போது மதீனாவில் இஸ்லாம் பற்றிய அறிமுகம் மதீனா மக்களுக்குக் கிடைத்திருந்தது.
- மதீனாவில் வாழ்ந்த யூதர்கள் மூலம் மதீனா மக்கள் இறுதித் தூதர் பற்றிய செய்தியை அறிந்திருந்தார்கள். நுபுவ்வத் 10 இல் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்த அறுவர் மூலமும் நுபுவ்வத் 11 இல் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்த பன்னிருவர் மூலமும் குறிப்பாக நுபுவ்வத் 11 இல் மதீனாவுக்கு வந்த முஸ்அப் இப்னு உமைரின் மூலமும் இஸ்லாம் பற்றிய அறிவு மதீனா மக்களுக்குக் கிடைத்திருந்தது. ஆதலால், மக்காவில் இஸ்லாத்தைப் பிரசாரம் செய்வதற்கான அணியை, மூன்று வருட இரகசிய பிரசாரம் மூலம் நபி (ஸல்) அவர்கள் திரட்டியது போன்ற முயற்சி, மதீனாவில் தேவைப்படவில்லை. எனவேதான் நபி (ஸல்) அவர்கள் மதீனா வந்தபோது கண்ணியத்துடன் வரவேற்கப்பட்டார் கள்; ஒவ்வொருவரும் தமது வீட்டில் நபி (ஸல்) அவர்கள் தங்க வேண்டுமென ஆசைப்பட்டார்கள்.
- மக்காவில் தாருல் அர்கம் போல மதீனாவிலும் ஓர் இல்லம் இருக்க வேண்டுமென்ற தேவையிருக்கவில்லை. மதீனாவுக்குள் நுழைய முன்பே குபாவில் நபி (ஸல்) அவர்கள் ஒரு மஸ்ஜிதை நிறுவினார்கள். ஜமாஅத் தொழுகை விதியாக்கப்பட்டமை இதற்குக் காரணமாக இருக்கலாம். குபாவுக்கும் மதீனாவுக்கும் இடையில் பயணித்தபோது ஜும்ஆத் தொழுகை நிறைவேற்றப்பட்டது. மதீனாவுக்குள் நுழைந்தபோது கட்டப்பட்ட மஸ்ஜிதே, மஸ்ஜிதுந் நபவி எனப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு நுழையுமுன் அது யஸ்ரிப் என்ற பெயரால் வழங்கப்பட்டது. நபியவர்கள் குடிபெயர்ந்த பின்னர் மதீனதுந் நபி எனப்பட்டு பின்னர் மதீனா எனச் சுருங்கியது.
- மக்காவில் ஒரு மஸ்ஜிதைக் கட்டாத நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் ஏன் ஒரு மஸ்ஜிதைக் கட்ட வேண்டும் மக்காவில் க.ஃபதுல்லாஹ் அமைந்திருந்ததால் அங்கு மஸ்ஜிதின் தேவை ஏற்படவில்லையாயினும் மதீனாவில் ஜமாஅத் தொழுகையை நிறைவேற்றுவதற்கு ஒரு பொது இடம் தேவைப்பட்டது.
- நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுந் நபவியைக் கூட்டுத் தொழுகைக்கான இடமாக

மட்டும் நடத்தவில்லை. அதனை ஒரு சமூக மையமாகவும் இயக்கினார்கள். மக்காவில் இஸ்லாம் தனிநபர் மார்க்கமாக இருந்து மதீனாவில் ஒரு சமூக மார்க்கமாக விரிவடைந்தது என்ற கருத்து இதிலிருந்து பிறந்திருக்கிறது எனலாம்.

- மஸ்ஜிதுன் நபவி சமூகத்தின் பல்வேறு தேவைகளை நிவர்த்தித்தது. மக்களை ஒன்றுகூட்டியது; மக்களின் தேவைகளைக் கண்டறிந்து நிறைவேற்றியது; கல்வியைப் போதித்தது; ஆலோசனைகளை நடத்தியது; நிதி, நீதித் தேவைகளை நிவர்த்தித்தது; சமூகத்தின் பாதுகாப்புத் தேவையை நிறைவேற்றியது. இப்படியெல்லாம் பார்க்கும்போது இஸ்லாம் ஆன்மீக மார்க்கம் என்ற நிலையிலிருந்து உலகியலும் இணைந்த மார்க்கம் என்பது தெளிவாக்கப்படுகின்றது.

- இஸ்லாம் நபி (ஸல்) அவர்களின் காலத்தோடு முற்றுப் பெறுவதல்ல; அது மறுமைவரை உலகில் நிலைநிற்க வேண்டும். அவ்வாறு நிற்க வேண்டுமானால் அது தனிநபர் மார்க்கமாகவன்றி சமூக மார்க்கமாக இயங்க வேண்டும். இதற்கான அடித்தளமாகவே ஜமாஅத், ஜுமுஆத் தொழுகைகள், ஒரே மாதத்தில் எல்லா முஸ்லிம்களும் நோன்பு நோற்றல், கூட்டாக ஸகாத் கொடுத்தல், ஹஜ்ஜை நிறைவேற்றல் போன்றன பர்ளுகளாகவும் கூட்டுச் செயற்பாடுகளாகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன எனலாம்.

- மக்கா வாழ்க்கைப் பகுதியில் கூறப்பட்டதை விட விரிவான அமைப்பில் ஒழுக்கங்கள் பற்றிய போதனைகள் மதீனா வாழ்க்கைப் பகுதியில் இடம்பெற்றன. ஸூறதுல் ஹுஜ்ராத்தில் இதனைக் காணலாம். இஸ்லாம் தனிநபர் மார்க்கமாக இருக்கும்போது ஒழுக்க விதிகள் மட்டும் போதுமானதாக இருந்திருக்கக் கூடும். ஆனால் சமூக மார்க்கமாக மாறும்போது சட்டங்கள் தேவைப்பட்டன. எனவேதான் அல்குர்ஆனின் மதனீ ஆயத்துக்கள் சட்டங்கள் பற்றிய விளக்கங்களைத் தந்தன. ஹலால்-ஹராம் பற்றிய தெளிவை ஏற்படுத்தின.

- ஏற்கனவே இஸ்லாம் சர்வதேச மார்க்கம் எனக் குறிப்பிட்டோம். அந்த சர்வதேசத் தன்மையை நிரூபிக்கும் வகையில் மதீனா வாழ்க்கைக் கட்டத்தில் பல நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. முதலில் பைத்துல் மக்தஸை நோக்கித் தொழப்பட்டது. பின்னர் கஃபாவை முன்னோக்கித் தொழுமாறு ஏவப்பட்டது. மக்காவில் வாழ்பவரும் சரி, உலகில் வேறெங்கு வாழ்பவர்களும் சரி மக்காவிலிருக்கும் கஃபாவின் திசையையே கிப்லாவாகக் கொள்ள வேண்டும். தொழுகைக்கான அழைப்பு அறபு மொழியிலேயே அமைய வேண்டும். தொழுகையின் மொழியாக அறபு மொழி இருக்க வேண்டும். தொழும் முறையும் எந்த இடத்தில் எந்தக் காலத்தில் வாழ்பவர்களாக இருந்தாலும் ஒரே முறையில் அமைய வேண்டும். தொழுகைக்காக எழுப்பப்படும் மஸ்ஜிதுகளும் அடிப்படையில் ஒரே அமைப்பைக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறான சர்வதேசத் தன்மை மதீனா வாழ்க்கைக் கட்டத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. எனவேதான் ஹஜ் கடமையும் ஒரே இடத்தில் ஒரே நாட்களில் ஒரே அமைப்பில் இடம்பெறுவதற்கான வழிகள் ஹஜ்ஜதுல் விதா மூலம் உறுதிப்படுத்தப்பட்டன.

- இவ்வாறான நடைமுறைகளை அல்குர்ஆன் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப எடுத்துக் காட்டியது. அல்குர்ஆனில் சுருக்கமாக அல்லது பூடகமாக அல்லது கொள்கையாக முன்வைக்கப்பட்டவற்றை நபி (ஸல்) அவர்கள் விரிவாக, வெளிப்படையாக, நடைமுறையாக ஸுன்னா மூலம் வெளிப்படுத்தினார்கள். புதிய பிரச்சினைகள் தோன்றும்போதும், பழைய மரபுகள் ஒழிக்கப்படும்போதும் தேவையான தெளிவுகளை அல்குர்ஆனும் ஸுன்னாவும் இக்கால கட்டத்திலேயே அதிகமாக வழங்கின.

- இஸ்லாம் அறிமுகமான காலகட்டத்தில் நபி (ஸல்) அவர்கள் நேரடியாக தஃவா

செய்தார்கள். சிலபோது ஸஹாபாக்களும் இதனைச் செய்தார்கள். இவை பெரும்பாலும் வாய்மொழியாக இடம்பெற்றன. செவி வழியாகக் கேட்கப்பட்டன. ஆனால் மதீனா வாழ்க்கைப் பகுதியில் நபி (ஸல்) அவர்கள் நிருபங்கள் மூலமாக இஸ்லாத்தைப் பிரசாரம் செய்தார்கள். தனிநபர்களையும் கோத்திரத் தலைவர்களையும் அணுகும் முறை குறைந்து சிற்றரசர்களையும் பேரரசர்களையும் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கும் வழக்கம் மதீனா கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. உரோம, பாரசீக பேரரசர்களும், நஜ்ஜாஷி முகௌகஸ் முதலான சிற்றரசர்களும் நிருபங்கள் மூலமாகவும் அவற்றைக் கொண்டு சென்ற தூதர்கள் மூலமாகவும் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கப்பட்டார்கள்

- **சமூக வளர்ச்சி:** ஏற்கனவே குறிப்பிட்டது போன்று சமூக உருவாக்கத்துக்கான களம் நபி (ஸல்) அவர்களுக்கு ஹிஜ்ரத்தின் பின்னரே கிடைத்தது. அதனால்தான் ஹிஜ்ரத் வந்ததன் பின்னர் மதீனாவில் எத்தனை முஸ்லிம்கள் இருக்கிறார்கள் என அவர்கள் கணக்கெடுப்பொன்றை நடத்தினார்கள். மக்காவில் சிறுபான்மையினராக இருந்தவர்கள் மதீனாவில் படிப்படியாக பெரும்பான்மையினராக மாறினார்கள். மக்காவில் பெரும்பாலும் அறபி முஸ்லிம்கள் மட்டும் இருந்தனர். அறபியல்லாதோர் மிகச் சிறு தொகையினரே. மதீனாவைப் பொறுத்தவரை யூதர்கள் இருந்தார்கள். இவர்கள் இனத்தால் மட்டுமன்றி சமயத்தாலும் வேறுபட்டிருந்தார்கள். மக்காவில் முஸ்லிம்களின் எதிரிகளாக குறைஷிகள் மட்டுமே இருந்தனர். மதீனா கால கட்டத்தில் மக்காவிலிருந்த குறைஷிகளின் எதிர்ப்பும் இருந்தது. யூதர்களின் எதிர்ப்பும் இருந்தது. புதிதாக உருவான முனாபிக்களின் எதிர்ப்பும் மறைமுகமாக இருந்தது. மக்காவைப் போன்றே மதீனாவிலும் கோத்திர அமைப்பிலான சமூகமே இருந்தது. அது அறபிகளில் மட்டுமன்றி யூதர்களிலும் காணப்பட்டது.

- ஆனால், மதீனாவில் இஸ்லாம் உருவாக்கிய சமூகம் கோத்திர அமைப்பிலான சமூகமாகவன்றி கொள்கை அடிப்படையிலான சமூகமாக மாறியது. இதனை அல்குர்ஆன் (49:13) எடுத்துக் காட்டுகின்றது. எனவேதான் முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்கள் என அல்குர்ஆனும் ஸுன்னாவும் சுட்டிக்காட்டுகின்றன. முஸ்லிம் சமூகத்தை நபி (ஸல்) அவர்கள் ஓர் உடம்பின் உறுப்புக்களுக்கும் ஒரு கட்டடத்தின் கற்களுக்கும் உவமித்துக் கூறியிருக்கிறார்கள். இவை சமூக உறுப்பினர்களின் ஐக்கியம், ஒருமைப்பாடு, பரஸ்பர ஒத்துழைப்பு, உபகாரம், பாதுகாப்பு போன்றவற்றை வலியுறுத்துகின்றன.

- இவற்றை உருவாக்கும் அல்லது விருத்தி செய்யும் பணிகளையே மஸ்ஜிதுந் நபவி செய்தது. அதான் ஒலி கேட்டு மஸ்ஜிதுக்கு வருவது முஸ்லிம்கள் யாவரும் ஒரு குரலுக்குக் கட்டுப்படும் பண்பை வளர்த்தது. ஜமாஅத் தொழுகை மக்கள் மத்தியில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை அகற்றியது. ஜமாஅத்துக்காக இமாமைத் தெரிவு செய்வது, சமூகத்துக்குத் தலைவரைத் தெரிவுசெய்யும் முறையினைக் காட்டிக் கொடுத்தது. இமாமுக்குக் கட்டுப்பட்டு தொழுகையில் இயங்குவது தலைமைத்துவத்துக் குக் கட்டுப்பட்டு சமூகம் இயங்குவதற்கான பயிற்சியைக் கொடுத்தது.

- மஸ்ஜித் ஆன்மீக செயற்பாட்டுக்கான (தொழுகை, திலாவதுல் குர்ஆன், இ.்.திகாப்) இடமாக மட்டுமன்றி உலகியல் செயற்பாட்டுக்கான மையமாகவும் இயங்க வேண்டும் என்பதையே மஸ்ஜிதுந் நபவியின் செயற்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன. அது கல்விப் பீடமாக, ஆலோசனை மண்டபமாக, நிதி நிறுவனமாக, நீதிமன்றமாக, மருத்துவமனையாக, இராணுவ முகாமாக, அதிதிகள் வரவேற்பிடமாக, பொது வைபவ கூடமாக இயங்கியமை இதனைத் தெளிவுபடுத்துகின்றது. இங்குதான் இஸ்லாம் ஆன்மீகத்தை மட்டும் போதிக்கும் சமயமாகவன்றி, வாழ்க்கை முழுவதற்குமான வழிகாட்டல்களைக் கொண்ட வாழ்க்கை முறை என்பதை எடுத்துக் காட்டியது.

- நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய அந்த ஸஹாபாச் சமூகம் ஓர் அறபிச் சமூகமாக - இனரீதியான சமூகமாக இயங்கவில்லை. மாறாக ஒரு சர்வதேச சமூகமாகப் பிரகாசித்தது. அங்கு ஜ.்.பர் என்ற அறபியிருந்தார். ஸல்மான் என்ற பார்ஸி இருந்தார்.

அபூதர் என்ற கிபாரி இருந்தார். பிலால் என்ற ஹபஷி இருந்தார். துபைல் என்ற யமனி இருந்தார். இவர்கள் அனைவரும் பிரதேசத்தால் வேறுபட்டவர்கள். ஆனால் கொள்கையால் ஒன்று பட்டவர்கள். ஆகவே அந்தச்சமூகத்தில் இன, மொழி, பிரதேச, நிற வேறுபாடுகள் நோக்கப்படவில்லை.

- இஸ்லாம் அறிமுகமான காலகட்டத்தில் மக்காவில் 17 நபர்களும், மதீனாவில் 9 நபர்களுமே எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக இருந்தனர். மக்கா காலகட்டத்தில் குத்தாபுல் வஹிகளாக மிகச் சிலரே இருந்தனர். ஆனால் மதீனா காலகட்டத்தில் எழுத்தறிவு அதிகரித்தது. பத்ருக் கைதிகள் மூலம் மதீனாவில் வாழ்கின்ற சிறுவர்களுக்கு எழுத, வாசிக்கப் பயிற்றுவித்து நபி (ஸல்) அவர்கள் காட்டிய முன்மாதிரி இதற்கு ஆரம்பமாக இருந்தது. பத்ரு யுத்தத்துக்குத் தயாராக வந்த ஸைத் இப்னு ஸாபித் (ரழி) அவர்களை, அவர் சிறுவர் என்பதால் நபி (ஸல்) அவர்கள் திருப்பியனுப்பினார்கள். இதே ஸைத் (ரழி) அவர்கள் பத்ருக் கைதி ஒருவரிடம் எழுத வாசிக்கக் கற்றுக் கொண்டார். பின்னர் காதிபுல் வஹியாக உயர்ந்த அவர்கள், நபி (ஸல்) அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மிகக் குறுகிய காலத்தில் சுர்யாணி, அபறானி மொழிகளைக் கற்று வெளிநாட்டுக் கடிதங்களை நபியவர்களுக்கு வாசித்துக் காட்டுபவராக மாறினார். எனவேதான் இவ்வாறு எழுத வாசிக்கக் கற்றுக் கொண்டவர்களும் ஏற்கனவே எழுத வாசிக்கத் தெரிந்தவர்களும் பிற்காலத்தில் ஸஹீபாக்கள் எனப்படும் கையெழுத்தேடுகளை விட்டுச் சென்றுள்ளார்கள். இவை ஹதீஸ், வரலாறு போன்ற துறைகளுக்கு முன்மாதிரி களாக அமைந்தன.

**அரசியல் வளர்ச்சி:**

- நபி (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்துக்குப் பின்னரே இஸ்லாத்தின் அரசியல் உருவானது எனலாம். ஏற்கனவே ஒரு சமூகம் உருவாகி இயங்குவதற்கு நான்கு அம்சங்கள் தேவை எனக் குறிப்பிட்டோம். இந்த நான்கோடு ஒரு சமூகம் தன்னைக் காத்துக் கொள்வதற்காக ஓர் அரசாங்கத்தையும் அமைத்துக் கொள்வது அவசியம் என்பதை நபி (ஸல்) அவர்களின் சீறா எடுத்துக் காட்டுகின்றது. 'அல்குர்ஆனினால் தானாகச் செயற்படுத்த முடியாததை அரசாங்கத்தால் நிலைநாட்ட முடியும்' என உஸ்மான் (ரழி) அவர்கள் குறிப்பிடுவார்கள். ஏனெனில் அல்குர்ஆன் குறிப்பிடும் சட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் அரசாங்கமொன்று தேவை.
- மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற நபி (ஸல்) அவர்கள் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பிய அதேநேரத்தில் ஓர் அரசாங்கத்தையும் ஏற்படுத்தினார்கள். மதீனாவுக்கு நபி (ஸல்) அவர்கள் வந்தபோது மக்காவிலிருந்து ஹிஜ்ரத் வந்த முஹாஜிரீன்கள் இருந்தார்கள். மதீனாவின் சுதேசிகளாக ஔஸ்களும் கஸ்ரஜ்களும் முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதவர்களும் இருந்தார்கள்.
- இவர்களுள் ஒரு பகுதியினர் நபி (ஸல்) அவர்களை அன்போடு வரவேற்றனர். மற்றொரு பகுதியினர் வெறுப்போடு இருந்தனர். மற்றொருவகையில் நபி (ஸல்) அவர்களையும் முஹாஜிரீன்களையும் வரவேற்ற மக்கள் வெவ்வேறு நோக்கங்களோடு வரவேற்றனர். அன்ஸாரீன்கள் தமது வழிகாட்டி என்ற வகையில் நபி (ஸல்) அவர்களை வரவேற்றனர். யூதர்களோ தம்மைப் பலஸ்தீனிலிருந்து வெளியேற்றிய கிறிஸ்தவர்களைப் பழிவாங்கு வதற்கு நபி (ஸல்) அவர்களின் ஒத்துழைப்பை பெறும் நோக்கத்தோடு வரவேற்றனர். புஆஸ் யுத்தம் முடிவுற்ற பின்னர் மதீனாவின் தலைமைப் பதவியை எதிர்பார்த்திருந்த வரான அப்துல்லா இப்னு உபை, நபி (ஸல்) அவர்கள் மதீனா வந்ததால் தனது பதவி கைதவறிப் போய்விட்டதே என்ற காழ்ப்புணர்வோடு இருந்தார். (இதனால்தான் முனாபிக்காக நடந்துகொண்டார் எனவும் கூறுவர்). இந்நிலையில் மதீனாவுக்கு வந்த நபி (ஸல்) அவர்களுக்கு அமைதியான ஒரு சமூக சூழல் தேவைப்பட்டது. இதற்காக

பிளவுபட்டிருந்த ஔஸ்களையும் கஸ்ரஜ்களையும் ஒற்றுமைப்படுத்தி வைத்தார்கள். மக்காவிலிருந்து வந்த முஹாஜிரீன்களையும் மதீனாவில் வாழ்ந்த அன்ஸாரீன்களையும் சகோதரர்களாகப் பிணைத்து வைத்தார்கள். மதீனாவில் வாழ்ந்த யூதர்களை முஸ்லிம்களோடு பிணைத்து ஒரே தேசியமாக மாற்றினார்கள். இதில் யூதர்களோடு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதனால்தான் பிற்காலத்தில் அதனை மதீனா சாசனம் என வழங்கினர். கலாநிதி ஹமீதுல்லாஹ், "உலகில் முதலில் தோன்றிய எழுத்திலமைந்த அரசியல் யாப்பு" என இதனைக் குறித்துக் காட்டுகிறார்.

- அரிஸ்டோட்டில் காலம் முதல் அரசியல் யாப்புகள் பற்றிப் பேசப்பட்டாலும் முதன் முதல் எழுத்திலமைந்த -ஆளுவோரும் ஆளப்படுவோரும் அங்கீகரித்த இரு பகுதியினரதும் கடமை, உரிமைகள் பற்றிச் சுட்டிக்காட்டுகின்ற ஓர் உடன்படிக்கையாக இது அமைந்துள்ளது. இவ்வுடன்படிக்கைபடி பிரச்சினைகள் தோன்றின் அதற்கு இறுதித் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவே யூத சமூகம் முஸ்லிம் தலைமைத்துவத்தை அங்கீகரித்த சந்தர்ப்பமாகும்.

- இவ்வுடன்படிக்கையை மையப்படுத்தியே நபி (ஸல்) அவர்களின் அரசியல் நடவடிக்கைகள் ஆரம்பித்தன. இதன்படி மதீனா புனித நகராகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அங்கு இரத்தமோட்டுவது தடைசெய்யப்பட்டது. அது முஸ்லிம் அரசின் தலைநகராக மாறியது. அதனைத் தாக்குவதற்காக எவரேனும் வந்தால் முஸ்லிம்களும் யூதர்களும் சேர்ந்து எதிர்த்தாக்குதல் நடத்த வேண்டுமென ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- மக்கா நீண்ட காலமாக ஒரு புனித பிரதேசமாக இருந்தும் கூட அங்கு நிரந்தர அரசாங்கமொன்று இருக்கவில்லை. நபி (ஸல்) அவர்களின் ஆறாவது தலைமுறை யான குஸை இப்னு கிலாப் என்பவர். மக்காவில் ஒரு நகராட்சி முறையை தாபித்தார். இருந்தாலும் அது பெரும்பாலும் யாத்திரைக் காலத்தில் யாத்திரீகர்களின் நலன்களை கவனிப்பது, குறைஷியரின் தலைமைத்துவத்தைக் காப்பது என்ற வகையில்தான் அமைந்தது. அவரால் அமைக்கப்பட்ட தாருந் நத்வா, நபி (ஸல்) அவர்களின் காலத்திலும் ஆலோசனைக் கூடமாகப் பணியாற்றியதை மறுக்க முடியாது. எனினும் குஸையினால் உருவாக்கப்பட்ட சீர்திருத்தங்களை ஓர் ஆட்சி முறைக்கான நெறிகளாக முற்றாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஆதலால் அறபு நாட்டு வரலாற்றில் முதன் முதலாக ஓர் அரசியல் முறையை உருவாக்கிய பெருமை நபி (ஸல்) அவர்களுக்கே உரியதாகும்.

- அவர்கள் முதலில் மதீனாவில் ஒரு நகர அரசை உருவாக்கினார்கள். மஸ்ஜிதுந் நபவியை அரச அலுவலகமாக இயக்கினார்கள். உலக விவகாரங்கள் அனைத்தும் ஸஹாபாக்களின் ஆலோசனையோடு தீர்மானிக்கப்பட்டன. கலந்தாலோசித்து தீர்மானங்களை மேற்கொள்ளுமாறு அல்லாஹ்வும் கட்டளை பிறப்பித்தான். (3:159, 42:38) இஸ்லாம் விரிவடைந்தபோது அல்லது மதீனாவின் எல்லை விரிவடைந்தபோது பிரதேச நிருவாகத்துக்காக நாஇப்களை நியமித்தார்கள். கடிதங்களையும் உடன்படிக்கை களையும் எழுதுவதற்கு காதிப்களை அமர்த்தினார்கள். அவர்களில் சிலர் நிரந்தரமாகவும் சிலர் சமயா சமய ஊழியர்களாகவும் பணிபுரிந்தனர். சுமார் 46 காதிப்கள் 246 ஆவ ணங்களை எழுதியுள்ளதாகக் கணிப்புக்கள் கூறுகின்றன.

- நபி (ஸல்) அவர்களின் பிரத்தியேகச் செயலாளராக பிலால் (ரழி) அவர்கள் பணியாற்றி னார்கள். ருஸுல் எனப்பட்டவர்கள் வெளிநாடுகளுக்குத் தூது கொண்டு சென்றார்கள். உதாரணமாக ஹுதைபியா உடன்படிக்கை நிகழுமுன் தாம் போருக்கு வரவில்லை; உம்றாவுக்கே வந்திருக்கிறோம் என்பதைக் குறைஷிகளிடம் கூற மூன்று ருஸூல்கள் சென்றனர். பேரரசர்கள், சிற்றரசர்களுக்கான தூதுக் கடிதங்களையும் ருஸூல்களே கொண்டு சென்றனர்.

- ஹிஜ்ரி 6ஆம் ஆண்டுக்குப் பின்னர் வாலி எனப்பட்டோர் பிரதேச நிருவாகத்தைப்

பரிபாலித்தனர். நிதி, நீதி, நிருவாக செயற்பாடுகள் இவர்களிடமே ஒப்படைக்கப்பட்டன. மக்காவில் அதா பின் ஆஸிப் (ரழி) அவர்களும், தாயிபில் உஸ்மான் பின் அபுல் ஆஸ் (ரழி) அவர்களும் வாலிகளாக இருந்தனர். இவ்வாறு 32 வாலிகள் இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. கோத்திர அமைப்பிலான அறபுச் சமூகத்தை பரிபாலிப்பதற்காக கோத்திரத் தலைவர்கள் நகீப், ருஅஸா எனும் பெயர்களில் அமர்த்தப்பட்டனர். இவர்களே கோத்திரங்களை மத்திய அரசுடன் பிணைக்கும் பிரதிநிதிகளாகப் பணியாற்றினர். வரி அறவிடுபவர்கள் மத்திய அரசிலிருந்து வர முடியாது போனால் இவர்களே வரிகளை அறவிட்டு மதீனாவுக்கு அனுப்பி வைத்தனர். காழிகளிடம் நீதித்துறை ஒப்படைக்கப்பட்டி ருந்தது. உமர் (ரழி), அலி (ரழி), அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி), அபூ மூஸா அல்அஷ்அரி (ரழி), ஸைத் இப்னு ஸாபித் (ரழி) முதலானோர் காழிகளாகப் பணியாற்றினர்.

- சந்தை நிலவரங்களைக் கண்காணிப்பதற்காக ஸாஹிபுஸ் ஸூக் எனப்படுவோர் நியமிக்கப் பட்டிருந்தனர். மக்காவில் ஸஈத் இப்னு ஸஈத் அல் ஆஸ் (ரழி) அவர்களும் மதீனாவில் உமர் (ரழி) அவர்களும் இப்பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர். முஹ்தஸிப் எனப்படுபவர்களும் இப்பணிக்கு உதவினர். இவை அரச நிருவாகத்திற்கென தனியான அரச ஊழியர் அணி தேவை என்பதையும் அவர்கள் தகுதியானவர்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்பதையும் எடுத்துக் காட்டுகின்றன.

- நபி (ஸல்) அவர்கள் முதலில் மதீனாவையும் அதன் சுற்று வட்டாரத்தையும் உள்ளடக்கிய பிரதேசத்திலேயே தமது நகர அரசை உருவாக்கினார்கள். பின்னர் இடம்பெற்ற பத்ரு, உஹுத், அகழி யுத்தங்களின் பெறுபேறுகள், ஹுதைபியா உடன்படிக்கையின் முறிவு என்பன மதீனாவுக்குத் தெற்கே இருந்த பிரதேசங்களை முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தன. அகழிப் போரின்போது யூதர்களுடன் செய்துகொண்ட உடன்படிக் கையை அவர்கள் முற்றாக மீறி நடந்தமையால் மதீனாவில் வாழ்ந்த பனூ நழீர், பனு கைனுகா கோத்திரத்தவர்கள் போன்று பனூ குறைழாக்களும் கைபருக்கு நாடு கடத்தப்பட்டதால் கைபரில் மதீனா அரசுக்கெதிரான ஒரு கூட்டமைப்பு உருவானது. அவர்கள் மதீனாவைத் தாக்க முயற்சிப்பதை அறிந்த நபி (ஸல்) அவர்கள், அவர்கள் வருவதற்கு முன் கைபருக்கு படை நடத்தினார்கள். கைபர் வெற்றிகொள்ளப்பட்டபோது அதன் சுற்று வட்டாரத்தில் வாழ்ந்தவர்களும் முஸ்லிம் அரசுக்குக் கட்டுப்பட்டனர். இதனால் முஸ்லிம் அரசு அல்லது மதீனா அரசு வடக்குப் பக்கமாக விரிவடைந்தது.

- ஹி. 7ஆம் ஆண்டளவில் பேரரசர் சிற்றரசர்களுக்கு அனுப்பப்பட்ட த.ஃவா நிருபங்கள் மதீனா அரசு மேலும் விரிவடைய வழிவகுத்தன. அதன் முதல்படி ஹி. 8இல் நிகழ்ந்த மு.ஃதாப்போருடன் ஆரம்பிக்கின்றது. உரோம மன்னனுக்குத் தூது கொண்டு சென்ற நபியின் தூதுவர் திரும்பும் வழியில் கஸ்ஸானிய சிற்றரசரால் கொலை செய்யப்பட்டார். சர்வதேச சட்டத்துக்கு முரணாக அரச தூதுவரைக் கொலை செய்ததற்குப் பழிவாங்கும் வகையில்தான் மு.ஃதாப் போர் இடம்பெற்றது. இதன் தொடர்ச்சி அடுத்து வந்த குலபாஉர் ராஷிதூன்களின் ஆட்சியில் நடைபெற்றது. இது வடமேற்கே மதீனா அரசை விரிவடையச் செய்தது.

- நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் ஓர் அரசை ஏற்படுத்தி அரச மட்டத்தில் செயற்படாது போனால் த.ஃவாவை முன்வைத்து அவர்கள் மேற்கொண்ட பணிகள் பெறுமானம் அற்றவையாக மாறியிருக்கும். உதாரணமாக நபி (ஸல்) அவர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை யூதர்கள் மீறியபோது மதீனாவிலிருந்து அவர்களை வெளியேற்றக் கூடிய அதிகாரத்தை நபியவர்கள் பெற்றிருக்கமாட்டார்கள். நபியவர்களின் தூதுவர் கொலை செய்யப்பட்டபோது அவர்களை எதிர்த்துப் படையனுப்பக் கூடிய அதிகாரமும் இல்லாதிருந்திருக்கும். பாரசீக மன்னனுக்கு நபியவர்களின் கடிதம் கிடைத்தபோது என்னுடைய அடிமை இவ்வாறு கடிதம் எழுதலாமா என அவன் கோபங் கொண்டமையும் நபியவர்களைக் கைதுசெய்யுமாறு கட்டளை பிறப்பித்தமையும் அவனது அதிகார

பலத்தைக் காட்டுகின்றது. அந்த அதிகாரத்துக்குச் சமமான பலத்தை அரசை நிர்மாணித்ததனூடாகவே நபி (ஸல்) அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். மற்றொரு வகையில் சொல்வதானால் நபியவர்கள் அரசாங்கத்தை த.ஃவாவுக்கான ஓர் சாதனமாக மாற்றிக் கொண்டார்கள். இவ்வாறு நபியவர்கள் உம்மத்துக்கு முன்னோடியாக நடந்து காட்டினார்கள்.

**குலபாஉர் ராஷிதூன்களின் காலகட்டம்**

- நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப் பின்னர் இஸ்லாம் ஸஹாபா சமூகத்திடம் ஒப்படைக்கப்பட்டது எனலாம். சமய, சமூக, அரசியல் வளர்ச்சியை அவர்களே தீர்மானித்தார்கள். எனவேதான் நபி (ஸல்) அவர்களின் காலத்தை இஸ்லாத்தின் அறிமுகக் கட்டமென்றும், குலபாஉர் ராஷிதீன்களின் காலத்தை அபிவிருத்திக் கட்டமென்றும் சிலர் குறித்துக் காட்டுகின்றனர்.
- நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இஸ்லாத்தின் சமய, சமூக, அரசியல் நடவடிக்கைகள், நபியவர்களின் நேரடிக் கண்காணிப்பில் இடம்பெற்றன. ஆனால், அவர்களின் வாபத்துக்குப் பின்னர், நபியவர்களை முன்மாதிரியாகக் கொண்டு செயல்பட வேண்டிய நிலைக்கு ஸஹாபாக்கள் தள்ளப்பட்டார்கள் அல்லது பொறுப்பேற்றார்கள் எனலாம். அப்போதெல்லாம் அவர்கள் தமது மனோஇச்சைப்படி செயல்படவில்லை. அல்குர்ஆன் ஸுன்னாவின் ஆதாரங்களுக்கேற்பவும் தகுதியானவர்களுடனான கலந்துரையாடலுக்கு ஊடாகவும் அவற்றை நிறைவேற்றி வந்தனர்.
- நபி (ஸல்) அவர்களது வபாத்துடன் முஸ்லிம்களுக்கு தலைமைத்துவம் இல்லாத ஒரு நிலை தோன்றியது. தலைமைத்துவமின்றி நபியவர்களை அடக்கம் செய்யக் கூட அவர்கள் விரும்பவில்லை. ஸகீபா பனீ ஸாஇதாவில் கலந்தாலோசனை இடம்பெற்றது. வாதப் பிரதிவாதங்களும் ஏற்பட்டன. எனினும், குறைஷியரிலிருந்தே கலீபா வருவார் என்ற ஹதீஸின் அடிப்படையில் தகுதியான ஒருவராகக் கண்ட அபூபக்ர் (ரழி) அவர்களை தலைமைத்துவத்தில் அமர்த்தினார்கள். அவர்களோ அதனைப் பெரும் சுமையாகவும் அமானிதமாகவும் கருதிச் செயற்பட்டார்கள். தம்மை அல்லாஹ்வின் தூதரின் பிரதிநிதி என்றே பணிவோடு அழைத்துக் கொண்டார்கள். ‘கலீபது ரஸூலுல்லாஹ்’ என்ற சொல்லே கலீபா எனச் சுருங்கியது. அதிலிருந்தே ஆட்சியும் கிலாபத் என்ற பெயரால் வழங்கப்பட்டது எனலாம்.
- நபி (ஸல்) அவர்கள் தமது இறுதிக் காலத்தில் உஸாமா (ரழி) தலைமையிலான ஒரு படையணியைத் தயார்படுத்தினார்கள். அவர்களை ஷாமுக்கு அனுப்பினார்கள். நபியவர்கள் நோயுற்றமையால் படை செல்வது தாமதமானது. அவர்கள் மரணித்ததும் படையை அனுப்பக் கூடாது, அனுப்புவதாயினும் உஸாமா (ரழி)யின் தலைமையில் அனுப்பக் கூடாதென்றெல்லாம் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. நபியவர்களால் நியமிக்கப்பட்ட தளபதியை நீக்கவும் முடியாது; படையை நிறுத்தவும் முடியாது என கலீபா உறுதியாக நின்றார்.
- யமாமா போரில் அநேக ஹாபிழ்கள் ஷஹீதானபோது அல்குர்ஆன் அழிந்துவிடும் என்ற பயம் ஏற்பட்டது. அதனை எழுதித் தொகுத்துப் பாதுகாக்க வேண்டுமென்று உமர் (ரழி) அவர்கள் வேண்டுகோள் விடுத்தபோது நபியவர்கள் செய்யாத வேலையை நான் எவ்வாறு செய்ய முடியுமென கலீபா மறுத்துவிட்டார். நிலைமையைத் தெளிவு படுத்தியபோதே அதற்கு உடன்பட்டார். இவை அல்லாஹ்வின் தூதரின் பிரதிநிதியாக அவர் பணியாற்றியமைக்கு இரண்டு சான்றுகளாகும்.
- கலீபா ஆட்சித் தலைவராக மட்டுமன்றி ஆன்மீகத் தலைவராகவும் இருந்தார். இதனால்

இஸ்லாமிய வாழ்க்கை முறையில் எதிர்ப்படும் சிக்கல்களைத் தீர்க்க வேண்டிய பொறுப்பும் அவருக்கிருந்தது. அவ்வேளைகளில் அல்குர்ஆனில் தீர்வு தேடினார்கள். ஸுன்னாவில் தீர்வு இருக்கின்றதா என ஸஹாபாக்களைக் கேட்டு ஆதாரம் தேடினார்கள். அவர்கள் ஆதாரங்களைத் தெரிவித்தால் அதை வைத்துத் தீர்ப்பு வழங்கினார்கள். இல்லையென்றால் துறைசார்ந்த அறிஞர்களின் கருத்துக்களைப் பெற்று இஜ்திஹாத் மூலம் பதிலளித்தார்கள்.

- இதற்கு முன்னோடியாக நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களைப் பயிற்றுவித்தார்கள். இப்னு அப்பாஸ் (ரழி) போன்ற சிலர் தப்ஸீரில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள்; இப்னு உமர் (ரழி) போன்ற சிலர் ஹதீஸில் தேர்ச்சி பெற்றிருந்தனர். இப்னு மஸ்ஊத் (ரழி) போன்ற சிலர் பிக்ஹில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள்; ஸஅத் இப்னு அபீ வக்காஸ் (ரழி) போன்ற சிலர் போர்த் துறையில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள்; உமர் (ரழி), அலி (ரழி) போன்றோர் அரசியல் துறையில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். எனவே இத்தகையவர்களின் கருத்துக்களோடு நடைமுறைப் பிரச்சினைகள் இஜ்திஹாத் மூலம் தீர்க்கப்பட்டன.

- குலபாஉர் ராஷிதூன்களின் காலத்தில் இஸ்லாம் விரைவாகப் பரவியது. கிலாபத்தின் எல்லை விரிவடைந்தது. அறபி அல்லாத முஸ்லிம்களின் தொகை பெருகியது. பிற கலாசாரங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் அதிகமாகக் காணப்பட்டனர். அறபு மொழியில் அமைந்திருந்த அல்குர்ஆனையோ, ஸுன்னாவையோ நேரடியாக விளங்கிக் கொள்ளும் அறிவு அவர்களிடம் இருக்கவில்லை. எனவே இஸ்லாமிய நடைமுறைகளை ஸஹாபாக்களின் வாழ்க்கை முறையைப் பார்த்தே தெரிந்து கொண்டனர். அந்த வாய்ப்புக் கிடைக்காதவர்களுக்கு இஸ்லாமிய சட்டவிதிகளை எடுத்துக் கூற வேண்டிய பொறுப்பும் கலீபாக்களுக்கு ஏற்பட்டது. கலீபா உமர் (ரழி) அவர்கள் வெவ்வேறு பிரதேசங்களுக்கு வெவ்வேறு ஸஹாபாக்களை அனுப்பி வைத்து மவாலிகளின் நாளாந்த வாழ்க்கையை இஸ்லாமியமயப்படுத்தி நெறிப்படுத்தினார்கள்.

- உமர் (ரழி) அவர்களின் காலத்தில் போர்கள் நிகழ்ந்தன. அவை எதிரிகளால் ஆரம்பிக்கப்பட்டவை. ஆனால் படைப்பலம் மிக்க எதிரிகளால் முஸ்லிம்களின் ஜிஹாதிய உணர்வுக்கு முன் ஈடுகொடுக்க முடியவில்லை. உரோம, பாரசீக ஆட்சிப் பகுதிகளில் இடம்பெற்ற ஊழல்கள், ஒழுக்கவீனங்கள், அடக்குமுறைகள் அப்பிரதேச மக்களை கிலாபத்தின் பக்கம் திரும்ப வைத்தன. இதனால் ஒரு பகுதியார் இஸ்லாத்தை ஏற்ற மவாலிகளாக மாறினர். மற்றொரு பகுதியார் கிலாபத்தை ஏற்ற திம்மிகளாக மாறினர். உமர் (ரழி) அவர்கள் திம்மிகள் விடயத்தில் மிகக் கூடிய கவனத்தைச் செலுத்தினார். அவர்களது உரிமைகளைச் சரிவர வழங்கினார். இதனால் காலப்போக்கில் அவர்களும் முஸ்லிம் சகோதரர்களாக மாறிவிட்டனர்.

- ஆட்சி விரிவடைந்தபோது உமர் (ரழி) அவர்கள் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொண்டார். நபி (ஸல்) அவர்கள் காட்டிய முன்மாதிரியில் மாகாண ஆட்சி முறையை உருவாக்கினார்கள். நிருவாகம் (வாலி), நிதி (ஆமில்), நீதி (காழி), இராணுவம் (அமீர்) என்பன தனித்தனி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. அவ்வதிகாரிகளை மேற்பார்வை செய்வதற்காக முஹம்மத் பின் மஸ்லமா (ரழி) என்பவரை குறைகேள் அதிகாரியாக (ஒம்பூட்ஸ்மன்) ஆக அமர்த்தினார். அரச ஊழியர்களுக்கு ஒழுக்கக் கோவையொன்றை ஏற்படுத்திக் கொடுத்தார். தனது நிருவாகத்தைச் சிறப்பாக நடத்துவதற்காக ஆலோசனை சபை (மஜ்லிஸுஷ் ஷூறா) ஒன்றை ஏற்படுத்தினார். நிதி நிறுவனமாக பைத்துல் மாலை உருவாக்கினார். அரச பணிகளை நிறைவேற்றுவதற்காக திணைக்களங்களைத் (தீவான்களை) தாபித்தார். நீதிக்கு முன் அனைவரும் சமம் என்பதை எடுத்துக் காட்டினார். நீர்ப்பாசன வசதிகளை செய்து கொடுத்தார். உற்பத்தியைப் பெருக்கினார். நாணயங்களை வெளியிட்டார். இதனால் சிறப்பான ஆட்சி மட்டுமன்றி மேன்மையான சமூகமும் உருவானது.

- உமர் (ரழி) அவர்களின் சிறப்பான ஆட்சி எதிரிகளைப் பயங்கொள்ளச் செய்தது. குறிப்பாக பாரசீக பேரரசின் வீழ்ச்சி அவர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவாக கலீபா உமர் (ரழி) அவர்கள் அபூ லுஃலுஆ என்ற பாரசீக அடிமையால் கொலை செய்யப்பட்டார்கள். அவர்களுக்குப் பின்னர் பதவியேற்ற உஸ்மான் (ரழி) அவர்களின் ஆட்சியின் முதற் பகுதி சிறப்பாக அமைந்தாலும் பிற்பகுதி குழப்பத்தில் கழிந்தது. அப்துல்லாஹ் இப்னு ஸபா என்ற யூதன் ஹி.30இல் கிலாபத் பிரதேசத்துள் நுழைந்தான். இஸ்லாமிய அறிவு குன்றிய பிரதேசங்களில் (கூபா, பஸ்ரா, எகிப்து) நச்சுக் கருத்துக்களை விதைத்தான். உஸ்மான் (ரழி) அவர்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்தான். விளைவாக உஸ்மான் (ரழி) அவர்கள் கிளர்ச்சிக் குழுவினரால் கொலை செய்யப்பட்டார்கள். கொலை செய்யப்பட்ட கலீபாவுக்காகப் பழிவாங்கக் கூடிய வாய்ப்புக் களை கிளர்ச்சிக்காரர்கள் தவிர்த்து விட்டனர். இதனால் அடுத்து வந்த கலீபா அலி (ரழி) அவர்களுக்கும், உஸ்மான் (ரழி) அவர்களின் கோத்திரமான உமையாக்க ளுக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றின. இதற்கு முஆவியா (ரழி) தலைமை தாங்கினார். ஜமல், ஸிப்பீன் என்ற உள்வீட்டுப் போர்கள் நிகழ்ந்தன. தந்திரோபாயங்கள், சதி முயற்சிகள் காரணமாக முஸ்லிம் சமூகம் பிளவுபட்டது. அலி (ரழி) ஆதரவாளர்கள் முஆவியா (ரழி) ஆதரவாளர்கள், கவாரிஜ்கள் என்ற மூன்று பிரிவுகள் தோன்றி ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன. இறுதியாக கவாரிஜ்களில் ஒருவனான அப்துர் ரஹ்மான் இப்னு முல்ஜிம் என்பவனால் கலீபா அலி (ரழி) அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். இத்தோடு குலபாஉர் ராஷிதூன்களின் ஆட்சி வீழ்ச்சியடைந்தது. முஆவியா (ரழி) அவர்களின் தலைமையில் உமையா வம்ச ஆட்சி ஆரம்பித்தது.
- இதனால் அரசியல், சமூக, கலாசார விவகாரங்கள் அனைத்திலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இஸ்லாத்தின் உயிரோட்டம் குன்ற ஆரம்பித்தது. பிற கலாசாரத் தாக்கங்கள் சமூகத்திலும் ஆட்சியிலும் ஊடுருவின.

- **உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி I** இஸ்லாத்தின் தோற்றம் பற்றி மாணவர் அறிந்துள்ளவற்றை வினவி சிந்தனைக் கிளர்வொன்றை ஏற்படுத்துங்கள்.

**படி II** மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து பின்வரும் தலைப்புகளை வழங்கி தகவல் திரட்ட வழிப்படுத்துங்கள்.
அ) சமய வளர்ச்சி
ஆ) சமூக வளர்ச்சி
இ) அரசியல் வளர்ச்சி

**படி III** தாம் திரட்டியவற்றை குழுக்களிடையே கலந்துரையாடிப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளியுங்கள்.

**படி IV** அவற்றின் சுருக்கத்தை எழுதிக்கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை:**


- ஸிராஜுத்தீன் செய்யித் அபூபக்ர் (மார்டின் லிங்ஸ்) (1989) *முஹம்மத் (ஸல்)*, தர்கா நகர்.
- ஸைபுர் ரஹ்மான் முபாரக் பூரி (1425 ஹி.) *அர்ரஹீக்*, சென்னை, தாருல் ஹுதா
- அபூபக்ர் எம்.எம். (1982), *இஸ்லாமிய வரலாறு*, பாகம்-1, சாய்ந்தமருது-5, இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகம்,
- அமீன் எம்.ஐ.எம். (2002), *முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்*, ஹெம்மாதகம, அல்ஹஸனாத் பதிப்பகம்.
- அமீன் எம்.ஐ.எம். (2004) *அபூபக்ர் ஸித்திக்*, ஹெம்மாதகம, அல்ஹஸனாத் பதிப்பகம்.
- அப்துல் ஹை அபூ ஸாலிம் (1988) *அண்ணல் நபியின் அழகிய வரலாறு*, சென்னை, இஸ்லாமிய நிலையம் டிரஸ்ட் (IFT)
- ஸிபாஈ முஸ்தபா (2010) *நபி (ஸல்) அவர்களின் வாழ்வியல்*, கொழும்பு 09, மீள்பார்வை ஊடக மையம்.
- ரியாழ் எம்.ஜே.எம். (2001), *மதீனாவை நோக்கி*, உக்குவளை, உம்மத் பப்ளிகேஷன்.
- நாளிர் எம்.எச்.எம். (1983) *இஸ்லாமிய நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்*, கொழும்பு 10, அஷ்ஷபாப் பதிப்பகம்.
- அமீன் எம்.ஐ.எம். (1999), *அரேபியர் வாழ்வியல்*, கொழும்பு, இஸ்லாமிய புக் ஹவுஸ்.
- முஹம்மத் ஏ. முக்தார் (1986), *இஸ்லாமிய நாகரிகம்*, வெலிகம, அல்-அஸ்ஹர் வெளியீட்டகம்.

**தேர்ச்சி 7.0 : இஸ்லாத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றியும் இலங்கையில் இஸ்லாம் அறிமுகமானமை பற்றியும் விளக்கி எடுத்துக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.2:** இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகிய வரலாற்றுப் பின்னணியைக் கிரகித்து விமர்சன ரீதியாக எழுதிக்காட்டுவார்.

**காலம்** : 20 பாடவேளைகள்

**கற்றல் பேறு** :

- அரபு வர்த்தகர்கள் நாடு பிடிக்கும் நோக்கிலன்றி வர்த்தக நல்லுறவைப் பேணும் வகையிலேயே இலங்கைக்கு வந்தனர் என்பதை உணர்ந்து விளக்குவார்.
- இலங்கைக்கும் அரேபியர்களுக்கும் இடையிலான தொடர்பு வரலாற்றுத் தொன்மை வாய்ந்தது என்பதை சரியாக விளங்கி எடுத்துக் காட்டுவார்.
- இந்த உறவினாலும் தொடர்பினாலும் எவ்வாறான விளைவுகள் உண்டாயின என்பதை அறிந்து கூறுவார்.
- எத்தகைய ஒரு காலப் பிரிவில் இலங்கையில் இஸ்லாம் அறிமுக மாகியது என்பதைக் கணித்து அறிந்து கூறுவார்.
- இலங்கை முஸ்லிம்களின் ஆரம்பகாலக் குடியேற்றங்கள் எங்கெங்கெல்லாம் இடம்பெற்றன என்பது பற்றி விபரமாக அறிந்து கொள்வார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- **இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாதல்**
  - இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமான வரலாறு பற்றிய தகவல்களோ இலங்கை முஸ்லிம்களின் ஆரம்பகால வரலாறு பற்றிய தகவல்களோ மிகக் கிட்டிய காலம் வரை எமக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கவில்லை.
  - ஆரம்பகால அரபு தேச சஞ்சாரிகளும் பிரயாணிகளும் விட்டுச் சென்ற குறிப்புகள், பிற சமூகங்களின் காப்பிய நூல்கள், மற்றும் ஐரோப்பிய ஆட்சியாளர் விட்டுச் சென்ற தகவல்கள் முதலானவற்றின் துணை கொண்டே இலங்கையில் இஸ்லாம் அறிமுகமான வரலாறு பரவலாக கூறப்பட்டு வருகிறது.
  - இலங்கை முஸ்லீம்களின் வரலாறு என்பது இந்து சமுத்திரத்தினூடாக இடம் பெற்ற அரபு மக்களின் வணிகத்தோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டதாகும். இந்து சமுத்திர வணிகம் என்பதும், இந்து சமுத்திர வணிகப்பாதை என்பதும் இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமான வரலாற்றோடு மிக நெருங்கிய தொடர்புடையன.
  - இந்த வகையில் இலங்கையில் இஸ்லாத்தின் அறிமுகத்துக்குக் களம் அமைத்துக் கொடுத்த அரபு வணிகர்களுக்கும் இலங்கைக்கும் இடையே நிலவிவந்த உறவின் வரலாற்றுத் தொன்மை பற்றி அறிவது அவசியமாகும்.
  - பாரசீக வளைகுடாவில் ஆரம்பித்து சீனாவின் கன்டன் துறைமுகம் வரையான ஒரு விரிந்த பிரதேசத்தை இந்த அரபு வணிகம் உள்ளடக்கி இருந்தது. இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடத்தில் அமைந்துள்ள

இலங்கைத் தீவானது, கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையிலான வணிகப்பாதையில் மத்திய நிலையை வகிக்கின்றது. இந்து சமுத்திரத்தின் காற்று வீசும் முறையில் (Wind pattern) இந்த வணிகம் தங்கியிருந்தமையானது இலங்கை சர்வதேச வர்த்தகப் பாதையின் முக்கிய இடத்தைப் பெற்றுக் கொள்ளவும் உலகளாவிய ரீதியில் அறியப்படவும் காரணமாக அமைந்தது.

- அக்காலத்தில், இலங்கையில் வெளிநாட்டுக் கப்பல்கள் பாதுகாப்பாகத் தங்கி நிற்கக் கூடிய சிறந்த துறைமுகம் காணப்பட்டமை, போதிய வாசனைத் திரவியங்கள் கிடைத்தமை, சுத்தமான நீரைப் பெற்றுக் கொள்வதற்கான வசதி இருந்தமை முதலான அம்சங்கள் இலங்கைத் தீவை வணிகத்தின் முக்கிய இடமாக மாற்றின. இவை இஸ்லாத்தின் தோற்றத்துக்கு முன்பே இலங்கையில் அரபுக் குடியேற்றங்கள் தோன்றக் காரணங்களாக அமைந்தன.
- பண்டுகாபய மன்னன் கி.மு. (437-367) காலப் பகுதியில் அநுராதபுரத் தலை நகரில் பிற நாட்டு வணிகர்களுக்கெனச் சில பிரதேசங்களை ஒதுக்கியிருந்தான் என்றும் அங்கு யவனர்களுக்கெனத் தனியான இடமொன்று ஒதுக்கப்பட்டிருந்தது என்றும் மகா வம்சம் குறிப்பிடுகிறது. மகா வம்சம் குறிப்பிடும் ''யவனர்'' எனும் பதம் அரபு மக்களையே குறிப்பதாக மகா வம்சத்தை ஆராய்ந்து மொழி பெயர்த்த கைகர் குறிப்பிடுகிறார்.
- மேற்குறித்த தகவல்களைத் தவிர வேறு பல தகவல்களும் இஸ்லாத்துக்கு முன்னரே அரபு வணிகர்கள் இலங்கையில் குடிகளாக வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை நிறுவப் போதிய ஆதாரங்களாக உள்ளன. அநுராதபுரத்தில் அரபுகளின் வீடுகள் அழகிய முறையில் அமைந்திருந்தன என பாகியன் குறிப்பிடுகிறார். வில்லியம் கைகரின் கருத்துப்படி விஜயனும் அவனது தோழர்களும் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே யமன் நாட்டு அரபிகள் இலங்கையில் குடியிருந்துள்ளனர். ஆரியர்கள் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே அரபு வணிகர்களது வருகை இடம்பெற்றதென அவர் மேலும் குறிப்பிடுகிறார்.
- அரபு வர்த்தகர்கள் மலபார் கரையிலும் இலங்கையிலும் அதிகமாக வாழ்ந்து வந்ததாகவும் அங்கு அவர்களின் ஆதிக்கமே மிகைத்திருந்ததாகவும் குறிப்பிடும் பிரசித்தி பெற்ற எழுத்தாளர் பிளினி, கிறிஸ்தவ ஆண்டு தொடங்கு முன்னரே இந்த அரபுகளின் குடியேற்றங்கள் இலங்கையில் அமைந்திருந்ததாகவும் குறிப்பிடுகிறார்.

  இதனையே முன்னாள் அகழ்வாரய்ச்சியாளர் கலாநிதி பாலேந்திரா பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

  ''கடந்த 2000 வருடங்களுக்கும் மேலாக அரபு மக்கள் இலங்கையின் குடிமக்களாக இருந்து வந்ததால் வேடர்களையும் பழங்குடிகளையும் போலவே அவர்களும் பழமை வாய்ந்தவர்களாவர்.''
- அரேபியரின் இந்த குடியிருப்புப் பாரம்பரியம் இஸ்லாத்தின் தோற்றத்திற்குப் பின்னரும் தொடராக இடம்பெற்று வந்துள்ளதை வரலாற்றுத் தகவல்கள் எடுத்துக் காண்பிக்கின்றன.

  அதுவரை வெறுமனே அரபு வணிகர்கள் என்ற பெயரில் இலங்கைக்கு வருகை தந்த அவர்கள் இஸ்லாத்தின் தோற்றத்தின் பின்னர் அரபு முஸ்லிம் வணிகர்கள் எனும் பண்புப் பெயரைப் பெற்றவர்களாக வருகை தரலாயினர். இவ்வாறு முஸ்லிம் களாக வந்து குடியேறிய அரபு மக்களின் இஸ்லாமிய நடைமுறைகளும், வர்த்தகத்தில் அவர்கள் காட்டிய நேர்மையும் மற்றும் சில நல்லம்சங்களும் அவர்களது மார்க்கமான இஸ்லாம் இலங்கையில் அறிமுகமாவதற்குத் துணை செய்தன.

அவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்.

- அல்கியபகரி எனும் நூலை ஆதாரம் காட்டி சித்திலெப்பை தனது முஸ்லிம் நேசனில் பின்வரும் நிகழ்வைக் குறிப்பிடுகிறார்.

  "கி.பி. 628இல் வஹப் இப்னு அபீ ஹப்ஸா எனும் தோழரை நபி அவர்கள் இலங்கை மன்னனிடம் அனுப்பி வைத்தார்கள், நபியவர்களின் கடிதத்தை மன்னனிடம் கொடுத்த நபித்தோழருக்கு, அவரது பணியை மேற்கொள்ள அனுமதியளித்து மஸ்ஜித் ஒன்றைக் கட்டிக் கொள்ளவும் விரும்புபவர்கள் அவரது மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளவும் அனுமதி வழங்கினான். குறித்த நபித்தோழர் இங்கிருந்த அரபு மக்களுக்கும் ஏனையோருக்கும் இஸ்லாத்தைப் போதித்துச் சிலரைத் தனது மார்க்கத்தவராக்கியதன் பின்னர் கி.பி. 632இல் அரேபியாவுக்கு மீண்டார்."

- அரேபியாவில் புதியதொரு மார்க்கம் தோன்றியிருப்பதாக அறிந்த இலங்கை மன்னன் (2ஆம் அக்கபோதி : 623-633) இது பற்றி அறிந்து வருவதற்காக ஒரு தூதுக் குழுவை அரேபியாவுக்கு அனுப்பி வைத்தான். இத்தூதுக் குழு அரேபியாவைச் சென்றடைந்த போது நபியவர்கள் மரணித்து அபூபக்ர் (ரழி) அவர்களின் கிலாபத்தும் முடிவடைந்து உமர் (ரழி) அவர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். உமரை சந்தித்த தூதுக் குழு அவர்களிடம் இஸ்லாத்தைப் பற்றிய தகவல்களை அறிந்து கொண்டு இலங்கைக்குத் திரும்பியது. வழியில் மக்ரானில் (நவீன கராச்சி) ஒருவர் மரணிக்க மற்றவர் இலங்கை வந்து தாம் அறிந்த செய்தியைத் தெரிவித்தார்." என்ற தகவலை வரலாற்று ஆசிரியர் இப்னு ஷஹ்ரயார் தனது "அஜாஇபுல் ஹிந்து" எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

- "புதூஹுல் புல்தான்" எனும் நூலின் ஆசிரியர் "பலதூரி" குறிப்பிடும் பின்வரும் சம்பவமும் இலங்கையில் இஸ்லாம் அறிமுகம் பெறத் துணை செய்த மற்றொரு காரணியாகும். "மாணிக்கத் தீவின் மன்னன் அங்கு முஸ்லிம் தாய் தந்தையருக்குப் பிறந்து அப்பெற்றோர்கள் இறந்ததன் காரணமாக அநாதைகளான விதவைகளான சிலரை ஒரு கப்பலில் ஏற்றி இராக்கின் அப்போதைய கவர்னராக இருந்த ஹஜ்ஜாஜிடம் அனுப்பி வைத்தான். அப்பெண்கள் இன்றைய கராச்சிக்கு சமீபமாக உள்ள "தேபல்" எனும் இடத்தில் வைத்து கடற் கொள்ளைக்காரர்களால் சிறைப்பிடிக்கப்பட்டனர். விடயம் அறிந்த ஹஜ்ஜாஜ் சிந்து நாட்டின் மன்னன் ராஜா டாஹிருக்கு மடல் வரைந்து அப்பெண்களை உடனே விடுதலை செய்யுமாறு கோரினார். ஹஜ்ஜாஜின் கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டதால் சிந்து நாட்டின் மீது முஸ்லிம் படையெடுப்பு நிகழ்ந்தது." இந்த நிகழ்வே இந்திய நாடு இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வருவதற்குக் காரணமாக அமைந்தது.

- "கி.பி. 8ஆம் நூற்றாண்டில் ஹஜ்ஜாஜின் கொடுமைக்கு அஞ்சி ஹாஷிமீக்கள் சிலர் தமிழகத்திலும் மலாக்காவிலும் இலங்கையிலும் குடியேறினர். இவர்கள் இலங்கையின் வட கிழக்கு, வட மேற்கு பகுதிகளிலுள்ள திருகோணமலை, புத்தளம், யாழ்ப்பாணம், மாந்தோட்டம், மன்னார், குதிரைமலை, கொழும்பு, பர்பரீன் (பேருவலை) முதலாம் பிரதேசங்களில் குடியேறி வாழந்தனர்." என்று அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டன் என்பவர் குறிப்பிடுகிறார்.

- இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட கல்லறை நடுகற்களும், அரபு நாணயங்கள் சிலவும் இலங்கையில் இஸ்லாத்தின் பரவலை எடுத்துக்கட்டும் ஆதாரங்களாக உள்ளன.

- இலங்கையில் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் தமக்கு மார்க்க சட்ட திட்டங்களை கற்றுக் கொடுப்பதற்கான ஒரு போதகரை அனுப்பி வைக்குமாறு பக்தாதை ஆட்சி செய்து வந்த அப்பாஸிய கலீபா ஹாரூன் ரஷீதை வேண்டிக் கொண்டபோது

கலீபா காலித் இப்னு அல் பகாயா என்பவரை ஹிஜ்ரி 300களில் இலங்கைக்கு அனுப்பி வைத்தார்.

- தனது பணியைச் சிறப்பாகச் செய்து முடித்த அவர் ஹிஜ்ரி 317இல் வபாத்தாகி கொழும்பிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டார். அவரது நினைவாக அடக்கஸ்தலத்தில் பதிப்பதற்காக ஒரு நடுகல்லை (Tomb Stone) பக்தாதில் இருந்து கலீபா ஹாரூன் அனுப்பி வைத்தார். இந்த கல்லறை நடுகல் இன்றும் நம் நாட்டு அரும்பொருட்சாலையில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.
- கொழும்பு நகரைத் தாண்டி புளியந் தீவு, திருகோணமலை, மடுள்போவ முதலான பிரதேசங்களில் கண்டெடுக்கப்பட்ட கல்லறை நடுகற்களும் முதுராஜவல மற்றும் நீர்கொழும்பு, வத்தளை, கம்பளை, கலகெதறை போன்ற இடங்களில் கண்டெடுக்கப் பட்ட அரபு நாணயங்களும் இலங்கையில் இஸ்லாம் பரவலை அறிவிக்கும் சாதனங்களாக உள்ளன.

- **இலங்கையில் இஸ்லாத்தின் வளர்ச்சி**

  - இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகக் காரணமாக இருந்த அரபு வணிகர்களே இந்நாட்டில் இஸ்லாத்தின் பரவலுக்கும் வளர்ச்சிக்கும் காரணமாக இருந்துள்ளனர். கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையே இடம் பெற்ற வர்த்தகத்தில் முக்கிய இடத்தை வகித்த துறைமுக நகர்கள் தான் அப்போதைய வர்த்தக மையங்களாகவும் இருந்தன. காற்றின் துணை கொண்டு பயணித்த அரபு வணிகர்கள், ஒன்றில் தென் இந்திய கரையோரத் துறைமுக நகர்களில் அல்லது இலங்கையின் கரையோரங்களில் அமையப் பெற்றிருந்த துறைமுகங்களில் தங்கிச் சென்றனர்.
  - இலங்கையின் துறைமுக நகர்களில் அவர்கள் தரித்துச் சென்றமைக்கு பின்வரும் அம்சங்கள் காரணங்களாக அமைந்தன.
    - தமது வர்த்தகத்துக்கான வர்த்தகப் பொருட்களை இங்கு தாராளமாகப் பெற்றுக் கொள்ள முடிந்தமை.
    - தூய்மையான குடிநீரும், உணவும் கிடைத்தமை.
    - இத்துறைமுகங்கள் இயற்கையாகவே பாதுகாப்பானவையாக அமைந்திருந்தமை.
    - கப்பல் திருத்துவதற்கும், பழுதுபார்ப்பதற்கும் தேவையான வசதிகள் இருந்தமை.
  - இவ்வாறு கரையோரங்களில் தங்கிச் சென்ற நிகழ்வுகளும் பிற்காலத்தில் அவ்வப் பிரதேசங்களில் அரபுக் குடியேற்றங்கள் இடம் பெற வழி செய்தன. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் முதற் கெண்டே இலங்கையின் கரையோர நகர்களிலும் அநுராதபுரம் போன்ற உள் நாட்டுப் பிரதேசங்களிலும் அரபு வர்த்தகர்களின் குடியிருப்புக்கள் இருந்து வந்தன என வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
  - உலகில் இஸ்லாம் அறிமுகமாகிய கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் கூட இந்த அரபு வர்த்தகம் தொடராக இடம்பெற்று வரலாயிற்று.

    இஸ்லாம் தோன்றும் வரை வெறுமனே அரபு வர்த்தகர்கள் என்ற நிலையில் பயணித்த, தங்கிய இவர்கள், இஸ்லாத்தின் வருகையோடு அரபு முஸ்லிம் வணிகர்கள் எனும் பெயரை தாங்கியவர்களாகவே வருகை தரலாயினர்; வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடலாயினர். வர்த்தக நோக்கில் கரையோர நகர்களில் தங்கிய இவர்களின் இஸ்லாமிய நடைமுறைகள் சுதேச மக்களின் வரவேற்பையும் கவன ஈர்ப்பையும் பெறலாயின. இதுவும் இஸ்லாத்தின் பரவலுக்குக் காரணமாக அமைந்தது.

- முஸ்லிம்களது குடியேற்றங்கள் இலங்கையில் முதன் முதலில் எங்கு இடம் பெற்றன என்பதை மிகச் சரியாக எவரும் இதுவரை கணித்துக் கூறாத நிலையில் உமையாக்க ளின் கொடுமைகளுக்கு அஞ்சி இலங்கையில் வந்து குடியேறிய ஹாஷிமீக்களின் குடியேற்றத்தோடுதான் முஸ்லிம்களின் பூர்வீகம் ஆரம்பமாகிறது என அலக்ஸான்டர் ஜோன்ஸ்டன் குறிப்பிடுகிறார்.

  அல்கியா பாகரி எனும் நூலை ஆதாரமாகக் கொண்டு சித்தி லெப்பை முஸ்லிம் நேசனில் குறிப்பிடும் வாஹப் இப்னு அபீ ஹப்ஸா தொடர்பான சம்பவமும், வரலற்றாசிரியர் இப்னு ஷஹ்ரயார் தனது "அஜாஇபுல் ஹிந்து" எனும் நூலில் குறிப்பிடும் சம்பவமும், இலங்கையின் ஆரம்ப முஸ்லிம்களது குடியேற்றங்கள் பற்றிய தகவல்களைத் தருவது மட்டுமன்றி அவர்களே இஸ்லாத்தின் வளர்ச்சிக்கும், பரவலுக்கும் கரணமாக இருந்து வந்துள்ளனர் என்ற உண்மையையும் எடுத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

- கி.பி. 9ஆம் நூற்றண்டில் வணிகரீதியாகப் புகழ் பெற்று விளங்கிய மூன்று முக்கிய துறைமுகங்களுள் மாந்தைத் துறைமுகமும் ஒன்றாகும். இங்கு நடைபெற்ற அகழ்வாராய்ச்சி மூலம், அங்கு கணிசமான அளவில் அரபு வர்தகர்கள் கணப்பட்டனர் என்பதை அறிய முடிகிறது. இதே காலப்பிரிவில் கொல்லம் துறைமுகத்தில் இருந்து சீனா வரை சென்ற வர்த்தகப் பாதையில் பயணித்த அரபு வணிகர்கள்; இலங்கையின் தென் கரையோரங்களில் தமது குடியேற்றங்களை அமைத்தனர். கொழும்பு, பேருவலை, களுத்துறை, காலி, வெலிகாமம், மாத்தறை, திருகோணமலை, மன்னார், புத்தளம் போன்ற நகர்கள் அவற்றுள் சிலவாகும். வெறுமனே வணிக நோக்கில் அமைக்கப்பட்ட இக்குடியிருப்புகளும் இஸ்லாத்தின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த மற்றுமொரு காரணியாகும்.

- இலங்கையில் இஸ்லாம் வளர்ச்சி பெறத் துணைசெய்த மற்றுமோர் அம்சம், தென் இந்திய முஸ்லிம்களோடு இலங்கை முஸ்லிம்கள் ஏற்படுத்திக் கெண்ட உறவாகும். அரபு வணிகர்கள் போல தென் இந்திய வர்த்தகர்களும் இலங்கையின் கரையோரங் களில் தமது குடியேற்றங்களை அமைத்தனர். இது பற்றி சித்தி லெப்பை பின்வருமாறு குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

  "... தென் இந்தியாவில் உள்ள நாகூர், காரைக்கால், தொண்டி, காயல்பட்டணம் முதலாம் பிரதேசங்களில் இருந்து முஸ்லிம்கள் வியாபார நோக்கில் வந்து குடியேறினர்.

- இலங்கையில் தென் கரையோர நகர்களில் இஸ்லாத்தின் பரம்பலை பின்வரும் விடயங்கள் எடுத்துக் காண்பிக்கின்றன.

  கி.பி. 12ஆம் நூற்றாண்டில் பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம் வணிகர்கள் வெலிகாமத்தில் பெரும் செல்வாக்குடன் வாழ்ந்தார்கள். பொருளாதாரச் செழிப்போடு வாழ்ந்த முஸ்லிம்களைக் போர்த்துக்கேயர் கொள்ளையடித்தனர்.

  காலியில் 14ஆம் நூற்றாண்டளவில் முஸ்லிம் சமூகம் ஒன்று வாழ்ந்து வந்திருக்கிறது என்பதை இப்னு பதூதா தான் அங்கு சென்றவேளை தனக்கு அங்கு நாகூர் இப்ராஹீம் எனும் கப்பல் தலைவன் விருந்தளித்து கௌரவித்தான் என்று குறிப்பிடும் சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது.

  கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதல் பேருவலையில் இஸ்லாத்தின் வளர்ச்சியைக் காணமுடிகிறது. கி.பி. 930இல் இங்கு கண்டெடுக்கப்பட்ட கல்லறை நடு கல்லும், கி.பி. 1010இல் பெரிய தம்பி மரைக்கார் என்பவருக்கு இலங்கை மன்னன் ஒருவன் வழங்கிய செப்புப் பட்டயமும் இதற்கான சான்றுகளாகும்.

- இலங்கையில் இஸ்லாத்தின் வளர்ச்சியில் அரேபியாவிலிருந்து இலங்கைக்கு வருகைதந்த மார்க்கப் பிரசாரகர்களின் பணிகளும் குறிப்பிடத்தக்கனவாகும்.

  இலங்கை முஸ்லிம்களிடையே மார்க்கப்பற்று குறைந்திருந்த போது அவர்களுக்குப் போதனை செய்து நன்னெறிப்படுத்துவதற்காக பக்தாத் கலீபாவினால் காலித் இப்னு பகாயா என்ற போதகர் அனுப்பப்பட்டார். இவரது கல்லறை நடுகல் கொழும்பில் கண்டெடுக்கப்பட்டதானது, அவர் கொழும்பில் இருந்தே தனது போதனையை மேற் கொண்டிருக்கிறார் என்பதையும் முஸ்லிம் குடியிருப்பாளர்களின் மையமாக கொழும்பு விளங்கி வந்திருக்கிறது என்பதையும் காட்டுகின்றன.

- இக்காலப் பிரிவில் இஸ்லாம் நிலைபெறத் தேவையான சகலவிதமான கல்விப் போதனைகளும் வழங்கப்பட்டன. இக்கருத்தை சேர் அலெக்ஸாண்டர் ஜொன்ஸனின் பின்வரும் கூற்று உறுதிப்படுத்துகிறது.

  "பாரசீகக் குடா, பஸரா, ஆகியவற்றினூடாக பக்தாதோடும், ஏனைய கிலாபத் நாடுகளோடும், அரபுக்கடல், எகிப்து ஆகியவற்றினூடாக மத்திய தரைக்கடல் முஸ்லிம் அரசுகளுடனும் ஸ்பானிய முஸ்லிம் அரசுடனும் கொண்டிருந்த தொடர்பின் மூலம் அவர்கள் இந்த நாடுகளில் இருந்து இஸ்லாமிய சட்டங்கள் தொடர்பான பல மூல அரபிக் கிரந்தங்களை இலங்கைக்கு அறிமுகப்படுத்தினர்."

- இவ்வாறான சான்றுகள் மாத்திரமன்றி பின்வரும் விடயங்களும் இலங்கையில் இஸ்லாத்தின் வளர்ச்சி பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வளர்ச்சி கண்டு வந்துள்ளது என்பதை நிறுவுவதாய் உள்ளன.

- அப்போது இலங்கையில் இருந்த சகல மதங்களும் போலவே இஸ்லாமும் சம தரத்தில் வைத்து நோக்கப்பட்டது எனவும் ஒரு மன்னனின் ஆலோசகர்களாக நான்கு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர் எனவும் குறிப்பிடும் அல் இத்ரீஸியின் கூற்று இக்காலப் பிரிவில் இஸ்லாம் எத்தகு வளர்ச்சியை கண்டிருந்தது என்பதைப் புரிந்து கொள்ள உதவுகிறது.

- ஆரம்பத்தில் கரையோர நகர்களில் மாத்திரம் வளர்ச்சி பெற்றிருந்த இஸ்லாம் பின்னர் படிப்படியாக உள்நாட்டுப் பகுதிகளிலும் வளர்ச்சி காண ஆரம்பித்தது.

  அல் இத்ரீஸியின் கூற்றுக்கு நிகராக இக்காலப் பிரிவின் தலை நகர்களாக விளங்கிய யாப்பகுவா, குருனாகலை, தம்பதெனியா முதலாம் பகுதிகளில் ஹிஜ்ரி 4ஆம் நூற்றாண்டுகளில் இஸ்லாம் பரவியிருந்ததை அறிய முடிகிறது. பின்னர் வருகை தந்த மொரோக்கோ நாட்டுத் தேச சஞ்சாரி இப்னு பதூதாவின் குறிப்புகளில் புத்தளமும், குருனாகலையும் சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றன.

- குருனாகலையைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி செய்த இரண்டாம் புவனேகபாகு அஸ்வத்தும எனும் கிராமத்து முஸ்லிம் பெண்ணான மதகெடிய குமாரி ஹாமினே என்பவளை மணந்தான். இவ்விருவருக்கும் பிறந்த வஸ்துஹிமி முஸ்லிமாகவே வளர்ந்து ஈற்றில் ஆட்சிபீடம் ஏறியதைக் கண்டு சகியாத சிலர் அவனைக் கொலை செய்தனர். கலேபண்டார ஔலியா எனும் பெயரில் இவனுக்காக அமைக்கப்பட்ட சமாதி, அவன் கொலை செய்யப்பட்ட இடத்தில் இன்றும் இருக்கிறது.

  குருனாகலைத் தான் தரிசித்ததாகவும், அங்கு சேக் சீராஸி என்பவர் ஒரு மஸ்ஜிதில் இருந்து கொண்டு, பாவாதம் மலைக்கு யாத்திரை செய்வோருக்கு வழிகாட்டிக் கொண்டிருந்ததாகவும் குறிப்பிடும் இப்னு பதூதாவின் குறிப்பு, இக்காலப் பகுதியில் இஸ்லாம் வேரூன்றி இருந்திருக்கிறது என்பதையே காட்டுகிறது.

- இப்னு பதூதா தனது பயணக் குறிப்பில் "குநாகர்" எனக் குறிப்பிடுவது கம்பளையையே என சில வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். இப்பிரதேசத்தில் இதே காலப் பிரிவைச் சேர்ந்த நாணயம் ஒன்று கண்டெடுக்கப்பட்டதோடு, கம்பளைக்கு சமீபமாக உள்ள ஹெம்மாதகமையில் கல்லறை நடுகல் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இச்சான்றுகள் யாவும் கி.பி. 14ஆம் நூற்றாண்டுகளில் இப் பகுதிகளில் இஸ்லாம் வளர்ச்சியுற்றிருந்த நிலையினைக் காண்பிப்பதாய் உள்ளன.
- கரையோர நகர்களில் முக்கியம் பெற்றதாக விளங்கியது கொழும்பு நகரமாகும். அப்போது தலைமைத் துறைமுகமாக இருந்த கொழும்புத் துறைமுகம் ஜலஸ்தி எனும் முஸ்லிமின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. இதே காலப்பிரிவில் பேருவளை, காலி போன்ற முஸ்லிம் குடியிருப்புகளின் பலத்தையும், வளத்தையும் பயணக் குறிப்புகள், காப்பியங்கள் மூலம் அறிய முடிகிறது.
- இவ்வாறு அமைக்கப்பட்ட குடியிருப்புகளில் வர்த்தகம் சம்பந்தமாகவோ, கடலுரிமை சம்பந்தமாகவோ தொடரப்படும் வழக்குகளில் முஸ்லிம் ஒருவர் சம்பந்தப்பட்டிருந்தால் விசாரணையில் குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட முஸ்லிம் சமயப் பெரியார்களும், வர்த்தகர்களும், கடலோடிகளும் இடம்பெறுவதோடு ஆசியப் பிராந்தியத்தில் முஸ்லிம்களிடையே இருந்து வரும் சட்ட நியதிகளின்படி நீதி வழங்க வேண்டும் என்றும் சிங்கள மன்னர்களால் கட்டளை இடப்பட்டிருந்தது.
- இவை, இஸ்லாம் இலங்கையில் போர்த்துக்கேயருக்கு முன்னரே வேரூன்றிவிட்டிருந்தது என்பதற்கான போதிய ஆதாரங்கள் மட்டுமன்றி இஸ்லாமிய அறிவும் உணர்வும் வளர்க்கப்பட்ட கட்டுப்பாட்டுடனான ஒரு சமூகமாக முஸ்லிம் சமூகம் நிலை பெற்றிருந்தது என்பதற்கான ஆதாரங்களாகவும் அமைகின்றன.
- இலங்கை முஸ்லிம்களது பிரதான தொழில் வர்த்தகமாக இருந்த போதிலும் இஸ்லாமே அவர்களது வாழ்வியலாக அமைந்து காணப்பட்டது. இஸ்லாத்தின் மீதான அவர்களது நம்பிக்கையின் உறுதிப்பாட்டை ஒல்லாந்த மதகுரு ஜேம்ஸ் செல்சர்க் ஆண்டகையின் வார்த்தைகள் புலப்படுத்துகின்றன.

  "சோனகரிடையே ஊடுருவுவது மிகவும் சிரமமானதாகும், கிறிஸ்தவ மதத்தோடு தொடர்பான எந்தவொரு அம்சத்தையும் அவர்களிடையே வினியோகிப்பது அவர்களை ஆத்திரமுறச் செய்வது மட்டுமன்றி அவற்றை அவர்கள் புறக்கணித்தும் விடுகின்றனர்."

  "கிறிஸ்தவத்துக்கு மாற்றப்பட்ட ஏராளமான மக்களின் பெயர்களிடையே எந்த ஒரு முஸ்லிமின் பெயரையும் காண முடிவதில்லை" எனக் குறிப்பிடும் "ஹோவ்" என்பவரின் கருத்தும் ஈண்டு நோக்கத்தக்கது.
- இவ்வாறு கரையோர நகர்களிலும் உள்நாட்டுப் பிரதேசங்களிலும் வளர்ச்சி பெற்று உறுதி பெற்ற இஸ்லாம், போர்த்துக்கேயரின் வருகையோடு நலிவடைய ஆரம்பித்தது. இவர்கள் இலங்கை முஸ்லிம்கள் தொடர்பில் கடைப்பிடித்த கொள்கை ஏனைய நாடுகளில் முஸ்லிம்கள் தொடர்பில் கடைப்பிடித்த கொள்கையின் தொடர்ச்சியாகவே அமைந்தது. ஸ்பானியர் இக்காலப் பிரிவில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொண்ட எல்லா நடைமுறைகளையும் போர்த்துக்கேயர் இலங்கை முஸ்லிம்களுக்கெதிராகக் கடைப்பிடித்தனர்.
- போர்த்துக்கேயரின் நோக்கங்களான வர்த்தகத்துக்கும், கிறிஸ்தவ மதப் பிரசாரத்துக்கும் முஸ்லிம்கள் தடையாக அமைந்ததால், முஸ்லிம்களுக்கெதிரான அவர்களின் கெடுபிடிகள் அதிகரித்தன. இந்த நிலை இஸ்லாத்தின் வளர்ச்சியிலும் தாக்கத்தை செலுத்தத் தவறவில்லை.
- கரையோர நகர்களில் இருந்து முஸ்லிம்கள் துரத்தப்பட்டதால், கண்டி போன்ற உள்நாட்டுப் பகுதிகளில் முஸ்லிம்கள் குடியேறலாயினர்.

கண்டி மன்னனின் அரவணைப்பில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு அரசர்களின் நல்ல உயர் பதவிகளும் கிடைத்தன. இக்காலப் பிரிவில் ஒல்லாந்தருக்கு எதிராக போரிட்ட முஸ்லிம்கள் தமது மார்க்கமான இஸ்லாத்தைக் காப்பதையும் இலக்காகக் கொண்டே செயல்பட்டனர். எனவே, ராஜ்ஜியத்தில் இஸ்லாம் தடை இன்றி வளர்ச்சி கண்டது.

- ஒல்லாந்தரின் ஆரம்பப்பகுதியில் முஸ்லிம்கள் துன்புறுத்தப்பட்டபோதும், அவர்களது இறுதிக் காலப் பகுதியில் முஸ்லிம்கள் மீது விதிக்கப்பட்டிருந்த சட்டங்கள் ஓரளவு தளர்த்தப்பட்டன. காலி, வெலிகாமம், மாத்தறை முதலாம் பிரதேசங்களில் ஒல்லாந்தர் முஸ்லிம் கிராமத் தலைவர்களை நியமித்தார்கள். இந்தோனேசிய முஸ்லிம்களின் சட்டங்களை அறிமுகம் செய்த இவர்கள் மலாயர்களையும் அழைத்து வந்து இங்கு குடியமர்த்தினர். உண்மையில், இந்த நிகழ்வுகள், போர்த்துக்கேயர் காலத்தில் உருவான இஸ்லாத்தின் வளர்ச்சியிலான பின்னடைவை ஓரளவு ஈடுசெய்வதாக அமைந்தன.

- பிரித்தானியரின் வருகையோடு அவர்கள் கடைப்பிடித்த மத சகிப்புக் கொள்கையால் முன்னைய இரண்டு ஆட்சியாளர் காலத்திலும் அனுபவித்த இடர்ப்பாடுகள் நீக்கப்பட்டன.

  இருப்பினும் அவர்கள் மேற்கொண்ட திட்டமிட்ட இன மோதல் நடவடிக்கைகளாலும், மத மாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட கட்டாய ஆங்கிலக் கல்வித் திட்டத்தாலும் இக்காலப் பிரிவில் முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி பாதிக்கப்பட்டது. சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அன்று எடுக்கப்பட்ட "ஆங்கிலம் கற்பது கூடாது" என்ற கட்டுப்பாடே இதற்கான முக்கிய காரணியாக அமைந்தது.

  இத்தடையினால் ஆங்கிலக் கல்வியைப் புறக்கணித்த முஸ்லிம்கள் தமது கல்வியை மத்ரஸாக் கல்வியோடு மட்டுப்படுத்திக் கொண்டனர். முஸ்லிம்கள் இக்காலத்தில் ஆங்கிலக் கல்வியைப் புறக்கணித்தமையானது அவர்களது சமூக, அரசியல் வாழ்வில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது. 19ஆம் நூற்றாண்டின் இறுதி வரையிலான காலப்பகுதி முஸ்லிம்களின் அரசியல் ரீதியான பங்களிப்புக் குறைந்திருந்தமைக்கு இதுவே காரணமாக அமைந்தது.

- இவ்வாறான பயங்கரமான பின்னடைவில் இருந்து இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் காப்பாற்றும் நோக்கில் இக்காலப் பிரிவில் சீர்திருத்தவாதிகள் செயல்பட்டார்கள்.

  தனது சமூகத்தின் மீட்சியும் எழுச்சியும் மார்க்கப் பின்புலத்துடனான கல்வியிலேயே தங்கி உள்ளது என்பதை உணர்ந்த சித்தி லெவ்வை, சமூகத்தில் புரையோடிக் கிடந்த அறியாமையை அகற்றி கல்வியில் நாட்டம் கொள்ளச் செய்யும் நோக்கில் "முஸ்லிம் நேசன்" எனும் பத்திரிகையை ஆரம்பித்தார். இதனால் இலங்கை முஸ்லிம்கள் கலாசார சூன்யத்திலிருந்து மீட்சி பெற்று, பரந்த இஸ்லாமிய உம்மத்தின் ஓர் அங்கம் என்ற உணர்வைப் பெற்றனர்.

- முஸ்லிம்களின் கல்வி முன்னேற்றத்துக்காக 1884இல் சித்தி லெவ்வை, ஒராபி பாஷா, வாப்பிச்சி மரைக்கார் போன்றோரால் கொழும்பில் முதன் முதலாக அல் மத்ரஸதுல் கைரியா பாடசாலை நிறுவப்பட்டது. இந்தப் பின்புலத்தை மையமாகக் கொண்டு செயல்பட்ட மற்றுமொரு சீர்திருத்தவாதி 'அஸ்ஸவாப்', 'முஸ்லிம் பாதுகாவலன்' எனும் பத்திரிகைகளை வெளியிட்ட ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் என்பவராவர்.

  இஸ்லாத்துக்கு முரணான அம்சங்களைக் கண்டறிந்து விளக்குவதும், சமகால முஸ்லிம் உலகின் நிகழ்வுகளை எடுத்துக் கூறி உலகலாவிய முஸ்லிம் உம்மத்தோடு இணைந்தவர்கள் என்ற உணர்வை முஸ்லிம்களிடையே ஏற்படுத்துவதும் முஸ்லிம் பாதுகாவலன் பத்திரிகையின் நோக்கங்களாக அமைந்திருந்தன.

- இலங்கை முஸ்லிம்கள் தமது தனித்துவத்தை நிலை நிறுத்துவதற்காக மேற்கொள்ளப் பட்ட போராட்டமாகவே 1905இல் இடம்பெற்ற துருக்கித் தொப்பி நிகழ்வு அமைந்தது.
- இலங்கையில் இஸ்லாத்தின் வளர்ச்சியில் சூபி ஞானிகளதும், தரீக்காக்களதும் பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கவை. தனிப்பட்ட வகையிலும், தரீக்காக்கள் என்ற வகையிலும் கூட்டமைப்பாகவும் இவர்கள் ஆற்றிய பணிகளால் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஆத்மீகப் பேரொளி ஏற்றிவைக்கப்பட்டது. நாட்டில் இன்று வரை காணப்படும் தரீக்காக்கள் இதற்குச் சான்றாக அமைகின்றன. முஸ்லிம்களது கலாசாரத் தனித்துவத்தைப் பாதுகாப்பதில் இவை மகத்தான பங்களிப்புச் செய்துள்ளன.

  19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட உலகளாவிய இஸ்லாமிய எழுச்சி அலை நம் நாட்டிலும் அதிர்வுகளை உருவாக்கத் தவறவில்லை. இதனால் ஏற்பட்ட உலக இஸ்லாமிய அறிஞர்களின் சிந்தனைத் தாக்கங்கள் இலங்கை முஸ்லிம்களையும் பாதித்தன.
- இந்த அறிஞர்களின் ஆக்கங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு நூல்களாகவும், சஞ்சிகைகளில் ஆக்கங்களாகவும் வெளிவந்தமை இலங்கையில் தூய இஸ்லாம் பற்றிய அறிமுகத்துக்கு வலு சேர்ப்பதாக அமைந்தது.

- **உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

  **படி I** இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகிய வரலாற்றுப் பின்னணியை சுவாரசியமாக முன்வையுங்கள்.

  **படி II** மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள், பின்வரும் தலைப்புகளில் தகவல் திரட்ட சந்தர்ப்பம் வழங்கி வழிப்படுத்துங்கள்.

  **குழு-1** ஐரோப்பியர் வருகைக்கு முன் இலங்கையில் இஸ்லாம்

  **குழு-2** ஐரோப்பியர் காலத்தில் இலங்கையில் இஸ்லாம்

  **குழு-3** சுதந்திரத்திற்குப் பின் இலங்கையில் இஸ்லாம்

  **படி III** ஒவ்வொரு குழுவும் திரட்டிய தகவல்களை வகுப்பில் முன்வைக்க சந்தர்ப்பமளியுங்கள்.

  **படி IV** ஒரு சிறிய கலந்துரையாடலை ஏற்பாடு செய்து அவர்கள் திரட்டிய தகவல்களை ஏனையோரும் பெற்றுக் கொள்ள வழி செய்யுங்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை:**


- அமீன், எம்.ஐ.எம்., (2000) *முஸ்லிம்கள் வளர்த்த அறிவியல் அழகியற் கலைகள்,* ஹெம்மாதகம, அல்ஹஸனாத் பதிப்பகம்.
- *இஸ்லாம் தரம் -11*, (2000) இலங்கை, கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
- அமீன், எம்.ஐ.எம்., (2000) *இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும்,* ஹெம்மாதகம, அல்ஹஸனாத் பதிப்பகம்.
- அஸீஸ், ஏ.எம்.ஏ., (2007) *இலங்கையில் இஸ்லாம்*, கொழும்பு, குமரன் புத்தக இல்லம் வெளியீடு.
- ரஹீம் அப்துல், (2006), *இஸ்லாமியக் கலைக் களஞ்சியம்,* 2ஆம் 3 ஆம் பாகங்கள், சென்னை யுனிவர்சல் பப்லிஷர்ஸ்

**தேர்ச்சி 7.0 : இஸ்லாத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றியும் இலங்கையில் இஸ்லாம் அறிமுகமானமை பற்றியும் விளக்கி எடுத்துக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.3:** இலங்கையர் என்ற அடிப்படையில் முஸ்லிம்கள் தேசத்திற்கு ஆற்றிய பங்களிப்புகளை விளங்கி நாட்டுக்குப் பணியாற்றுவார்.

**காலம்** : 25 பாடவேளைகள்

**கற்றல் பேறு** :

- சிங்கள மன்னர்கள் காலத்திலும் பின்னர் ஐரோப்பியர் காலத்திலும், சுதந்திரத்துக்குப் பிறகும் நம் நாட்டு முஸ்லிம்கள் இந்நாட்டின் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும் செய்து வந்த பங்களிப்புக் களை அறிந்து, நயந்து தாமும் அவ்விதம் நடப்பதற்கான உந்துதலைப் பெற்று செயல்படுவார்.
- இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பொருளாதார, கலாசார, தேசிய பங்களிப்புகளை விளங்கி தாமும் அவ்வாறான பங்களிப்புகளை வழங்குவதற்கான திறமைகளையும் பக்குவத்தையும் பெற்று நடப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- **இலங்கை முஸ்லிம்களின் தேசியப் பங்களிப்புகள்**
  - ‘‘வர்த்தக நோக்கில் நம் நாட்டுக்கு வந்த அரபு மக்கள், தமது பொருளாதார நலனில் மாத்திரமே அக்கறை செலுத்தினரேயன்றி இந்த நாட்டுக்குத் தேசிய ரீதியில் குறிப்பிடத்தக்க எத்தகைய பங்களிப்பையும் செய்யவில்லை’’ எனும் ஒரு கருத்து பொதுவாகக் கூறப்பட்டு வருகின்ற ஒரு சூழ்நிலையில், எமது முன்னோர்களின் பங்களிப்பு குறித்து நாம் அறிந்து கொள்வது மிக மிக அவசியமாகும்.
  - ‘‘இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைப் பற்றிப் பேசும் எவரும் இப்பகுதியைத் தவிர்த்த நிலையில் அவர்களின் வரலற்றைப் பேச முடியாது’’ எனக் கூறும் அளவுக்கு இந்த தேசியப் பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகிறது. இந்த நாட்டில் வாழ்ந்த ஆரம்பகால முஸ்லிம்கள் தமது சக்திக்கு உட்பட்ட வகையில் பல்வேறு துறைகளில் இந்நாட்டின் வளர்ச்சிக்கும், விருத்திக்குமாக உழைத்துள்ளார்கள் என்பதை பொதுவாக இலங்கை வரலாற்றை அறிய விரும்பும் எவரும், அதன் வரலாறு நெடுகிலும் கண்டுகொள்வர். இந்த வகையில் முஸ்லிம்கள் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தைப் பேணுவதிலும், அதனூடக உள்நாட்டின் விவசாயம் முதலான பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு உதவுவதிலும், சிங்கள மன்னர்கள் காலத்திலும், பின்னரும் உள்நாட்டு அரசியலிலும் காத்திரமான பல்வேறு பணிகளை ஆற்றி வந்துள்ளனர் என்பது மறைக்கவோ மறுக்கவோ முடியாத உண்மையாகும்.
  - இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஆரம்ப கால முஸ்லிம்கள் பெருமளவு பங்களிப்புச் செய்துள்ளனர்.

    அநுராதபுரக் காலத்தில் மேலோங்கி நின்றிருந்த விவசாயப் பொருளாதாரமும் அதனோடு தொடர்பான நீர்ப்பாசனக் கட்டமைப்புகளும், முஸ்லிம்களின் கைகளில் தங்கியிருந்த வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலம் கிடைத்த மேலதிக வருவாய்களைக் கொண்டே விருத்தி செய்யப்பட்டன.

- இக்கருத்தை பேராசிரியர் 'குணவர்தனா' என்பவரின் பின்வரும் கூற்று உறுதிப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

  "இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சி அடைந்திருந்த காலப் பகுதியிலேயே மிகப்பாரிய அளவிலான நீர்ப்பாசன வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன." வெளிநாட்டு வர்த்தகம் இந்த நீர்ப்பாசனப் பணிகளுக்கான வருமானத்தை அளித்தது என்பது இதன் மூலம் உறுதியாகிறது.

- அநுராதபுர ஆட்சியின் இறுதிக் கூறுகளில் இலங்கையின் விவசாயப் பொருளாதாரம் பாதிப்புற்ற வேளையில் இதனால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியை சரிசெய்வதற்காக வேறு பொருளாதார முயற்சிகளில் நாட்டம் காட்ட வேண்டிய நிர்ப்பந்த நிலை ஒன்று உருவாகியது. இந்நிலையில் விவசாயத் துறையின் சரிவால் உண்டான பொருளாதாரப் பின்னடைவை, தென் கிழக்காசிய நாடுகளுக்கூடாக முஸ்லிம்கள் மேற்கொண்ட வணிகத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற வருவாய்கள்தாம் ஈடுசெய்தன.

- முஸ்லிம்கள் அறிமுகப்படுத்திய தவளம் போக்குவரத்து முறை அவர்கள் இந்த நாட்டுக்கு செய்த மற்றொரு முக்கிய பங்களிப்பாகும். அரேபியாவில் ஒட்டகங்களிலும், கழுதைகள், குதிரைகளிலும் பொதிகளை ஏற்றிச் சென்ற அரபு வணிகர்கள் நம் நாட்டில் மாடுகளின் துணை கொண்டு கரையோரப் பகுதிகளுக்கும், மலை நாட்டுக்கும் இடையே வியாபாரப் பொருட்களைப் பரிமாற்றம் செய்தார்கள். இது தவளம் எனப்படுகிறது.

- மலை நாட்டு வியாபாரப் பொருட்களான பாக்கு, யானைத் தந்தம், முதலானவற்றை கரை நாட்டுத் துறைமுகங்களான கொட்டியாரம், கற்பிட்டி, புத்தளம், போன்ற இடங்களுக்கு எடுத்துச் சென்ற அவர்கள், உப்பு, கறுவா, துணிமணிகளை கரையோர நகரங்களில் இருந்து மலை நாட்டுக்கு எடுத்துச் சென்றனர்.

  கண்டி மன்னன் இராஜசிங்கனை 1762இல் சந்திக்கச் சென்ற ஆங்கிலேயத் தூதுவர் ஜோன் பைபஸ், தான் திருகோணமலையில் இருந்து கண்டிக்கு செல்லும் வழியில் 20 முதல் 30 வரையான பொதி சுமக்கும் எருதுகள் மேல் வியாபாரப் பொருட்களை ஏற்றிக் கொண்டு துறை முகங்களை நோக்கிச் சென்று கொண்டிருந்த முஸ்லிம் வியாபாரக் கூட்டம் ஒன்றைக் கண்டதாகக் குறிப்பிடும் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

- எமது ஆரம்பகால முன்னோர்கள்தாம் இலங்கைக்கு நெசவுத் தொழிலையும் அறிமுகம் செய்து வைத்தனர். பேருவளை (பர்பரீன் பட்டினம்)யில் வாழ்ந்த முஸ்லிம் வணிகர் ஒருவரால் 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 13ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இத்தொழில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது என ஸேர் அலெக்சான்டர் ஜோன்ஸ்டன் ஆசியக் கழகத்துக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார்.

- கறுவாப் பயிர்ச் செய்கையில் மாத்திரமன்றி அதனைப் பதனிடுவதிலும் எமது ஆரம்பகால முன்னோர்கள் ஈடுபாடு காட்டி வந்துள்ளனர். இதற்கு ஆதாரமாக அலெக்ஸான்டர் ஜோன்ஸ்டனின் மேற் குறித்த கடிதம் சான்றாக அமைகிறது. அதில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

  "கறுவா பொதுவாக இலங்கையின் தென்மேற்குக் கடலோரப் பிரசேங்களிலும் அதன் உட்பிரதேசங்களிலும் வளர்கின்றது. கடலோர மாகாணங்களில் கறுவா பயிரிடுவதையும், பதனிடுவதையும் ஒரு தனிப்பட்ட சாதியினரே (முஸ்லிம்) செய்கின்றனர். அவர்களது எண்ணிக்கை 24,000க்கும் 25,000க்கும் இடைப்பட்டதாகும்..."

- முஸ்லிம்கள் இந்த நாட்டின் மருத்துவத் துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்களும் குறிப்பிடத்தக்கனவாகும். இந்த வகையில் யூனானி மருத்துவம் இலங்கை முஸ்லிம்களின் முக்கியமான ஒரு தேசியப் பங்களிப்பாகக் கருதப்படுகிறது. 9ஆம்,

10ஆம் நூற்றாண்டுகளில் கரையோரத் துறைமுக நகர்களில் வாழ்ந்த அரபு மக்கள் ஊடாக இந்த யூனானி மருத்துவப் பாரம்பரியம் இலங்கையிலும் அறிமுகம் பெற்றிருக்கலாம் என இத்துறை சார் ஆய்வாளர்கள் அனுமானிக்கிறார்கள். ஆரம்பத்தில் கரையோரப் பகுதிகளில் மட்டுமே வழக்கில் இருந்த இவ்வைத்திய முறை பின்னர் உள்நாட்டுப் பகுதிகளுக்கும் பரவியது.

- 10ஆம் நூற்றாண்டளவில் பேருவலையில் குடியேறி வாழ்ந்த துருக்கிய ஆட்சியாளரின் புதல்வர் ஜமாலுத்தீன் என்பவரும் அவரது புதல்வர்களும் யூனானி மருத்துவப் பாரம்பரியத்தைக் கடைப்பிடித்தார்கள் என்றொரு பாரம்பரியச் செய்தி உள்ளது.

  இது தொடர்பாக அலெக்ஸான்டரின் பின்வரும் கூற்று நோக்கத்தக்கது.

  "...... இந்தக் குடும்பத்தின் தலைவர் 1806இல் மருத்துவத் திணைக்களத்தின் சுதேச அத்தியட்சகராக என்னால் நியமிக்கப்பட்டார். தீவிலுள்ள சுதேச வைத்தியர்களில் மிக அறிவுள்ளவர்களில் ஒருவர் என நாட்டின் குடிமக்களால் அவர் கருதப்படுவதோடு, சுதேச மருத்துவ நூல்களில் மிகச்சிறந்த ஒரு தொகுதியைத் தம் வசம் வைத்திருந்தவராகவும் விளங்கினார். அவைகளில் அநேகமானவை அவருடைய குடும்பத்தில் 700 - 800 ஆண்டு காலமாக இருந்து வருகின்றன. அந்தக் காலப்பகுதி முழுவதிலும் அவருடைய குடும்பத்தில் குறைந்தது ஒருவராவது மருத்துவத் தொழிலை மேற்கொண்டமை வழக்கமாக இருந்து வந்துள்ளது. இலங்கையில் முகமதிய சுதேச வைத்தியர்களால் மருத்துவ நோக்கங்களுக்காக மிகப் பழங்காலம் தொட்டு பாவிக்கப்பட்ட அத்தீவின் எல்லா மூலிகைகளைப் பற்றியும் மிக விவரமான ஓர் அறிக்கையை இவர் எனக்குச் சமர்ப்பித்தார்......"

- புவியியலாளர்களான அல் இத்ரீஸி, யாகூத் அல் ஹமவி, அல் கஸ்வீனி போன்றோர், இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட மருத்துவ மூலிகைகளும் அமைந்திருந்ததாக குறிப்பிடுகின்றனர்.

  மன்னர்களான செனரத்தும் புதல்வன் இரண்டாம் இராஜசிங்கனும், காலியில் யூனானி மருத்துவராகக் கடமை புரிந்த சுல்தான் என்பவருக்கு இரண்டு காணித் துண்டுகளை இலவசமாக வழங்கியதுடன் கண்டியில் குடியிருக்கவும் அனுமதி வழங்கினான். சுல்தான் கண்டியில் மன்னனின் அரசவையில் பணி புரிந்தார்.

  சிங்கள மன்னர்களுக்கு விசுவாசமாக நடந்து கொண்டதால் முஸ்லிம் வைத்தியர்கள் அவர்களின் நன்மதிப்பைப் பெற்றார்கள். இத்தகைய நன்மைப்பைப் பெற்ற ஒருவருக்கு பெஹேத்கே முகாந்திரம் (அரச மருத்துவ இலாகாவின் தலைவர்) எனும் பொறுப்பை மன்னன் வழங்கினான். மட்டுமன்றி தும்பறை, மாத்தளை, யடிநுவர, முதலாம் பகுதிகளில் காணிகள் வழங்கி "வைத்திய திலக ராஜகருண கோபால முதலியார்" எனும் பட்டத்தையும் வழங்கி கௌரவித்தான்.

  கீர்த்தி ஸ்ரீ ரஜசிங்கனின் காலத்தில் அவனது ஆட்சியைக் கவிழ்த்து அவனைக் கொலை செய்ய மேற்கொண்ட இரகசிய சதித் திட்டம் பற்றி இத்தகைய கோபால முதலியார்களுள் ஒருவர் மூலம் அறிந்து கொண்ட மன்னன், அந்த கோபால முதலியாருக்கு செப்புப்பட்டயம் ஒன்றை வழங்கி, நிலபுலன்களையும் நன் கொடையாக வழங்கினான்.

- முஸ்லிம்களது தேசியப் பங்களிப்பில், தேசிய அரசியலில் அவர்கள் ஆற்றிய பணிகள் சிறப்பாக நோக்கப்பட வேண்டியவையாகும்.

  சிங்கள மன்னர்களின் தூதுவர்களாக செயல்பட்டு ஆற்றிய பணிகள் பல உள்ளன. எகிப்துடன் வர்த்தக ரீதியாக தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள விரும்பிய மன்னன் முதலாம் புலனேகபாகு அல்ஹாஜ் அபூ உஸ்மான் என்பவரை எகிப்துக்கு தனது தூதுவராக அனுப்பி வைத்தார்.

ஜோன் பைபஸ் கண்டி மன்னனைச் சந்திக்க இலங்கை வந்தபோது, கண்டிய மன்னனின் தூதுவராக திருகோணமலை சென்று அவரைக் கண்டிக்கு அழைத்து வந்தவர் உதுமான் லெவ்வை என்ற முஸ்லிமாவார்.

புவனேகபாகு போர்த்துக்கேயரோடு சேர்ந்து மாயாதுன்னையை எதிர்த்தபோது, போர்த்துக்கேயரை விரட்டியடிப்பதற்காக கள்ளிக் கோட்டை மன்னன் சாமோரினின் உதவி மாயாதுன்னைக்கு அவசியப்பட்ட வேளையில், இவ்வுதவியைப் பெறுவதற்காக முஸ்லிம்களையே கள்ளிக்கோட்டைக்கு மாயாதுன்னை அனுப்பி வைத்தான்.

சிங்கள மன்னர்களிடத்தில் நான்கு முஸ்லிம் அமைச்சர்கள் பணிபுரிந்தனர் என புவியியலாளர் அல் இத்ரீஸி குறிப்பிடுகிறார். இவர்கள் நால்வரும் அமைச்சர்களாக வன்றி அந்நிய இனத்தாரிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைப்போராகவும் வெளிநாட்டு வணிகத்தில் அரசுக்கு ஆலோசனை வழங்குவோராகவுமே இருந்தனர் என்கிறார் பி.ஜே. பெரேரா.

- கண்டிய மன்னன் சார்பாக முஸ்லிம்கள் ஒல்லாந்தரின் உதவியை நாடினர் என்ற ஒரே காரணத்துக்காகவே போர்த்துக்கேயர் 1642 இல் மாத்தறையில் 200 முதல் 300 வரையிலான ஆண்களைக் கொலை செய்ததோடு பெண்களையும் சிறார்களையும் சிறைப்படுத்தினர்.

போர்த்துக்கேயரை துரத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கு நன்றி தெரிவிக்கும் வகையிலேயே மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் அக்குரணையில் காணி வழங்கி முஸ்லிம்களை அங்கு குடியமர்த்தினான்.

1815 இல் இங்கிலாந்தின் தாராண்மைக் கொள்கை இலங்கையிலும் தாக்கம் செலுத்தியதன் விளைவாக 1833 இல் அறிமுகப்படுத்தப்பட்ட சட்ட நிரூபண சபையில் முஸ்லிம்களும் பங்குகொள்ள வாய்ப்புக்கிடைத்தது.

1865இல் முனிசிபல் சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களிலும் முஸ்லிம்களுக்கு பங்குகொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது. கண்டி முனிசிபல் சபையில் 8 முஸ்லிம்கள் முஸ்லிம் சமூக நலனுக்காக குரல் கொடுத்தனர்.

1833இல் சட்ட நிரூபண சபை அறிமுகமான போதும் 1889 வரை அதில் முஸ்லிம் களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. பறங்கியரும் தோட்டத் துரைமாரும் முஸ்லிம்களை விட சிறுபான்மையினரக இருந்தும் அவர்களுக்கு பிரதி நிதித்துவம் வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில் சித்தி லெவ்வையும் அவரது நண்பர்களும் அரசியல் உரிமை கோரி பத்திரிகைகள் மூலம் குரல் கொடுத்தனர். இதன் விளைவாக 1899இல் M.C. அப்துர் ரஹ்மான் சட்ட நிரூபண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

சுதந்திர போராட்டங்களிலும் அந்நிய சமூகத்தினரோடு இணைந்து முஸ்லிம்கள் குரல் கொடுத்தனர். சுதந்திரத்தை வென்றெடுக்கவென, 1919இல் உருவாக்கப்பட்ட தேசிய காங்கிரஸில் அதன் உபதலைவர்களில் ஒருவராக T.B. ஜாயா தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் முஸ்லிம்களில் பலரும் இதில் இணைந்து கொண்டனர்.

- அரசாங்க சபையில் T.B. ஜாயா ஆற்றிய உரையில் கூறிய “இன ரீதியான கோரிக்கைகளையும் இலாபங்களையும் அடைவதை விட சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள முயற்சிப்பது ஒரு முஸ்லிமுக்கு மிகவும் முக்கியமானதாகும்” என்ற விடயம் ஜாயாவின் தேசிய உணர்வுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

- 1939 இல் நடைபெற்ற அகில இலங்கை அரசியல் மாநாட்டில் சட்ட சபை உறுப்பினர் மாக்கான் மாக்கார்

  "இந்த நாட்டின் பெரும்பான்மைச் சமூகம் சிறுபான்மை இனமாக மாறுவதை அனுமதிக்க முடியாது." எனக் கூறினார்.

  இதே மாநாட்டில் கலாநிதி பதியுதீன் மஹ்மூத், தனது உரையில், ''எமது நாட்டுக்கு பூரண சுதந்திரம் கோருவதில் சிங்கள அரசோடு நானும் இணைந்து கொள்கிறேன்'' என்பதையும் உள்ளடக்கி உரையாற்றினார்.

  "எம்மிடம் உள்ள அரசியல் ஞானமும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்ற உணர்வும் தான் இந்த நாட்டுக்கு டொமினியன் அந்தஸ்துக் கோரும்போது சிங்கள மக்களோடு தோளோடு தோள் நின்று நாமும் போராட எம்மைத் தூண்டின என்று சேர் ராஸிக் பரீத் 1945இல் யாப்பு சீர்திருத்தம் தொடர்பாக அரசாங்க சபையில் உரை நிகழ்த்தும்போது கூறினார்.

- முஸ்லிம்கள் சிங்கள மன்னர்களின் காலத்தில் அவர்களது இராணுவத்திலும் பங்காற்றி உழைத்துள்ளனர். போர்த்துக்கேயப் படைகளுக்கு எதிராக மன்னனின் இராணுவத்தின ரோடு இணைந்து போராடியதை வரலாற்றுப் பதிவுகளில் இருந்து கண்டு கொள்ள முடிகிறது.

- இரண்டாம் இராஜசிங்கனின் காலத்தில் நடைபெற்ற "வெள்ளவாய" எனப் பெயர் பெற்ற யுத்தத்தில் முஸ்லிம்களின் ஒட்டகப்படை முக்கிய இடம் வகித்தது. இந்த வெற்றியைக் கண்ணியப்படுத்தும் வகையில் ஹங்குரங்கெட்ட தேவாலயத்துக்கு அன்பளிப்பு செய்த புடவையில் இந்த ஒட்டகப்படை ஓவியமாக வரையப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

- **இலங்கை முஸ்லிம்களின் கலாசாரப் பங்களிப்புகள்**

  - உலகில் வாழும் பல்வேறு இனத்தவர்களுக்கும் அவர்களுக்கே உரிய தனித் தனிக் கலாசார-பண்பாட்டுப் பாரம்பரியம் இருந்துவருகிறது.

  - இலங்கை பல்லின சமூகங்களைக் கொண்ட ஒரு நாடு என்ற வகையில் இங்கு வாழும் பல்வேறு இனக்குழுக்களும் தமக்கெனத் தனித்தனியான கலாசாரப் பாரம்பரியங்களைக் கொண்டிருப்பது போலவே, இந்த நாட்டில் வாழுகின்ற முஸ்லிம்களும் தனித்துவம் மிக்க கலாசாரம் ஒன்றின் சொந்தக்காரர்களாக இருந்து வருகின்றனர்.

  - இலங்கை முஸ்லிம்களின் கலாசாரப் பாரம்பரியங்கள் ஏனைய இனத்தவர்களின் கலாசார அம்சங்களிலிருந்து வேறுபட்டு நிற்கின்றன. இதற்குக் காரணம் முஸ்லிம்களின் வாழ்வியல் அம்சங்களில் இஸ்லாம் முதன்மையான பங்கை வகிப்பதாகும். அதாவது முஸ்லிம்களின் மார்க்கமான இஸ்லாத்திலிருந்து அவர்களது வாழ்வியல் செயற்பாடு களைப் பிரிக்க முடியாதிருப்பதாகும்.

  - அரபிகளின் வர்த்தகத்தை மையமாகக் கொண்டு தோற்றம் பெற்ற இலங்கையின் ஆரம்ப முஸ்லிம் குடியேற்றங்கள் கரையோரங்களிலேயே அமைந்திருந்தன. இவ்வாறு அமைந்த குடியேற்றப் பிரதேசங்களிலெல்லாம் மஸ்ஜிதோடு இணைந்ததாக 'குத்தாப்' எனப்பட்ட குர்ஆன் பாடசாலைகளை அமைத்தனர்.

  - இன்றைய நிலையில் இலங்கையில் ஆரம்பமாக நிறுவப்பட்ட எந்தவொரு மஸ்ஜிதையும் காண்பதற்கில்லை. இன்றுள்ள மஸ்ஜிதகளெல்லாம் போர்த்துக்கேய ஆட்சிக்குப் பின்னர் கட்டப்பட்டவையே.

- இலங்கை முஸ்லிம்களின் கட்டடக் கலைப் பாரம்பரியமானது. மஸ்ஜித் கட்டடக் கலையில் இருந்தே ஆரம்பமாகிறது. மிஹ்ராப், மினாரா, குப்பா என்பன மஸ்ஜித் கட்டடக் கலையின் சிறப்பம்சங்களாகும். இவற்றுள் குப்பா எனப்பட்ட கும்மட்டம் பிற்பட்ட காலங்களில் பிற நாடுகளில் வெவ்வேறு வடிவங்களைப் பெற்று வளர்ந்தாலும் நம் நாட்டில் அமைக்கப்பட்ட மஸ்ஜித்களில் குப்பாக்கள் அதிமுக்கியத்துவம் பெற வில்லை. இருப்பினும் அண்மைக் காலங்களில் அமைக்கப்பட்டுவரும் மஸ்ஜித்களில் குப்பாக்களில் மத்திய கிழக்கின் கட்டடக் கலைச் செல்வாக்கினைக் காணமுடிகிறது. மினாராவும் குப்பா போலவே அண்மைக் காலங்களில்தான் இங்கு முக்கியத்துவம் பெற்று வருகிறது.
- இலங்கை மஸ்ஜித் கட்டடக்கலைப் பாரம்பரியத்தில் முக்கிய இடம் வகிக்கும் மற்றிரு அம்சங்கள் மிம்பரும் மிஹ்ராபுமாகும். பொதுவாக நம்நாட்டு மஸ்ஜிதுகள் உள்பள்ளி, வெளிப்பள்ளி என இருபகுதிகளைக் கொண்டிருக்கும். உள்பள்ளியில் தொழுகை இடம்பெற வெளிப்பள்ளியில் கூட்டங்களும் ஏனைய விடயங்களும் (மௌலூது, ஹிஸ்பு, ராதீபு) இடம்பெறும். இத்தகைய அம்சங்கள் இன்று அருகிவருவதை காண்கிறோம். மஸ்ஜித் கட்டடக்கலைப் பாரம்பரியத்தில் அரபு எழுத்துக்களினாலான வேலைப்பாடுகளைக் கொண்ட ஹவ்ல் முக்கிய இடம் வகித்தாலும் இலங்கை மஸ்ஜிதுகளில் காணப்படும் ஹவ்ல்களில் இத்தகைய வேலைப்பாடுகளைக் காண்பதற்கில்லை. கொழும்பு சம்மன்கோட்டு மஸ்ஜிதில் அமைக்கப்பட்டுள்ள ஹவ்ல் மாத்திரம் மலேசிய மற்றும் இந்தியக் கலை அம்சங்களின் செல்வாக்குக்கு உட்பட்டதாக அமைந்துள்ளதை காணலாம்.
- இலங்கை முஸ்லிம்களின் கலாசார பண்பாட்டு அம்சங்களில் பாரசீக செல்வாக்கை விட அரேபிய செல்வாக்கே மிகைத்துக் காணப்படுகிறது. இருப்பினும் சமகால சூழ்நிலையில் இத்தனித்துவ நிலையில் சரிவு ஏற்பட்டுவருவதை அவதானிக்க முடிகிறது. நம்நாட்டு முஸ்லிம்களுள் மிகப் பெரும்பான்மையினர் ஷாபி மத்ஹப் பிரிவினரை சார்ந்தோராகவும் அஹ்லுஸ் ஸுன்னாவை சார்ந்தோராகவுமே இருந்து வருகின்றனர். வணிக நோக்கில் தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளுக்கு வருகைதந்த அரேபியர் மிகப் பெரும்பாலும் ஷாபி மத்ஹபைச் சார்ந்தோராய் இருந்தமை இதற்கான அடிப்படையாக இருந்திருக்க முடியும்.
- 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பக் கூறுகளில் இலங்கை முஸ்லிம் கட்டடக்கலைப் பாரம்பரியத்தில் மஸ்ஜிதுகளுக்கு மேலதிகமாக ஸாவியா, தக்கியா, தர்ஹாக்கள் என்ற அம்சங்களும் சேர்ந்து கொண்டன. இக்காலப் பரிவில் ஏற்பட்ட சூபித் தரீக்காக்களின் செல்வாக்கே இவை தோன்றக் காரணமாக அமைந்தன. சாஸுலியா தரீக்காவின் அனுஷ்டான மத்திய நிலையம் 'ஸாவியா' எனவும், காதிரியா தரீக்காவின் அனுஷ்டான மத்திய நிலையம் 'தக்கியா' எனவும் அழைக்கப்பட்டன.
- இலங்கை வாழ் முஸ்லிம்களின் கலாசார பண்பாட்டுப் பாரம்பரியத்தில் தரீக்காக்கள் பாரிய அளவு செல்வாக்கை ஏற்படுத்தின. காதிரிய்யா, சாஸுலிய்யா, ரிபாஇய்யா, நக்ஷபந்திய்யா போன்ற தரீக்காக்கள் நம்நாட்டுக்கு அறிமுகமாயின. மாப்பிள்ளை லெப்பை ஆலிம், கீழக்கரை அப்துல் காதிர் தைக்கா ஸாஹிப் போன்றோர் காதிரிய்யா தரீக்காவை இலங்கையில் ஸ்தாபித்தனர். பிக்ஹ், தஸவ்வுப், அகீதா தொடர்பாக இவர்கள் எழுதி வெளியிட்ட நூல்கள் இலங்கை முஸ்லிம்களின் ஆன்மீக சிந்தனைப் போக்கில் கணிசமானளவு பாதிப்பை ஏற்படுத்தின. இவ்வாறே ஏனைய தரீக்காக்களும் அறிமுகமாயின.

  19ஆம் நூற்றாண்டில் இலங்கையை தரிசிக்க வந்த சூபி மகான்கள் இந்நாட்டு முஸ்லிம்களின் கலாசார பண்பாட்டியலில் மகத்தான பங்களிப்புச் செய்துள்ளதை எவரும் மறுப்பதற்கில்லை. இக்காலப் பிரிவில் யமனுக்கும் இலங்கைக்கும் இடையே

கலாசார ரீதியாக நெருக்கமான உறவு இருந்து வந்தது. அப்துல்லா இப்னு பாதிப் அல் யமனி என்ற யமன் நாட்டு சூபி மகான் ஒருவரின் அடக்கஸ்தலமும் இந்நாட்டில் அமைந்திருப்பது நோக்கத்தக்கதாகும்.

- போர்த்துக்கேயர் வருகையோடு இலங்கை முஸ்லிம்களின் கலாசார தனித்துவத்திற்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டபோது அந்த அபாய நிலையில் இருந்து முஸ்லிம்களை பாதுகாக்க உதவியது தென்னிந்தியாவோடு ஏற்பட்ட வர்த்தக கலாசார உறவுகளே.

  போர்த்துக்கேயர், அதுவரை அரேபியாவோடு இருந்து வந்த நீண்ட கால உறவைத் துண்டித்தபோது வேறு வழியின்றி இலங்கை முஸ்லிம்கள் இந்தியாவுடன் தொடர்புகளைப் பேணலாயினர். தென்னிந்தியரதும் இலங்கை முஸ்லிம்களதும் தாய் மொழியாகத் தமிழ் அமைந்திருந்தமை இத்தொடர்பு வலுவானதாய் அமைவதற்கான முக்கிய காரணியாகும். இத்தொடர்பின் பிரதான கலாசார, பண்பாட்டின் விளைவே அரபுத் தமிழின் தோற்றமாகும். காலப்போக்கில் இரு சாராரதும் பொதுவான கலாசார மொழியாக இது வளர்ச்சி கண்டது.

- தென்னிந்திய முஸ்லிம்கள் அரபுத் தமிழில் எழுதி வெளியிட்ட நூல்கள் இலங்கை முஸ்லிம்களிடையே பிரபல்யமடைந்தன. இலங்கையில் மார்க்கப் பணிபுரிந்த தென்னிந்திய அறிஞர் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் எழுதிய "மகானி", "பத்ஹுத் தெய்யான்" முதலான நூல்கள் இலங்கை முஸ்லிம்களிடையே இஸ்லாமிய கடமைகள் தொடர்பான விடயங்களை அறியவும் அவற்றை செயற்படுத்தவும் துணைசெய்தன. இவர் அரபுத்தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்ட "குத்பா" மஸ்ஜிதுகளில் வெள்ளிக்கிழமை குத்பா சொற்பொழிவுகளுக்காக பரவலாக பயன்படுத்தப்பட்டது.

  அரபுத்தமிழின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த அறிஞர்களுள் செய்கு முஸ்தபா, கஸாவத்தை ஆலிம் அப்பா புலவர் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவரது படைப்புக்களுள் கஸீதாக்கள், மர்ஸியா எனப்படும் இரங்கற்பாக்கள், உரைநடை நூல்கள் போன்றன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

- இலங்கை முஸ்லிம்களின் கலாசார வாழ்வில் தரீக்காக்கள் முக்கிய பங்கு வகித்ததன் காரணமாக அவற்றின் ஆன்மீக அனுஷ்டான வழிமுறைகள் பெரும்பாலும் தக்கியாக் களையும் ஸாவியாக்களையும் மையமாகக் கொண்டே இடம்பெற்றன. ராதீபு, விருது (உதாரணம்: ராதிபுல் ஹத்தாத், ஹிஸ்புல் பஹ்ர்) என்பன தரீக்காக்களது ஆன்மீக வழிபாட்டு முறைகளுள் சிலவாகும். இவற்றை மையமாக வைத்தே நம்நாட்டு முஸ்லிம்களின் மார்க்க செயற்பாடுகளும் கலாசார பண்புகளும் சிந்தனைப் போக்குகளும் உருவாக்கப்பட்டன. இத்தகைய அடிப்படைகளை இலங்கை முஸ்லிம்களின் உள்ளங்களில் வளர்ப்பதில் சூபி அறிஞர்களின் நூல்களும் பங்களிப்புக்களைச் செய்துள்ளன.

- இமாம் கஸ்ஸாலியின் பிதாயதுல் ஹிதாயா, கீழக்கரை ஸெய்யது முஹம்மது ஆலிமால் அரபுத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. ராதீபுல் ஹத்தாதை நூஹ் லெப்பை ஆலிம் மொழியாக்கம் செய்தார்.

  இன்றைய சூழ்நிலையில் சமகால இலங்கை முஸ்லிம்களின் கலாசார, ஆன்மீக, பண்பாட்டியலின் வளர்ச்சியில் நவீன கால இஸ்லாமிய இயக்கங்கள், அமைப்புக்கள் பங்களிப்புச் செய்து வருகின்றன.

  இவற்றுக்கு அப்பால் முஸ்லிம் உலகில் இஸ்லாமிய அமைப்புக்களும் அவை வெளியிடுகின்ற நூல்கள், சஞ்சிகைகள், இறுவட்டுக்களும் இலங்கை முஸ்லிம்களின் காலாசார வடிவமைப்பில் சிந்தனையிலும் செல்வாக்குச் செலுத்திவருவதையும் காணமுடிகிறது.

- **உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

  படி I முஸ்லிம்கள் இலங்கை தேசத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்களில் குறிப்பான சிலவற்றை எடுத்து விளக்குங்கள்

  படி II மாணவர்களை இரண்டு குழுக்களாக பிரித்து, ''சுதந்திரத்திற்கு முந்திய முஸ்லிம்களின் தேசிய பங்களிப்புக்களை விட சுதந்திரத்திற்கு பிந்திய பங்களிப்பு குறைவானதே.'' இத்தலைப்பில் ஒட்டியும் வெட்டியும் உரையாடுவதற்கு தேவையான தகவல்களை திரட்ட மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

  படி III மாணவர் மன்றத்தில் அவர்களிடையே விவாதமொன்றை ஏற்பாடு செய்து நடாத்துங்கள்.

  படி IV குறைநிரப்புச் செய்து மாணவர்களது ஆற்றல்களுக்கு கணிப்பு வழங்குங்கள்

**மேலதிக வாசிப்புக்குரியவை:**


- சுக்ரி எம்.ஏ.எம், (2000), *இலங்கை முஸ்லிம்கள் தொன்மைக்கான வரலாற்றுப் பாதை*, கொழும்பு, ஏ.ஜே.பிரின்டர்ஸ்,
- அமீன் எம்.ஐ.எம், (2010), *இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முன்னோடிகள்*, ஹெம்மாதகமை, அல்ஹஸனாத் பதிப்பகம்.
- அமீன் எம்.ஐ.எம், (2000), *முஸ்லிம்கள் வளர்த்த அறிவியல், அழகியற் கலைகள்* ஹெம்மாதகம, அல்ஹஸனாத் பதிப்பகம்.
- அமீன் எம்.ஐ.எம், (2000), *இலங்கை முஸ்லிம்களின் வரலாறும், கலாசாரமும்*, ஹெம்மாதகம, அல்ஹஸனாத் பதிப்பகம்.
- அஸீஸ் ஏ.எம்.ஏ, (2007), *இலங்கையில் இஸ்லாம்*, கொழும்பு, குமரன் புத்தக இல்லம் வெளியீடு.
- அப்துர் ரஹீம், (2006), *இஸ்லாமிய கலைக் களஞ்சியம்* பகுதி *I, II* , சென்னை, யுனிவேர்ஸல் பப்ளிஷஸ்.
- அஸீஸ் ஐ.எல்.எம்.ஏ, *இலங்கை சோனகர் இன வரலாறு*, கொழும்பு, சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்.
- கமால்தீன் எஸ்.எம். (1990), *கலாநிதி புர்கானுத்தீன் ஜாயா*, மஹரகம, தே.க.நி.

**தேர்ச்சி 8.0 : தனிமனித குடும்ப வாழ்வுடன் தொடர்பான இஸ்லாமிய சட்ட திட்டங்களையும் போதனைகளையும் கற்று தனது வாழ்வை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 8.1**: தனிமனித குடும்ப வாழ்விற்கான இஸ்லாமிய அணுகுமுறையை பிரயோகித்து குடும்ப வாழ்வை சிறப்பாக அமைத்துக் கொள்வார்.

**காலம்** : 30 பாடவேளைகள்

**கற்றல் பேறு** :

- தனிமனித குடும்ப வாழ்வின் முக்கியத்துவத்தை இஸ்லாமிய நோக்கில் ஆதாரங்களுடன் முன்வைப்பார்.
- திருமணம், திருமண விலக்கு, இத்தா பற்றிய சட்ட திட்டங்களை ஷரிஆவின் நிழலில் விளக்கி எழுதுவார்
- கணவன்-மனைவி, பெற்றோர்-பிள்ளை கடமை உரிமைகளை குர்ஆன், ஸுன்னாவிலிருந்து ஆதாரம் காட்டி இனங்காண்பார்.
- உறவினர் - அயலாரது கடமை உரிமைகளை அறிந்து தொழிற்படுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- **தனி மனிதனும் குடும்பமும்**
  - தனித்த ஓர் ஆண் அல்லது ஒரு பெண் தனிமனிதன் என்ற வரையறைக்குள் வருகின்றான். இத்தனிமனிதன் கட்டிடத்தின் ஒரு கல்லைப் போன்றவனாவான்.
  - தனிமனிதர்களைக் கொண்டு குடும்பம் என்ற அலகும் குடும்பங்களைக் கொண்டு சமூகம் என்ற கட்டடமும் உருவாகின்றன.
  - இஸ்லாம் சிறந்த சமூக உருவாக்கத்தை இலட்சியமாகக் கொண்ட மார்க்கம் என்ற வகையில் அது தனிமனிதனுக்குக் கூடிய முக்கியத்துவம் வழங்குகின்றது.
  - ஈமான், இபாதா, அக்லாக் போன்ற அடிப்படை அம்சங்களினூடாக இஸ்லாம் தனிமனிதர்களை உருவாக்கப் பயிற்சியளிக்கின்றது. இப்பயிற்சியைப் பெறுவது தனிமனிதனின் கடமையாகும். அதுவே ‘பர்ளு ஐன்’ எனப்படுகின்றது.
  - மறுமையில் மனிதர்கள் அல்லாஹ்வின் முன்னிலையில் தனிமனிதர்களாகவே விசாரிக்கப்படுவார்கள்.
    * ‘‘எந்த ஒரு மனிதனும் இன்னொரு மனிதனின் சுமையைச் சுமக்க முடியாது’’ (6:164)
    * ‘‘யார் ஓர் அணுப்பிரமான நன்மை செய்கிறாரோ அவர் அதைக் கண்டு கொள்வார். இன்னும் யார் ஓர் அணுப் பிரமாணமளவு தீமை செய்கிறாரோ அவர் அதனையும் கண்டு கொள்வார்’’ (99:7-8)
    * ‘‘நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள். உங்கள் பொறுப்பைப் பற்றி (தனித் தனியாக) விசாரிக்கப்படுவீர்கள;’’ (புஹாரி)
  - மனிதன் பலவீனமானவன் என்றவகையில் அவன் தனிமனிதனாக நின்று அவனது கடமைகளை நிறைவேற்றி வெற்றியடைவது சிரமசாத்தியமாகையால் இஸ்லாம் கூட்டு வாழ்க்கையில் ஆர்வமூட்டுகின்றது.

* “தனித்துச் செல்லும் ஆட்டை ஓநாய் பிடிப்பது போல கூட்டத்தில் இருந்து பிரிந்து செல்லும் தனிமனிதர்களை சைத்தான் பிடித்துக் கொள்வான்.”
* “அல்லாஹ்வின் உதவிக்கரம் கூடி வாழ்வோருடனேயே இருக்கிறது.”

- **குடும்பம்**

- ஓர் ஆணும் பெண்ணும் சட்ட ரீதியாக மணமுடிப்பதன் மூலம் குடும்பம் உருவாகின்றது. அவர்களுடன் அவர்களின் பிள்ளைகள் இரத்த உறவின் மூலமோ அல்லது பால்குடி உறவின் மூலமோ ஏனைய உறுப்பினர்கள் ஒன்றிணைகின்ற போது குடும்பம் விரிவடைகின்றது.
- திருமண உறவு, இரத்த உறவு, பால்குடி உறவு அல்லாத வேறு எந்த விதமான நிலையிலும் குடும்பம் அமைவதை இஸ்லாம் ஆதரிப்பதில்லை. (தத்தெடுத்தல், தவறான பாலுறவின் மூலம் குழந்தை பெறுதல் போன்றன)
- குடும்ப உருவாக்கத்தில் அல்லாஹ் வைத்துள்ள அடிப்படையான இயற்கை நியதி, ஆண் பெண் என்ற எதிர்ப்பாலான தனிமனிதர்கள் சட்டபூர்வமான பங்காளிகளாக இணைவதாகும். இந்நியதிக்கு மாற்றமாகச் செயல்படுவது மனித சமுதாயத்துக்கே கேடானதாகும்.
- நவீன யுகத்தில் ‘குடும்பம்’ எனும் அடித்தளத்தை சிதைத்துச் சின்னா பின்னமாக்கும் சிந்தனைகள் செல்வாக்குப் பெறுவதன் காரணமாக, கட்டுக்கோப்பான குடும்ப அமைப்பைப் பாதுகாக்க வேண்டிய தேவை அதிகமாக உணரப்பட்டுள்ளது. உலக சுகாதார அமைப்பு 1994ஆம் ஆண்டை சர்வதேச குடும்ப நல ஆண்டாக அறிவிப்புச் செய்ததுடன் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 15ஆம் திகதியை சர்வதேச குடும்ப தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.
- இஸ்லாம் ஓர் இயற்கை மார்க்கம் என்ற வகையில், அது மனித இனவிருத்தியில் இயற்கை வரம்பை மீறாமல் செயற்படும் நிறுவனமாக குடும்ப அமைப்புக்கு அதிகூடிய முக்கியத்துவத்தை வழங்கியிருக்கின்றது. இதனால் இஸ்லாம் குடும்பம் சார்ந்த (Family oriented) மார்க்கம் என வர்ணிக்கப்படுகின்றது.
- இஸ்லாம், குடும்பமாக இணையுமாறு தனிமனிதர்களைத் தூண்டுகின்றது. இதற்கான காரணம் அது தனிமனிதனைப் பாதுகாக்கும் அரணாக செயல்படுவதேயாகும்.
- இஸ்லாமிய சமூக அமைப்பில் ஒரு குடும்பம் உருவாக, பல குடும்பங்கள் துணை நிற்கின்றன. தனியான ஒரு குடும்பத்தின் பாதிப்பு பல குடும்பங்களின் இணைப்பான சமுதாயத்தையும் பாதிக்கவே செய்யும். அதேபோல் ஒரு குடும்பத்தின் வெற்றி அந்தச் சமுதாயத்தின் வெற்றியாகவும் வளர முடியும்.

**குடும்ப வாழ்க்கையின் முக்கியத்துவம்**

- கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள், உற்றார் உறவினர் ஆகிய பல தரப்பினரும் ஒருவருக்கொருவர் கொண்டும் கொடுத்தும் மகிழ்ச்சியாக வாழும் வாழ்க்கையே குடும்ப வாழ்க்கையாகும்.
- குடும்ப வாழ்க்கைக்கு எதிரான வாழ்க்கை முறையே துறவறமாகும். இஸ்லாத்தில் துறவறத்திற்கு இடமே கிடையாது. அது நபி (ஸல்) அவர்களின் வழிமுறைக்கு மாற்றமானது. இயற்கைக்கே முரணானது.
- இஸ்லாம் துறவறத்தை மனிதர்கள் உருவாக்கிக் கொண்ட செயற்கை வழிமுறை என எடுத்துக்காட்டுகின்றது

"(உலகத்தின் சகல இன்பங்களையும் துறந்து விடும்படியான) துறவித் தனத்தை நாம் அவர்கள் மீது கடமையாக விதிக்கவில்லை. எனினும், அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அடைய விரும்பி அவர்களே அதனை உண்டுபண்ணிக் கொண்டார்கள். (57:27)

- உஸ்மான் பின் மழ்ஊன் (ரழி) என்ற நபித்தோழர் நபி (ஸல்) அவர்களை அணுகி, குடும்ப வாழ்க்கையில் ஈடுபடாமல் துறவறம் மேற்கொள்ள அனுமதி கோரியபோது நபியவர்கள் அதனை நிராகரித்தார்கள். ''நபி (ஸல்) அவர்கள் அவருக்கு அனுமதி வழங்கியிருந்தால் நாங்கள் ஆண்மை நீக்கம் செய்திருப்போம்'' என்று ஸஃது பின் அபீ வக்காஸ் (ரழி) அறிவிக்கிறார்கள். (புஹாரி)

- அல்லாஹ், உள்ளத்திற்கு அமைதியையும் உடலிற்கு ஆரோக்கியத்தையும் தனது சட்டரீதியான சோடியுடன் சேர்ந்து வாழ்வதிலேயே வைத்துள்ளான். எனவே மனிதன் தனித்து வாழும்போது உளநோய்க்கு ஆளாவது போலவே உடல்ரீதியாகவும் பல பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றான்.

  "(நீங்கள் சேர்ந்து வாழக் கூடிய உங்கள்) மனைவிகளை, நீங்கள் அவர்களிடம் மனநிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே அவன் படைத்து, உங்களுக்கிடையில் அன்பையும் நேசத்தையும் உண்டுபண்ணியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் ஒன்றாகும்." (30:21)

- ஆணும் பெண்ணும் இயற்கையிலேயே சோடியாகப் படைக்கப்பட்டவர்கள். எனவே அச்சோடிகள் குடும்பமாக ஒன்றிணைந்து வாழாதவரை அவ்விருவரும் முழுமை பெறுவதில்லை.

- "மனிதர்களே உங்கள் இரட்சகனைப் பயந்து கொள்ளுங்கள். அவன்தான் உங்கள் யாவரையும் ஓர் ஆத்மாவில் இருந்து படைத்தான். ஆரம்பத்தில் அந்த ஒருவரைப் படைத்து அதிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். அவ்விருவர் மூலமும் அதிகமான ஆண்களையும் (சோடியான) பெண்களையும் பரவச் செய்தான்." (4:1)

- குடும்ப வாழ்வின் மூலம் மனிதன் தனக்கு மாத்திரம் என்ற சுயநலத்தில் இருந்து விடுபட்டு தனது பங்காளியான மனைவி பிள்ளைகளுக்கும் என்றவாறு சிந்தித்து செயலாற்றுகின்றான். இதற்கு அல்லாஹ்விடத்தில் சிறந்த வெகுமதிகள் காணப்படுகின்றன.

- "நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் செலவிடும் ஒரு தீனார், அடிமை விடுதலைக்காக செலவிடும் ஒரு தீனார், ஓர் ஏழைக்கு தர்மம் செய்யும் ஒரு தீனார் உங்களது குடும்பத்துக்காக செலவிடும் ஒரு தீனார் இவற்றுள் அதிகமான நன்மைகளைப் பெற்றுத்தரக் கூடியது குடும்பத்திற்காக செலவிடப்பட்ட தீனாரேயாகும்." (முஸ்லிம்)

- குடும்ப வாழ்க்கையின் மூலம் ஒருவன் அல்லது ஒருத்தி பொறுப்புள்ள மனிதனாக மாறுகின்றான். இதனால் அவனது வாழ்க்கை ஒழுங்குபடுத்தப்படுகின்றது.

- மனக்கட்டுப்பாடு, சந்ததி விருத்தி, பரிசுத்தம், பாதுகாப்பு, கௌரவம், ஆரோக்கியம் போன்ற பல பயன்கள் திருமணத்தின் மூலம் கிடைக்கின்றன என்பதை ஹதீஸ்கள் எடுத்துக் காட்டுகின்றன.

- ஹலாலான முறையில் இச்சையைத் தீர்த்துக் கொள்ளும் போது அதற்கும் அல்லாஹ்விடம் நற்கூலி இருக்கின்றது.

- நபித்தோழர்கள் அல்லாஹ்வின் தூதரிடம் வினவினார்கள். ''ஒருவன் தனது மனைவியுடன் தன் ஆசையைத் தீர்த்துக் கொள்வதற்கும் நன்மையுண்டா? அதற்கு நபியவர்கள்: அதை ஹராமான முறையில் தீர்த்துக் கொண்டால் பாவம் கிடைக்கு மல்லவா? அவ்வாறாயின் ஹலாலான வழியில் தீர்த்துக் கொண்டால் நன்மையுண்டு.'' (முஸ்லிம்)
- ஒரு மனிதன் உடலின்பத்தைப் பெறவும், அன்பைப் பரிமாறிக்கொள்ளவும் குழந்தை களால் கண்குளிர்ச்சி பெறவும் முதுமையில் பராமரிக்கப்படவும் குடும்ப வாழ்க்கை ஒன்றே முழுமையாக உத்தரவாதமளிக்கின்றது.
- குடும்ப வாழ்க்கை மூலம் ஆணும் பெண்ணும் பாதுகாக்கப்படுகின்றார்கள்.

- **விவாகம்**
  - விவாகத்தைக் குறிக்க அரபியில் ''நிகாஹ்' என்ற சொல் பயன்படுகின்றது. 'நிகாஹ்' என்பதன் அகராதிப் பொருள் திருமண ஒப்பந்தம் செய்தல், மனைவியுடன் உடல் ரீதியாக ஒன்றிணைதல் என்பனவாகும்.
  - குடும்பமாக இணைந்து வாழ்வதற்காக ஷரீஅத் விதித்துள்ள நிபந்தனைகளைப் பேணி ஓர் ஆணுக்கும், பெண்ணுக்குமிடையில் மேற்கொள்ளப்படுகின்ற உடன் படிக்கையே திருமணமாகும்.
  - விவாகம்தான், குடும்ப வாழ்க்கைக்கு வாயிலாக அமைகின்றது.
  - இஸ்லாத்தின் பார்வையில் விவாகம் ஒரு வணக்கமாகும். அதனுடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் நற்கூலியுண்டு. அல்குர்ஆனும் சுன்னாவும் இவ்வணக் கத்தின் பால் ஆர்வமூட்டுகின்றன.
  - ''உங்களில் வாழ்க்கைத் துணை இல்லாதோர்க்கு திருமணம் செய்து வையுங்கள்.'' (24:32)
  - "வாலிபர்களே! உங்களில் பலமுள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ளவும். ஏனெனில் அது பார்வையைக் கட்டுப்படுத்தவும், கற்பைப் பேணவும் சிறந்ததாகும். சக்தியில்லாத வர் நோன்பு நோற்கவும். அது அவருக்குப் பாதுகாப்பாகும்." (புஹாரி)
  - இஸ்லாமிய ஷரிஅத்தின் மூன்று பொது நோக்குகளான ளரூரிய்யாத், ஹாஜிய்யாத், தஹ்ஸீனிய்யாத் என்பவற்றுள் ஷரீஅத்தின் மிக அடிப்படை நோக்கமாகிய ளரூரிய்யாத்தில் உள்ளடங்கும் ஐந்து விடயங்களில் பரம்பரையைப் பாதுகாத்துப் பேணலும் ஒன்றாகின்றது. இவ்வகையில் திருமணம் ஷரீஅத்தில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.
  - ''விவாகம் எனது வழிமுறையைச் சார்ந்தது'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதில் இருந்து அது அடிப்படையில் ஸுன்னா என்று விளங்குகின்றது. இருப்பினும் ஆணினதும் பெண்ணினதும் உடல், உள, பொருளாதார, சமூக நிலையைப் பொறுத்து வாஜிப், முபாஹ், மக்ரூஹ், ஹராம், என்றவாறு சட்டவிதிமுறையின் பெறுமானம் மாறுபடுகின்றது.
  - திருமண வாழ்வு நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காக இஸ்லாம் சீரிய வழிகாட்டல்களை வழங்குவதுடன், விவாக உடன்படிக்கைக்கான விதிமுறைகளையும் தெளிவுபடுத்தியுள்ளது. இதன் மூலம் ஏனைய விவாக மரபுகளில் இருந்து இஸ்லாமிய மரபு உயர்ந்து விளங்குவதை அவதானிக்க முடிகிறது.

- விவாகத்துடன் தொடர்பான இஸ்லாமிய நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கின்படி மூன்று கட்டங்களாக வகைப்படுத்தி நோக்கலாம்.

  1. தயாராகுதல்
  2. ஒப்பந்தம் (அக்து: திருமணம் நிறைவேற்றுவதற்குரிய நிபந்தனைகள்)
  3. பகிரங்கப்படுத்தல்

**01. தயாராகுதல் முதல் கட்டமாகும். இதில்**

- கணவன் மனைவி தெரிவு
- பெண் பார்த்தல்
- பொருத்தப்பாட்டை அவதானித்தல் (அல்குப்உ)
- மணமகன் / மணமகள் விருப்பம் பெறல்
- திருமணப் பேச்சுவார்த்தை (அல்ஹித்பா) போன்ற விடயங்கள் உள்ளடங்குகின்றன.

- முதல்கட்ட நடவடிக்கையாக வாழ்க்கைத் துணையாக வரும் கணவனோ மனைவியோ திருமணம் முடிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட அஜ்னபியாக இருக்கின்றாரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதாகும்.
- திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்ட அஜ்னபிகளையும் அனுமதிக்கப்படாத மஹ்ரமிகளையும் அல்குர்ஆன் மிகத் தெளிவாக விளக்கியுள்ளது. பார்க்க: (2:221) (24:3), (4: 21-24)
- ''பெண் நான்கு காரணங்களுக்காக திருமணம் முடிக்கப்படுகின்றாள். அவை செல்வம், அழகு, குடும்பம், மார்க்க உணர்வு என்பன. மார்க்க உணர்வு கொண்ட பெண்ணையே தெரிவு செய்துகொள். அவ்வாறு நடக்கவில்லையாயின் உன்னை வறுமை பீடிக்கட்டும்.'' (புஹாரி)
- முகீரா இப்னு ஷுஃபா (ரழி) ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய தெரிவு செய்தார்கள். அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள், ''நீ அவளைப் பார்த்தாயா'' எனக் கேட்டார்கள். 'இல்லை' என்று அவர் பதிலளித்தபோது ''அவளைப் பார். அது உங்கள் தொடர்பைப் பலப்படுத்தும்'' எனக் கூறினார்கள். (நஸாயீ)
- ஒரு கன்னிப் பெண் நபியவர்களிடம் வந்து, தனது தந்தை அவரது சகோதரனின் மகனைத் -தான் விருப்பமில்லாதபோது- தனக்கு திருமணம் முடித்துக் கொடுத்துள்ளதாக முறையிட்டாள். இறைத்தூதர் (ஸல்) அப்பெண்ணை அவளது தனிப்பட்ட முடிவுக்கு விட்டுவிட்டார்கள். அப்போது, ''தந்தை செய்துவைத்ததை ஏற்றுக் கொள்கிறேன். ஆயினும் தந்தையர்களுக்கு இவ்விடயத்தில் எத்தகைய அதிகாரமும் கிடையாது என்பதைப் பெண்களுக்கு உணர்த்தவே நான் விரும்பினேன்'' என்றாள். (இப்னுமாஜா)
- கன்னிப் பெண்ணிடம் அனுமதி கோரப்பட வேண்டும். அவள் மௌனமாக இருப்பதே அவளது அனுமதியாகும். (முஸ்லிம்)
- ''திருமண விருப்பத்தை நீங்கள் மறைமுகமாக அறிவிப்பதனாலோ அல்லது உங்கள் மனங்களில் நீங்கள் மறைவாக வைத்திருப்பதிலோ உங்கள் மீது குற்றமில்லை.'' (2:235)
- ஒரு முஃமின் மற்ற முஃமினின் சகோதரனாவான். அவன் தன் சகோதரனின் வியாபாரத்திற்கெதிரான முறையில் வியாபாரம் செய்யக்கூடாது. தன் சகோதரனின் திருமணப் பேச்சுக்கு எதிராகத் திருமணம் பேசவும் கூடாது. (முஸ்லிம்)

**02. ஒப்பந்தம் (திருமணம் நிறைவேறுவதற்குரிய நிபந்தனைகள்)**

- இஸ்லாம் உடன்படிக்கைகளை அவற்றுக்குரிய நிபந்தனைகளைப் பேணி நிறைவேற்றுமாறு கூறுகின்றது.
- ''விசுவாசிகளே ஒப்பந்தங்களை நிறைவேற்றுங்கள்'' (5: 1)
- ''முஸ்லிம்கள் அவர்களது ஷர்த்துக்களை நிறைவேற்றுவதற்குக் கடமைப்பாடுடைய வர்கள்'' (அபூதாவூத்)
- திருமணமும் புனிதமானதொரு உடன்படிக்கையாக இருப்பதனால் அதன் ஷர்த்துக்கள் அல்லது நிபந்தனைகள் பேணப்பட வேண்டும். திருமணம் நிறைவேறுவதற்குத் தேவையானோரும், செயல்பாடும்
    1. மணமகன், மணமகள்
    2. வலி
    3. ஷாஹிதுகள்
    4. ஈஜாப், கபூல்
- மணமகன், மணமகள் பற்றிய விடயத்தில் திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்டவர்கள் (அஜ்னபிகள்) திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாதோர் (மஹ்ரமிகள்) பற்றிய விடயம் முக்கியமானதாகும். திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாதவர்களை அறிவதனூடாக அனுமதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு கொள்ள முடியும்.
- மஹ்ரமிகள் இரண்டு பிரிவினராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.
    1. நிரந்தர மஹ்ரமிகள்
    2. தற்காலிக மஹ்ரமிகள்
- இஸ்லாத்தில் பெண்களில் சிலர் ஆண்களில் சிலரை மணமுடிப்பது நிரந்தரமாகவே தடுக்கப்பட்டுள்ளது. இது மூன்று காரணங்களினால் உருவாகின்றது.
    - இரத்த உறவு, திருமண உறவு, பால்குடி உறவு
- இரத்த உறவினால் திருமண முடிக்க ஹராமாக்கப்பட்டவர்கள்
    1. பிறப்பின் காரணமாக தாய், தாயின் தாய். இவ்வகையில் மேலுயர்ந்து செல்லும் உறவு முறையினர்
    2. பெற்றெடுத்த பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகள் என்றவாறு கீழிறங்கிச் செல்லும் உறவு முறையினர்
    3. சொந்தத் தாய் தந்தையர் அல்லது அவர்களில் ஒருவரது பிள்ளைகள், அவர்களது பிள்ளைகளின் பிள்ளைகள் என்றவாறு கீழிறங்கிச் செல்லும் உறவு முறையினர். அதாவது தனது சொந்தச் சகோதரிகள், அவர்களது பிள்ளைகள் என்போரை இது குறிக்கின்றது.
    4. சொந்தப்பாட்டன் பாட்டியின் பிள்ளைகள் இது முதலாவது கட்டத்தோடு நின்றுவிடுகின்றது. அதாவது தாயின் அல்லது தந்தையின் சகோதரிகளைத் திருமண முடிப்பது கூடாது. ஆனால் அவர்களது பிள்ளைகளைத் திருமணம் முடிப்பது அனுமதிக்கப்படுகிறது.

- திருமண உறவால் மணமுடிக்க அனுமதிக்கப்படாதோர்
  1. மனைவியைப் பெற்றெடுத்தோர், மனைவியின் தாயின் தாய் என்றவாறு மேலுயர்ந்து செல்லும் உறவு முறையினர்
  2. உடலுறவு கொண்ட மனைவியின் பிள்ளைகள், மனைவியின் பிள்ளைகளின் பிள்ளைகள் என்றவாறு கீழிறங்கிச் செல்லும் உறவு முறையினர்
  3. மகனின் மனைவி, தனது மகனின் மகனின் மனைவி, மகளின் மகனின் மனைவி, இந்த அடிப்படையில் தொடர்ந்து கீழிறங்கிச் செல்லும் உறவு முறையினர்
  4. தந்தையின் மனைவி
- பால்குடி காரணமாகத் திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாதோர்

  "இரத்த உறவால் திருமண உறவு வைக்க அனுமதிக்கப்படாதோரே பால்குடியாலும் திருமண உறவு வைக்க அனுமதிக்கப்படாதோராவர்" (புகாரி)
  1. பால் கொடுத்த பெண்
  2. பால் கொடுத்த பெண்ணின் தாய்
  3. பால் கொடுத்த பெண்ணின் கணவனின் தாய்
  4. பால் கொடுத்த பெண்ணின் சகோதரி
  5. பால் கொடுத்த பெண்ணின் கணவனின் சகோதரி
  6. பால் கொடுத்த பெண்ணின் பிள்ளைகளும் பிள்ளைகளின் பிள்ளைகளும்
  7. ஒரு பெண்ணிடத்தில் பால் குடித்த வகையில் உறவாகும் சகோதரி
- தற்காலிகமாக திருமண முடிக்க அனுமதிக்கப்படாதோர்
  1. ஏக காலத்திலே இரு சகோதரிகளை மனைவிகளாகக் கொள்ளல்
  2. ஒரு பெண்ணையும் அவளது தந்தையின் சகோதரியையும் ஏக காலத்தில் மனைவிகளாகக் கொள்ளல்
  3. ஒரு பெண்ணையும் அவளது தாயின் சகோதரியையும் ஏக காலத்தில் மனைவியாகக் கொள்ளல்
  4. மாற்றான் மனைவியாக இருக்கும் ஒரு பெண்
  5. மூன்று முறை தலாக் சொல்லப்பட்ட பெண் முதற்கணவனுக்குத் தற்காலிகமாகத் திருமணமுடிக்க அனுமதிக்கப்படாதவளாவாள்
  6. முஷ்ரிக்கான பெண்
  7. விபச்சாரிகள் : விபச்சாரிகள் பாவமன்னிப்புக் கேட்டு இப்பாவச் செயலிலிருந்து முற்றிலும் நீங்கி தூய்மையுடன் வாழ்ந்தால் அவர்களைத் திருமண முடிப்பது ஹலாலாக முடியும்.
- தற்காலிக மஹ்ரமிகள் திருமணம் தவிர்ந்த ஏனைய அனைத்து விடயங்களிலும் அஜ்னபிகளின் சட்டங்களுக்கே உட்படுவர்.
- மேற்குறிப்பிடப்பட்ட மஹ்ரமிகள் அல்லாதவர்களை அதாவது அஜ்னபிகளைத் திருமண முடிக்கும்போது மணப்பெண், மணமகள் ஆகிய இருவரிடமும் பின்வரும் இலட்சணங்கள் இருப்பது விரும்பத்தக்கதென ஹதீஸ்கள் தெளிவுபடுத்துகின்றன.

- மணப்பெண் : மகப்பேற்றுப் பாக்கியம், புத்திசாதுரியம், மார்க்க பக்தி, கௌரவமான குடும்பம், அழகு, கன்னிப் பெண்
- மணமகன் : மார்க்க பக்தி, சிறந்த கல்வி, பொருளாதார வசதி, குடும்ப அந்தஸ்த்து, சிறந்த ஆளுமை, மலட்டுத் தன்மையில்லாமை, அன்புள்ளம், அழகு
- மேற்படி சட்டவிதிகளுக்கமைய பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவர்களாக மணமகனும், மணமகளும் இருத்தல் வேண்டும்
- மணமகன் : முஸ்லிமாய் இருத்தல், சமகாலத்தில் நான்கு மனைவியரை வைத்திராதவராக இருத்தல், மணப்பெண்ணுக்கு அஜ்னபியாக இருத்தல், ஹஜ்ஜுக்காக இஹ்ராம் தரிக்காதவராக இருத்தல்
- மணமகள் : முஸ்லிமாய் அல்லது தூய அஹ்லுல் கிதாபாக இருத்தல், மாற்றான் மனைவியாக இல்லாதிருத்தல், இத்தா அனுஷ்டிக்காதவராயிருத்தல், ஹஜ்ஜுக்கு இஹ்ராம் தரிக்காதவராயிருத்தல்.

- **வலி : மணப்பெண்ணின் பொறுப்புதாரர்**
  - ஒரு பெண் திருமணம் முடிப்பதற்கு பொறுப்புதாரர் ஒருவர் இருக்க வேண்டும். அவள் சுயமாகத் திருமணம் முடிக்கவோ மற்றொருவருக்குத் திருமணம் முடித்து வைக்கவோ முடியாது. திருமண ஒப்பந்தம் நிறைவேறுவதற்குப் பொறுப்புதாரர் திருமணத்தை நடாத்தி வைத்தல் ஒரு ஷர்த்தாகும். இந்த ஷர்த்து இல்லாவிட்டால் திருமணம் நிறைவேறாது. இதுவே பெரும்பாலான சட்ட அறிஞர்களின் கருத்தாகும். இதற்காக அவர்கள் முன்வைத்துள்ள ஆதாரங்கள்
  - "ஈமான் கொள்ளும் வரை உங்கள் பெண்களை இணைவைப்போருக்குத் திருமணம் முடித்துக் கொடுக்க வேண்டாம்." (2 : 221)
  - "பொறுப்புதாரர் இன்றித் திருமணம் இல்லை" (அஹ்மத்)
  - ஒரு பெண்ணின் திருமணம் அவளுக்கு நெருங்கிய உறவாக உள்ள பொறுப்புதாரரின் வார்த்தை மூலமே நிறைவேறும். அவர் இல்லாதபோது தூர உறவு கொண்ட பொறுப்புதாரரின் வார்த்தை மூலம் நிறைவேறும். அவரும் இல்லையாயின் நீதிபதியின் வார்த்தையால் நிறைவேறும். இமாம் ஷாபி (ரஹ்) கருத்துப்படி பொறுப்புதாரர் கீழ்வரும் ஒழுங்கில் அமைவர்.
    1. தந்தை
    2. தந்தையின் தந்தை
    3. தாய் தந்தையின் ஊடாக வந்த சகோதரன்
    4. தந்தையின் ஊடாக வந்த சகோதரன்
    5. தாய் தந்தையின் ஊடாக சகோதரனின் மகன்
    6. சகோதரனின் மகன்
    7. தந்தையின் சகோதரன்
    8. தந்தையின் சகோதரனின் மகன்
    9. நீதிபதி
  - பொறுப்புதாரர் புத்திசுவாதீனமுள்ளவராகவும், சுதந்திர புருஷராகவும், பருவ வயதை அடைந்தவராகவும் இருக்க வேண்டும். பொறுப்புதாரர் குற்றமற்றவராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை கிடையாது.

**ஷாஹிதுகள் / சாட்சிகள்**

- திருமணம் நிறைவேறியதற்கான ஆதாரங்களே சாட்சிகளாவர். சாட்சிகள் இல்லாமல் திருமணம் செல்லுபடியாகாது. இதுவே அனேகமான இமாம்களது கருத்தாகும். இதற்கான ஆதாரங்கள் பின்வருமாறு:

  ''விபச்சாரிகள்தான் எத்தகைய ஆதாரமும் இன்றித் தாமாகவே திருமண ஒப்பந்தத்தை நிறைவேற்றிக் கொள்வர்'' (திர்மிதி)

  ''பொறுப்புதாரர், இரு நேர்மையான சாட்சிகள் இன்றித் திருமணம் என்பது கிடையாது'' (தாரகுத்னி)

- சாட்சியாக வருவோர் புத்திசுவாதீனம் உள்ளவர்களாகவும் பருவ வயதை அடைந்த வர்களாகவும், ஒப்பந்தத்தின் இரு தரப்பினரதும் பேச்சைக் விளங்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். சாட்சிகள் நேர்மையுடையவர்களாகவும், நன்னடத்தை கொண்டவர் களாகவும் இருக்க வேண்டும். சாட்சிகள் முஸ்லிமாகவும், சுதந்திரவானாகவும் இருத்தல் வேண்டும். சாட்சிகள் ஆண்களில் இருவராக இருக்க வேண்டும்.

**ஈஜாப், கபூல்**

- திருமண ஒப்பந்தத்தின் அடிப்படைப் பகுதி ஆண், பெண் இரு சாராரதும் பரஸ்பர திருப்தியாகும். திருப்தி உள்ளத்தோடு சார்ந்த செயலாகும். உள்ளத்தின் நிலையை அல்லாஹ்வைத் தவிர வேறு எவராலும் அறிய முடியாது.
- உளத்திருப்தியை வெளிக்காட்ட வாய்மொழியே சாதனமாகும். திருமண ஒப்பந்தத்தில் ஈடுபடும் இரு பிரிவினரும் தங்கள் திருப்தியை சொற்களின் மூலம் வெளியிடுவர். ஒப்பந்தத்தில் இரு சாராரிலும் முதலில் பேசுபவரின் வாய் மூல வெளிப்பாடு திருப்தியை உறுதிப்படுத்தல்' (ஈஜாப்) எனவும், இரண்டாவது பிரிவினரின் வாய் மூல வெளிப்பாடு 'திருப்தியுடன் ஏற்றல்' (கபூல்) எனவும் வழங்கப்படுகிறது.

  **ஈஜாப், கபூலுக்கான ஷர்த்துக்கள்**

  1. ஒப்பந்தத்தில் ஈடுபடுபவர் ஒப்பந்தத்தை நிகழ்த்துவதற்கான பூரண தகுதி கொண்டவராக இருக்க வேண்டும்.
  2. ஈஜாப், கபூல் ஒரே அமர்வில் இடம்பெறல் வேண்டும்.
  3. ஒப்பந்தத்தில் இணையும் இருசாராரும் திருமண ஒப்பந்தம் நிகழ்வதற்கான வார்த்தைப் பிரயோகங்களைச் செவிமடுத்தல் வேண்டும்.
  4. ஈஜாபின் வார்த்தைகளுக்கு முரணாக கபூலின் வார்த்தைகள் அமையக்கூடாது.

- திருமணம் என்ற கருத்தை கொடுக்கும் எந்தச் சொல்லாலும் அது எந்த மொழியில் அமைந்தாலும் திருமணம் நிறைவேறும். ஈஜாபைப் பொறுத்தவரையில் திருமணம் என்ற கருத்தை நேரடியாகக் கொடுக்கும் ''ஸவாஜ்'' என்ற சொற்களாலும் திருமணம் நிறைவேறும். கபூலைப் பொறுத்தவரையில் ''ஏற்றுக்கொள்ளல்'' என்ற கருத்தை காட்டும் எந்த சொல்லாக அமையினும் அது நிறைவேறும். ஈஜாப், கபூலுக்கான சொற்கள் அது இறந்த கால சொற்பிரயோகமாக இரு பகுதியினராலும் பிரயோகிக்கப் பட வேண்டும். திருமண ஒப்பந்தத்திற்கான சொற்பிரயோகங்கள் எத்தகைய ஷர்த்தை யும் நிறைவேற்றுவதற்கான எத்தகைய கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கக் கூடாது.

**மஹர் அல்லது ஸதாக்**

- திருமண ஒப்பந்தத்தின்போது மணமகன் மணமகளுக்கு கொடுக்க வேண்டிய கட்டாயமான கொடுப்பனவை இது குறிக்கின்றது. இதனைப் பணமாகவோ பொருளாகவோ வழங்கலாம். இதுபற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது. “நீங்கள் (திருமணம் செய்து கொண்ட) பெண்களுக்கு அவர்களுடைய ஸதாக்கை (அல்லது மஹரை) மகிழ்வோடு கொடுத்து விடுங்கள். அதிலிருந்து ஏதேனுமொன்றை மனமுவந்து அவர்கள் உங்களுக்கு கொடுத்தால் அதைத்தாராளமாக மகிழ்வுடன் புசியுங்கள்” (4: 4)
- மஹர் தொகையினைத் தீர்மானிப்பதற்கு மணமகன் தனது பொருளாதார வசதி, மணமகளின் கோரிக்கை அல்லது இருவரின் பரஸ்பர ஒப்பந்தம் என்பவற்றை அடிப்படையாகக் கொள்ளலாம். மஹரை உடலுறவு கொள்வதற்கு முன்னர் வழங்கி விடுவது சிறந்ததாகும். மஹரை வழங்காமல் விடுவதும், வழங்கியதை திருப்பி வாங்குவதும் பாவமானதாகும். மனைவி தானாக விரும்பி அதனை கணவனுக்குச் செலவு செய்ய முடியும்.

**3. பகிரங்கப்படுத்தல்**

- வலீமாவே கணவன் மனைவியாக ஒன்று சேர்ந்ததை பகிரங்கப்படுத்தும் நிகழ்ச்சியாக அமைகின்றது. வலீமா என்பது திருமணத்தின் பின்னர் மணமகன் கொடுக்கும் விருந்தாகும். இதற்கு உறவினர், நண்பர், அயலவர், ஏழை, செல்வந்தர் போன்ற எல்லோரும் அழைக்கப்படுவது சிறந்தது.
- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘திருமணத்தை பகிரங்கப்படுத்தி அறிவியுங்கள்.”
- ‘‘உங்களில் ஒருவர் மணவிருந்திற்கு அழைக்கப்பட்டால் அவர் அதற்குச் சென்று விடட்டும்.’’ (புஹாரி)
- திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட புதுத்தம்பதியினரை வாழ்த்துக் கூறி மகிழ்விப்பது சுன்னத்தான நடைமுறையாகும்.

**விவாக விலக்கு**

- திருமணத்துக்கு சட்டங்களும் விதிமுறைகளும் காணப்படுவது போல மண முறிவுக்கும் சட்டங்களும் விதிமுறைகளும் வகுப்பட்டுள்ளன. இஸ்லாம், திருமண முடித்த ஆணும் பெண்ணும் பரஸ்பரம் புரிந்துணர்வோடு இன்பமாக வாழ வேண்டும் என்றே எதிர்ப்பார்க்கின்றது. என்றாலும் சில சந்தர்ப்பங்களில் இல்லற வாழ்வை நிறைவேற்றுவதற்குத் தடைகள் ஏற்படுகின்றபோது அல்லது இருவருக்குமிடையில் கருத்தொற்றுமை நிலவாத போது அல்லது குடும்ப வாழ்வை நடாத்த பௌதிக நிலைகள் தடையாக அமைகின்ற போது அல்லது இருவரும் இணைந்து வாழ முடியாத அளவுக்கு நோய்களோ வேறு இடையூறுகளோ ஏற்படுகின்றபோது திருமண ஒப்பந்தத்தில் இருந்து விலகிக் கொள்வதற்கு வழங்கப்பட்ட சலுகையே தலாக் ஆகும். என்றாலும் பிரச்சினைகளின்போது ஒருவரை ஒருவர் சமாளித்து பிரச்சினைக்கான தீர்வை இனங்கண்டு குடும்ப வாழ்வை தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கு வழி காண்பதே சிறந்ததாகும்.
- பொதுவாக திருமணத்தின் நோக்கம், நிம்மதியான, இன்பமான குடும்ப வாழ்வை நடாத்தி அதனூடாக சிறந்த சந்ததியொன்றை தோற்றுவிப்பதாகும். இவ்வாறான நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தடையாக அமைந்த திருமண பந்தங்களை தொடரச் செய்வதில் அர்த்தம் இருக்கமாட்டாது. இதனால் முரண்பாடுகளும் சிக்கல்களும் பாதகமான சூழ்நிலைகளுமே தோன்றும். வெறுப்பும் விரக்தியும் உற்ற

இவர்கள் பிழையான வழிகளை நாடவும் முடியும். இத்தகைய ஒரு சூழ்நிலையில் திருமணத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பத்தில் திருமண ஒப்பந்தங்களில் இருந்து விலகி மறுமணம் செய்து கொள்வதற்கான ஒரு வாய்ப்பாகவே தலாக் அமைகின்றது.

- கிறிஸ்தவ சமயத்தில் தலாக் சொல்வது ஹராமாக்கப்பட்டிருகின்றது. ஒரு பெண் தன் கணவனுக்கு துரோகம் செய்து, படுக்கையை மாசுபடுத்தி விட்டால் கூட அவளுடனே இருக்க வேண்டும் என்று கிறிஸ்தவம் கூறுகின்றது. ஆனால் இஸ்லாம் இதற்கு மாற்றமான நியாயமான காரணங்களுக்காக திருமண ஒப்பந்தத்தில் இருந்து தம்மை விடுவித்து கொள்ள வாய்ப்பை வழங்கியுள்ளது.
- யஹூதிகளிடத்தில் எத்தகைய காரணமுமின்றி பெண்ணை தலாக் செய்து விடலாம். அழகான ஒரு பெண்ணை மண முடிப்பதற்காக முந்தைய மனைவிகளை தலாக் செய்வதில் எத்தகைய தவறையும் அவர்கள் காண்பதில்லை. இவ்வாறே ஜாஹிலிய் யாக் காலத்தில் ஒரே பெண்ணை பலமுறை வேண்டுமானாலும் தலாக் சொல்லி விட்டு மீண்டும் மீண்டும் மணமுடிக்கும் நிலை காணப்பட்டது. இவ்வாறன நிலையை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை.
- இஸ்லாம் தலாக்கை அனுமதித்திருந்த போதிலும் விருப்பத்துடன் அதனை அனு மதிக்கவில்லை. தேவையைப் பொறுத்து மாத்திரமே அது அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. தேவையின்றி தலாக் சொல்வதே ஹலாலானவற்றுள் அல்லாஹ்வுக்கு மிகவும் வெறுப்பானது ஆகும்.
- ‘‘பெண்களை அனுபவிப்பதில் ஆசை கொண்டு அதிகமாக தலாக் சொல்பவனை அல்லாஹ் சபிக்கிறான்.’’ ‘‘ஆண்களிடம் விவாக விடுதலை பெற்றுக்கொள்ளும் பெண்கள் முனாபிக்குகளாவர்’’ என்று நபியவர்கள் குறிப்பிட்டார்கள். எனவே இஸ்லாத்தைப் பொறுத்தமட்டில் தலாக் என்பது அல்லாஹ்விடத்தில் வெறுப்பான ஒரு செயலாகும். மிக அசாதாரண சூழ்நிலைகளில், மணவாழ்வு சீராக நடப்பதற்குத் தடையாகக் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமே இதனை இஸ்லாம் அனுமதிக்கின்றது.
- மணமுறிவொன்று ஏற்படக் கூடாதென்பதற்காகவே திருமணத்திற்கு முன்னர் இஸ்லாம் சில விதிமுறைகளை கடைப்பிடிக்க வழிகாட்டியிருக்கிறது. திருமணப் பேச்சுவார்த்தை, மணப்பொருத்தம் பார்த்தல் என்பன இவற்றில் முக்கியமானவைகளாகும். திருமண வாழ்வில் நுழைந்த பின் மணமுறிவு ஏற்படாதிருக்கவும் இஸ்லாம் வழிகாட்டியுள்ளது.
- ‘‘உங்கள் மனைவியரிடத்தில் நீங்கள் வெறுக்கக்கூடிய ஒரு தீய பண்பைக் கண்டால் அவளிடம் காணப்படக்கூடிய நல்ல பண்பொன்றைப் பார்த்து திருப்திப்படுங்கள்’’ என்று நபியவர்கள் குறிப்பிட்டார்கள்.
- குடும்ப வாழ்வில் வெறுப்புக்கள் தோன்றுகின்ற போது எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை அல்குர்ஆன் சுட்டிக் காட்டியிருக்கிறது.
- பிரச்சினைகளையும் நிலைமைகளையும் எடுத்துச்சொல்லி நல்ல வார்த்தைகள், உணர்வூட்டும் உபதேசங்கள் போன்றவற்றால் அவளை சீர்திருத்தி விடுவது. ‘‘அப்பெண்கள் உங்களுக்கு மாற்றமாக நடப்பார்கள் என்று அஞ்சினால் அவர்களுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள்.’’ (4:34)
- அடுத்து படுக்கையில் இருந்து அவளை ஒதுக்கிவைப்பதன் மூலம் நல்வழிப்படுத்த முயற்சிப்பது. முதலாவது வழிமுறை பயனளிக்காத போது இவ்விரண்டாம் வழி முறையைக் கையாள வேண்டும். இது பற்றி அல்குர்ஆன் ‘‘அவர்களைப் படுக்கையி லிருந்து விலக்கி விடுங்கள்’’ (4:34) என்று கூறுகிறது.

- மேற்குறிப்பிட்ட இரு வழிமுறைகளும் பயனளிக்காத போது அவளைத் திருத்தும் நோக்குடன் "இலேசாக அடியுங்கள்" (4:34) என்று அல்குர்ஆன் கூறுகிறது. பெண்களின் முகத்தில் அடிப்பதையும், காயம் ஏற்படும் விதமாக அடிப்பதையும் இஸ்லாம் அனுமதிப்பதில்லை.

- இரு தரப்பிலிருந்தும் பொறுப்பான நன்மதிப்புக்குரிய இருவர் முன்வந்து பிரச்சினையை தீர்த்து வைத்தல். இது பற்றி ''அவ்விருவரிடையே பிரிவினை ஏற்பட்டு விடும் என்று நீங்கள் அஞ்சினால் கணவனின் குடும்பத்தில் ஒருவரையும் மனைவியின் குடும்பத்தில் ஒருவரையும் நடுவர்களாக ஏற்படுத்துங்கள். அவ்விருவரும் சமாதானத்தை விரும்பினால் அல்லாஹ் அவ்விருவரிடையே ஒற்றுமை ஏற்படும்படி செய்து விடுவான்." (4:34) இந்த நான்கு வழிமுறைகளும் பயனளிக்காதபோது மாத்திரமே விவாகரத்து என்ற முடிவுக்கு வர முடியும்.

- அவ்வாறே விவாகரத்துக்குரிய வழிமுறைகள் ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்கு வேறாகவும் காணப்படுவது இஸ்லாத்துக்குரிய மற்றொரு சிறப்பம்சமாகும்.

- பெண்களின் இயல்பு, தன்மை, அவர்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கைப் பிரச்சினை என்பவற்றினை மையமாக வைத்து ஆண்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற தலாக் உரிமையைப் போலன்றி பெண்களுக்கான உரிமை அளவாக வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் ஒரு ஆண் தலாக் சொல்கின்றபோது அதற்கான காரணங்களை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. இதனால் பெண்ணோடு சம்பந்தப்பட்ட இரகசியம் பாதுகாக்கப்படுகின்றது. காரணம் அம்பலப்படுத்தப்படுமானால் அது மறுமணம் செய்கின்ற போது பெண்ணுக்கு பாதகமாக அமையலாம். அதேநேரம் ஒரு பெண் தனது கணவரிடம் விவாகரத்துக் கோருகின்றபோது அதற்கான காரணம் கட்டாயம் தெளிவுபடுத்தப்பட வேண்டும். பெண்கள் கவர்ச்சிகளுக்கும் அவசர முடிவுகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் உட்படுவதனால் தூர நோக்கற்ற அவசர முடிவுகளுக்கு அவர்கள் வருவதனாலேயே தலாக்-மணமுறிவுகளுக்கான உரிமை பெண்களுக்கு குறைவாக வழங்கப்பட்டிருக்கிறது எனலாம்.

- **விவாகரத்து முறைகள்:**

**தலாக்:**

- தலாக் என்பது மணமுறிவு என்ற மொழிக்கருத்தைத் தரும். கணவன் மனைவியை விலக்கி விடுவதையே இது குறிக்கும். தலாக் சொல்வதற்கு எந்தக் காரணத்தையும் வெளிப்படுத்த தேவையில்லை. இது கணவன் சில வார்த்தைகளைக் கூறி மனைவியை விவாக விடுதலை செய்வதைக் குறிக்கும். இதனை இரு பிரிவுகளாக பிரிக்கலாம். ஒன்று தலாக் சுன்னி மற்றது தலாக் பிதஇ ஆகும்.
- தலாக் சுன்னி: தலாக் சொல்வதற்கு இஸ்லாம் வகுத்த வரம்புகளைப் பேணி அதை செய்யும் போது தலாக் சுன்னி எனப்படும். உடலுறவு கொள்ளப்படாத பெண்ணை அவள் மாதவிடாய் நீங்கி தூய்மையாக இருக்கும் காலப்பிரிவில் ஒரு முறை மட்டும் தலாக் செய்தால் அது தலாக் சுன்னி ஆகும்.

- தலாக் பிதஇ: இஸ்லாமிய சட்ட வரம்புகளைப் பேணாமல் அதற்கு மாற்றமாக அமையும் தலாக்கையே இது குறிக்கும். அதாவது ஒரே சொல்லில் மூன்று தலாக்குகளையும் சொல்லல், ஒரே இடத்தில் மூன்று தலாக்குகளையும் ஒவ்வொன்றாகச் சொல்லல், மாதவிடாய்க் காலப்பிரிவில் அல்லது பிள்ளை பெற்று 'நிபாஸ்' இலிருந்து தூய்மையடையாத காலப்பிரிவில் தலாக் சொல்லுதல், மாதவிடாய் நீங்கிய காலப்பிரிவில் உடலுறவு கொண்டுவிட்டு தலாக் சொல்லல் என்பன இந்த வகையைச் சாரும்.

- தலாக்கை, தலாக் பாஇன், தலாக் றஜஇ என்று மேலும் இரு பிரிவுகளாகவும் பிரிக்கலாம். தலாக் செய்யப்பட்டவளை மீண்டும் மனைவியாகக் கொள்ள முடியாத தலாக்கையே தலாக் பாஇன் குறிக்கும். அதாவது மூன்று தலாக்குகளையும் பூரணப்படுத்திய நிலைமையையே குறிக்கும். தலாக் றஜஇ, தலாக் சொல்லப்பட்ட வளை மீண்டும் மனைவியாகக் கொள்ள முடியுமான தலாக்கைக் குறிக்கும். அதாவது தலாக் சலுகையை பயன்படுத்தி ஒன்று அல்லது இரண்டு தலாக்குகளை கூறிவிட்டு இத்தாக் காலத்துக்குள் மீண்டும் இருவரும் இணைந்து வாழ முடியுமான நிலையையே இது குறிக்கும்.

**குல்உ**

- களைதல், நீக்குதல், அகற்றுதல் என்பது இதன் மொழிக்கருத்தாகும். இவ்வுரிமை பெண்ணுக்கு வழங்கப்பட்டதாகும். மனைவி தனது கணவருடன் வாழமுடியாத ஒரு நிலை ஏற்பட்டு ஒரு தொகைப் பணத்தை கணவனுக்கு கொடுத்து தன்னை விடுவித்துக் கொள்வதையே இது குறிக்கும். கணவனிடமிருந்து பெற்ற அனைத்தையும் திருப்பிக் கொடுப்பதோடு மேலதிகமாகவும் அவன் கோரினால் அதனையும் அவள் கொடுக்க வேண்டும் (குல்உ செய்வதற்கு பெண் துஹ்ர்-சுத்தமாகவோ ஹைழ் - அசுத்தமாகவோ இருக்க வேண்டியதில்லை) மேலும் குல்உ செய்தால் மூன்று ஹைல் காலம் இத்தா இருக்க வேண்டும்.

**பஸ்கு**

- முறித்தான் என்ற மொழிக்கருத்தை தருகின்றது. உடன்படிக்கையில் ஏற்பட்ட ஒரு கோளாறு காரணமாகவோ திடீரென ஏற்பட்ட ஒரு நிகழ்வு காரணமாகவோ பஸ்கு நிகழலாம். (உம்) திருமணம் முடித்த பின் இருவரும் பால்குடி மூலம் உறவினர்கள் என்று தெரியவருகின்ற போது பஸ்கு நிகழும். இருவருள் ஒருவர் மதம் மாறினாலும் பஸ்உ நிகழும். அதேபோல் நோய் வறுமை போன்றவற்றை காதியிடம் முறையிட்டு இருவரும் விவாகரத்தை முறித்துக் கொள்வதும் இவ்வகையையே சாரும். பஸ்கு இஸ்லாமிய நீதிபதியிடம் கூறி ஒப்பந்தத்தை முறித்துக் கொள்வதை குறிக்கும்.

**லிஆன்**

- லிஆன் என்பது சாபமிடுதல் என்ற கருத்தைத் தரும். கணவன் மனைவியிடையே விபச்சாரக் குற்றச்சாட்டுப் பிரச்சினைகள் தோன்றி நிரூபித்துக் கொள்ள முடியாதபோது அல்லாஹ் மீது ஆணையாக சத்தியமிட்டு சாபமுண்டாகட்டும் என்று கூறி இருவரும் பிரிந்து கொள்வதனையே இது குறிக்கும். அதாவது விபச்சாரக் குற்றம் ஒன்றை நிறுவுவதற்கு நான்கு சாட்சிகள் காணப்பட வேண்டும். எனினும் கணவன் மனைவி யரிடையே இப்பிரச்சினை தோன்றும்போது நான்கு சாட்சிகள் என்பதற்குப் பதிலாக ஆண் தனது குற்றச்சாட்டை நிறுவுவதற்கு நான்கு முறை சத்தியமிட்டு பின்னர் ஐந்தாவது முறையாக தன் கூற்று பொய்யாயின் அல்லாஹ்வின் சாபம் தன் மீது உண்டாகட்டும் என்று கூறுவார். மனைவி நிரபராதியாயின் அவள் தனது தூய்மை நிலையை எடுத்துக் கூறி நான்குமுறை சத்தியம் செய்துவிட்டு தனது கூற்று பொய் யாயின் தன்மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும் என்று ஐந்தாவது முறை கூற வேண்டும். இவ்வாறு கூறிவிட்டுப் பிரிவதே லிஆன் ஆகும். லிஆன் மூலம் பிரிந்த கணவன் மனைவி மீண்டும் ஒருபோதும் சேர்ந்து வாழ அனுமதிக்கப்படுவ தில்லை.

**லிஹார்**

- இது ஜாஹிலிய்யாக் காலத்தில் காணப்பட்ட ஒரு தலாக் முறையாகும். ஒருவன் தன் மனைவியை தாய்க்கு ஒப்பிட்டு கூறுவதன் மூலம் லிஹார் நிகழ்ந்து விடும். லிஹாரின் மூலம் பிரிந்த ஒருவர் மீண்டும் சேர்ந்து வாழ வேண்டுமானால் ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும். அல்லது இரண்டு மாதங்கள் தொடர்ந்து நோன்பிருக்க வேண்டும் அல்லது 60 மிஸ்கீன்களுக்கு உணவளிக்க வேண்டும்.

**ஈலாஉ**

- சத்தியமிட்டு தவிர்ந்து கொள்ளுதல் என்ற மொழிக்கருத்தை தருகின்றது. தன் ''மனைவியுடன் சேரமாட்டேன்'' என சத்தியமிடுவதையே ஈலாஉ குறிக்கும். சத்தியமிட்டு நான்கு மாதத்துக்குள் இணையாவிட்டால் இருவரும் பிரிந்து விடுவர். இவ்வாறு பிரிந்தால் சாதாரண தலாக்குப் போன்றே இத்தா இருக்க வேண்டும்.
- "தங்கள் மனைவிகளுடன் சேருவதில்லை" என சத்தியம் செய்து கொண்டவனுக்கு நான்கு மாத தவணை உண்டு. ஆகவே இதற்குள் இவர்கள் மீண்டும் சேர்ந்து கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்போனும் கருணையுடையோனுமாக இருக்கிறான். ஆனால் அவர்கள் தவணைக்குள் சேராமல் திருமணப் பிரிவினை உறுதிப்படுத்திக் கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் அவர்களுடைய சத்தியத்தை செவியுறுவோனாகவும் இருக்கிறான். ஆகவே அத்தவணைக்குப் பின் தலாக் ஏற்பட்டு விடும்.

  ''தனது மனைவியுடன் சேருவதில்லை என சத்தியம் செய்து கொண்டவருக்கு 4 மாத தவணை உண்டு. ஆகவே அதற்குள் அவர்கள் மீண்டு கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்போனும் கருணையுடையோனுமாக இருக்கிறான்." (2:226)

**இத்தா**

- இத்தா என்பது கணித்தல், எண்ணுதல் என்ற மொழிக்கருத்தைத் தரும். கணவனின் இழப்புக்காக அல்லது பிரிவுக்காக மனைவி குறிப்பிட்ட சில காலத்துக்கு திருமணம் முடிக்காமல் தவிர்ந்திருப்பதை இது குறிக்கும். இத்தா இருக்கும் மரபு ஜாஹிலிய்யாக் காலத்திலும் காணப்பட்டது. இத்தா பல வகைப்படுகின்றது.

  1. கணவன் இறந்ததற்காக அனுஷ்டிக்கும் இத்தா. கணவன் இறந்ததற்காக ஒரு பெண் 4 மாதமும் 10 நாட்களும் இத்தா இருக்க வேண்டும். "உங்களில் தம் கணவனை இழந்த பெண்கள் 4 மாதமும் 10 நாட்கள் காத்து நிற்கட்டும்" என்று அல்குர்ஆன் கூறுகிறது. (2:234)
  2. கணவனை இழந்த பெண் ஹைழ் வருவதை விட்டும் நீங்கிய மிகவும் வயது முதிர்ந்த பெண்ணாக இருந்தால் அவள் 3 மாதங்கள் மாத்திரம் இத்தா இருத்தல் போதுமானதாகும். "உங்கள் பெண்களில் எவரேனும் அதிக வயதாகி மாதவிடாயின் நம்பிக்கை இழந்து இத்தாவை கணக்கிட என்ன செய்வதென்று நீங்கள் சந்தேகத்துக்குள்ளாகி விட்டால் அப்பெண்களுக்கும் இன்னும் எவர்களுக்கு இது வரையில் மாதவிடாய் ஏற்படவில்லையோ அவர்களுக்கும் இத்தாவின் தவணை 3 மாதங்களாகும்." (65:4)
  3. கணவனை இழந்த பெண் கர்ப்பவதியாயின் அவள் பிள்ளை பெறும் வரையிலும் இத்தா இருக்க வேண்டும். "கர்ப்பஸ்திரிகளுக்கு அவர்களின் இத்தாவின் தவணை அவர்கள் பிரசவிக்கும் வரை இருக்கின்றது." (65:6)
  4. தலாக் சொல்லப்பட்ட பெண் மூன்று குறூஉகள் இத்தா இருக்க வேண்டும். முதலாம் அல்லது இரண்டாம் தலாக் சொல்லப்பட்ட நிலையில் உள்ள ஒரு பெண்ணை கணவன் விரும்பினால் இத்தா தவணைக்குள் மீட்டிக் கொள்ள முடியும். "திருமணம் முடித்து உடலுறவு கொள்ளப்படாத நிலையில் ஒரு பெண்ணை தலாக் சொன்னால் அப்பெண்ணுக்கு இத்தா இல்லை" (33:48)

- சமூகத்திலுள்ள இத்தா சம்பந்தமான பிழையான சில நடைமுறைகளே இஸ்லாத்தின் எதிரிகள், இத்தா ஒரு சமூகக் கொடுமை என்று பிரச்சாரம் செய்யத் தூண்டியது எனலாம்.

**இத்தாவின்போது பேண வேண்டிய அம்சங்கள்:**

- கணவன் மரணித்ததற்காக இத்தாவை அனுஷ்டிக்கும் பெண் நான்கு மாதமும் 10 நாட்கள் துக்கம் அனுஷ்டிப்பதை இஸ்லாம் அனுமதித்துள்ளது. இது ஒரு சமூகக் கொடுமையல்ல. கணவன் இறந்தவுடன் எந்தப் பெண்ணும் தனது கவலையோடு மீண்டும் திருமண இன்பத்தில் நுழைய விரும்ப மாட்டாள். மேலும் பெண் இளகிய மணமுடையவள் என்பதால் கணவனை இழந்தவள் திடீரென மீண்டும் மணவாழ்வில் நுழைய விரும்பவும் மாட்டாள்.

- கணவனை இழந்தவள் இத்தா காலத்தில் தனது கவலையை பிரதிபலிக்கச் செய்வதோடு அவள் ஆடம்பரங்களை தவிர்த்து எளிமையைப் பேணி, நகைகள் அலங்கார ஆடைகள் அணிந்து தன்னை ஒப்பனை செய்து கொள்வதை தவிர்ந்து நடத்தல் வேண்டும். இத்தாவுடைய காலத்தில் திரும்பவும் திருமணச் பேச்சில் ஈடுபடுவது முற்றாகத் தவிர்க்க வேண்டியதொன்றாகும். இத்தாவை ஒரு சமூகக் கொடுமையாகக் கருதக்கூடாது. ஏனெனில் அது மிகவும் இலகுவாக அனுஷ்டிக்க முடிந்த ஒரு வணக்கமாகும்.

- ஒரு முஸ்லிம் பெண் சாதாரண காலங்களில் எவ்வாறு பர்தா அணிந்து அவ்றத்தை மறைத்து தனது அலங்காரங்களை வெளிக்காட்டாது தேவைக்கன்றி வெளிச்செல்லக் கூடாதோ அதே விதிகளையே இத்தாவிலும் கடைப்பிடிக்க வேண்டும். இத்தாவின் போது ஒரு பெண் உழைப்பிற்காக தனது ஜீவனோபாயத்துக்கு வழியைத் தேடிக் கொள்வதற்காக பகற்பொழுதில் வெளியே சென்று உழைத்துவிட்டு இரவில் வீட்டை விட்டு வெளியே செல்லாமல் இருக்க முடியும்.

- இத்தா அனுஷ்டிக்கின்ற பெண்ணொருத்தி நபி (ஸல்) அவர்களது காலத்தில் காட்டுக்கு விறகு வெட்டச் சென்றாள். இடையில். அவளை ஒரு மனிதர் சந்தித்து, ‘இத்தா அனுஷ்டிக்கும் பெண்கள் இவ்வாறு வெளியிறங்கிச் செல்லக் கூடாது’ என்றார். இதனால் சஞ்சலத்துக்குள்ளான அப்பெண் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, ‘இத்தாவுடைய காலத்தில் விறகு வெட்டச் செல்வது தவறானதா?’ என்று வினவினாள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ‘அது ஒரு பிரச்சினைக்குரிய விடயமல்ல. அது அவளுக்கு ஆகுமானதே’ என்று பதிலளித்தார்கள். இந்தச் சம்பவம், இத்தாவுடைய காலத்தில் ஒரு பெண், அந்த இரு நிபந்தனைகளையும் பேணிய நிலையில் செயற்பட இடமுண்டு என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

- ஒரு தடவை இத்தா இருந்த ஒரு பெண் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, தனது வீட்டில் சகோதரர்கள் மட்டும்தான் இருப்பதாகவும், தான் ஆறுதல் பெறுவதற்காகப் பேசிக் கொண்டிருக்க எந்தப் பெண்களும் தனது வீட்டில் இல்லை என்றும் எனது பக்கத்து வீட்டுக்குச் சென்று அங்குள்ள பெண்களுடன் பேசிக் கொண்டிருப்பதற்கு அனுமதியளிக்க வேண்டிக் கொண்டாள். இந்த வேண்டுகோளை நபி (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். எனவே, தேவைகளின்போது, இத்தா இருக்கின்ற பெண் வீட்டை விட்டு வெளியே செல்லலாம் என்பது தெளிவாகிறது.

- இவ்வாறு இஸ்லாத்தில் இத்தா அமைப்பு இலகுபடுத்தப்பட்டிருக்கும்போது எமது சமூகத்தில் இத்தா மிகுந்த சிரமத்துடன் அனுஷ்டிக்கப்படுகின்றது.

- இன்று, சமுதாயத்தின் சில மட்டங்களில் ஒரு பெண்ணின் கணவன் இறந்துவிட்டால் இத்தா அனுஷ்டிப்பதற்காக அவள் கட்டாயமாக வெள்ளாடை உடுத்திக் கொள்ள வேண்டும். அவள் வீட்டில் ஒரு மறைவான இடத்தில் அமர்த்தப்படுவாள். எந்த ஆடவரினதும் பார்வை அவள்மீது தவறுதலாகவும் பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவள் தங்கியிருக்கும் இடத்தை சூழ மறைப்பதற்காக கடுமையான ஏற்பாடுகள்

மேற்கொள்ளப்பட்டிருக்கும். அவள் அந்த சிறிய இருளான இடத்திலேயே இத்தாக் காலம் முழுக்க அமர்ந்திருக்க வேண்டும். சில இடங்களில் சிறுவர்கள் கூட அவளைப் பார்த்துவிடக் கூடாது என்ற கடுமையான சட்டம் பேணப்படுகிறது. அவளை ஆண்கள் தவறுதலாகக் கூட பார்த்து விடக்கூடாது. அவ்வாறு அவர்கள் இவளைப் பார்த்து விட்டால் இது இவள் செய்யும் பாவம் என்ற கருத்து எமது சமூகத்தில் பொதுவாக நிலவிவருகிறது. சில ஊர்களில் இதைவிட ஒருபடி மேலாகச் சென்று பெண்கள் இத்தா இருக்கும்போது ஆண்கள் அவளைக் கண்டுவிட்டால் அல்லது ஆண்களைச் சந்திக்க வேண்டிய கட்டாய நிலை இவளுக்கு ஏற்பட்டு, ஆண்களை அவள் சந்தித்து விட்டால் தனது இத்தாவைப் புதிதாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் பணிக்கப்படு கிறாள். இத்தாவில் இத்தகைய கடுமையான ஆசாரங்கள் சமூகத்தில் கடைப்பிடிக்கப் பட்டிருப்பதன் காரணமாக இத்தா குறித்து பல மோசமான அபிப்பிராயங்கள் எழுந் துள்ளன. கணவன் மரணித்த பெண்கள் இத்தாவைத் தாங்க முடியாத பெரியதொரு சுமையாகக் கருதத் தலைப்பட்டுள்ளனர். இதனால் சில ஊர்களில் நாற்பது நாட்கள் மட்டும் இத்தா அனுஷ்டிக்கும் பிழையான மரபு காணப்படுகிறது.

- தலாக் சொல்லப்பட்ட பெண் இத்தாவில் இருக்கும்போது அவளை மீண்டும் மனைவி யாக்கிக் கொள்ள வாய்ப்புக் காணப்படுகின்றது என்ற வகையில் இவள் கணவனின் வீட்டிலேயே இத்தாவை அனுஷ்டிக்க வேண்டும். இக்காலத்தில் இருவரும் இணைந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கும் முகமாக அவள் கணவனைக் கவரும் விதத்தில் தன்னை கணவனுக்காக அலங்கரித்துக் கொள்ளும் விதத்தை இஸ்லாம் தடுக்க வில்லை. தலாக் பாஇன் ஆன நிலையில் உள்ள ஒரு பெண் இவ்வாறு கணவனைக் கவரும் விதத்தில் இருக்க வேண்டிய அவசியமில்லை.
- நிகாஹ் நிகழ்வின் போது மனைவிக்கு கணவன் வழங்கும் அன்பளிப்பு மஹர் எனப்படுகிறது. அவ்விருவரும் குடும்பமாக வாழும்போது மனைவிக்கு கணவனுக்கு வழங்கும் தாபரிப்பு உதவி நபகா ஆகும். விவாக வாழ்வில் இருந்து கணவன் மனைவியைப் பிரிந்து வேறாகிவிடுகின்ற போது அவளுக்கும் வழங்கும் அன்பளிப்பு மதா∴ ஆகும். மனைவியை தலாக் கூறி விவாகரத்து செய்யும்போது மதா∴ கொடுப்பது பற்றி 2:241, 2:236 வசனங்கள் விளக்குகின்றன. இது பொதுவாக இத்தா காலத்தில் கணவன் மனைவிக்கு நிறைவேற்ற வேண்டிய ஓர் அம்சமாகும்.

**இத்தாவின் பயன்கள்**

1. இறைகட்டளையை ஏற்று நிறைவேற்றுவதன் மூலம் இறைகூலியை பெற்றுக் கொள்ளல்
2. உளத்தாக்கங்களில் இருந்து மீட்சி பெறுவதற்கான வழி
3. முன்னைய கணவன் மூலம் கருவுற்றிருக்கிறாளா என்பதை அவதானிப்பதற்குரிய காலம்
4. கணவனை இழந்த பெண் துக்கம் அனுஷ்டிப்பதற்குரிய இஸ்லாமிய கால எல்லை
5. முன்னைய கணவனது நடவடிக்கைகளை நினைவுகூரவும், அவருக்காக மனப்பூர்வமாக பிரார்த்தனை புரியவும் உள்ள ஒரு சந்தர்ப்பம்
6. மறுமணம் பற்றிய தீர்க்கமான ஒரு முடிவுக்கு வருவதற்கான சந்தர்ப்பம்
7. தலாக் ரஜஇ ஆயின் மீண்டும் இணைந்து வாழ்வதற்கான சந்தர்ப்பம்

- **பெற்றோர் பிள்ளைகளுக்கும் பிள்ளைகள் பெற்றோருக்கும் செய்ய வேண்டிய கடமைகளும் உரிமைகளும்**

**பெற்றோர் பிள்ளைகளுக்கு**

- மனிதர்களுக்கு பிள்ளைகளே கண்குளிச்சியாவார்கள். அவர்களால் மனித வாழ்வு இன்பம் பெறுகிறது. அவர்கள் மீது இறங்கும் அல்லாஹ்வின் அருள் பெற்றோருக்கும் கிடைக்கிறது. பிள்ளைகளால் அல்லாஹ் உணவில் பரகத் செய்கின்றான்.
- பிள்ளைகள் விடயத்தில் பெற்றோருக்குள்ள கடமைகளை இஸ்லாம் தெளிவாக விளக்கியுள்ளது.

1. இக்லாஸ் என்ற மனத் தூய்மை: தனக்கு அருளாகக் கிடைக்கும் குழந்தையை ஸாலிஹான குழந்தையாக வளர்ப்பேன் என்ற எண்ணம்.
2. தன் குழந்தைக்கு ஸாலிஹான ஒரு தாயைத் தேர்ந்தெடுத்தல்.
3. ஸாலிஹான குழந்தை வேண்டி அல்லாஹ்விடம் பிரார்த்தித்தல்.
4. குழந்தையைக் கருவறையில் பராமரித்தல்.
5. வலது காதில் அதானும் இடது காதில் இகாமத்தும் சொல்லி ஊதுவதும், நாவில் இனிப்பு தேய்த்து விடலும்.

   ‘‘யாருக்கு குழந்தை பிறக்கிறதோ அவர் அதன் வலது காதில் அதானும் இடது காதில் இகாமத்தும் சொல்லி ஊதினால் அந்தக் குழந்தைக்கு எந்தத் தீங்கும் ஏற்பட மாட்டாது.’’ (மஸ்னத் அபிய∴லா அல் மௌசிலி)
6. அகீகா கொடுத்தல், ‘‘ஆண் குழந்தைக்க இரண்டு ஆடுகளும் பெண் குழந்தைக்கு ஓர் ஆடும் அகீகாவாகக் கொடுக்கப்படும்.’’ (திர்மிதி)
7. அழகிய பெயர் சூட்டல்: அபூ மூஸா அஷ்அரி (ரழி அறிவிக்கிறார்: ‘‘எனக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. நான் அதை நபி (ஸல்) அவர்களிடம் கொண்டு சென்றபோது அவர் அதற்கு இப்றாஹீம் எனப் பெயரிட்டார்கள். ஈச்சம் பழத்தை மென்று அதன் வாயில் தேய்த்து விட்டு, அதற்கு அருள்பாலிக்குமாறு துஆக் கேட்டார்கள். பின்னர் என்னிடம் தந்தார்கள். (புஹாரி)
8. ஏழாம் நாளில் குழந்தையின் தலைமுடியை சிரைத்து அதன் நிறையளவுக்கு வெள்ளியின் பெறுமதியை தர்மம் செய்தல்.
9. குழந்தைக்கு விருத்த சேதனம் (கத்னா) செய்தல்.
10. முதல் இரண்டு வருடங்களுக்கு தாய்ப் பால் ஊட்டல். ‘குழந்தைக்கு அவை பிறந்ததிலிருந்து இரண்டு வருடங்கள் முழுமையாகப் பாலூட்டட்டும்.’’ (2:233)
11. ஹலாலானவற்றைக் கொண்டு குழந்தைகளுக்கு உணவளித்தல்.
12. மார்க்க அடிப்படைகளை சொல்லிக் கொடுத்தல், குர்ஆன் ஸுன்னாவைக் கற்பித்தல்.
13. தொழுகையை நிலைநாட்டப் பயிற்றுவித்தல்.
14. குழந்தைகளுக்கான விளையாட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
15. ஸாலிஹான நல்ல தோழர்களைத் தெரிவுசெய்து கொடுத்தல்.
16. குழந்தைகள் வீட்டில் அனுமதி கேட்கும் ஒழுங்கைக் கற்றுக் கொடுத்தல். (24:58)

17. குழந்தைகளுக்கு மத்தியில் பாரபட்சமின்றி நடந்துகொள்ளல். ‘‘உங்கள் குழந்தைகளுக்கு மத்தியில் ரீதியாக நடந்து கொள்ளுங்கள். (முஸ்லிம்)

18. பிள்ளைகள் மீது அன்பு காட்டல்.

19. சிறந்த ஒழுக்கத்தையும் பண்பாடுகளையும் கற்றுக் கொடுத்தல். ‘‘நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு சிறந்த ஒழுக்கங்களையும் பண்பாடுகளையும் கற்றுக் கொடுப்பது, நீங்கள் ஒவ்வொரு நாளும் ஏழைகளுக்கு தர்மம் செய்வதை விட சிறந்ததாகும். (தபரானி)

20. பெண் பிள்ளைகளுக்கு ஹிஜாப் அணியப் பயிற்றுவித்தல்.

21. பருவ வயதுடன் சம்பந்தப்பட்ட ஒழுங்குகளைக் கற்றுக்கொடுத்தல்.

22. பிள்ளைகள் பருவ வயதை அடைந்ததும் ஸாலிஹான துணையை மணமுடித்துக் கொடுத்தல்.

**பிள்ளைகளின் கடமைகளைச் செய்வதில் பெற்றோர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள்**

1. முன்மாதிரிமிக்க ஒழுக்கம்
2. மனம் விட்டுக் கலந்து பழகுதல்
3. அன்பு செலுத்தல்
4. நம்பகமாக நடத்தல்
5. ஊக்கமளித்து உற்சாகமூட்டல்
6. நீதியும் சமத்துவமும்
7. நளினமும் கண்டிப்பும்

**பெற்றோருக்காக முன்வைக்கப்படும் இஸ்லாமிய போதனைகளும் முன்மாதிரிகளும் சில**

- ஈமான் கொண்டவர்களே நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் நரக நெருப்பில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். (66:6)
- “உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகளே. நீங்கள் ஒவ்வொருவரும் அவரவர் பொறுப்புக் குறித்து விசாரிக்கப்படுவீர்கள்....” (புஹாரி)
- நபி (ஸல்) அவர்கள், அப்பாஸ் (ரழி) அவர்களின் பிள்ளைகளான அப்துல்லாஹ், உபைதுல்லாஹ், ருஸய்யிர் (ரழி) ஆகிய மூவரையும் அணிவகுக்கச் செய்து “எவர் என்னிடம் முந்தி வருகிறாரோ அவருக்கு இன்னின்னவை கிடைக்கும்” என்று கூறுவார்கள். சிறுவர்கள் நபியவர்களிடம் ஓடிவந்து நபியவர்களின் மேனியில் விழுவார்கள். அப்போது நபியவர்கள் அச்சிறுவர்களை முத்தமிடுவார்கள் (முஸ்னத் அஹ்மத்)
- “நபி (ஸல்) அவர்கள் ஹஸன் அல்லது ஹுஸைன் (ரழி) அவர்களின் கரத்தைப் பிடித்து அவர்களது பாதங்களை தனது பாதத்தின் மீது வைத்து நீ மேலே ஏறு என்று கூறினார்கள்” (தபரானி) “நபி (ஸல்) அவர்கள் சிறுவர்களைக் கண்டால் அன்பை வெளிப்படுத்தி அவர்களுக்கு ஸலாம் கூறுவார்கள்” (புஹாரி)
- ஒரு கிராமவாசி நபியவர்களிடம் ‘‘நீங்கள் உங்கள் குழந்தைகளை முத்தமிடு கிறீர்களா? நாங்கள் முத்தமிடுவதில்லை” என்றார். அதற்கு நபியவர்கள் ‘‘அல்லாஹ் உமது இதயத்தில் இருந்து அன்பை நீக்கியிருப்பதற்கு நான் பொறுப்பாளியா?” என்றார்கள் (புஹாரி)

- "தான் உணவளிக்க வேண்டியவர்களை வீணடிப்பது ஒரு மனிதனுக்குப் பாவத்தால் போதுமானதாகும்." (முஸ்லிம்)
- "எவருக்கு மூன்று பெண்மக்கள் இருந்து அவர்கள் மீது பொறுமை காத்து, நல்ல முறையில் தனது உழைப்பில் இருந்து அவர்களுக்கு உணவு, பானம், உடையளித்து வருகிறாரோ அவருக்கு அப்பெண்கள் மறுமைநாளில் நரக நெருப்பில் இருந்து காக்கும் திரையாக ஆவார்கள்" (முஸ்னத் அஹ்மத்)

**பெற்றோருக்காகப் பிள்ளைகள்**

- இஸ்லாத்தின் பார்வையில் அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் அடுத்த அந்தஸ்த்து பெற்றோர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.
- பெற்றோரின் மாண்புகளைத் தெளிவுபடுத்தி, பெற்றோரின் விஷயத்தில் முஸ்லிம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை திருக்குர்ஆன் விவரிக்கிறது. அவர்களில் ஒருவரோ அல்லது இருவரோ இருந்து, வயோதிபத்தின் பலவீனத்திற்கு இலக்காகி இருந்தால் இஸ்லாம் அவர்களுக்கு மகத்தான கௌரவத்தை வழங்குகிறது. பார்க்க. (17:23,24) (4:36) (29:8) (31:14)
- பெற்றோர் முஸ்லிம்களாக இல்லாவிடினும் அவர்களுடன் உபகாரமாகவும் நன்றியுடனும் நடந்து கொள்ளுமாறு இஸ்லாம் உபதேசித்துள்ளது.
- அஸ்மா (ரழி) அவர்கள் கூறினார்கள்: இணைவைப்பவராக இருந்த என் அன்னை ஒரு முறை என்னிடம் வந்திருந்தார். இது பற்றி நபி (ஸல்) அவர்களிடம் சென்று எனது தாய் மிக ஆவலுடன் என்னிடம் வந்திருக்கிறார். எனது அன்னைக்கு உபகாரம் செய்யலாமா? என்று வினவினேன். நபியவர்கள் "ஆம் உனது அன்னைக்கு உபகாரம் செய்" என்று கூறினார்கள். (புஹாரி)
- தாய் தந்தை இருவரிலும் உபகாரம் செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டவர் தாயாவார். ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே! நான் அழகிய முறையில் நடந்துகொள்ள மிகவும் தகுதியானவர் யார்? என்று கேட்டார். உமது தாய் என்றார்கள். பிறகு யார்? என்று கேட்டார். உமது தாய் என்றார்கள். பிறகு யார்? என்று கேட்டார்? உமது தாய் என்றார்கள். பிறகு யார் எனக் கேட்டார்? உமது தந்தை என்று நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்."
- ஒரு மனிதன் 40 வயதை அடையும்போது மனைவி பிள்ளைகள் என்று பெரிய குடும்பச் சுமையை சுமக்கின்றான். அவ்வாறான நேரத்தில் ஒரு நல்ல முஸ்லிம் தன் பெற்றோர் உயிருடன் இருப்பின் அவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்வான் என்பதை அல்குர்ஆன் தெளிவுபடுத்துகின்றது. (பார்க்க 46:15)
- பிள்ளைகள் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை இரண்டாக வகைப்படுத்தி நோக்க முடியும்.

  1. பெற்றோர் உயிருடன் இருக்கும் போது செய்ய வேண்டியவை.
  2. பெற்றோர் மரணித்த பின் செய்ய வேண்டியவை

- பெற்றோர் உயிருடன் இருக்கும்போது அவர்களது அழைப்புக்கு உடனடியாகப் பதில் கூறல்
- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஜுரைஜ் மார்க்கத்தை விளங்கியவராக இருந்திருந்தால் தொழுகையை நீண்ட நேரம் தொடர்வதை விட தாய்க்குப் பதிலளிப்பது அவசியம் என்பதை அறிந்திருப்பார்" (புஹாரி)
- அவர்களுடன் அன்புடனும் கனிவுடன் நடந்து கொள்ள வேண்டும்

- ஸ.்.திப்னு அபிவக்காஸ் (ரழி) அவர்களது தாய், ஸ.்.தை இஸ்லாத்தை விட்டுவிட நிர்ப்பந்திக்கு முகமாக உண்பதையும் பருகுவதையும் தவிர்த்துக் கொண்டாள். அப்போது ஸ.்.த் தன் தாயிடம் இறைவன் மீது ஆணையாக உமக்கு பல உயிர்கள் இருந்து அவை ஒவ்வொன்றாகப் பிரிந்தாலும் எனது மார்க்கத்தில் இருந்து விலக மாட்டேன் என்றார். பின்னர் ஸ.்.தின் இக்கடின வார்த்தையை அல்லாஹ் கண்டித்தான். (31:15)
- பெற்றோர் செய்த தியாகத்திற்காக நன்றியுணர்வுடன் நடந்து கொள்ளுதல். உமதிறைவன்... தாய் தந்தைக்கு நன்றி செய்யும் படியாகவும் கட்டளையிட்டி ருக்கின்றான். (17: 23)
- அவர்களில் ஒருவரோ, அல்லது இருவருமோ முதுமையை அடைந்து விட்ட போதிலும் உம்மிடமிருந்து அவர்களை விரட்டவும் வேண்டாம்
- அவர்களைப் புண்படுத்தும் வார்த்தைகளையோ காரியங்களையோ செய்யக் கூடாது.
- அவர்களுடன் மிக்க பணிவாக நடந்து கொள்ளல்
- அவர்களுக்காகப் பிரார்த்தனை புரிதல்
- மற்றவர்கள் எம் பெற்றோரைத் திட்டும் விதமாக நடக்காதிருத்தல்
- பெற்றோரின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து செயற்படல்

**பெற்றோர் மரணித்த பின் அவர்களுக்காகச் செய்ய வேண்டிய கடமைகள்**

1. பெற்றோரின் ஜனாஸாத் தொழுகையில் கலந்து கொள்ளுதல்
2. அல்லாஹ்விடம் அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோருதல்
3. அவர்கள் முடிவு செய்துவிட்டுச் சென்ற உடன்படிக்கைகளை நிறைவேற்றுதல்
4. அவர்களின் உறவினர்களுக்கு உதவி புரிதல்
5. அவர்களின் நண்பர்களைக் கண்ணியப்படுத்தல்

**கணவன் மனைவிக்கும் மனைவி கணவனுக்கும் செய்ய வேண்டிய கடமைகளும் உரிமைகளும்**

- உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் ஆண்களும் பெண்களும் வெவ்வேறு இயல்புகளைக் கொண்டிருந்தாலும் ஒருவர் மற்றவரைச் சார்ந்து ஆறுதல் பெறுகின்ற இயற்கைத் தன்மையில் அல்லாஹ் இரு சாராரையும் படைத்துள்ளான்.
- "(நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள்) மனைவிகளை, நீங்கள் அவர்களிடம் மன நிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே அவன் படைத்து உங்களுக்கிடையில் அன்பையும் நேசத்தையும் உண்டு பண்ணியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்." (30:20)
- மகிழ்ச்சியும் இன்பமும் நிறைந்த இவ்விடைத் தொடர்பை அல்லாஹ் ஏற்படுத்தியதன் நோக்கம் மகத்தான பல பொறுப்புக்களை மகிழ்வுடன் மேற்கொள்ளப்பட வேண்டு மென்பதற்காகவேயாகும்
- கணவன் மனைவிக்கிடையிலான இடைத்தொடர்பு சீராக நடைபெற இருவரது கடமைகளும் உரிமைகளும் பேணப்பட வேண்டியது அவசியமாகும்

- ஓர் ஆணும் பெண்ணும் திருமணத்தின் மூலம் குடும்ப வாழ்வை ஆரம்பிக்கும் போது விளையாட்டுக்காவோ ஆபாசத்துக்காவோ அன்றி அல்லாஹ் வைத்துள்ள இயற்கை விதியை (சுன்னாவை) நடைமுறைப்படுத்தவே ஒன்றிணைந்துள்ளோம் என்றுணர வேண்டும்
- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "திருமணம் என்பது எனது வழிமுறை (சுன்னா) ஆகும். யார் அதை வெறுக்கின்றாரோ அவர் என்னைச் சார்ந்தவரல்ல."
- அல்லாஹ் பின்வரும் விடயங்களை கணவன் மனைவி ஆகியோர் மீது கடமை யாக்கியுள்ளான்.
  - ஸாலிஹான சந்ததிகளை உருவாக்கல்
  - குடும்பத்திற்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்
  - குடும்ப உறவுகளைப் பேணல்
- சூரதுன் நிஸாவின் முதல் வசனத்தைப் பார்க்க
- கணவன் மனைவி ஆகியோர் மீது விதியாக்கப்பட்டுள்ள இக்கூட்டுப் பொறுப்பு அவர்களுக்கிடையிலான சீரான இடைத்தொடர்பு மூலமே நிறைவேற்றப்பட வேண்டுமெனின் அவ்விருவரது கடமைகளும் உரிமைகளும் வரையறுக்கப்பட வேண்டும்.
- கணவன் மனைவியருடைய கடமைகளும் உரிமைகளும் படைத்த இறைவனாலேயே தெளிவுபடுத்தப்பட்டுள்ளமை இஸ்லாமியக் குடும்ப அமைப்பின் சிறப்பம்சமாகும்.
- கணவன் மனைவிக்கிடையே காணப்படும் இயல்பான பலங்களும் பலவீனங்களும் கருத்தில் கொள்ளப்பட்டே அவர்களது கடமைகளும் உரிமைகளும் வரையறை செய்யப்பட்டுள்ளன. இவ்வகையில் தம்பதியருக்கிடையில் ஒருவர் ஆற்ற வேண்டிய கடமை மற்றொருவரின் உரிமையாக மாறிவிடுகின்றது.
- கணவன் மனைவியின் முழுமையான கடமைகளையும் உரிமைகளையும் மூன்று முக்கிய தலைப்புகளில் அடக்கி விடலாம்.
  1. குடும்பத்தை நிர்வாகம் செய்தல்
  2. குடும்பத்தின் சமூக பொருளாதார மேம்பாட்டைக் கண்காணித்தல்
  3. குடும்பத்தின் உணர்வுபூர்வமான ஆன்மீக வளர்ச்சியைப் பராமரித்துப் பேணி வருதல்
- இம்மூன்றிலும் ஆணும் பெண்ணும் சமபங்கேற்க வேண்டும். இருவரது பங்கும் சமபெறுமானமுடையது. ஆனால் வெவ்வேறானது.

### 1. குடும்பத்தை நிர்வாகம் செய்தல்

- இஸ்லாம் குடும்ப நிர்வாகத்தில் ஆணுக்கு தலைமைத்துவத்தை வழங்கியுள்ளது. அதற்கான காரணத்தையும் அல்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது. "ஆண்கள் பெண்களை நிர்வகிப்போர் ஆவர்." (4:34)
- இதற்குக் காரணம் அல்லாஹ் அவர்களில் சிலருக்குச் சிலரை விட உயர்வை அளித்திருக்கிறான் என்பதும், ஆண்கள் தங்களுடைய செல்வத்தில் இருந்து செலவு செய்கிறார்கள் என்பதுமாகும்.
- இஸ்லாமியத் தலைமைத்துவத்தின் முக்கியக் கடமை கலந்தாலோசித்தலாகும். அல்குர்ஆன் ஏவுகின்றது. "அவர்களது செயற்பாடுகள் கலந்தாலோசனையின் அடிப்படையில் அமையும்" (3:159)

- குடும்ப நிர்வாகத்தின் தலைவன் என்ற வகையில் ஆணுக்கு மூன்று முக்கிய பணிகள் உண்டு

  1. மனைவியை அன்பாக, கண்ணியமாக நடத்துதல்.
  2. மனைவியின் வாழ்வாதாரத் தேவைகளை நிறைவு செய்தல்.
  3. மனைவியையும், குடும்பத்தையும் பாதுகாத்து அவர்களுக்கு சரியான வழிகாட்டல் வழங்கல்

- கணவன் தன்னுடைய கடமைகளைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. "அல்லாஹ் ஒருவனுக்கு அதிகாரத்தை வழங்கி மக்களின் நல்வாழ்வுக்காக அதனைப் பயன்படுத்தாத எவனும் சுவனத்தின் நறுமணத்தை நுகர்ந்திட மாட்டான்" (புஹாரி)
- கடமைகளும் உரிமைகளும் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே இவ்வழிகாட்டலின் அடிப்படையில் வகுக்கப்பட்டு இரு சாராரும் அதை புரிந்துணர்வுடன் ஏற்றுக் கொள்ளும் போது குடும்ப நிர்வாகம் சீர்பெறும் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது

## 2. குடும்பத்தின் பொருளாதார சமூக மேம்பாட்டைக் கண்காணித்தல்

- குடும்பத்தின் பொருளாதார மேம்பாடு இரண்டு விடயங்களில் தங்கியுள்ளது

  1. உழைத்தல் (வரவு)
  2. செலவு செய்தல் (செலவு)

- இவ்விரு விடயங்களிலும் கணவனும் மனைவியும் இஸ்லாம் விதித்துள்ள விதிமுறைகளைப் பேணி சலுகையளித்துள்ள விடயங்களில் கலந்தாலோசித்துச் செயல்பட வேண்டும்
- வரவும் செலவும் ஹலாலான வழியில் நிகழ வேண்டும் என்பதும், மார்க்கக் கடமை களுக்கு அவை இடையூறாக இருக்கக் கூடாது என்பதும் இஸ்லாமிய விதிமுறை யாகும்
- குடும்பத்துக்கான செலவைக் கொடுப்பது (நபகா) கணவனின் கடமையாகும். பிள்ளைகளை அழகிய முறையில் வளர்த்து ஆளாக்குவது மனைவியின் கடமையாகும்
- மனைவிக்கும் உழைக்க உரிமையுண்டு. ஆனால் கணவன் அனுமதிக்க வேண்டும். அது அவளின் கடமைகளுக்கு இடையூறாக இருக்கக் கூடாது. மார்க்க வரம்புகளையும் மீறக் கூடாது
- செலவு செய்வதில் கஞ்சத்தனமோ வீண்விரயமோ இருக்கக்கூடாது
- ஹிந்த் பின்தி உத்பா கூறினார்: "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! (எனது கணவர்) அபூ சுப்யான் ஒரு கஞ்சன். எனவே அவருடைய பொருளில் இருந்து எடுத்து என் குழந்தைகளுக்கு உணவளிப்பது என் மீது குற்றமாகுமா?" அல்லாஹ்வின் தூதர் கூறினார். "உன்னுடைய தேவைகளுக்குப் போதுமானதையும், நீதமானதையும் எடுத்துக் கொள்வதில் தவறேதுமில்லை." (புஹாரி)
- "மேலும் (உலோபியைப் போன்று செலவு செய்யாது) உம்முடைய கையை உம்முடைய கழுத்தில் கட்டப்பட்டதாக ஆக்கிக் கொள்ளாதீர். அன்றியும் (உம்மிடம்) இருப்பதை செலவழித்து விடுவதில் அ(க்கையான)தை ஒரே விரிப்பாக விரித்தும் விடாதீர். இதனால் நிந்திக்கப்பட்டவராக, முடைப்பட்டவராக உட்கார்ந்து விடுவீர்"

(17:29)

- கணவனின் பொருளாதார சமூக அந்தஸ்தை உயர்த்துவதில் பங்காற்ற வேண்டும். கணவன் இல்லாத நேரத்தில் அவனது பொருளையும் கண்ணியத்தையும் அவள் கட்டிக் காக்க வேண்டும்
- குடும்பத்தின் உணர்வுபூர்வமான ஆன்மீக வளர்ச்சியைப் பராமரித்தல்; பேணி வருதல்.
- "விசுவாசிகளே! நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும், மனிதர்களும் கற்களும் எரிபொருள்களாகக் கூடிய நரக நெருப்பிலிருந்து இரட்சித்துக் கொள்ளுங் கள்" (66:6)
- கணவன் மனைவி பரஸ்பரம் தமது பலங்களையும் பலவீனங்களையும் இனங்கண்டு வாழ்வை நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும்
- தனது கட்டுப்பாட்டிலுள்ள குடும்பத்தை ஆன்மீக ரீதியாக வளர்த்தெடுப்பதும், மனைவி குழந்தைகளுக்கு இஸ்லாமிய அறிவைப் பெற்றுக் கொள்ள வழி செய்வதும் கணவனின் பொறுப்பாகும்.
- குடும்பத் தலைவன் தனது குடும்பத்தை வழிநடாத்துபவனாவான். அது குறித்து அவன் மறுமையில் வகை கூற வேண்டும். (புஹாரி)
- "(நபியே) உமது குடும்பத்தினரை தொழுகையைக் கொண்டு ஏவுவீராக. நீரும் அதில் நிலைத்திருப்பீராக" (20:132)
- ஆணையும் பெண்ணையும் படைத்த அல்லாஹ் இருவரதும் உள்ளார்ந்த தேவை களையும் அறிந்தவனாக இருக்கின்றான். பெண்ணை நிர்வகிக்கும் பொறுப்பை கணவனுக்குக் கொடுத்துள்ளமையால் தனது ஆண்மையை வெளிப்படுத்தும் முக்கிய சந்தர்ப்பத்தில் கணவனுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளான்.
- "உங்கள் மனைவியர் உங்களுக்குரிய விளைநிலங்கள். ஆகவே உங்கள் விளை நிலங்களுக்கு நீங்கள் விரும்பியவாறு வாருங்கள். உங்களுக்காக முற்படுத்திக் கொள்ளுங்கள். இன்னும் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக நீங்கள் அவனைச் சந்திக்கக்கூடியவர்கள் என்பதையும் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். (நபியே) விசுவாசிகளுக்கு நன்மாராயங் கூறுவீராக" (2:223)
- பொதுவாக கணவன் தன் அதிக நேரத்தை வெளியில் கழிக்கின்றான். மனைவி வீட்டினுள் கழிக்கின்றாள். கணவன் வெளியில் இருக்கும்போது மனைவி விசுவாசமாக இருக்க வேண்டும். எனவே கணவன் விரும்பாத எவரையும் வீட்டிற்குள் அனுமதிக்கக் கூடாது.
- குடும்பத்தை கணவனது வழிகாட்டலின் கீழ் நிருவகிப்பதும் சொத்துக்களை முறையாகப் பேணிப் பாதுகாப்பதும் அவளது கடமையாகும்
- "பெண் தனது கணவனின் வீட்டைப் பராமரிப்பவராவார். அது பற்றி அவரிடம் விசாரிக்கப்படும்." (முஸ்லிம்)
- சிறப்பானதொரு குடும்ப வாழ்வை கட்டியெழுப்புவதற்காக கணவனுக்கு தன் சொத்திலிருந்து வழங்கி இன்புறுவதும் விரும்பத்தக்கது.
- "அதிலிருந்து அவர்கள் கொஞ்சமேனும் கொடுத்தால் நீங்கள் தாராளமாக மகிழ்வுடன் உண்ணுங்கள்" (4:4)

## உறவினரும் அயலாரும்

- இஸ்லாம் இரத்த உறவுக்கு கண்ணியமும் கௌரவமும் வழங்கி அதனைச் சேர்ந்து வாழ்வதன் அவசியத்தை வலியுறுத்தி, அதனைத் துண்டித்து நடப்பதை வன்மையாகக் கண்டிக்கிறது. உறவினர் நம்மைத் துண்டித்து நடந்தாலும் நாம் சேர்ந்து இணங்கிச் செயற்பட வேண்டும் எனப் பணிக்கிறது.
- ஒரு முஸ்லிம் தனது பெற்றோர் மனைவி மக்களுடன் சுருங்கிவிடாமல் உறவினர் மற்றும் இரத்த பந்தங்களையும் உள்ளடக்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் பரஸ்பர நெருக்கமும், நட்புறவும், உபகாரமும் புரிந்து வாழ வேண்டும். அவர்களை 'அர்ஹாம்' எனப்படுகின்றனர். இப்பதம் 'ரஹ்ம்' என்ற சொல்லிருந்து தோன்றியது. 'ரஹ்ம்' என்பது கர்ப்பப் பையைக் குறிக்கிறது. கர்ப்பம் மூலம் ஒரு தாயிலிருந்து வரும் உறவை இது குறிக்கும். மேலும் 'ரஹ்ம்' என்ற பதம் அன்பு, பாசம், கருணை முதலான கருத்துக்களையும் தருகிறது. அல்லாஹ் தனது அன்பை வெளிக்காட்ட தன்னை 'ரஹ்மான்', 'ரஹீம்' என அழைத்துக் கொள்கிறான். எனவே அன்பினால் உருவாகும் நெருக்கமான இரத்த உறவையே இது குறிக்கிறது.
- இரத்த உறவினர் 'உலுல் அர்ஹாம்' எனப்படுகின்றனர். இந்த வட்டத்தில் திருமணம் முடிக்கத் தகுதியானவர், அல்லது தகுதியற்றவர் என்ற வேறுபாடின்றி இரத்த உறவின் மூலமும் சொந்தக்காரர்களாக அமையும் அனைவரும் அடங்குவர் என்பதே மிகப் பொருத்தமான கருத்தாகும்.
- இமாம் குர்துபி 'உலுல் அர்ஹாம்' என்ற உறவை பொதுவான உறவு என்றும் குறிப்பான உறவு என்றும் இருவகையாகப் பிரிக்கின்றார். பொதுவான உறவில் இஸ்லாம் என்ற உறவால் பிணைக்கப்பட்ட முஸ்லிம்கள் அனைவரும் அடங்குவர். குறிப்பான உறவில் சொந்தக்காரர்கள் மாத்திரம் அடங்குவர் என்பர்.
- காபிராக இருப்பினும் அவர்களும் இரத்த உறவில் அடங்குவர். எனவே உலுல் அர்ஹாம் - இரத்த உறவு என்பது இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் மிகப் பரந்ததாகக் காணப்படுகிறது

## இரத்த உறவைப் பேணுவதன் சிறப்பு

- இரத்த உறவைப் பேணுவதன் சிறப்பை குர்ஆனும் சுன்னாவும் வலியுறுத்துகின்றன. "நீங்கள் உங்களுக்குள் ஒருவருக்கொருவர் வேண்டியவற்றை கேட்டுக் கொள்கிறீர்கள் இன்னும் அல்லாஹ்வுக்குப் பயந்து இரத்தக்கலப்பு பந்தத்திற்கு மதிப்பளியுங்கள்." (4:1)
- இங்கு அல்லாஹ் இரத்த உறவைப் பேணுவதன் அவசியத்தை இறையச்சத்துடன் தொடர்புபடுத்தியுள்ளான்.
- அல்குர்ஆன் 17:23 ஆம் ஆயத்தில் தாய் தந்தைக்கு நன்றி செலுத்துவது பற்றி விளக்கி விட்டு 17:26 இல் பின்வருமாறு குறிப்பிடுகிறான். ''பந்துக்களுக்கும், வழிப் போக்கர்களுக்கும் அவரவர்களுடைய உரிமைகளைக் கொடுத்துவரவும். செல்வத்தை அளவு கடந்து வீண் செலவு செய்ய வேண்டாம்'' (17:26)
- "அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு யாதொன்றையும் இணை வைக்காதீர்கள். பெற்றோருக்கு நன்றி செய்யுங்கள். அவ்வாறே உறவினருக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும் அண்டை வீட்டிலுள்ள உறவினருக்கும், அண்டை வீட்டினரான அந்நியருக்கும் எப்பொழுதும் உங்களுடன் இருக்கக்கூடிய நண்பர்களுக்கும் வழிப் போக்கர்களுக்கும் உங்கள் ஆதிக்கத்திலிருப்போருக்கும் (அன்புடன் நன்றி செய்யுங் கள்) எவன் கர்வம் கொண்டு பெருமையாக நடக்கிறானோ அவனை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை" (4:36)

- இவ்வசனமும் பெற்றோருக்கு உபகாரம் செய்வதற்கு அடுத்தபடியாக இரத்த உறவினருக்கே முக்கியத்துவம் அளித்துப் பேசுகிறது. மேலும் மிக்க நெருங்கியோரி லிருந்தே ஆரம்பித்து படிப்படியாக அது வரிசைக் கிரமமாக செல்ல வேண்டும் என்பதையும் உணர்த்துகிறது. மேலும் இஸ்லாமிய சமூக அமைப்பினுள் ஒவ்வொரு வரும் வரிசையாகக் கொண்டு வரப்பட்டுள்ளனர். முதலில் குடும்பமும் பின்னர் உறவினரும், பின்னர் சமூகத்தில் உள்ளோரும் என வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்.
- சுன்னாவும் இரத்த உறவின் சிறப்பை பல்வேறு விதமாக வலியுறுத்தியிருக்கிறது. நபி (ஸல்) அவர்கள் தனது பிரசாரத்தின் ஆரம்பத்திலிருந்தே இதனை வலியுறுத்தி வந்துள்ளார். தனது வருகையின் நோக்கம் பற்றி விளக்குகையில் ''மக்களை உறவினர்களுடன் இணைத்து வைக்கவும் இணைவைப்பதை ஒழிக்கவும் ஏகத்துவத்தை நிலைநாட்டவுமே அல்லாஹ் என்னை அனுப்பியுள்ளான்.'' (முஸ்லிம்)
- மன்னர் ஹிரக்கீலிடம் சென்ற தூது கோஷ்டியிடம் "உங்களது நபி எதனைப் போதிக்கிறார்?" என்று கேட்டதற்கு அத்தூதுக் கோஷ்டியில் இருந்த அபூ ஸுப்யான் பின்வருமாறு கூறினார். ''அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும் அவனுக்கு யாதொரு இணையும் வைக்கக் கூடாது. எமது மூதாதையர் சொல்லிக் கொண்டிருந்ததை விட்டுவிட வேண்டும். தொழுகை, வாய்மை, ஒழுக்கம், உறவின ரோடு சேர்ந்து வாழ்தல் போன்ற நற்குணங்களை ஏவுகிறார்.''
- உறவினரைப் பேணி நடப்பது இம்மார்க்கத்தின் அடையாளங்களில் ஒன்றாகும். ஏகத்துவம், தொழுகையுடன் இணைத்து உறவுகளைப் பேணுவது வலியுறுத்தப் பட்டுள்ளது.
- அல்லாஹ்வுக்கும், இரத்த உறவுகளைப் சேர்த்து நடத்தல் என்ற அம்சத்துக்குமிடை யில் நிலவும் அன்னியோன்ய உறவை பின்வரும் ஹதீஸ் சுட்டிக் காட்டுகிறது. "இனபந்துக்கள் உறவானது அல்லாஹ்வின் அர்ஷில் தொங்கிய வண்ணம் பின்வருமாறு கூறும். என்னைச் சேர்ந்து நடப்பவனை அல்லாஹ் சேர்ந்து நடப்பான். என்னைத் துண்டித்து நடப்பவனது உறவை அல்லாஹ் துண்டித்துக் கொள்வான்" (புஹாரி)
- இரத்த உறவைப் பேணுவதனால் பல நன்மைகள் விளைகின்றன. அவை:

1. சுவனம் கிடைக்கும்
    - ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே என்னை சுவனத்தில் நுழையச் செய்யும் ஒரு செயலை எனக்கு அறிவியுங்கள் என்று கேட்டார். அப்போது நபி (ஸல்) அவர்கள் "நீர் அல்லாஹ்வை வணங்கி, அவனுக்கு எந்தவொன்றையும் இணைவைக்காதிருப்பது, தொழுகையை நிலைநாட்டுவது, ஸகாத்தை கொடுத்து வருவது மற்றும் இரத்த பந்தங்களோடு இணைந்திருப்பது" என்று கூறினார்கள். (புஹாரி)
2. வாழ்வில் விருத்தி, நீடித்த ஆயுள் கிட்டும்
    - "எவர் தனது வாழ்க்கை வசதிகள் விருத்தி செய்யப்பட வேண்டும், ஆயுள் நீளமாக்கப்பட வேண்டும் என விரும்புகிறாரோ அவர் தனது இனபந்துக்களுடன் இணைந்து வாழட்டும்" (புஹாரி) அதாவது தேகாரோக்கியம் மனநிறைவுடன் கூடிய நல்வாழ்வு என்பதே நீடித்த ஆயுள் என்பதன் மூலம் கருதப்படுகிறது.
3. செல்வம் அதிகரிக்கும்
4. பிறர் நேசம் கிட்டும்

- "தனது இரட்சகனை அஞ்சி, இரத்த பந்தங்களுடன் இணைந்து வாழ்பவனுடைய ஆயுள் நீளமாக்கப்படும். செல்வங்கள் பெருகும். அவரை அவரது குடும்பத்தினர் நேசிப்பார்கள்." (அதபுல் முப்ரத்)

இரத்த உறவைப் துண்டித்து நடப்பதால் பல பாதக விளைவுகள் ஏற்படும்.

1. உறவுகளைத் துண்டிப்பது ஒரு பாவமாகும். அது அல்லாஹ்வின் கோபத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தி, மறுமையில் சுவன வாழ்வையும் தடுக்கும்

   - சுவனம் கிடைக்காது போதல்

   ''இரத்த பந்தத்துவத்தை துண்டிப்பவன் சுவனம் நுழைய மாட்டான்." (புஹாரி)

2. அல்லாஹ்வின் அருள் கிடைக்காமை

   "ஒரு கூட்டத்தில் உறவுகளைத் துண்டித்து வாழ்பவன் இருந்தால் அந்த சபையின் மீது அல்லாஹ்வின் அருள் இறங்காது" (பைஹகி)

3. அமல்கள் அங்கீகரிக்கப்படாமை

   மனிதர்களது செயல்கள் அல்லாஹ்விடம் வியாழன், திங்கள் இரவுகளில் எடுத்துக் காண்பிக்கப்படும். அப்போது உறவுகளைத் துண்டித்துக் கொண்டவனது அமல்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. (புஹாரி)

4. இறை தண்டனை கிடைத்தல்

   "மறு உலகில் அல்லாஹ் தண்டிப்பதுடன் இவ்வுலகிலும் இறை தண்டனை கிடைப்பதற்கு மிகத் தகுதியான குற்றம் உறவுகளைத் துண்டித்து நடப்பதும், அக்கிரமம் செய்வதுமாகும்" (அபூதாவூத்)

5. இறை தொடர்பு துண்டிக்கப்படல்

   "யார் இரத்த பந்தத்தைச் சேர்ந்து நடக்கிறாரோ அவரை நானும் சேர்த்துக் கொள்கிறேன். எவர் அதை துண்டித்துக் கொள்கிறாரோ அவரை நானும் துண்டித்து விடுகிறேன்." (அபூதாவூத்)

**உறவினருடன் இணைந்திருத்தல்**

- பதிலுக்குப் பதில் உறவாடுபவர் (உண்மையில்) உறவைப் பேணுபவர் அல்லர். மாறாக உறவினர்கள் உறவைத் துண்டித்து வாழ்ந்தாலும் அவர்களுடன் இணைபவரே உறவைப் பேணுபவர் ஆவார். (புஹாரி)

- உறவினருடன் சேர்ந்து நடந்து அவர்களுக்கு உபகாரம் செய்து கண்ணியப்படுத்த வேண்டும். முதலில் தாய், அடுத்து தந்தை அடுத்து உறவினர் என அது நீண்டு செல்கிறது

- உறவினருக்கு உதவுவதன் மூலம் இரட்டிப்பான கூலி கிட்டுகிறது. உறவினர் தேவை யுடையவர்களாக இருந்து பொருளாதார நெருக்கடிக்குள்ளானால் அதிகம் உதவி செய்ய வேண்டும். இதனால் அல்லாஹ்வின் நற்கூலியும் உறவினரின் நேசமும் கிட்டும்.

- உறவினரைச் சேர்ந்து நடப்பது பற்றி இப்னு அபீ ஜம்ரா பின்வருமாறு விளக்கு கிறார். முடியுமானளவு அவர்களுக்கு நன்மை செய்வதும் முடியுமானளவு அவர்களது கஷ்டங்களை அகற்றப் பாடுபடுவதுமே இதன் பொருளாகும்.

- முஸ்லிம் அல்லாதவராயினும் இரத்த உறவைப் சேர்ந்து நடப்பதும் அவர்களுக்கு உதவி செய்வதும் அவசியமாகும். இன்ன குடும்பத்தைச் சேர்ந்தோர் என் நேசர்கள் அல்லர். என் நேசர்கள் யாரெனில் அல்லாஹ்வும் நல்ல இறை நம்பிக்கையாளர் களும்தான். ஆயினும் அக்குடும்பத்தாருடன் எனக்கு இரத்த பந்தம் உண்டு அதை நான் உபகாரத்தின் மூலம் பசுமையாக்குகிறேன் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி)
- தீய நடத்தையிலிருப்பினும் உறவினருக்கு உதவ வேண்டும். உமர் (ரழி) அவர்கள் தனக்கு நபி (ஸல்) அவர்கள் வழங்கிய ஆடையை தனது தாய்வழி சகோதரரான ஒரு முஷ்ரிக்குக்கு வழங்கினார். அபூபக்ர் (ரழி) தனது உறவினரான மிஸ்தாஹ் இப்னு அதாதா என்ற ஏழைக்கு பொருளாதார உதவி வழங்கி வந்தார். அவர் ஆயிஷா (ரழி) மீது படுதூறு சொன்னவர்களுள் ஒருவராகக் கண்டு உதவி செய்வதை நிறுத்திக் கொண்டார். இதைக் கண்டித்து அல்லாஹ் வஹி இறக்கினான். (நூர் - 22) தனது தவறை உணர்ந்த அபூபக்ர் மீண்டும் உதவியைத் தொடர்ந்தார்.
- எல்லா நிலையிலும் உறவைப் பேணி சமூக வாழ்வில் ஐக்கியம் ஒற்றுமை மலர ஒரு முஸ்லிம் உழைக்க வேண்டும்

**அயலார்**

- தனிமனித, குடும்ப வாழ்வில் பேண வேண்டிய முக்கிய ஓர் அம்சமாக அயலார் உறவு காணப்படுகிறது. இஸ்லாம் அயலாருடன் பேண வேண்டிய உறவை மிக அதிகமாக வலியுறுத்திச் சொல்கிறது
- இஸ்லாமிய சமூக, குடும்ப அமைப்புப் பற்றி பேசும் ஸூறா நிஸா அண்டை அயலார் பற்றி பின்வருமாறு பேசுகிறது.
- அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். அவனுக்கு யாதொன்றையும் இணையாக்கா தீர்கள். தாய், தந்தையருக்கு நன்றி செலுத்துங்கள். (அவ்வாறே) உறவினர்களுக்கும் அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும் அந்நிய அண்டை வீட்டாருக்கும் (எப்பொழுதும்) உங்களுடன் இருக்கக்கூடிய சிநேகிதர் களுக்கும், பிரயாணிகளுக்கும் உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் (அன்புடன்) நன்றி செய்யுங்கள். எவன் கர்வம் கொண்டு பெருமையாக நடக்கின்றானோ அவனை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை (4:36) இவ்வசனத்தில் உபகாரம் செய்யும்படி ஏவல் (கட்டளை) அமைப்பில் வந்திருப்பது இதன் முக்கியத்துவத்தையே எடுத்துக் காட்டுகிறது.
- அலி (ரழி) அவர்களது கருத்துப்படி அயல் வீட்டார் என்பது எமது சப்தத்தை செவிமடுப்போர் ஆவார். ஆயிஷா (ரழி) அவர்களது கருத்துப்படி ஒவ்வொரு திசை யிலும் உள்ள நாற்பது வீடுகள் அயலவர் ஆவர்.
- பொதுவாக அயல்வீட்டார் எனும் போது முஸ்லிம், காபிர், நல்லவன், கெட்டவன், நண்பன், பகைவன், ஊர்வாசி, அந்நிய நாட்டான், நன்மை செய்பவன், தீமை செய்பவன், உறவினன், உறவற்றவன் போன்ற அனைவரும் உள்ளடங்குவர்
- சைய்யித் சுலைமான் நத்வி அவர்கள் அயல் வீட்டார் பற்றி விளக்குகையில்: முஹம்மது நபி (ஸல்) அவர்களது மார்க்கம் நமது வீட்டுக்கு அருகில் இருப்பவனை மட்டும் அண்டை வீட்டுக்காரன் என்று குறிப்பிடவில்லை. மாறாக 'அல்ஜார்' என்ற பதம் ஒருவனுக்குப் பக்கத்திலிருப்பவரைக் குறிக்கப் பொதுவாகப் பயன்படுத்துவ துண்டு. அதாவது பிரயாணத்தின் போது தன்பக்கத்தே அமர்ந்திருப்பவர், வகுப்பில்

சக மாணவன், தொழிற்சாலையில், கடையில் தன்னோடு சேர்ந்து வேலை செய்பவர், தொழுகையில் பக்கத்தில் நின்று தொழுபவர், உங்களோடு பாதையில் எதிரே நடந்து செல்பவர், கடையொன்றில் நீங்கள் பொருள் ஒன்றை வாங்கும்போது எதிரே பொருள் வாங்க வந்திருக்கும் மற்றொருவர் போன்ற பலரையும் குறிக்க இப்பதம் பயன்படுவதுண்டு.

- அண்டை வீட்டார் பலவிதம் :
- நபி (ஸல்) அவர்கள் அண்டை வீட்டார் மூன்று வகையினர் என நவின்றார்கள்
- முதல்வகை: முஷ்ரிக் (இணைவைப்பவன்) இவன் அண்டை வீட்டுக்காரன் என்ற அடிப்படையில் உதவி செய்ய வேண்டிய உரிமையைப் பெற்றவன்.
- இரண்டாம் வகை : முஸ்லிம். இவனுக்கு அண்டை வீட்டுக்காரன் என்ற அடிப்படையில் ஓர் உரிமை. முஸ்லிம் என்ற அடிப்படையில் ஓர் உரிமை என இரண்டு வகையான நெருக்கம் உண்டு.
- மூன்றாம் வகை : உறவுக்கார முஸ்லிம். இவனுக்கு மூன்று வகையான நெருக்கம் உண்டு. ஒன்று, அண்டை வீட்டுக்காரன் என்ற அடிப்படையில் இரண்டு, முஸ்லிம் என்ற அடிப்படையில், மூன்று, உறவுக்காரன் என்ற அடிப்படையில் (முஸ்னத்)

**அண்டை வீட்டாருடன் நடந்து கொள்ள வேண்டிய முறை**

- கௌரவமாக நடத்தல்:

  ‘‘யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசிக்கிறாரோ அவர் தனது அயலாரைக் கண்ணியப்படுத்தட்டும்.’’ (புஹாரி)

- அன்பளிப்புக்கள் வழங்குதல்:

  நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “முஸ்லிம் பெண்களே அண்டை வீட்டாருக்குக் கொடுப்பதை அற்பமாகக் கருத வேண்டாம். அது ஆட்டுக் குழம்பாக இருப்பினும் சரியே’’ (புஹாரி).

- அண்டை வீட்டாருடன் சிறந்த முறையில் நடத்தல்

  நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘அல்லாஹ்வின் பார்வையில் தோழமையால் மிகச் சிறந்தவர் தமது தோழர்களிடமும் சிறந்து விளங்குபவரே! அல்லாஹ்வின் பார்வையில் சிறந்த அண்டை வீட்டுக்காரர் தனது அண்டை வீட்டாரின் சிறந்தவராக இருப்பவரே’’ (திர்மிதி)

- உபகாரம் புரிதலும், இன்ப துன்பங்களில் பங்கெடுத்தலும்

  நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள். அண்டை வீட்டுக்காரனுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள்.

  அவன் நோயுற்றால் அவனிடம் சென்று நலம் விசாரிக்க வேண்டும்.

  அவன் இறந்தால் அவனது ஜனாஸாவில் கலந்து கொள்ள வேண்டும்.

  அவன் கடன் கேட்டால் முடிந்தவரை உதவ வேண்டும்.

  அவன் ஏதாவது தவறு செய்தால் அதை மறைக்க வேண்டும்.

  அவன் ஏதாவது நலன் கீட்டினால் வாழ்த்துத் தெரிவிக்க வேண்டும்.

  அவனுக்கு ஏதாவது துன்பம் ஏற்பட்டால் ஆறுதல் கூற வேண்டும்.

அவனது வீட்டுக்குள் காற்றுப் புகா வண்ணம் உன் வீட்டுச் சுவரை உயர்த்தக் கூடாது.

விசேடமான உணவு சமைத்தால் அவனுக்குக் கொடுத்துதவ வேண்டும் (தபரானி)

1. முதலிடம் வழங்குதல்:

- ஒருவர் தனது வீட்டை அல்லது சொத்தை விற்பதாயின் அவற்றை வாங்க வருவோரில் அயல்வீட்டுக் காரருக்கே முன்னுரிமை வழங்க வேண்டும் என பிக்ஹுத் துறையில் ''அஷ்ஷுப்ஆ'' என்ற பகுதி விளக்குகிறது

2. பிறரது தீமைகளிலிருந்து பாதுகாத்தல்:

அயல் வீட்டாருக்கு பிறரால் கஷ்டங்கள் துன்பங்கள் ஏற்படும்போது தன்னால் முடியுமானளவு ஒத்துழைப்பை வழங்கி அவரைப் பாதுகாக்க முன்வர வேண்டும்

3. அயலானுக்குத் தீங்கேற்படாதவாறு நடந்து கொள்ளல்:

''எந்த மனிதனது தீமைகளிலிருந்து அவனது அண்டை வீட்டான் பாதுகாப்புப் பெறவில்லையோ அல்லாஹ் மீது சத்தியமாக அவன் மு.்.மினல்லன் என மூன்று முறை சத்தியம் செய்து நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்'' (புஹாரி)

- தனது எண்ணம், சொல், செயல் அனைத்திலிருந்தும் அயலான் பாதுகாப்புப் பெற வேண்டும். அயலானின் மானம், கௌரவம் என்பன அமானிதமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். அவனது குறைகளைத் தேடக்கூடாது. தெரிந்தாலும் வெளிப்படுத்தக் கூடாது. ஒருவன் அயல்வீட்டானின் சொத்தைத் திருடுவது ஏனைய பத்து திருட்டுக்களை விட மோசமானதாகும். (தப்ரானி) இதன் கருத்து அயலானுக்கு இழைக்கும் தீங்கு, அநியாயம் என்பவற்றுக்குத் தண்டனை அது போன்ற ஏனைய பத்துக் குற்றங்களுக்குரிய தண்டனையாகும்.
- ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து ஒரு பெண் தொழுகிறாள், நோன்பு வைக்கிறாள், நிறைய தர்மங்கள் செய்கிறாள். ஆனால் தனது நாவால் அண்டை வீட்டாரை மனம் நோகும்படி பேசுகிறாள் என்று கூறியபோது நபி (ஸல்) அவர்கள் அவள் நரகம் செல்கிறாள் என்றார்கள். இன்னொரு பெண் வணக்க வழிபாடுகளையும் தான தர்மங்களையும் குறைவாகவே செய்கிறாள். ஆனால், அண்டை வீட்டாரை மகிழ்ச்சியாக வைத்திருக்கிறாள். தொல்லைகள் தருவதில்லை எனக் கூறியபோது நபி (ஸல்) அவர்கள் அவள் சுவனம் செல்வாள் என்றார்கள் (பைஹகி)
- இமாம் கஸ்ஸாலி அவர்கள் அண்டை வீட்டாருக்குரிய கடமைகளை பின்வருமாறு தனது 'இஹ்யா உலுமுத்தீனில்' குறிப்பிட்டுள்ளார்கள்.

  1. அண்டை வீட்டாருக்கு ஸலாம் கூறுதல்
  2. அவர்களுக்கு வெறுப்பு வராத வண்ணம் அளவோடு பேசுதல்
  3. அடிக்கடி நலம் விசாரித்தல்
  4. நோய்வாய்ப்பட்டால் நலம் கேட்டல்
  5. அவர்கள் துன்பப்படும்போது உதவி செய்தல்
  6. மரணம் போன்றவை நிகழ்ந்தால் கலந்து கொள்ளல்
  7. மகிழ்ச்சியான வேளைகளில் வாழ்த்துத் தெரிவித்து மகிழ்ச்சியில் பங்கெடுத்தல்
  8. அவர்களது தவறுகளை மன்னித்தல்

9. அவர்களின் வீட்டினுள் எட்டிப் பார்க்காமலிருத்தல்
10. எமது வீட்டின் கழிவு நீர் கால்வாயை அண்டை வீட்டின் முன் அமைக்காதிருத்தல்
11. குப்பைகளை அண்டை வீட்டின் முன் போடாதிருத்தல்
12. அவர்களது வீட்டுப்பாதையை நெருக்கடிக்குள்ளாக்காமல் இருத்தல்
13. அவர்கள் தம் வீட்டுக்கு வாங்கிச் செல்லும் பொருட்களை கூர்ந்து கவனியாமல் இருத்தல்
14. அவர்களது பலவீனங்களை மறைத்தல்
15. தேவையான சமயங்களில் உதவியாய் இருத்தல்
16. அவவர்களது இல்லாத போது வீட்டைப் பாதுகாத்தல்
17. அவர்களுக்கு எதிராகப் புறம் பேசாதிருத்தல், கோள் சொல்வதைத் தவிர்த்தல்
18. அவர்களது கண்ணியத்தையும் மரியாதையையும் காத்தல்
19. அவர்களது குழந்தைகளை நேசித்தல்
20. மார்க்க அறிவு, உலக நடப்பு தெரியாதவனாக இருந்தால் அவனுக்கு வழிகாட்டுதல்

- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் “வாரிசுரிமையைக் கடமையாக்கி விடுவாரோ என்று நான் எண்ணுமளவு அண்டை வீட்டாரைப் பற்றி ஜிப்ரில் (அலை) அவர்கள் எனக்கு உபதேசித்துக் கொண்டே இருந்தார்கள்”
- ஒரு முஸ்லிம் தனிமனித, குடும்ப வாழ்வில் இஸ்லாத்தின் போதனைகளை ஏற்று நடப்பதன் மூலம் சிறந்ததோர் வாழ்வைப் பெற்று அதனூடாக சிறந்ததோர் சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும் என்பது திண்ணம்

- **உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி I** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு இரண்டினையும் ஒப்பிட்டு கவர்ச்சியானதொரு அறிமுகம் செய்யுங்கள்

**படி II** மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் பின்வரும் தலைப்புக்களை வழங்கி (நூல்கள், இணையம் மூலம்) தகவல் திரட்ட வழிப்படுத்துங்கள்

குழு-1 குடும்ப வாழ்வின் முக்கியத்துவம், விவாகம்

குழு-2 கணவன்-மனைவி, பெற்றோர்-பிள்ளை உரிமைகளும் கடமைகளும்

குழு-3 அண்டை அயலாரும், உறவினரும்

குழு-4 விவாக விலக்கும் இத்தாவும்

**படி III** தாம் திரட்டியவற்றை மையமாக வைத்து குழுக்களிடையே கலந்துரையாடலொன்றை ஏற்பாடு செய்யுங்கள்.

**படி IV** கலந்துரையாடலின் சாரம்சத்தை குறித்துக் கொள்ளும்படி அறிவுறுத்துங்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை:**


- பிந்துல் இஸ்லாம், (2008), *உறவுகளும் உரிமைகளும்*, சென்னை, இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்.
- இமாம் கஸ்ஸாலி, (1958), *திருமணம்*, சென்னை, யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்.
- மன்ஸூர் எம்.ஏ.எம். (1993), *திருமணம்*, மல்வானை, தாருல் அர்கம் பதிப்பகம்.
- பைரோஸ் கான் முகம்மத், (2007), *மணக்கும் மண வாழ்வு*, சென்னை, மக்கள் சேவை பதிப்பகம்.
- ஜமாலுத்தீன், எம்.ஏ.எம். (2001), *இஸ்லாத்தில் குடும்பவியல்*, சென்னை, புர்கான் பப்ளிகேஷன் ட்ரஸ்ட்
- அலி அல் ஹாஷிமி முகம்மத், (2007), *முன்மாதிரி முஸ்லிம்*, சென்னை, தாருல் ஹுதா.
- அமீன் எம்.ஐ.எம்., (2008), *இஸ்லாமியக் குடும்ப வாழ்வு*, ஹெம்மாதகம, அல்ஹஸனாத் பதிப்பகம்.
- றமீஸ் ஏ.ஸீ.எம். (2010), *இஸ்லாத்தில் குழந்தை வளர்ப்பு*, கொழும்பு, மீள்பார்வை ஊடக மையம்.

**தேர்ச்சி 8.0 : தனிமனித குடும்ப வாழ்வுடன் தொடர்பான இஸ்லாமிய சட்ட திட்டங்களையும் போதனைகளையும் கற்று தனது வாழ்வை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 8.2:** மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, வீடு தொடர்பான இஸ்லாமிய நெறிமுறைகளையும் விதிமுறை களையும் பின்பற்றி ஒழுகுவார்.

**காலம்** : 30 பாடவேளைகள்

**கற்றல் பேறு** :

- ஹலாலை கடைப்பிடித்து ஹராத்தை தவிர்ந்து நடப்பதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- ஹலால் - ஹராம் வரையறைகள், விதி முறைகள் பற்றித் தெரிந்து எழுதுவார்.
- உணவு, உடை. வீடு தொடர்பான இஸ்லாமியப் போதனை களை விளங்கி வாழ்வில் கடைப்பிடிப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- **ஹலால்-ஹராம் முக்கியத்துவமும் வரையறைகளும் விதிமுறைகளும்**
  - ஷரீஆ அனுமதித்த அனைத்தையும் ‘ஹலால்’ என்ற பதம் உள்ளடக்குகின்றது. சில விடயங்களை ஷரீஆ திட்டவட்டமாகத் தடை செய்துள்ளது. இத்தடைகளை மீறுவோர் மறுமையில் தண்டனைக்கு உள்ளாவர். சிலவேளை உலகிலும் அவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர். இத்தகைய விடயங்களை ‘ஹராம்’ என்ற பதம் உள்ளடக்குகின்றது.
  - இஸ்லாத்தின் வருகைக்கு முன் ஹலால்-ஹராம் விடயத்தில் மக்கள் தமது மனோஇச்சைப் பிரகாரம் தொழிற்பட்டனர். உதாரணமாக அரபு சமூகத்தினர் மதுபானம் அருந்துவதனை, பன்மடங்காக வட்டி சாப்பிடுவதனை பெண்களுக்குத் தீங்கிழைப்பதனை ஹலால் எனக் கருதினர். அவர்களில் பலர் தமது பிள்ளைகளை வறுமைக்கு அஞ்சி அல்லது அவமானத்துக்கு அஞ்சி கொலை செய்வதனைக் கூட ஹலால் என்று கருதினர். ஆனால் அதேவேளை அல்லாஹ் அனுமதித்த பல்வேறு கால்நடைகளையும் பயிரினங்களையும் ஹராம் என்று கருதிக் கொண்டிருந்தனர். அல்குர்ஆன் அவர்களது நியாயமற்ற இந்நடவடிக்கைகளைக் கண்டித்தது. (பார்க்க: 6:138-140)
  - ஹலால்-ஹராம் பற்றிய முடிவுகளுக்கு வரும் பொறுப்பை மனோ இச்சையிடம் இஸ்லாம் விட்டுவிடவில்லை. மாறாக அதற்குரிய வரையறைகளையும் விதிமுறை களையும் முன்வைத்தது.
  - ஹலால்-ஹராம் சம்பந்தமாக இஸ்லாம் முன்வைத்த அடிப்படையான சில விதிகள் இங்கு தரப்படுகின்றன.

**01. அடிப்படையில் அனைத்தும் ஆகுமானவையே**

அல்லாஹ் படைத்திருக்கும் பொருட்கள், அனைத்தும் அடிப்படையில் ஆகுமான வையே. அவற்றுள் எதையாவது கூடாது என்று சொல்வதாயின் அல்குர்ஆனிலிருந்தோ ஸுன்னாவிலிருந்தோ அதற்கு திட்டவட்டமான ஆதாரம் காட்டப்படுவது அவசியமாகும் என்ற கருத்தையே இவ்விதி முன்வைக்கிறது.

இவ்விதியை முன்வைக்கும் இஸ்லாமிய அறிஞர்கள் இதற்கு ஆதாரமாக பல்வேறு அல்குர்ஆன் வசனங்களை எடுத்துக் காட்டுகின்றனர். ''அவன் எத்தகையவன் என்றால் அவனே உலகிலுள்ள அனைத்தையும் உங்களுக்காகப் படைத்தான்.'' (2:29)

''அவனே வானங்களிலுள்ளவை, பூமியலுள்ளவை அனைத்தையும் தன் அருளால் உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்திருக்கிறான்'' (45:13)

''வானங்களிலும் பூமியிலும் உள்ளவற்றை அல்லாஹ் உங்களுக்கு வசப்படுத்தி தந்துள்ளான் என்பதையும், மேலும் வெளிப்படையான மற்றும் மறைவான தன்னுடைய அருட்கொடைகளை உங்களுக்கு அவன் நிறைவாக்கி தந்துள்ளான் என்பதையும் நீங்கள் பார்க்கவில்லையா?'' (31:20)

இவ்வசனங்களில் வானங்களில், பூமியில் உள்ளவை மனிதனுக்காக படைக்கப்பட்டுள் ளன; அவனுக்கு வசப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன; அவனுக்கு அருளாக அவை ஆக்கப்பட்டுள்ளன என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. அவ்வாறாயின் மனித நலனுக்காக படைக்கப்பட்ட அனைத்தும் அல்லது அவற்றுள் பெரும்பாலானவை தடுக்கப்பட்டவையாக - ஹராமானவையாக இருந்தால் எவ்வாறு அவற்றை மனித சமூகத்துக்கு செய்யப்பட்ட அருட்கொடைகளாகக் குறிப்பிட முடியும்? எனவே, இவ்வசனத்திலிருந்து ஹலாலின் வட்டம் மிகவும் விரிந்தது என்ற கருத்தைப் புரிய முடிகின்றது. மனித நலனைக் கருத்திற் கொண்டு சிலவற்றை அல்லாஹ் ஹராம் என குறிப்பிட்டுள்ளான். ஹலாலுடன் ஒப்பிடும்போது ஹராம் என குறிப்பிடப்பட்டுள்ள வற்றின் எண்ணிக்கை மிகவும் குறைவானது.

''அடிப்படையில் அனைத்தும் ஆகுமானவையே'' எனும் இவ்விதி வணக்க வழிபாடுகள் தவிர்ந்த இதர மனித நடவடிக்கைகளுக்கும் தொழிற்பாடுகளுக்கும் பொருந்தக் கூடியதாகும். வணக்க வழிபாடுகளைப் பொறுத்தவரையில் இரண்டு பிரதான அம்சங்கள் மறக்கப்படக்கூடாது.

1. அல்லாஹ் மாத்திரமே வணங்கப்பட வேண்டும்.
2. அல்லாஹ் காட்டித் தந்திருக்கும் வழிமுறைகளினூடாகவே அவன் வணங்கப்பட வேண்டும்.

எனவே புதிய ஒரு தொழுகையையோ, நோன்பையோ, ஸலவாத்தையோ உருவாக்க எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

மனித நடவடிக்கைகள், தொழிற்பாடுகளைப் பொறுத்தவரையில் அவற்றை உருவாக்குபவன் மனிதனே. எனவே அடிப்படையில் அவை ஆகுமானவையே. இவற்றுள் ஷரீஆ தடைசெய்பவற்றை மாத்திரமே ஹராம் என குறிப்பிடலாம்.

சுருங்கக் கூறின் ஒரு பொருளையோ, பயனையோ, மனித நடவடிக்கையையோ 'ஹராம்' என குறிப்பிடும்போது அதற்கு திட்டவட்டமான ஆதாரம் காட்டப்பட வேண்டும். ஏனெனில் அடிப்படையில் அனைத்தும் ஆகுமானவையே.

## 02. ஹலாலாக்குவதும் ஹராமாக்குவதும் இறைவனது உரிமையாகும்.

உலகில் மனிதர்கள் எத்தரத்தை அடைந்த போதிலும் அவர்களுக்கு எதையும் நிரந்தரமாக ஹலாலாக்குகின்ற அல்லது ஹராமாக்குகின்ற உரிமை வழங்கப்பட வில்லை. யார் இறைவனது இவ்வுரிமையில் கைவைக்கின்றாரோ அவர் தனது வரம்பை மீறியவராக கருதப்படுவார். அவ்வாறே அவரை ஏற்றுப் பின்பற்றியவர்கள் அவரை வணங்கியவர்களாகக் கருதப்படுவர்; இணைவைத்தவர்களாகக் கருதப்படுவர்.

''அல்லாஹ் அனுமதிக்காத எதனையும் அவர்களுக்கு மார்க்கமாக்கி வைக்கக் கூடிய இணை (தெய்வங்கள்) அவர்களுக்கு இருக்கின்றனவா?'' (42:21)

“அதீ பின் ஹாதிம் (றழி) நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்- இஸ்லாத்தை ஏற்க முன் அவர் ஒரு கிறிஸ்தவராக இருந்தார். நபி (ஸல்) அவர்கள், ‘‘அவர்கள் அல்லாஹ்வை விட்டுத் தமது பாதிரிகளையும், சந்நியாசிகளையும், மர்யமுடைய மகனாகிய மஸீஹையும் தெய்வங்களாக்கிக் கொள்கின்றனர். ஆனால் அவர்களோ ஒரே இறைவனைத் தவிர வேறு எவரையும் வணங்கக் கூடாதென்று கட்டளையிடப் பட்டுள்ளார்கள். அவனன்றி வேறு இறைவன் இல்லை. அவன் அவர்கள் இணைவைப்ப வற்றை விட்டும் மிகவும் பரிசுத்தமானவன் (9:31) எனும் வசனத்தை ஓதுவதை செவியுற்றார். அப்போது “அல்லாஹ்வின் தூதரே! அவர்கள் தமது பாதிரிகளையும் சந்நியாசிகளையும் வணங்கவில்லை” எனக் கூறினார். அப்போது நபி (ஸல்) அவர்கள், உண்மைதான். ஆனால் பாதிரிகளும் சந்நியாசிகளும் ஹலாலை ஹராமாக்கினர். ஹராமை ஹலாலாக்கினர். அவர்களும் அதனை ஏற்றுப் பின்பற்றினர். இதுவே அம்மக்கள் அவர்களுக்குச் செய்த வணக்கம் என்றார்கள்” (திர்மிதி)

முஷ்ரிகீன்கள் அல்லாஹ்வின் அனுமதியின்றி ஹலாலாக்குகின்ற, ஹராமாக்குகின்ற வேலையைச் செய்ததனை அல்குர்ஆன் கண்டித்தது. (பார்க்க 10:59,16:115)

இத்தகைய அல்குர்ஆன் வசனங்களிலிருந்தும் தெளிவான ஹதீஸ்களிலிருந்தும் ஹலாலாக்குவதும் ஹராமாக்குவதும் இறைவனது உரிமை என்ற முடிவுக்கு இமாம்கள் வந்தனர்.

‘‘அல்குர்ஆனில் எவ்வித விளக்கத்திற்கான தேவையும் இன்றி தெளிவாகக் காணப்படும் அம்சங்களைத் தவிர ஏனையவற்றில் இது ஹலால் இது ஹராம் என சட்டத் தீர்ப்பு வழங்குவதனை வெறுக்கும் நிலையிலேயே எமது ஆசான்களான அறிஞர்களை நாம் கண்டுகொண்டோம்” என இமாம் ஷாபிஈ தனது ‘அல்உம்மு’ என்ற நூலில் பதிவு செய்துள்ளதாக இமாம் அபூயூசுப் கூறுகிறார்.

## 03. ஹலாலானதை ஹராமாக்குவது, ஹராமானதை ஹலாலாக்குவது இணைவைப்பதற்குச் சமமாகும்.

ஹலாலை ஹராமாக்குவதையும் ஹராமை ஹலாலாக்குவதையும் இஸ்லாம் கண்டிக் கின்றது. அல்லாஹ் சொல்வதாக நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடு கின்றார்கள். “எனது அடியார்களை நான் தூய்மையானவர்களாக படைத்திருக்கிறேன். அவர்களிடத்தில் ஷைத்தான்கள் வந்தனர். அவர்களை அவர்களது மார்க்கத்தி லிருந்தும் திசைதிருப்பினர். நான் அவர்களுக்கு ஹலாலாக்கியவற்றை ஹராமாக்கினர். நான் இறக்கி வைத்திருக்காதவற்றைக் கொண்டு எனக்கு இணைவைக்குமாறு அவர்களை ஏவினர்” (முஸ்லிம்)

மேற்குறிப்பிடப்பட்ட ஹதீஸில் ஷிர்கையும் ஹலாலை ஹராமாக்குவதையும் ஒன்றாக இணைத்து கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அல்குர்ஆன் முஷ்ரிகீன்கள் அல்லாஹ் அனுமதித்தவற்றை ஹராம் ஆக்கிக் கொண்டதனை பல்வேறு இடங்களில் வன்மையாகக் கண்டித்துள்ளது. (பார்க்க 5:103-104, 6:143-144)

பின்வரும் வசனங்களில் அல்குர்ஆன் ஹலாலை ஹராமாக்குவதை கண்டிக்கின்றது. ஹராமாக்கப்பட்டுள்ளவை எந்த அடிப்படையில் ஹராமாக்கப்பட்டுள்ளன எனும் கருத்தை முன்வைக்கின்றது.

‘‘(நபியே!) அல்லாஹ் தன் அடியார்களுக்காக அளித்திருக்கும் (ஆடை) அலங் காரத்தையும் பரிசுத்தமான (மேலான) ஆகாரத்தையும் (ஆகாதவையென்று) தடுப்பவர் யார்? என்று கேட்டு, அது இவ்வுலக வாழ்வில் விசுவாசம் கொண்டவர்களுக்கும் ஆகுமானதே! எனினும், மறுமை நாளில் (அவர்களுக்கு மட்டுமே) சொந்தமானது என்றும் கூறுவீராக.” (7:32)

‘‘நபியே! நீர் கூறும் நிச்சயமாக என்னுடைய இறைவன் (ஆகாதென்று) தடுத்திருப்ப தெல்லாம், பரகசியமாகவோ, இரகசியமாகவோ செய்யப்படும் மானக்கேடான செயல்களையும் மற்ற பாவங்களையும் நியாயமின்றி (ஒருவர் மீது ஒருவர்) கொடுமை செய்வதையும்; யாதோர் ஆதாரமுமில்லாதிருக்கும்போதே அல்லாஹ்வுக்கு நீங்கள் இணைவைப்பதையும்; நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறுவதையும் தான்.’’ (7:33)

மக்காவில் வைத்தே பல அத்தியாயங்களில் ஹலாலை ஹராமாக்குவதனை, ஹராமை ஹலாலாக்குவதனை அல்குர்ஆன் கண்டித்துள்ளமை அது ஒரு பாரதூரமான செயல் என்பதனை உணர்த்துகின்றது.

மதீனாவில் சில முஸ்லிம்கள் கடுமையான வாழ்க்கைப் போக்கை கடைப்பிடிக்க முற்பட்ட போது, ஹலாலானவற்றை தமக்கு ஹராமாக்கிக் கொள்ள முனைந்த போது அல்குர்ஆன் அதனைக் கண்டித்தது. (பார்க்க 5:87-88)

மேற்குறிப்பிடப்பட்ட வசனங்களிலிருந்து தான் இவ்விதி பெறப்பட்டுள்ளது.

## 04. தீங்கு பயப்பனவே ஹராமாக்கப்பட்டுள்ளன.

படைத்த இறைவனுக்கு தான் விரும்பியதை ஹலாலாக்க, நினைத்தவற்றை ஹராமாக்க உரிமையிருக்கின்றது. எனினும் அவன் அப்படி தன் உரிமையை பிரயோகிக்கவில்லை. ஒன்றை ஹலாலாக்கும் போது அல்லது ஹரமாக்கும் போது மனித நலனையே அவன் கருத்தில் கொண்டிருக்கிறான்.

பன்றியிறைச்சி ஹராமாக்கப்பட்ட போது, அது அருவருக்கத்தக்கது என்பதைத் தவிர வேறெந்த காரணத்தையும் அன்றைய முஸ்லிம்கள் அறிந்திருக்கவில்லை. நவீன விஞ்ஞானம் அதிலுள்ள பயங்கர ஆபத்துக்கள் பற்றி இன்று எமக்கு அறிவூட்டுகின்றது.அவ்வாறே சாபத்தைத் தேடித்தரும் மூன்று அம்சங்களைத் தவிர்ந்து கொள்ளுங்கள்.

1. நீர் நிலைகளில் மலம் கழித்தல்
2. பாதையின் நடுவே மலம் கழித்தல்
3. நிழல் தரும் மரங்களுக்கு கீழ் மலம் கழித்தல் (அபூதாவுத்)

என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டபோது, அவை மனித இயல்பு பொதுவாக வெறுக்கின்ற அருவருக்கத்தக்க கருமங்கள் என்று மாத்திரமே அன்றைய முஸ்லிம்கள் அறிந்து வைத்திருந்தனர். இவை தொற்றுநோய் பரவுவதில் முக்கிய பங்காற்றுகின்றன என இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுருங்கக் கூறின் இஸ்லாம் எதையாவது ஹராம் என்று கூறியிருப்பின் அதற்கு நியாயமான காரணம் இருக்கும். அதில் கெடுதி இருக்கும், தீங்கிருக்கும் என்பதை உணர வேண்டும்.

## 05. ஹராத்துக்கு பகரமானவை ஹலாலில் உண்டு

இஸ்லாம் மனித நலனைக் கருத்தில் கொள்ளும் மார்க்கம். எனவே அது எப்போதும் மனித வாழ்வை இலகுபடுத்தவே முயற்சிக்கின்றது. மனித வாழ்வைக் கடினமாக்கும் எண்ணம் அதற்குக் கிடையாது. எனவேதான், ஒன்றை ஹராமாக்கும்போது அதற்குரிய பிரதியீட்டை வழங்க அது தவறவில்லை. உதாரணத்திற்காக சில அம்சங்கள் கீழே தரப்படுகின்றன.

வட்டி ஹராம் - வியாபாரம் ஹலால்

சூதாட்டம் ஹராம் - சிறந்த போட்டி நிகழ்ச்சிகள் ஹலால்

விபச்சாரம், ஓரினச் சேர்க்கை ஹராம் - திருமணம் ஹலால்

மதுபானம் ஹராம் - குளிர்பானங்கள் ஹலால்

## 06. ஹராத்துக்கு வழிவகுப்பவை ஹராமாகும்

இஸ்லாம் எதையாவது தடைசெய்யும் போது, அதற்கு இட்டுச் செல்கின்ற அனைத்து வழிகளையும் தடைசெய்யத் தவறவில்லை. உதாரணமாக விபச்சாரத்தை தடைசெய்த இஸ்லாம் அதற்கு வழிவகுக்கின்ற அனைத்து வழிகளையும் தடைசெய்துள்ளது. இந்த வகையில் அந்நிய ஆடவருடன் தனித்திருத்தல், வரம்புகளைப் பேணாது ஆண்-பெண் ஓரிடத்தில் சேருதல், அங்க அழகுகளை வெளிக்காட்டல், ஆபாச, நிர்வாணப் படங்கள், மட்டரக பாடல்கள், கீழ்த்தரமான இலக்கியங்கள் போன்ற அனைத்தையும் இஸ்லாம் தடைசெய்துள்ளது.

ஒரு ஹராத்தில் ஈடுபடுபவனுக்குரிய பாவம் அதற்கு ஒத்துழைத்த அனைவருக்கும் - அவரவரது ஒத்துழைப்புக்கு ஏற்ற விதத்தில் - கிட்டும் என்ற இஸ்லாத்தின் கருத்தும் இவ்விதியைப் பலப்படுத்துகின்றது. உதாரணமாக வட்டியை ஹராம் என்ற இஸ்லாம், அதனை வழங்குபவனையும் வாங்குபவனையும் எழுதுபவனையும் சாட்சியாக இருப்பவர்களையும் சபித்துள்ளது.

எனவே, ஹராத்துக்கு உதவியாக அமைகின்ற அனைத்து செயற்பாடுகளும் ஹரா மானவையே. ஹராத்துக்கு உதவி செய்யும் அனைவரும் பாவத்தில் பங்குதாரர்களே!

## 07. தந்திரமான வழிகளில் ஹராத்தை செய்வதும் ஹராமே

ஹராத்துக்கு வழிவகுக்கும் வெளிப்படையான அனைத்து வழிமுறைகளையும் இஸ்லாம் தடைசெய்கின்றது. அவ்வாறே ஹராத்தை செய்வதற்காக கையாளப்படும் மறைமுகமான வழிகளையும் தந்திரோபாயங்களையும் அது தடை செய்கின்றது.

நிச்சயமாக எனது சமூகத்தில் ஒரு பிரிவினர் மதுபானத்தை ஹலாலாகக் கருதுவர். அதனது பெயரல்லாத வேறு ஒரு பெயரால் அதனை அவர்கள் அழைப்பர் (அஹ்மத்)

மனிதர்களிடம் ஒரு காலம் வரும். வியாபாரத்தின் பெயரால் அவர்கள் வட்டியை ஹலாலாகக் கருதுவர் (இகாசதுல் லஹ்பான்)

நவீன உலகில் ஆபாசமான நடனம் 'கலை' என்ற பெயரில் ஊக்குவிக்கப்படுகின்றது. வட்டி பயன்பாடு என்ற பெயரில் சாப்பிடப்படுகின்றது. ஹராத்தின் பெயரை மாற்றி விடுவதனால் அது ஒரு போதும் ஹலாலாகி விடுவதில்லை.

## 08. நல்லெண்ணம் ஹராத்தை நியாயப்படுத்தாது.

ஒரு முஸ்லிம் மேற்கொள்கின்ற அனுமதிக்கப்பட்ட எந்த ஒரு கருமமும் நல்லெண்ணம் இருக்கும்போது வணக்கமாக மாற்றமுறுகின்றது. ஆனால் ஹராமாக்கப்பட்ட விடயங்களைப் பொறுத்தவரையில் அவற்றைச் செய்பவர்களது நோக்கம் எவ்வளவு உயர்ந்ததாக இருப்பினும், தூய்மையானதாக இருப்பினும் அவ்விடயங்கள் ஹராமானவையாகவே கருதப்படும். அவற்றின் நோக்கம் சிறந்தது என்பதனால் ஹலாலாக மாறிவிடுவதில்லை.

இலட்சியம் சிறந்ததாக இருப்பது போல அதனை அடைவதற்கான வழிமுறைகளும் சிறந்ததாகவே அமைய வேண்டும் என்ற கருத்தை இஸ்லாம் முன்வைக்கிறது. ஒருவர் வட்டி வாங்குவதன் மூலம் அல்லது இலஞ்சம் வாங்குவதன் மூலம் அல்லது சூதாட்டத்தின் மூலம் அல்லது தடைசெய்யப்பட்ட ஒரு தொழிலின் மூலம் பணம் திரட்டுகின்றார் என வைத்துக் கொள்வோம். ஒரு மஸ்ஜிதை நிர்மாணிக்கும் நல்ல நோக்கிலேயே அவர் இவ்வாறு பணம் திரட்டினாலும் அவரது அந்த நன்நோக்கம் அவர் செய்யும் வேலையை ஹலாலானதாக ஆக்கி விடாது. ஏனெனில் இஸ்லாத்தில் தடுக்கப்பட்டவற்றை பொறுத்தவரையில் நல்ல நோக்கம் அவற்றை எவ்வகையிலும்

நியாயப்படுத்தாது. இக்கருத்தை உறுதிப்படுத்தும் பல ஹதீஸ்கள் உள்ளன. ''யார் ஹராத்தின் மூலம் பணம் திரட்டி பின்னர் தர்மம் செய்கின்றாரோ அவருக்கு அதனால் எதுவித நன்மையும் கிடைப்பதில்லை. அதனது பாவம் தான் அவருக்குக் கிடைக்கும்'' (இப்னு குஸைமா)

**09. ஹராத்தில் வீழ்ந்து விடுவோம் எனும் பயத்தில் சந்தேகத்துக்கு இடமானவற்றை விட்டும் விலகியிருத்தல்.**

இஸ்லாத்தில் ஹலால் தெளிவானது. அவ்வாறே ஹராமும் தெளிவானது. ஹலாலா? ஹராமா? என்பது சந்தேகத்திற்கிடமானது என்ற ஒரு பகுதியும் உண்டு. தெளிவாக ஹராமாக்கப்பட்ட ஒரு விடயத்தில் சிக்கிக்கொள்ளக் கூடாது என்பதற்காக சந்தேகத் திற்கிடமான பகுதியை விட்டு விலகியிருத்தலே பேணுதல் எனப்படுகிறது. இதற்கு ஆதாரமாக பின்வரும் ஹதீஸ் அமைந்துள்ளது. ''ஹலாலும் தெளிவாக உள்ளது ஹராமும் தெளிவாக உள்ளது. ஆனால் இவ்விரண்டுக்குமிடையே சந்தேகத் துக்குரிய பாவங்களிலிருந்து விலகி இருப்பவன் பகிரங்கமான பாவங்களிலிருந்தும் கண்டிப்பாக விலகியே இருப்பான். சந்தேகத்திற்குரிய பாவங்களில் துணிவுடன் ஈடுபடுபவன் வெளிப்படையான பாவங்களில் வீழ்ந்து விட பெரிதும் வாய்ப்புண்டு. பாவங்கள் அல்லாஹ்வினால் தடைசெய்யப்பட்ட பகுதிகளாகும். தடைசெய்யப்பட்ட பகுதியின் அருகே மேய்கின்ற பிராணி அதனுள் புகுந்துவிட பெரிதும் வாய்ப்புண்டு'' (புஹாரி)

**10. ஹராம் அனைவருக்கும் ஹராமே**

இஸ்லாம் ஒன்றை ஹராம் என கூறும்போது அது அனைவருக்கும் ஹராமானது. அரபிக்கு ஹலாலான அஜமிக்கு ஹராமான அல்லது வெள்ளையனுக்கு ஹலாலான கறுப்பனுக்கு ஹராமான எதுவும் இஸ்லாத்தில் கிடையாது. ஆட்சியாளர்களும் சரி, ஆளப்படுபவர்களும் சரி, அறிஞர்களும் சரி, பொதுமக்களும் சரி அனைவரும் இஸ்லாமிய ஷரீஆவின் முன் சமமானவர்களே. ஹலால் அனைவருக்கும் ஹலாலே. ஹராம் அனைவருக்கும் ஹராமே.

உதாரணமாக திருடுதல் அனைவர் மீதும் ஹராம் தான். திருடியவர் யாராக இருந்தாலும், யாரிடமிருந்து திருடப்பட்டிருந்தாலும் திருட்டு ஹராமானதே. இதனையே நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு பிரகடனப் படுத்தினார்கள். ''அல்லாஹ்வின் மீது சத்தியமாக முஹம்மதின் மகளாகிய பாத்திமா திருடினாலும் அவளது கரத்தை நான் துண்டிப்பேன்'' (புஹாரி)

**11. நிர்ப்பந்தம் தடுக்கப்பட்டவற்றை ஆகுமானதாக ஆக்கும்**

ஹராம் விடயத்தில் மிகவும் கண்டிப்பாக இருக்கும் இஸ்லாம், மனித நலன்களை மறந்து விடவில்லை. மனிதன் தன்னை அழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக நிர்ப்பந்தத்தின்போது தடுக்கப்பட்டதை செய்வதற்கு அது அனுமதி வழங்கியுள்ளது.

அல்குர்ஆன் செத்தவை, இரத்தம், பன்றியிறைச்சி, அல்லாஹ் அல்லாத பெயர் கூறப்பட்டவை ஆகியன ஹராம் என்று கூறியதன் பின்னர் ''எவரேனும் ஒருவர் (இப்பொருள்களில் ஏதாவதொன்றைப் புசிக்க வேண்டிய) நிர்ப்பந்தத்துக்கு உள்ளானால் பாவம் செய்யும் நோக்கமில்லாமலும் வரம்பு மீறாமலும் அதனைப் புசிப்பதில் அவர் மீது குற்றமில்லை. நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பு வழங்குப வனாகவும் கருணையுள்ளவனாகவும் இருக்கிறான்'' (2:173) என்ற இக்கருத்து அல்குர்ஆனில் நான்கு இடங்களில் ஹராமாக்கப்பட்ட உணவு வகைகளை குறிப்பிட்டதன் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வசனங்களிலிருந்து நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகும் ஒருவர் தடுக்கப்பட்ட ஓர் ஆகாரத்தைப் புசிக்கலாம். ஆனால் இரண்டு நிபந்தனைகளை அவர் பேணிக்கொள்ள வேண்டும்.

1. தடுக்கப்பட்டதை புசிப்பதனூடாக இன்பத்தை எதிர்பார்ப்பவராக, அதனை நோக்கமாகக் கொள்பவராக அவர் இருக்கக்கூடாது.
2. தேவையான அளவுக்கு அதிகமாக அவர் உட்கொள்ளக் கூடாது.

ஹலால்-ஹராம் விடயத்தில் இஸ்லாத்தின் இவ்வழிகாட்டலை நாம் பேணும்போது பல்வேறு பயன்களை அடையலாம். இன்றேல் சில தீய விளைவுகளை எதிர்நோக்க வேண்டி வரும். அவற்றுள் சிலவற்றை சுருக்கமாக நோக்குவோம்.

**01. பிரார்த்தனை அங்கீகரிக்கப்படாமை**

“அல்லாஹ் தூயவன் அவன் தூய்மையானவற்றையே ஏற்றுக்கொள்கிறான். அல்லாஹ் தன் தூதர்களுக்குக் கட்டளையிட்டவற்றையே விசுவாசிகளுக்கும் கட்டளையிடுகின் றான். மேலும் அல்லாஹ் கூறினான்: ‘தூதர்களே! தூய ஆகாரத்தையே புசித்து நற்செயல் புரியுங்கள்’ (23:53) மேலும் அல்லாஹ் கூறினான் ‘விசுவாசிகளே! நாம் உங்களுக்கு அருளிய, ஹலாலான, தூய ஆகாரத்தையே புசியுங்கள்’ (7:10) என எடுத்துக்காட்டிய நபி (ஸல்) அவர்கள் தொடர்ந்து ஒரு மனிதனைப்பற்றி பிரஸ்தாபித் தார்கள். அவன் நீண்ட பயணம் மேற்கொண்டு, புழுதி படிந்து, அழுக்கடைந்த நிலையில் க.்.பாவுக்கு வருகிறான். தனது இருகரங்களையும் வானத்தை நோக்கி உயர்த்தி ‘என் இரட்சகனே! என் இரட்சகனே! என பிரார்த்திக்கிறான். ஆயினும் அவன் உண்ணும் உணவு, பருகும் நீர், உடுத்திருக்கும் ஆடை அனைத்துமே ஹரா மானவை. அவன் முழுமையாக ஹராத்தினாலேயே போஷிக்கப்பட்டுள்ளான் இந்நிலை யில் இத்தகையோனின் பிரார்த்தனை எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படும்? (முஸ்லிம்)

**02. நற்கருமங்கள் ஏற்கப்படமாட்டா**

“யார் ஹராத்தின் மூலம் பணத்தை திரட்டி பின்னர் தர்மம் செய்கின்றாரோ அதனால் அவருக்கு எதுவித நன்மையும் கிடைப்பதில்லை. அதன் பாவமே அவருக்கு கிடைக்கும்” (இப்னு குஸைலமா)

**03. நன்மையையும் தீமையையும் பிரித்தறியும் ஆற்றல் கிடைக்காது**

“விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுவீர்களாயின் உங்களுக்கு சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தறியும் அறிவை அவன் உங்களுக்கு வழங்குவான்” (8:29)

**04. சுவனம் நுழையும் பாக்கியம் கிட்டாது**

“ஓர் அடியான் ஹராமான வழியில் செல்வத்தைச் சம்பாதித்து, அதிலிருந்து தர்மம் செய்தால் அது ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் அதிலிருந்து செலவிட்டால் அதிலே பாக்கியம் ஏற்படுத்தப்படமாட்டாது. அதனை விட்டு விட்டு அவன் இறந்து விட்டால் அவனது நரகப் பயணத்திற்கு சாதகமாகத்தான் அது விளங்கும். அல்லாஹ் தீமையை தீமையின் வாயிலாக அழிக்கிறான். ஓர் அசுத்தம் இன்னோர் அசுத்தத்தை அழிப்பதில்லை” (மிஷ்காத்)

ஹராம்-ஹலால் விடயம் மறுமை வாழ்வின் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கின்ற ஒரு பாரதூரமான விடயம் என்பது புரியப்பட்டு, அதற்கு உரிய பெறுமானம் வழங்கப்படுவது அவசியமாகும்.

- **உணவு தொடர்பான இஸ்லாமிய வழிமுறைகள்**

உணவு மனித ஆரோக்கியத்திற்கு மிக முக்கிய அடிப்படையாக விளங்குகின்றது. மனிதன் உட்கொள்கின்ற உணவு பொருத்தமானதாக அமைந்தால் வாழ்க்கைப் பணிகளை மேற்கொள்வதற்கு அது இலகுவாக அமையும். இதற்கு மாறாக மனித னது புத்திக்கோ, உடலுக்கோ, உயிருக்கோ தீங்கு விளைவிக்கும் உணவு வகைகளை உட்கொள்ளும்போது வாழ்க்கைப் பணிகளை நிறைவேற்றுதவற்கு அது தடையாக அமைகின்றது. இவ்வடிப்படையில் மனிதன் உட்கொள்ளும் உணவு உலக செயற்பாடுகளுக்கு அடிப்படையாக அமைகின்றது என்பது தெளிவாகின்றது.

இஸ்லாம், மனிதனது தனித்துவத்திற்கும் இயல்புக்கும் தேவைகளுக்கும் ஏற்ற போதனைகளை முன்வைக்கின்றது. இவ்வடிப்படையில் உணவு தொடர்பான போதனைகளையும், சட்டதிட்டங்களையும் தெளிவுபடுத்துகிறது. மனிதன் உண்ணும் உணவுக்கும், அவனது உலக, ஆன்மீக வாழ்வுக்கும் அறிவுக்கும் இடையில் இறுக்கமான பிணைப்பு இருப்பதால் இஸ்லாம் இது விடயத்தில் முக்கிய கவனமெடுக்கின்றது. குர்ஆன், ஹதீஸ் போதனைகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

“விசுவாசம் கொண்டவர்களே! நாம் உங்களுக்கு வழங்கியவற்றிலுள்ள பரிசுத்தமான வற்றிலிருந்து சாப்பிடுங்கள்” (2:172)

“நிச்சயமாக அல்லாஹ் பரிசுத்தமானவன். அவன் பரிசுத்தமானதையே ஏற்றுக்கொள் வான். ரஸூல்மார்களுக்கு கட்டளையிட்டதையே அவன் விசுவாசிகளுக்கும் கட்டளை யிட்டிருக்கிறான். அதுதான் “தூதர்களே! பரிசுத்தமான ஆகாரங்களிலிருந்தே நீங்கள் சாப்பிடுங்கள்; நல்லமல்களில் ஈடுபடுங்கள்” (23:51) என நபி (ஸல்) கூறியதாக அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

“ஹலாலான உணவைத் தேடியடைந்து கொள்வது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்” (தபரானி)

“ஹராத்தினால் உணவூட்டப்பட்ட எந்த உடம்பும் சுவர்க்கத்தை சென்றடையாது. அதற்குத் தகுதியான இடம் நரகமேயாகும்” (தபரானி)

“விசுவாசிகளே நிச்சயமாக மதுவும், சூதாட்டமும், விக்கிரக ஆராதனையும், அம்பெறிந்து குறிகேட்டலும் ஷைத்தானுடைய அருவருக்கத்தக்க செயல்களாகும். இவற்றிலிருந்து முற்றாகத் தவிர்ந்து கொள்ளுங்கள்” (5:90)

“ஒரு முஸ்லிமினது உலக, ஆன்மீக, அறிவு சம்பந்தமான விடயங்களோடு உணவு எவ்வாறு தொடர்புபடுகின்றது என்பதையும், அது எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதையும் மேலே உள்ள குர்ஆன், சுன்னா போதனைகள் உணர்த்துகின்றன.

**உணவு உட்கொள்ளும்போது இஸ்லாம் காட்டியுள்ள வழிமுறைகளைப் பேணுதல்.**

உணவு வகைகளில் ஹராமாக்கப்பட்டவைகளைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்தலாம்.

1. மாமிச வகைகளில் ஹராமாக்கப்பட்டவைகள்: செத்த பிராணிகள், இரத்தம், பன்றியின் மாமிசம், முறையாக தப்ஹ் செய்யப்படாத பிராணிகள், கழுத்து இறுகுவதால் இறப்பவை, தாக்கப்பட்டு இறப்பவை, உயர்வான இடத்திலிருந்து கீழே விழுந்து இறப்பவை, வேறு மிருகங்களின் கொம்பால் குத்தப்பட்டு இறப்பவை, பலி பீடங்களில் அறுக்கப்பட்ட பிராணிகள், தடுக்கப்பட்ட பறவைகளின் மாமிசங்கள். இது பற்றி குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.

“(தானாகச்) செத்த பிராணியும், இரத்தமும், பன்றி இறைச்சியும், அல்லாஹ் அல்லாதவர்களது பெயர் கூறி அறுக்கப்பட்ட பிராணியும், கழுத்து நெரிக்கப்பட்டுச் செத்ததும், அடிபட்டுச் செத்ததும், உயரத்திலிருந்து கீழே விழுந்து செத்ததும், கொம்பால் குத்தப்பட்டு இறந்த பிராணிகளும் (கரடி, புலி போன்ற) கொடிய விலங்குகளால் கடித்துக் குத்தப்பட்டு செத்த பிராணிகளும் உங்கள் மீது ஹரா மாக்கப்பட்டுள்ளன. ஆனால் (அனுமதிக்கப்பட்டவற்றில்) எதை நீங்கள் (உயிரோடு பார்த்து முறைப்படி) அறுத்தீர்களோ அதைத் தவிர, (அதை நீங்கள் உண்ணலாம்) என்று அல்லாஹ் கூறுகின்றான்.” (5:3)

“நபி (ஸல்) அவர்கள் கொடிய காட்டு மிருகங்களில் கூரிய பற்களைக் கொண்ட மிருகங்களையும், பறவைகளில் கூரிய நகங்களைக் கொண்ட பறவைகளையும் உண்ண வேண்டாம் என தடுத்தார்கள்.” (புஹாரி) உதாரணம்: சிங்கம், புலி ஓநாய், கழுகு, பருந்து, வல்லூறு.

ஜல்லாலாவினது இறைச்சிகளை உண்பதையும் அவற்றில் ஏறிப் பிரயாணம் செய்வதையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள். ஜல்லாலா என்பது பொதுவாக உண்ண அனுமதிக்கப்பட்ட ஆனால் உடலில் துர்நாற்றம் வீசுமளவுக்கு சதாவும் அழுக்குகளையே உண்டு வாழும் ஒட்டகை, ஆடு, மாடு, கோழி, வாத்து போன்ற மிருகங்களையும், பறவைகளையும் குறிக்கின்றது.

2. தாவர வகைகளில் ஹராமாக்கப்பட்டவைகள் மனிதனது புத்திக்கு, உடலுக்கு, தீங்கு விளைவிக்கும் தாவர வகைகள். உதாரணம் புகையிலை, கஞ்சா, அலரிப் பருப்பு.

3. தடுக்கப்பட்ட பொருளீட்டல் முறைகள் மூலம் பெறப்பட்டவைகள். உதாரணங்களாக அளவை நிறுவை மோசடி, கலப்படம், பதுக்கல், வட்டி, சூது, இலஞ்சம், களவு, போதைப் பொருள் விற்பனை, ஹராமான உத்தியோகங்கள் மூலம் பெறப்பட்டவை. தடுக்கப்பட்ட விவசாய முறையில் பயிர்ச் செய்து உழைத்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

   “அல்லாஹ் வியாபாரத்தை அனுமதித்து வட்டியைத் தடைசெய்துள்ளான்”

   “அளவை நிறுவைகளில் மோசம் செய்பவர்களுக்கு கேடுதான்”

- ஹலாலான உணவு வகைகளை உட்கொள்வதால் ஏற்படும் பயன்களும், ஹராமான உணவு வகைகளை உட்கொள்வதால் ஏற்படும் தீங்குகளும்.

| ஹலால் | ஹராம் |
|---|---|
| 1. ஆன்மீக வாழ்வு உறுதி பெறும். | 1. ஆன்மீக வாழ்வு பாதிப்படையும் |
| 2. இறைவணக்கமாக மாறி நன்மை கிடைக்கும் | 2. பாவமாக மாறி தண்டனை கிடைக்கும் |
| 3. உள்ளம் பிரகாசமடையும். | 3. உள்ளம் இருளடையும் |
| 4. வணக்க வழிபாடுகள் அங்கீகரிக்கப் படும். | 4. வணக்கங்கள், பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படமாட்டாது |
| 5. சுவர்க்கம் நுழையும் பாக்கியம் கிடைக்கும் | 5. நரகம் நுழைவான் |
| 6. சுகமான வாழ்வு கிட்டும் | 6. சுகம் பாதிக்கப்படும் |
| 7. வாழ்வில் அமைதியும் திருப்தியும் கிட்டும். | 7. வாழ்வில் தடுமாற்றமும் திருப்தியற்ற நிலையும் தோன்றும் |
| 8. நல்ல செயற்பாடுகள் உருவாகும் | 8. பாவங்கள் அதிகரிக்கும் |
| 9. சமூக வாழ்வில் அமைதி நிலவும் | 9. சமூக வாழ்வில் பிரச்சினைகள் அதிகரிக்கும் |
| 10. அறிவு விருத்தி, உலகப் பற்றின்மை உருவாகும். | 10. மடமையும், உலக ஆசையும் அதிகரிக்கும் |

**உடை தொடர்பான இஸ்லாமிய விதிமுறைகள்**

ஒரு முஸ்லிமின் உடையும் தோற்றமும் அழகானதாகவும் ஒழுக்கமானதாகவும் கண்ணியமானதாகவும் அமைதல் வேண்டும் என இஸ்லாம் விரும்புகிறது. ஆடை அணிதலுக்கு இரண்டு நோக்கங்கள் காணப்படுகின்றன. உடலையும் மானத்தையும் மறைத்தல், தோற்றத்தை அழகுபடுத்தல் என்பனவே அவையாகும். பின்வரும் அல்குர்ஆன் வசனம் அந்நோக்கங்களைக் கோடிட்டுக் காட்டுகிறது.

‘ஆதமுடைய மக்களே! உங்களுடைய மானத்தை மறைக்கக்கூடிய ஆடையையும் அலங்காரத்தையும் நிச்சயமாக நாம் உங்களுக்கு அருள்புரிகின்றோம்'' (7:26)

உடையின் இந்நோக்கங்கள் உதாசீனப்படுத்தக்கூடாது என்ற கருத்தை உறுதிப் படுத்துவதற்காக அல்குர்ஆனில் அதே அத்தியாயத்தில் இடம்பெறுகின்ற பின்வரும் வசனங்கள் அமைந்துள்ளன.

“ஆதமுடைய மக்களே! எவ்வாறு ஷைத்தான் உங்கள் தாய், தந்தையரை சுவர்க் கத்திலிருந்து வெளியேற்றினானோ, மேலும் அவர்களுடைய வெட்கத்தலங்களை பரஸ்பரம் வெளிப்படுத்திட வேண்டும் என்பதற்காக அவர்களுடைய உடைகளைக் களைந்தானோ அவ்வாறு மீண்டும் உங்களை அவன் குழப்பத்தில் ஆழ்த்திவிட வேண்டாம்.'' (7:27)

ஆதமுடைய மக்களே! தொழும் இடத்திலெல்லாம் ஆடைகளால் உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள்'' (7:31)

கவர்ச்சியான, சிறந்த வெளித்தோற்றத்தில் கவனம் செலுத்தும் இஸ்லாம் அவற்றுக்கு அடிப்படையாக அமைகின்ற சுத்தத்தில் அதிகூடிய கரிசனை காட்டுகின்றது. இதனை பின்வரும் ஹதீஸ் உறுதிப்படுத்துகின்றது.

“நபி (ஸல்) அவர்கள், அழுக்கடைந்த உடைகள் அணிந்திருந்த ஒரு மனிதனைக் கண்டார்கள். தனது ஆடையைக் கழுவிக் கொள்வதற்கு எதுவும் இவருக்கு கிடைக்கவில்லையா? என வினவினார்கள்” (அபூதாவுத்)

மனிதன் சிறந்த வெளித்தோற்றத்தில், சுத்தமான, தன் தரத்திற்கு ஏற்ற உடைகளுடன் காட்சியளிப்பதை இஸ்லாம் விரும்புகின்றது. இக்கருத்தைப் பலப்படுத்தும் பல ஹதீஸ்கள் காணப்படுகின்றன.

சாதாரண உடைகளுடன் ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களைச் சந்திக்க வந்தார். உன்னிடத்தில் செல்வம் உண்டா? என நபி (ஸல்) அவர்கள் அம்மனிதனிடத்தில் வினவினார்கள். அவர் ஆம் என்றார். எவ்வகையான செல்வம் உன்னிடத்தில் காணப்படுகின்றது என நபி (ஸல்) அவர்கள் திரும்பவும் வினவியபோது எல்லா வகையான சௌபாக்கியங்களையும் அல்லாஹ் எனக்கு வழங்கியுள்ளான் என அம்மனிதர் பதிலளித்தார். அப்போது நபி (ஸல்) அவர்கள், ‘‘அல்லாஹ் உனக்கு செல்வத்தை வழங்கி உன்னை கண்ணியப்படுத்தி இருக்கிறான். அதன் அடையாளம் உன்னில் வெளிப்படுவதை அவன் விரும்புகிறான்” எனக் குறிப்பிட்டார்கள் (நஸாஈ).

ஜும்ஆவிற்கு அணிந்து செல்வதற்காக மேலதிகமான இரு ஆடைகளை வைத்துக் கொள்வதில் எவ்விதத் தவறுமில்லை. (அபூதாவூத்)

இஸ்லாம் ஆடையைப் பொறுத்த வரையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சில வரையறைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஆண்களைப் பொறுத்தவரை இரு வகையான அலங்காரங்களை இஸ்லாம் அவர்களுக்குத் தடை செய்துள்ளது.

1. தங்க ஆபரணங்களை அணிதல்

2. தூய பட்டினாலான ஆடைகளை அணிதல்

அலி (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘நபி (ஸல்) அவர்கள் பட்டை எடுத்து தனது வலக் கரத்தில் ஏந்திக் கொண்டார்கள். தங்கத்தை எடுத்து தனது இடக் கரத்திலே ஏந்திக் கொண்டார்கள். பின்னர் இவ்விரண்டும் எனது சமூகத்திலுள்ள ஆண்களுக்கு ஹராமாகும் என குறிப்பிட்டார்கள்” (அஹ்மத்)

“உமர் (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள் ‘பட்டை அணியாதீர்கள் யார் உலகில் அதனை அணிகின்றாரோ அவர் மறுமையில் அதனை அணிய மாட்டார்’ என நபி (ஸல்) அவர்கள் கூற நான் செவியுற்றேன்” (புஹாரி)

“ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதன் தனது கரத்தில் தங்க மோதிரம் ஒன்றை அணிந்திருப்பதைக் கண்டார்கள். அதனை அவர்கள் களைந்து எறிந்தார்கள். “உங்களில் ஒருவர் நெருப்புத் தணலை நாடிச் சென்று அதனைத் தனது கரத்தில் அணிந்து கொள்வதா? என வினவினார்கள். நபி (ஸல்) அவர்கள் அவ்விடத்தை விட்டு அகன்ற பின், ‘உனது மோதிரத்தை எடு. அதிலிருந்து பிரயோசனம் பெற்றுக் கொள்!’ என அம்மனிதனுக்கு கூறப்பட்டது. அப்போது அம்மனிதன், ‘அல்லாஹ்வின் மீது சத்தியமாக இல்லை அல்லாஹ்வின் தூதரே அதனை எறிந்துள்ள நிலையில் அதனை நான் எடுக்கப்போவதில்லை’ எனக் குறிப்பிட்டார்கள்” (முஸ்லிம்)

தங்க மோதிரம் அணிவது ஹராமாக இருப்பது போலவே தங்கத்தாலான பேனா கடிகாரம் போன்றவற்றையும் பயன்படுத்துவதும் ஹராமாகும்.

ஆண்களுக்கு வெள்ளி மோதிரம் அணிய அனுமதி உண்டு ‘நபி (ஸல்) அவர்கள் வெள்ளியினாலான ஒரு மோதிரத்தை எடுத்தார்கள். அது அவர்களது கரத்தில் காணப்பட்டது. பின்னர் அது அபூபக்கர் (ரழி) அவர்களது கரத்தில் காணப்பட்டது. தொடர்ந்து அது உமர் (ரழி) அவர்களது கரத்தில் காணப்பட்டது. அதனையடுத்து ‘அரீஸ்’ என்ற கிணற்றினுள் விழும் வரை உஸ்மான் (ரழி) அவர்களது கரத்தில் காணப்பட்டது’’ (புஹாரி).

பெண்கள் பொதுவாக அழகை விரும்புபவர்கள் என்ற ரீதியில் அவர்களுக்கு தங்கமும் பட்டும் தடைசெய்யப்படவில்லை. ஆனால் தங்க, வெள்ளிப் பாத்திரங்களை பயன்படுத்த ஆண்களுக்குப் போலவே பெண்களுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

பெண்ணின் ஆடையைப் பொறுத்த வரையில் அது எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான வரையறைகளை இஸ்லாம் விதித்துள்ளது.

1. ‘வெளியே தெரியக் கூடியவை தவிர’’ என விலக்களித்துள்ள பகுதியைத் தவிர உடம்பின் ஏனைய அனைத்துப் பகுதிகளையும் மறைக்கக் கூடியதாக உடை அமைதல் வேண்டும்.

‘நபியே! விசுவாசமுள்ள பெண்களுக்கு கூறும் அவர்கள் தங்கள் பார்வையைத் தாழ்த்தவும், தங்களது கற்பைப் பாதுகாத்துக் கொள்ளவும்,தங்கள் அலங்காரத்தை அதினின்று வெளியே தெரியக் கூடியதைத் தவிர வேறு எதையும் வெளிக்காட்ட லாகாது’’(24:31) இவ்வசனம் குறிப்பிடுகின்ற ‘‘வெளியே தெரியக் கூடியவை’’ என்பது தவிர்க்க முடியாது வெளியில் தெரியும் உடற் பகுதியையே குறிக்கும் என்பது மஸ்ஊத் (ரழி) அவர்களது விளக்கமாகக் காணப்படுகிறது. இவ்விளக்கத்தின்படி பெண் முழுமை யாக தன் உடம்பை மறைக்க வேண்டும். அவளது முழு உடம்புமே அவ்ரத் ஆகும். எனவே அவளது உடம்பிலிருந்து எப்பகுதியும் வெளியே தெரியக் கூடாது.

‘‘வெளியே தெரியக் கூடியவை’ என்பது முகத்தையும் இருகைகளையும் குறிக்கும் என இப்னு உமர் (ரழி) விளக்கம் அளித்துள்ளனர். இக்கருத்தையே பெரும்பாலான இஸ்லாமிய அறிஞர்கள் கொண்டுள்ளனர். இக்கருத்தின்படி பெண்ணின் முகத்தையும் கைகளையும் தவிர அவளது உடம்பின் ஏனைய அனைத்துப் பகுதிகளும் கட்டாயமாக மறைக்கப்பட வேண்டும்.

2. அவ்ரத்தை வெளிக்காட்டுவதாக ஆடை அமையக் கூடாது

இரு சாரார் நரகவாதிகளாவர். அவர்களுக்கு நான் சாட்சியாக இருக்க மாட்டேன். அவர்களுள் ஒரு சாரார் மாட்டின் வாலைப் போன்ற சாட்டைகளை வைத்திருப்பர். அவற்றைக் கொண்டு மக்களை அவர்கள் அடிப்பர். மறுசாரார் ஆடை அணிந்த நிலையில் நிர்வாணமாக இருக்கும் பெண்களாவர். அவர்கள் தீய வழியில் செல்வதுடன் பிறரையும் தீய வழியில் செலுத்துவர். அவர்களின் தலைகள் ஆடி அசையும் ஒட்டகைகளின் திமில்களைப் போன்று காணப்படும். இத்தகையவர்கள் சுவனம் நுழைய மாட்டார்கள். அதன் வாடையைக் கூட நுகர மாட்டார்கள்’’ (முஸ்லிம்)

‘‘ஆடை அணிந்தும் நிர்வாணமாக இருக்கும் பெண்கள்’’ என்று குறிப்பிடக் காரணம் அவர்கள் அணிந்திருக்கும் ஆடைகள் உடலை மறைக்கின்ற பணியை நிறைவேற்ற வில்லை. அவ்வுடைகள் மெல்லியவைகளாக காணப்படுவதனால் அவ்வுடைகளினூடாக உடம்பின் அழகு வெளிக்காட்டப்படுகின்றது.

ஒரு தடவை ஒரு மணப்பெண் ஆயிஷா (ரழி) அவர்களிடம் அழைத்து வரப்பட்டாள். அவள் ஒரு மெல்லிய முந்தானையை அணிந்திருந்தாள். அதனை அவதானித்த ஆயிஷா (ரழி) அவர்கள் இதனை அணியும் பெண் நூர் எனும் அத்தியாயத்தை விசுவாசிக்கவில்லை என குறிப்பிட்டார்கள்’’ (தப்ஸீர் குர்துபி)

அங்கங்களின் பருமனை, கவர்ச்சியை, அழகைப் பிரதிபலித்துக் காட்டுவதாக ஆடை அமையக் கூடாது. அதாவது ஆடை இறுக்கமானதாக அமையக்கூடாது. மெல்லிய ஆடைகளைப் போலவே இறுக்கமான ஆடைகளும், உணர்ச்சியை தூண்டிவிடக் கூடியவை. எனவே இவற்றை அணியும் பெண்களும் ஹதீஸ் குறிப்பிடும். 'ஆடை அணிந்தும் நிர்வாணமாக இருக்கும் பெண்கள் வரிசையில் இடம்பெறுவர்.

3. ஆண்களுக்கான பிரத்தியேகமான ஆடையாக அது இருக்கக்கூடாது. ஏனெனில், பெண்களின் ஆடைகளை அணியும் ஆண்களையும், ஆண்களின் ஆடைகளை அணியும் பெண்களையும் நபி (ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள். (புஹாரி)

4. நறுமணம் பூசப்பட்டதாக ஆடை அமையக் கூடாது"- ஒரு பெண் வீட்டிலிருக்கும் போது அதாவது மஹ்ரமீக்களுக்கு முன்னால் இருக்கும் போது மணம் பூசிக் கொண்டிருக்க அனுமதி உண்டு. ஆனால் வீட்டைவிட்டு வெளியே செல்லும் போது நறுமணம் பூசிக்கொண்டு செல்ல அவள் அனுமதிக்கப்படவில்லை.

 "ஒரு பெண் நறுமணம் பூசி ஒரு கூட்டத்தினர் மத்தியில் அவர்கள் அந் நறுமணத்தை நுகர வேண்டும் என்ற நோக்கில் அவர்களைக் கடந்து செல்வாளாயின் அவள் ஒரு விபச்சாரியாவாள். அவளை இச்சையுடன் பார்க்கின்ற ஒவ்வொரு கண்ணும் விபச்சாரம் செய்கின்றது என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்" (நஸாஈ)

5. ஆணவத்தையும் பிரபல்யத்தையும் வெளிக்காட்டக் கூடியதாக ஆடை அமையக் கூடாது. உணவு, உடை ஆகியனவற்றுக்கு இஸ்லாம் விதிக்கும் பொதுவான நிபந்தனைகள் இரண்டு உள்ளன. வீண்விரயம் தவிர்க்கப்பட வேண்டும். தற்பெருமை தவிர்க்கப்பட வேண்டும் என்பனவே அவையாகும். எனவேதான் நபி (ஸல்) அவர்கள், ''யார் பிரபல்யமான ஆடையை அணிகின்றாரோ அல்லாஹ் அவருக்கு மறுமையில் இழிவான ஆடையை அணிவிப்பான்'' எனக் குறிப்பிட்டார்கள். (அஹ்மத்)

 ஆடையை வைத்து மக்கள் மனிதர்களின் தரத்தை மட்டிடுவர். எனவே நாம் எம்மைப் பற்றி அடுத்தவர்கள் தவறான எண்ணங்களைக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கக் கூடாது. 'ஒரு மனிதர் இப்னு உமர் (ரழி) அவர்களிடம் 'நான் எத்தகைய ஆடைகளை அணிவது நல்லது? என வினவியபோது, 'அறிவிலிகள் உன்னைப் பார்த்து பரிகசிக்காத, அறிவுடையோர் உன்னைக் குறை கூறாத ஆடைகளை அணிந்து கொள்'' என பதிலளித்தார்கள் (தபரானீ)

 ஆண்களின் ஆடைகளுக்கும் சில நிபந்தனைகள் உள்ளன. அவையாவன:-

 1. அவ்ரத்தை மறைக்கக் கூடியதாக இருத்தல்:- ஆணின் தொப்புழுக்கும் முழங்காலுக்கும் இடைப்பட்ட பகுதி அவனது அவ்ரத்தாக கணிக்கப்படுகின்றது.
 2. பெண்களுக்குரிய பிரத்தியேகமான ஆடையாக இல்லாதிருத்தல்
 3. பகட்டு பெருமைக்குரிய ஆடையாக இல்லாதிருத்தல்
 4. மெல்லிய ஆடையாக இல்லாதிருத்தல்.

### வீட்டு வாழ்க்கை தொடர்பான இஸ்லாமிய ஒழுங்குகள்

முஸ்லிம் சமூக அமைப்பைத் தோற்றுவிப்பதில் வீட்டின் பங்கு அலாதியானது. எனவே இஸ்லாம் வீட்டுக்கு தனியான ஓர் அந்தஸ்தை வழங்கியுள்ளது. "அல்லாஹ் உங்களு டைய வீடுகளை உங்களுக்கு அமைதியளிக்கும் இடமாக ஆக்கினான்" (16:80)

வீடு, நிம்மதி, பாதுகாப்பு, சமாதானம், அன்பு என்பவற்றின் அரணாக, நற்பணிகளின், நற்பண்புகளின் உறைவிடமாக, சமூகத்துக்கு தேவையான கல்விமான்களை, தியாகிகளை உருவாக்கும் நிறுவனமாக அமைய வேண்டுமென இஸ்லாம் எதிர் பார்க்கின்றது.

வீடு மேற்குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்ற வேண்டுமாயின் அதன் பௌதீக அமைப்பு, பௌதீக சூழல், ஆன்மீக சூழல், அதன் உறுப்பினர்களது பொறுப்புக்கள், கடமைகள், உரிமைகள் என்பவற்றில் உரிய கவனம் செலுத்துவது அவசியமாகும்.

**வீட்டின் பௌதிக அமைவிடமும் சூழலும்**

1. வீடு தேவைக்கு ஏற்றதாக, விசாலமானதாக இருத்தல்:- "நான்கு விடயங்கள் அதிஷ்டத்தில் அடங்கக் கூடியவை. அவை நல்ல மனைவி, விசாலமான வீடு, நல்ல அயலான், சிறந்த வாகனம் என்பன" (நஸாஈ)
2. வீட்டைச் சுத்தமாக வைத்திருத்தல்: ஒரு ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள், ''உங்களது வீட்டு முற்றங்களைச் சுத்தமாக வைத்திருங்கள்'' (திர்மிதி) என குறிப்பிட்டுள்ளார்கள்.
3. வீட்டின் அழகில், நேர்த்தியில் கவனம் செலுத்துதல்:- "நபியே நீர் கேட்பீராக. அல்லாஹ் தன் அடியார்களுக்காக வெளிப்படுத்தியுள்ள அழகையும், உணவு வகைகளில் தூய்மையனாவற்றையும் தடுத்தது யார்?" (7:32)
4. வீட்டின் வெளிச் சூழலை பசுமையாக, அழகாக வைத்திருத்தல்:- "ஒரு முஸ்லிம் விவசாயம் செய்கிறார். அல்லது செடிகளை நடுகிறார், அதிலிருந்து பறவைகள் அல்லது மனிதர்கள் அல்லது பிராணிகள் ஏதாவது சாப்பிட்டால் அது அந்த மனிதருடைய தர்மமாக கணிக்கப்படுகின்றது" (முஸ்லிம்)
5. பயன்படுத்தும் தளபாடங்கள், உபகரணங்கள், பாத்திரங்கள், இதரபொருட்கள் என்பன இஸ்லாமிய வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல்.

   "தங்க, வெள்ளி பாத்திரங்களில் சாப்பிடுபவரது, அருந்துபவரது வயிற்றில் நிச்சயமாக நரக நெருப்புத் தான் சப்தமிடுகிறது" (முஸ்லிம்)

   பௌதிக அமைவிடம், சூழல் என்பன மாத்திரம் ஒரு சிறந்த குடும்பத்தின் -வீட்டின் உருவாக்கத்துக்குக் காரணமாக அமைய மாட்டாது. ஆதலால் இஸ்லாம் ஒரு நல்ல வீட்டின் உருவாக்கத்துக்கு வேறு பல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

   1. திருமணத் தெரிவின்போது நற்பண்புகளுக்கும் ஈமானுக்கும் முதலிடம் அளிப்பதனைக் கட்டாயப்படுத்தியுள்ளது. 'மார்க்கமுள்ள பெண்ணை அடைந்து கொள்வீராக. இன்றேல் அழிந்து விடுவீர்' (புஹாரி)
   2. கணவன்-மனைவி ஒவ்வொருவரும் அடுத்தவர்கள் மீதான கடமைகளை நிறைவேற்றல்.
   3. பெற்றோர்கள்-பிள்ளைகள் மீதான தமது கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றல்.
   4. பிள்ளைகள் பெற்றோர் மீதான கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றல்
   5. குடும்ப உறவினர்களுக்கிடையில் சுமுகமான உறவைப் பேணல்
   6. அயலவர்களது உரிமைகளை மதித்து நடந்து கொள்ளுதல். 'ஜிப்ரீல் (அலை) அவர்கள், அண்டை வீட்டாருடன் நன்னடத்தையை மேற்கொள்ளும்படி தொடர்ந்து வலியுறுத்திய வண்ணமே இருந்தார்கள். எந்த அளவுக்கென்றால் அவர் அண்டை வீட்டாரை சொத்தில் வாரிசாக்கி விடுவாரோ என்று நான் நினைக்கலானேன்." (புஹாரி)
   7. விருந்தாளிகளது உரிமைகள் மதிக்கப்படல்

      "அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை வைத்திருப்போர் தம் விருந்தாளிகளை உபசரிக்கட்டும்." (முஸ்லிம்)

8. வீட்டு விவகாரங்கள் அனைத்திலும் இஸ்லாமிய வழிகாட்டலை பின்பற்றல்: ''ஈமான் கொண்டவர்களே! உங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்களும், உங்களிலுள்ள பருவமடையாத சிறுவர்களும் மூன்று நேரங்களில் உங்களிடம் அனுமதி கோர வேண்டும்.''(24:58)

வீட்டை இஸ்லாமிய முறைப்படி வழிநடாத்திச் செல்வதற்கு அதன் ஆன்மீக சூழல் பாரிய உதவியை வழங்கும். எனவே அந்த ஆன்மீக சூழலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் கட்டாயம் எடுக்கப்பட வேண்டும். அதற்காக பின்வரும் நடவடிக்கை களை மேற்கொள்ளலாம்.

1. ஐவேளைத் தொழுகைகளை ஜமாஅத்தாக நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துதல். 'ஒரு மனிதன் வழமையாக மஸ்ஜிதுடன் தொடர்பை வைத்திருப்பதனை நீங்கள் கண்டால், அவனுக்கு ஈமான் இருக்கிறது என்பதற்கு நீங்கள் சாட்சிகளாக இருங்கள்' (ஹில்யா)

2. வீட்டில் சுன்னத்துத் தொழுகைகளை நிறைவேற்றுதல்: ''உங்களது ஸுன்னத்து தொழுகைகளில் சிலவற்றை வீட்டிலும் வைத்துக் கொள்ளுங்கள். அவற்றை புதைகுழிகளாக ஆக்கி விடாதீர்கள்'' (முஸ்லிம்)

   ''ஒரு மனிதனுக்கு அல்லாஹ் அருள்பாலிக்கட்டும்.அவன் இரவில் தூக்கத்திலிருந்து எழுந்து தொழுகிறான். தனது மனைவியை எழுப்புகிறான். அவள் எழும்ப மறுக்கின்ற போது அவளது முகத்திலே நீரைத் தெளிக்கிறான். ஒரு பெண்ணுக்கு அல்லாஹ் அருள்பாலிக்கட்டும். அவள் இரவிலே தூக்கத்திலிருந்து எழுந்து, தொழுகின்றாள். பின்னர் தனது கணவனை எழுப்புகிறாள். அவன் எழும்ப மறுத்தால் அவனது முகத்திலே நீரைத் தெளிக்கின்றாள்''. (அபூதாவுத்)

3. வீட்டில் அல்குர்ஆனை வழமையாக ஓதிவருதல்: ''உங்களது வீடுகளை புதை குழிகளாக ஆக்கிக்கொள்ளாதீர்கள். ஸூரா அல்பகரா ஓதப்படும் வீடுகளில் இருந்து ஷைத்தான் வெருண்டோடுகிறான்'' (முஸ்லிம்)

4. இறை சிந்தனையை வளர்த்து விடக்கூடிய நிகழ்ச்சிகளை (திக்ர், தஜ்வீத் வகுப்பு, பயான்) ஏற்பாடு செய்தல். ''அல்லாஹ் ஞாபகப்படுத்தப்படுகின்ற வீட்டுக்கு உதாரணம் உயிருள்ளவன் அல்லாஹ் ஞாபகப்படுத்தப்படாத வீட்டுக்கு உதாரணம் உயிரற்றவன்'' (முஸ்லிம்)

மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து அம்சங்களிலும் ஒரு முஸ்லிம் வீடு கவனம் செலுத்தும் போதே அது ஓர் இஸ்லாமிய வீடாக அமைகின்றது.

- **உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி I** மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் குறித்து இஸ்லாமிய போதனைகளை சுருக்கமாக விளக்குங்கள்.

**படி II** மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து பின்வரும் தலைப்புக்களின் கீழ் தகவல் திரட்ட வழிப்படுத்துங்கள்.
1. ஹலால் ஹராம் விதிமுறைகள்
2. உணவு, உடை வரையறைகள்
3. இஸ்லாமிய வீடு பற்றிய போதனைகள்

**படி III** ஒவ்வொரு குழுவும் திரட்டிய தகவல்களை வகுப்பில் முன்வைக்க வாய்ப்பளியுங்கள்.

**படி IV** அவர்கள் திரட்டிய தகவல்களை குறிப்பேட்டில் பதிவு செய்து கொள்ளும் படி அறிவுறுத்துங்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை:**


- மௌலான ஜமீல் அஹ்லன் நத்வீ, *அண்ணல் நபிகளார் வாழ்வினிலே*, சென்னை, இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்.
- அகார் முஹம்மத். ஏ.ஸி (1996), *சன்மார்க்க சட்ட விளக்கங்கள்*, பேருவல, அல்கலம் பதிப்பகம்.
- மன்ஸூர் எஸ்.எம். (2000), *இஸ்லாத்தில் பெண்கள் உடை*, மாதம்பை, நொலேஜ் பதிப்பகம்.
- முதஹ்ஹிரி முர்தழா, (1996), *இஸ்லாமிய ஹிஜாப்*, கொழும்பு, இஸ்லாமிய சேவைகள் அமைப்பு.

**தேர்ச்சி 9.0 : சமூக வாழ்வுடன் தொடர்பான இஸ்லாமிய சட்ட திட்டங்களையும் போதனைகளையும் அறிந்து அதற்கேற்ப தமது வாழ்வை வடிவமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 9.1:** இஸ்லாத்தில் சமூக வாழ்வின் முக்கியத்துவத்தைப் புரிந்து சமூகக் கடமைகளை நிறைவேற்றுவார்.

**காலம்** : 30 பாடவேளைகள்

**கற்றல் பேறு** :

- இஸ்லாம் சமூக வாழ்க்கைக்கான ஒரு வழிகாட்டி என்பதை விளங்கி மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவார்.
- இஸ்லாமிய சமூக அமைப்பின் தனித்துவத்தை ஏனைய சமூக அமைப்புக்களுடன் ஒப்பிட்டு விளக்கம் தருவார்.
- ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் பிரதிநிதியாகவும், சமூகத்தின் பிரதிநிதியாகவும் அமர்ந்து எவ்வாறு பணியாற்ற முடியுமென்பதை இனங்கண்டு சொற்பொழிவாற்றுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- **சமூக வாழ்வின் முக்கியத்துவம்**

  - பொதுவாக மக்கள் கூட்டத்தை சமூகம் என்ற பெயரால் வழங்குவர். எனினும் சமூகம் என்பது அதைவிட ஆழமானதும் அகலமானதுமான கருத்தைக் கொண்டது.

  சமூகம் என்பது எல்லாவகையான உறவுகளையும் உள்ளடக்கியது. அது தனி மனிதர்களுக்கிடையே ஏற்படும் உறவுகள், உணர்வுகள், ஒழுக்கங்கள் சமூக பிணைப்பு முதலியவைகளைக் குறிப்பதாகும் என சமூகவியலாளர்கள் கூறுவர். இந்தப் பிணைப்பு மதம், மொழி, இடம், இனம் சார்ந்ததாக இருக்கலாம். அல்லது தொழில் சார்ந்ததாகவும் அமையலாம்.

  மற்றொரு வகையில் சொல்வதானால், சமூகம் என்பது ஒரு பெரிய குழுமம் எனக் குறிப்பிடலாம். அங்கு தனிமனிதன் வாழ்க்கைக்கான பயிற்சியையும் அனுபவத்தையும் பெற்றுக்கொள்வான். அது ஏதாவதொரு சொந்தம் அல்லது பொது நன்மையின் கீழ் ஒன்றுபடுவதாக இருக்கும். அவர்களிடையே ஒத்த உணர்வையும் காணலாம்.

  சமூகம் தனிமனிதனின் கூட்டு எனக் கொண்டால், தனிமனிதன் சமூகத்தை உருவாக்குகிறான் அல்லது சமூகம் தனிமனிதனை உருவாக்குகின்றது. அதாவது தனிமனிதன் சமூகத்தினதும், சமூகம் தனிமனிதனதும் செல்வாக்குக்கு உட்படுகின்றது. ஓர் ஆண் ஒரு பெண்ணை மணமுடிக்கின்றான். அவர்களிருவரிலுமிருந்து ஒரு குடும்பம் உருவாகின்றது. பல குடும்பங்கள், இனத்தாலோ, மொழியாலோ, சமயத்தாலோ, கோட்பாட்டாலோ, தொழிலாலோ ஒன்றுபட்டு இணையும்போது சமூகம் உருவாகின்றது. உதாரணமாக யூத சமூகம், தமிழ்ச் சமூகம், கிறிஸ்தவ சமூகம், சோஷலிஸ சமூகம், விவசாய சமூகம் எனக் குறிப்பிடப்படுவதை எடுத்துக்காட்டலாம். எப்படியிருந்தாலும் ஒரு சமூகத்திலிருந்து தான், தனி நபர்கள் உருவாகிறார்கள். அந்தத் தனிநபர்கள் உருவத்தால் மட்டுமன்றி சிந்தனை, வாழ்வுமுறை, கலாசாரம் போன்றவற்றினாலும் ஒன்றுபடுகின்றார்கள். ஒரு சமூகம் அதன் கலாசாரத்தை அதில் தோன்றிய தனி நபர்களுக்கூடாகவே அடுத்த சந்ததிக்கு கடத்துகின்றது. அல்லது ஒவ்வொரு தனிமனிதனும் தான் வாழும் சமூகத்தின் பிரதிநிதியாக இயங்குகின்றான். இதனால்தான் முஸ்லிம் சமூக தொடர்பை உடலின் உறுப்புக்களுக்கும், கட்டடத்தின் கற்களுக்கும் நபி (ஸல்) அவர்கள் உவமித்துக் கூறினார்கள்.

மனிதன் சமூகமாக வாழ்வதை வைத்து, சமூகவியலாளர்கள் அவனை சமூகப் பிராணி என வழங்குவர். இஸ்லாம் மனிதனை விலங்காக ஏற்கவில்லை. அவனை அல்லாஹ்வின் பிரதிநிதி என உயர்த்திக் கூறுகின்றது. மனிதன் இயல்பிலேயே சேர்ந்து வாழ்பவன், அதனைப் புறக்கணிக்க முடியாது. அல்லாஹ் மனிதனுக்குப் பேசக் கற்றுக் கொடுத்தான் (55:2) என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. மனிதனுக்குப் பேச்சாற்றலைக் கொடுத்ததற்கூடாக அவனைச் சேர்ந்து வாழ விட்டுள்ளான். பேச்சு பிரதானமான தொடர்பாடல் ஊடகமாகும்.

எல்லா உயிர்களுக்கும் போலவே மனிதனுக்கும் தேவைகள் உள்ளன. ஆறறிவுடைய வன் என்ற வகையிலும், அல்லாஹ்வுடைய பிரதிநிதி என்ற வகையிலும் மனிதனது தேவைகள் அபரிமிதமானவை. அந்த எல்லாத் தேவைகளையும் மனிதன் தனித்து நின்று பெற்றுக்கொள்ள முடியாது. அதற்கு மற்றவர்களின் உதவி தேவை. பசி, தாகம், பாலுணர்வு போன்ற உடல் தேவைகளாக இருக்கலாம். அன்பு, காப்பு, கணிப்பு போன்ற உளவியல் தேவைகளாக இருக்கலாம். போக்குவரத்து, கல்வி, மருத்துவம் போன்ற சமூக தேவையாகவும் இருக்கலாம். எதுவாக இருந்தாலும் மனிதன் சேர்ந்து வாழ்ந்து மற்றவர்களோடு ஒத்துழைத்து ஒரு வாழ்க்கை முறையை உருவாக்குவதற்கூடாகவே ஒரு சமூக கலாசாரத்தை வெளிப்படுத்துகிறான். மனிதன் சேர்ந்து வாழ்வதற்கூடாகவே உலகில் கலாசாரம், நாகரிகம் என்பன தோன்றியிருக் கின்றன.

நபி (ஸல்) அவர்களின் ஸீறாவிலிருந்து நாம் இதனைக் கற்றுக் கொள்கிறோம். அவர்கள் தங்களின் மக்கா வாழ்க்கைப் பகுதியில் தனிநபர்களை உருவாக்கினார்கள். மதீனா வாழ்க்கைப் பகுதியில் அந்தத் தனிநபர்களை வைத்து ஒரு சமூகத்தை உருவாக்கினார்கள். தனிநபர்களின் கூட்டினால் மட்டும் ஒரு சமூகம் உருவாவதில்லை. அவர்களிடம் ஒத்த தன்மை காணப்பட வேண்டும். அவர்களை ஒன்றிணைக்கும் தலைமைத்துவம் அமைய வேண்டும். அவர்கள் சுதந்திரமாக செயற்படக்கூடிய பிரதேசமொன்று இருக்க வேண்டும். மதீனாவில் இந்த நான்கும் கிடைக்கப்பெற்றதால் தான் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப முடிந்தது.

நபி (ஸல்) அவர்கள் அந்தச் சமூகத்தைத் திட்டமிட்ட அடிப்படையில் கட்டி எழுப்பினார் கள். மதீனா மக்களை சந்தித்த போது முதலாவது அகபா உறுதிமொழியில் நாங் கள் இணைவைக்கமாட்டோம்; களவெடுக்கமாட்டோம்; மானக்கேடான காரியங்களில் ஈடுபடமாட்டோம்; சந்ததிகளை கொலை செய்யமாட்டோம்; அவர் சரியெனக் கூறிய வற்றை பின்பற்றாது விடமாட்டோம் என வாக்களித்தார்கள். இது குற்றமற்ற ஒரு சமூகத்தை உருவாக்கும் அடித்தளமாக அமைந்தது. இதன் பின்னர் முஸ்அப் இப்னு உமைர் (றழி) அவர்களை மதீனாவுக்கு அனுப்பி இஸ்லாத்தைப் பிரசாரம் செய்தபோது கள நிலைமையையும் அவதானிக்கச் செய்தார்கள். இது பிரதேசத்தை மதிப்பீடுசெய்வதாக அமைந்தது. இரண்டாவது அகபா உறுதி மொழியில் நபி (ஸல்) அவர்களைப் பாதுகாப்பதற்கான உத்தரவாதத்தைப் பெற்றார்கள். இது தலைமைத்துவத்தைப் பாதுகாப்பதாக அமைகிறது. ஹிஜ்ரத் சென்றதும் மஸ்ஜித் நபவியை நிர்மாணித்தமை சமூகத்தை ஒன்று கூட்டுவதாகவும், யூதர்களுடனான உடன்படிக்கை சுதந்திர பிரதேசத்தைப் பெறுவதற்கான எத்தனமாகவும் அமைந்தது எனலாம்.

நபி (ஸல்) அவர்கள் திட்டமிட்ட அடிப்படையில் ஒரு சமூகத்தை உருவாக்கியமையை அவதானிக்கும் போது சமூகவாழ்வின் முக்கியத்துவம் மேலும் தெளிவாகின்றது. ஒரு தனிநபரின் சிந்தனையில் உருவான கருத்து, அவருள் மாத்திரம் தேங்கியிருந்தால் இரண்டவாது நபருக்குத் தெரியாமற் போனால் அந்தக் கருத்து அவருடனேயே மறைந்து விடும். இஸ்லாம் மறுமைவரை வாழவேண்டுமாயின் ஒரு நபரில் சார்ந்து

நிற்காமல், சமூகத்தில் சேர்ந்து நிற்க வேண்டுமென்பதை நபியவர்கள் தெரிந்திருந்தார்கள். உலகம் அழியும் வரை வாழ வேண்டிய ஒரு வாழ்க்கைமுறை ஒரு சமூகத்துக்கூடாகவே முன்வைக்கப்பட வேண்டும் என்பதற்காக சமூகத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிக்காக சுமார் பத்து ஆண்டுகளைச் செலவிட்டார்கள். இது சமூகத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது.

ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு கண்ணாடி என்ற ஹதீஸுக்கிணங்க இஸ்லாமிய வாழ்க்கை முறையில் தோன்றும் சரிவுகள், தேய்வுகள், குறைபாடுகள் திருத்தப்படு வதற்கான வாய்ப்பும் சமூக வாழ்வின் மூலமே கிடைக்கின்றது. நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப் பின்னர் சமூகத்தில் தோன்றிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள், நோய்களுக்கான பரிகாரங்கள், வெற்றிடங்களுக்கான நிரப்பல்கள் என்பவற்றுக்காக வெவ்வேறு நபர்களால் தனித்தும், சேர்ந்தும் மேற்கொள்ளப்பட்ட இஜ்திஹாத் வரலாறு இதனை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

- **இஸ்லாமிய சமூக அமைப்பின் சிறப்பம்சங்கள்.**

இஸ்லாமிய சமூக அமைப்பு, திடீரெனத்தோன்றியதோ, காலவோட்டத்தில் தோன்றி வளர்ந்ததோ அல்ல.அது அல்லாஹ்வினாலும் அவனது தூதரினாலும் திட்டமிட்டு கட்டியெழுப்பப்பட்டதாகும். ஆதலால் ஏனைய சமூக அமைப்புக்களிலிருந்து வேறுபடு கின்றது. இஸ்லாம் சமூக அமைப்புக்கென சில அடிப்படைகளை வகுத்திருக்கிறது. அதன் மூல அடிப்படை தௌஹீத் ஆகும்.

சிலர் சமூக அமைப்பின் சிறப்பியல்புகளாக ஈமான், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்ததுவம், நீதி, கூட்டுப்பொறுப்பு, தலைமைத்துவம் என்பவற்றைக் குறிப்பிடுவர், மற்றும் சிலர் சகோதரத்துவம், சமத்துவம், சமூகநீதி, கூட்டுப்பொறுப்பு, தலைமைத் துவம் என்பவற்றை குறிப்பிடுவர். இவை தனித்தனியாகப் பிரித்துக் கூறப்பட்டாலும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தனவாகும். ஒவ்வொருவரும் சகோதரர்களாகக□ கருதிச் செயற்படும்போது, அவர்கள் எல்லோரையும் சமமாக நோக்குவார்கள். அங்கு ஏற்றத்தாழ்வு இடம்பெறாது, சமத்துவம் காணப்படும். சமத்துவம் நிலவும் போது நீதியும் சரிவர இயங்கும். சமூகத்தின் ஒரு பகுதியாரை மன்னித்தும், மற்றொரு பகுதியாரைத் தண்டித்தும் வழங்குகின்ற தீர்ப்பு -பாகுபாடு அங்கு நிலவமாட்டாது. அவர்கள் ஒவ்வொருவரும் கூட்டுப்பொறுப்புடன் நடந்து கொள்வர். இவ்வாறான சமூக நிலை ஒழுங்கான தலைமைத்துவமுள்ள சமூகத்திலேயே காணப்பட முடியும்.

சமூக அமைப்பின் சிறப்பியல்புகளாக வேறு சிலவற்றையும் குறித்துக்காட்ட முடியும். இஸ்லாம் அல்லாஹ்வுக்கும் மனிதனுக்குமிடையிலான தொடர்பை வலுப்படுத்தும் ஆன்மீக மார்க்கமாக மட்டுமன்றி மனிதர்களுக்கிடையிலான தொடர்பை உறுதிப்படுத்து கின்ற ஒரு வாழ்க்கை முறையாகவும் உள்ளது. அதனால்தான் அது இபாதத்துகளிலும் ஏனைய விவகாரங்களிலும் சமூகத்தை மையப்படுத்தியே இயங்கி வருகின்றது.

இஸ்லாத்தின் போதனைகள் தனிநபர்களை நோக்கியதாக அல்லாமல் சமூகத்தை நோக்கியதாகவே வழங்கப்படுகின்றன. அல்குர்ஆன், மனிதர்களே, விசுவாசிகளே என்று விளிப்பதற்கூடாகவே ஒழுக்கங்களையும் வழிமுறைகளையும் முன்வைக்கிறது. இஸ்லாமிய இபாதத்துகளில் முக்கியமானவை கூட்டாகவே நிறைவேற்றப்பட வேண்டுமென ஏவப்பட்டுள்ளது. தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் ஆகிய நான்கும் கூட்டு வணக்கமாகவே இடம் பெறுகின்றன. தொழுகைக்கான முன்னாயத்தங்களும் நடைமுறைகளும் இதற்கு சிறந்த உதாரணங்களாகும். அது மக்களை மஸ்ஜிதின் பக்கம் அழைக்கிறது. அதான் சொல்வதற்கு முஅத்தின், போதனை செய்ய கதீப் தொழுகை நடத்த இமாம், கற்றுக்கொடுக்க முஅல்லிம் என்ற பலரின் ஒத்துழைப்பு

அதற்குத் தேவைப்படுகின்றது. இவர்களை உருவாக்குவது சமூகத்தின் பணியாகும். அவர்களுக்கு பூமியில் ஆட்சி வழங்கினால் தொழுகையை நிலை நாட்டுவார்கள் (22:94) என்று அல்குர்ஆன் சுட்டிக்காட்டுவது நோக்கத்தக்கதாகும்.

முஸ்லிம் சமூகம் அகீதாவை அடிப்படையாகக் கொண்டது. இபாதத்துகள் மூலம் அதனைத் தூய்மைப்படுத்துகின்றது. தெளிவான இஸ்லாமிய சிந்தனை அதனை வழிநடத்துகின்றது. இஸ்லாமிய உணர்வுகள் அதனை இயக்கிக் கொண்டிருக்கின்றன. ஷரீஆவும் இஸ்லாமிய பெறுமானங்களும் அங்கு ஆட்சி செலுத்துகின்றன. ஷூறா எனப்படும் கலந்துரையாடல் அதில் முக்கிய இடம் வகிக்கின்றது. தனிநபர் வாழ்வு தொடர்பான விடயங்களோ, குடும்ப, சமூக விவாகாரங்கள் பற்றிய விடயங்களோ, அரசியல் விடயங்களோ எதுவாயினும் அந்தச் சமூகத்தில் ஷூறா மூலமாகவே தீர்மானிக்கப்படுகின்றன.

அது சகோதரத்துவ சமூகம், சமூகத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் மற்றவரை நேசித்து நடப்பர். பரஸ்பரம் உதவிக் கொள்வர். தமது தேவையைவிட பிறரின் தேவைக்கு முன்னுரிமை வழங்குவர். நன்மையான விடயங்களிலும், தக்வாவிலும் உதவிக் கொள்வர். பரஸ்பரம் அன்பு கொள்வர், இரக்கம் காட்டுவர், கூட்டுப் பொறுப்புடன் செயல்படுவர், பரஸ்பரம் அன்பளிப்புக்களை வழங்குவதன் மூலம் நேசத்தை வளர்த்துக் கொள்வர்.

முஸ்லிம் சமூகத்துக்கென தனியான பண்புகள் காணப்படுகின்றன. இதனால் அது பல சிறப்புப் பெயர்களால் வழங்கப்படுகின்றது. அது ஒரு த.்.வா சமூகம், நன்மையை ஏவுவதும் தீமையை விலக்குவதும் மனிதர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதும் அதன் பிரதான பணியாகும்.

அது நடுநிலமையான சமூகமாகும், எந்த விவகாரத்திலும் அதி தீவிர நிலைப்பாடு களை அது எடுப்பதில்லை. ஆசைகளை அடக்கி துறவியாக வாழச் சொல்லவுமில்லை. மனோ இச்சைக்கு கட்டுப்பட்டு வரையறை மீறி நடக்குமாறு கூறவுமில்லை. மனித இயல்பை ஏற்று அவற்றை அனுபவிக்க இடமளிக்கிறது.

அது ஓர் இலட்சிய சமூகம்; அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்று சுவர்க்கத்தை அடைவது அதன் இலட்சியமாகும். ஆதலால் சுவர்க்கத்துக்கான வழிகளைப் போதிக்கின்றது. நரகத்துக்கான வழிகளை அடைத்துவிடுகின்றது.

அது குர்ஆனிய சமூகம். அல்குர்ஆன் அந்தச் சமூகத்தை வழிநடத்துகின்றது. அது தெய்வீக சமூகம். வஹி அதற்கு வழிகாட்டுகிறது. அது மானுட சமூகம். மனிதனை அவனது வாழ்வை மையப்படுத்தி செயல்படுத்துகின்றது. அது ஒரு பண்பாட்டுச் சமூகம். பாண்பாட்டை விதைப்பதும், வளர்ப்பதும் அதன் பண்பாக உள்ளது. ''நான் நற்குணங்களை பூரணப்படுத்தவே அனுப்பப்பட்டுள்ளேன்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அது ஒரு சர்வதேச சமூகம். அதற்கு நாடு, இனம், மொழி நிறம் போன்ற வேறுபாடுகளில்லை. அதன் போதனைகள் அனைவருக்கும் பொதுவானவை.

இந்நிலையில் முஸ்லிம் சமூகத்துக்கென தனியான பாரம்பரியங்கள் உண்டு. அவை ஸஹாபாக்கள் காலம் முதல் சந்ததி சந்ததியாகக் கடத்தப்பட்டு வருகின்றது. அந்தச் சமூகம் இஷாவுக்கு முன்னர் உறங்கச் செல்லாது. ஸுப்ஹுக்குப் பின்னர் உறங்கவும் மாட்டாது. நேரகாலத்துடன் உறங்கச் செல்லும், அதிகாலையிலேயே எழுந்து விடும். அங்கு ஆண், பெண் கலப்பு இருக்காது. மஹ்ரமிகள் மட்டுமே கலந்திருப்பர். அஜினபிகள் குறிப்பிட்ட வரையறைகளுக்குள் மட்டுமே செயற்படுவர். பயணத்தின் போதும், வீட்டில் தங்கியிருக்கும் போதும் இவை பேணப்படுகின்றன. உணவருந்தல், உடையணிதல், வீடுகளை அமைத்தல், வைபவங்களை நடாத்துதல், பழக்கவழக்கங்கள் முதலியவற்றிலெல்லாம் அந்தப் பாரம்பரியம் கடைப்பிடிக்கப்பட்டு

வருகின்றது.

எளிமை, ஹராம் ஹலால் பேணுதல், உறவினர்களை ஆதரித்தல், ஸலாத்தைப் பரப்புதல், அயலவருக்கு உதவுதல், தாராளத்தன்மையுடன் நடந்து கொள்ளல் சமூகத்தில் நலிவுற்ற மக்களை கைதூக்கிவிடுதல் என்றவாறு அந்தச் சமூகம் வளர்க்கப்படுகின்றது. உடலின் உறுப்புக்களுக்கு உவமிக்கப்பட்டமை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- **சகோதரத்துவம்**

  - இஸ்லாமிய சகோதரத்துவம் கொள்கை வழி சார்ந்தது. நாம் எல்லோரும் ஆதமின் சந்ததியினர் -பிள்ளைகள் என்ற நம்பிக்கைக் கோட்பாடு ஒரு முஸ்லிம் மற்றோரு முஸ்லிமின் சகோதரன் என்ற அல்குர்ஆன், ஸுன்னாவின் வரையறைகள் இதனை நிரூபிக்கின்றன.

    ‘‘ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரனாவார். அவர் மற்றவருக்கு அநியாயம் செய்யமாட்டார். (அநியாயகாரரிடம்) அவரை ஒப்படைக்கவுமாட்டார். யார் தனது சகோதரனின் தேவையை கவனிக்கிறாரோ அவரின் தேவையை அல்லாஹ் கவனிக்கின்றான். யார் ஒரு முஸ்லிமின் கஷ்டத்தை நீக்குகிறாரோ அவரது கஷ்டங்களிலொன்றை அல்லாஹ் (மறுமையில்) நீக்குகிறான். யார் ஒரு முஸ்லிமின் குறையை மறைக்கிறாரோ அல்லாஹ் மறுமையில் அவரது குறையை மறைப்பான்.’’ (புகாரி)

    மற்றொரு ஹதீஸில், அவன் மற்ற முஸ்லிமுக்கு மோசடி செய்யமாட்டான். பொய்சொல்ல மாட்டான். உதவி செய்யாது விட்டுவிடவுமாட்டான். ஒரு முஸ்லிமுக்கு மற்ற முஸ்லிமின் மானமும் பொருளும் இரத்தமும் ஹராமாக்கப்பட்டுள்ளன. ஒரு மனிதன் தனது முஸ்லிமான சகோதரரை அற்பமாகக் கருதுவதே அவன் கெட்டவன் என்பதற்கு போதுமானது. (திர்மிதி) தான் விரும்புவதையே தன் சகோதரனுக்கும் விரும்பாத வரை உங்களில் எவரும் ஈமான் கொண்டவராகமாட்டார். (புகாரி)

    எனவே தான், அந்த சகோதரத்துவத்தை வளர்ப்பதற்காக ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுக்குச் செலுத்த வேண்டிய ஆறு கடமைகளை நபியவர்கள் வலியுறுத்தி யுள்ளார்கள். சந்தித்தால் ஸலாம் கூறுவீராக. விருந்துக்கழைத்தால் அதில் கலந்து கொள்வீராக. ஆலோசனை கேட்டால் அறிவுரை பகர்வீராக. தும்மி அல்ஹம்து லில்லாஹ் என்று சொன்னால் (யர்ஹமுகுமுல்லாஹ் என்று) பதில் கூறுவீராக. நோய் வாய்ப்பட்டால் நலம் விசாரிப்பாயாக. மரணித்தால் ஜனாஸாவைப் பின்தொடர்ந்து செல்வீராக என்று மிக எளிமையான, ஆனால் சகோதரத்துவத்தை வலுப்படுத்தக் கூடிய வழிமுறைகளைக் காட்டித் தந்துள்ளார்கள். ஸகாத், ஸதகா, ஹிபத் போன்றனவும் சகோதரத்துவத்தை வளர்ப்பதற்கான வழிகளாகக் காணப்படுகின்றன.

    ஆயினும் இஸ்லாம் இரத்த உறவிலான சகோதரத்துவத்தை நிராகரிக்கவில்லை. இரத்த உறவைப் பேணி நடக்க வேண்டுமென அது வலியுறுத்துவது மட்டுமன்றி அதனைத் துண்டிப்பது தொடர்பாக எச்சரிக்கையும் விடுக்கின்றது.

- **சமத்துவம்**

  - கலாநிதி ஹமுதா அப்துல் அதீ அவர்கள் சமத்துவம் என்ற சொல்லுக்கு விளக்க மளிக்கும் போது, அச்சொல்லை ஒன்றைப்போல் மற்றொன்று -ஒரே மாதிரியானது என்ற கருத்தைத் தவிர்த்து, அல்லாஹ்வின் முன்னிலையில் அனைவரும் சமம் என்ற கருத்தையே கொள்ளவேண்டும் என்கிறார். மனிதர்கள் வெளித்தோற்றத்தில் ஒரே மாதிரியாக இருந்தாலும் திறமை, தகுதி, விருப்பு, வெறுப்பு போன்றவற்றில்

வேறுபடுவது இயல்பானது. இவைகளில் எதுவும் ஒருவரிலிருந்து மற்றவரை உயர்த்திவிடாது எனக் கூறும் அவர், மனித இனத்தில் இவ்வேறுபாடுகள் ஒருவரை மற்றவரிலும் உயர்த்திவிடாது என்கிறார்.

கலாநிதி ஹமுதாவின் கருத்து பின்வருமாறு விளக்கப்படுகிறது. மனிதன் ஒரே நாட்டில் ஒரே தாயின் வயிற்றில் பிறப்பவனல்லன். ஒரே வகையான சூழலில் வாழ்பவனுமல்லன். அவன் பல நாடுகளில் பல்வகை வெப்ப நிலைகொண்ட பிரதேசங்களில் பலதரப்பட்ட தொழில்களைச்செய்து உழைத்து உண்டு வாழ்கின்றான். எனவே, அவர்களிடம் இன, நிற,மொழி, வர்க்க வேறுபாடுகள் இருப்பது இயல்பானதே. அத்துடன் இயற்கையாகவே அமைந்துவிடுகின்ற உடற் தன்மைகள், அறிவு, ஆற்றல் போன்றவற்றிலான உயர்வு தாழ்வுகள் என்பனவும் வேறுபாடுகளைத் தோற்றுவிப்பதை மறுப்பதற்கில்லை. இவற்றில் எவையும் மனிதன் நினைத்தவாறு அமைவதில்லை. உண்மை இப்படியிருக்க இவற்றின் அடிப்படையில் மனிதனை வேறுபடுத்திப் பார்ப்பது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

இஸ்லாம் வழங்கும் சமத்துவம் கீழ்வரும் அடிப்படைகளைக் கொண்டதாக காணப்படும்.

1. மனிதர்கள் யாவரையும் மிக உயர்வான அல்லாஹ்வே படைத்தான்.
2. மனிதர்கள் எல்லோரும் ஆதம்-ஹவ்வா என்போரின் பிள்ளைகளாவர்.
3. அல்லாஹ் எல்லாப் படைப்புக்களையும் நீதியுடனும், நேர்மையுடனும் நடத்துவான். அனைத்தும் அவனது படைப்புகள்; அவனது அதிகாரத்தில் இருப்பவர்கள்; அவனுக்கு உரியவர்கள்.
4. எந்த மனிதனும் பிறக்கும்போதோ இறக்கும்போதோ எதையும் கொண்டு வருபவர்களோ, கொண்டு செல்பவர்களோ அல்லர். அந்த வகையில் சமமானவர்கள்.
5. அல்லாஹ் மனிதர்களை அவர்களது செயல்களைக் கொண்டே தீர்மானிக்கின்றான்.
6. அல்லாஹ் மனிதனுக்கு ''மனிதன்'' என்ற வகையில் உயர்ந்த அந்தஸ்தை வழங்கியுள்ளான். அவன் ஏனைய படைப்புகளில் உயர்ந்தவன், அழகானவன், ஏற்றத்தாழ்வற்றவன்.

அல்குர்ஆனும் ஸுன்னாவும் இஸ்லாத்தின் சமத்துவக் கோட்பாட்டை மிகத் தெளிவாகவே முன்வைக்கின்றன. ''மனிதர்களே நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்து தான் படைத்தோம்'' (49:13) என்று குறிப்பிட்டு சமநிலையின் அடித்தளத்தை அல்குர்ஆன் எடுத்துக்காட்டுகின்றது. இதனை நபி (ஸல்) அவர்களின் ஹஜ்ஜதுல் விதா பிரசங்கம் இன்னும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

''மக்களே, உங்கள் இறைவன் ஒருவனே, உங்கள் ஆதித் தந்தையும் ஒருவரே நீங்கள் அனைவரும் ஆதமின் சந்ததியினர். ஆதமோ மண்ணினால் படைக்கப்பட்டவர். அறிந்து கொள்ளுங்கள்: ஓர் அறபிக்கு அறபியல்லாதவர் மீதோ, அறபியல்லாதவருக்கு அறபியின் மீதோ, சிவப்பு நிறத்தவருக்கு கறுப்பு நிறத்தவர் மீதோ, கறுப்பு நிறத்தவருக்கு சிவப்பு நிறத்தவர் மீதோ எந்த வழியிலும் மேன்மையோ, சிறப்போ கிடையாது. நிச்சயமாக உங்களில் மேலானவர் அல்லாஹ்வின் மீது அதிக அச்சம் (தக்வா) கொண்டவரே, என்று குறிப்பிட்டார்கள்.

அபூதர் (ரழி) அவர்கள், பிலால் (ரழி) அவர்களைப் பார்த்து 'கறுப்பியின மகனே' என விளித்தபோது, அபூதர் (ரழி) அவர்களிடமிருந்து இன்னும் ஜாஹிலிய்யத் நீங்க வில்லை எனக் கூறி நபி (ஸல்) அவர்கள் கடிந்து கொண்டார்கள். இதைச் செவியுற்ற அபூதர் (ரழி) அவர்கள், பிலால் அவர்களே என்னை மன்னித்து விடுங்கள்;

உங்கள் கால்களால் என் முகத்தை மிதியுங்கள் என கண்ணீர் மல்கக் கேட்டுக் கொண்டார்கள். இது, நிறவேறுபாடு காண்பிக்கக்கூடாது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

எனவே இனம், மொழி, நிறம், பிரதேசம் போன்ற வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளாது அனைவரையும் சமநிலையில் நோக்க வேண்டுமென இஸ்லாம் கேட்டுக் கொள்கின்றது. சமத்துவம் ஈமானின் ஒரு பகுதியாகும். ஒவ்வொரு முஸ்லிமும் மற்றவர்கள் தம்மைச் சமமாக நடத்த வேண்டுமென எதிர்பார்க்கின்றான் தானும் மற்றவர்களை அப்படியே நடத்துகின்றான்.

- **சமூக நீதி**
  - இஸ்லாத்திற்கு முந்திய சமூகங்களில் சமூக நீதி தெளிவின்றிக் காணப்பட்டது. மனிதன் மனிதனுக்கு அடிமைப்பட்டு வாழும் சூழலே முழுக்க முழுக்கக் காணப்பட்டது. இஸ்லாத்தில் மனிதனின் பலவீனங்களை அறிந்த அல்லாஹ்வே உயர்ந்த படைப்பாகிய மனிதன் சீரும் சிறப்புமாக வாழ்வதற்கான வழியைக் காட்டியுள்ளான்.

“விசுவாசிகளே! நீங்கள் நீதத்தின் மீதே உறுதியாக நிலைத்திருங்கள். (நீங்கள் சாட்சி கூறினால், அது ) உங்களுக்கோ, அல்லது உங்கள் பெற்றோர்களுக்கோ அல்லது (உங்கள்) நெருங்கிய உறவினர்களுக்கோ விரோதமாக இருந்த போதிலும், அல்லாஹ்வுக்காக (உண்மையையே) சாட்சி கூறுங்கள்… (4:135)

“நீதியாக நடப்பவர்கள் அல்லாஹ்விடத்தில் ஒளியினாலான மிம்பர்களில் இருப்பார்கள். அவர்கள் தமது ஆட்சியில், குடும்பத்தில், தங்களின் பொறுப்பில் இருந்தவர்களுடன் நீதியாக நடந்து கொண்டிருப்பார்கள்.” (முஸ்லிம்)

குர்ஆன், சுன்னா தெளிவாக்கியுள்ள இறைச் சட்டங்கள் எல்லோருக்கும் பொது வானவை. “உங்களுக்கு முன்னால் சென்றவர்கள் ஏன் அழிந்து போனார்கள் என்றால், அவர்கள் கீழ் மட்ட மக்களின் மீது சட்டங்களைச் செயற்படுத்துவார்கள். உயர் குடியினரை விட்டுவிடுவார்கள். யார் கையில் முஹம்மதின் உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக முஹம்மதின் மகள் பாத்திமா திருடினாலும் நான் அவள் கையை வெட்டுவேன்” ( புஹாரி)

**ரசூல்மார்கள் நீதி செலுத்தும் பொருட்டே அனுப்பப்பட்டுள்ளனர்**

அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. “நிச்சயமாக நாம் நம்முடைய தூதர்களை ( அத்தாட்சி களில் தெளிவானவற்றுடன் அனுப்பிவைத்தோம். அவர்களுடன் வேதத்தையும், (நீதத்தின்) நிறை கோலையும் மனிதர்கள் நீதமாக நடந்து வரும் பொருட்டு அருளினோம்.” (57:25)

**அல்லாஹ் மனிதர்களுக்கு ஓர் அணுவளவும் தீங்கிழைப்பதில்லை.**

“நிச்சயமாக அல்லாஹ் மனிதர்களுக்கு ஓர் அணுவளவும் தீங்கிழைப்பதில்லை. எனினும், மனிதர்கள் (தீவினைகளைச் செய்து) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொள்கின்றனர்.” (10:44 )

“எனது அடியார்களே நான் அநியாயம் செய்வதை என் மீது ஹராமாக்கியுள்ளேன். நீங்களும் ஒருவருக்கொருவர் அநியாயம் செய்து கொள்ளாதீர்கள்.” (முஸ்லிம்)

“நிச்சயமாக அல்லாஹ், எவருக்கும், அவர்களுடைய பாவத்திற்கு அதிகமான தண்டனையைக் கொடுத்து ஓர் அணுவளவும் அநியாயம் செய்வதில்லை. ஆயினும், (ஓர் அணுவளவு) நன்மை இருந்தால் (கூட) அதனை இரட்டித்து தனது அருளைக் கொண்டு, (பின்னும் அதற்கு) மகத்தான கூலியைக் கொடுக்கின்றான்.” (4:40)

இவையனைத்தும் தாமும் நீதியாக நடந்து, மனித சமுதாயத்தையும் நீதியாக நடந்துகொள்ள வேண்டும் என அல்லாஹ்வும் அவனது தூதரும் அறிவுறுத்துவதாக உள்ளன.

**இஸ்லாம் வலியுறுத்தும் சமூக நீதி**

– வளங்களைப் பங்கீடு செய்தல்.
– சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் சமமான சந்தர்ப்பங்கள் வழங்கல்.
– அதிகாரம், சக்தியுடையோர் தொழிலாளர்களுக்கு அவர்களின் உழைப்புக்குரிய கூலியை உரிய நேரத்தில் கொடுத்தல். அவர்களைச் சுரண்டி வாழாதிருத்தல்.
– வறுமையில் உள்ளோர்களின் நிலைமைகளை மேம்படுத்த செல்வந்தர்கள், தொழில் வழங்குனர்கள் நீதியாக நடத்தல்.

இது விடயத்தில் இஸ்லாம் மக்காக் காலப்பிரிவிலிருந்தே கவனம் செலுத்தி வந்துள்ளமையும் அதற்கு அதிக இடத்தையும் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஏழைகளுக்கு உணவளிக்காதோர் நரகில் இருப்பார்கள் என எச்சரித்தல். "அதற்கவர்கள், நாங்கள் தொழக்கூடியவர்களில் இல்லை. நாங்கள் ஏழைகளுக்கு ஆகாரம் அளிக்கவில்லை." (84: 3-4)

"(நபியே! மறுமையின்) தீர்ப்பைப் பொய்யாக்குவோனை நீர் (கவனித்துப்) பார்த்தீரா? (திக்கற்ற) அநாதைகளை வெருட்டுபவன் அவன்தான். அவன் ஏழைகளுக்கு (ஆகாரமளிக்காததுடன்,) ஆகாரமளிக்கும் படி (பிறரைத்) தூண்டுவதுமில்லை." (107: 1-3)

**எதிரிகளுடன் நீதி**

அல்குர்ஆன் நீதி செலுத்தும் விடயத்தில் தனது எதிரிகளுடனும் நீதியாக நடந்து கொள்ளுமாறு கட்டளையிடுகின்றது. "விசுவாசிகளே! நீதத்தை நிலைநாட்டுவதில், அல்லாஹ்வுக்காக நீங்கள் உறுதியான சாட்சிகளாக இருங்கள். மக்களில் ஒருசாரார் மீது (உங்களுக்கு)ள்ள துவேஷம், (அவர்களுக்கு) அக்கிரமம் செய்யும்படி, உங்களைத் தூண்டாதிருக்கவும். (எவ்வளவு குரோதமிருந்த போதிலும்,) நீங்கள் நீதியே செலுத்துங்கள். அதுதான் பரிசுத்தத் தன்மைக்கு மிகவும் நெருங்கியது. (எத்தகைய சந்தர்ப்பங்களிலும்) நீங்கள் அல்லாஹ்வுக்கே பயப்படுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவனாக இருக்கின்றான்." (5: 8) அதாவது எந்த ஒரு சமூகத்தின் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்போ அல்லது எதிர்ப்போ அவர்கள் மீது நீதியாக நடந்து கொள்வதிலிருந்து உங்களைத் தடுக்கக் கூடாது என இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.

**குடும்பத்தவர்களுடன் நீதியாக நடத்தல்:**

இஸ்லாம் மனிதர்களுக்கு மத்தியிலுள்ள உறவு முறைகளையும், அவற்றின் தராதரங்களையும் முழுமையாகக் கவனிக்கிறது. அதனடிப்படையில் அவரவர்களின் உரிமைகளையும், அவர்களிடத்து நீதியாக நடக்க வேண்டும் என்பதையும் நிர்ணயிக்கின்றது. இவர்களுடன் இரத்த பந்த உறவினர்கள் யாரோ அவர்களுடன் மாத்திரம் நீதியாக நடந்து கொள்ளாது எவ்வித உறவும் பந்தமும் இல்லாத மக்களுடனும் அவன் நீதியாக நடந்திட வேண்டும் என எதிர்பார்க்கின்றது.

தாய் தந்தையைப் பொறுத்தவரையில் இவர்கள் விடயத்தில் மிகவும் நீதியாக நடந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றது. "தாய் தந்தையுடன் நல்லவிதமாய் அன்புடன் நடந்து கொள்ளுங்கள்" (4: 36)

அல்லாஹ் மனிதன் மீது அதிகளவு பேருபகாரங்கள் புரிந்திருக்கின்றான். அதன் பிறகு தாய்தந்தையரின் உபகாரங்கள் வருகின்றன. ஒரு மனிதனின் சகல விடயங்களிலும் பெற்றோரின் பங்களிப்பே மிக அதிகமாகும். அவர்களின் பங்களிப்பு இல்லாத போது அவனால் உயர்ந்த முன்னேற்றங்களை அடைய முடியாது. அவர்களின் தியாகத்திற்கு நிகரானதொன்றை மனித சமுதாயத்தில் காணமுடியாது. அவர்கள் செய்யும் பேருபகாரங்களில் அல்லாஹ்வின் பேருபகாரங்களின் பிரதிபலிப்புக் காணப்படுகின்றது. அல்லாஹ்வை வணங்கி வழிபடுவது அவனுக்கு செய்யும் பகரமாகும். பெற்றோரைப் பொறுத்தவரையில் அவர்களுடன் நீதியாய், அன்பாதரவாய் நடப்பதுவே அவர்களுக்குச் செய்யும் பேருபகாரமாகும். அல்குர்ஆனில் ‘‘எனக்கும் நன்றி செலுத்துவீராக, உம்முடைய தாய்தந்தையருக்கும் நன்றி செலுத்துவீராக! மேலும் என்னிடமே திரும்பி வரவேண்டியுள்ளது.’’ (31: 14)

எனவே பெற்றோரின் விடயத்தில் சமூக நீதி எனும் அடிப்படையில் மிகக் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இதனுடன் உறவினர்களுடன் நீதியாக நடப்பதுவும் மிக வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**கணவன், மனைவியிடத்தே நீதி :**

கணவன் மனைவி இருவரும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் நீதியாக நடந்து கொள்ள வேண்டும் என கண்டிப்பான உத்தரவை குர்ஆனும், ஹதீஸும் விடுத்துள்ளன.

ரசூல் (ஸல்)அவர்கள் இறுதி ஹஜ்ஜின்போது ‘‘ஆண்கள் பெண்களுக்கு செலுத்த வேண்டிய கடமைகளும், பெண்கள் ஆண்களுக்கு செலுத்த வேண்டிய கடமைகளும் இருக்கின்றன’’ எனக்குறிப்பிட்டதைக் காணலாம். நம்பிக்கையாக நடத்தல், அன்பு, ஒழுக்கமாக நடத்தல் போன்றவை பற்றி இங்கு வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

மேலும் மனைவியின் விடயத்தில் கணவனின் நீதி நெறிகளாக அவளுடன் நல்ல முறையில் நடத்தல், அவளுக்கு உணவு, உடை, உறையுள் என்பன வழங்குவதுடன், அவளின் விடயத்தில் அதிருப்தி கண்டால் குர்ஆன், சுன்னாவின் கட்டளைகளுக்கேற்ப நடந்து கொள்வதுமாகும். ரசூல் (ஸல்) அவர்கள் கூறியதாக முஆவியா (ரழி) அவர்கள் கூறினார்கள். நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ‘‘ஒரு மனைவிக்கு தன் கணவன் மீது என்னென்ன உரிமைகள் உள்ளன என வினவினேன். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ‘‘நீங்கள் உண்ணும்போது அவளையும் உண்ணச் செய்யுங்கள், உடை வாங்கும்போது அவளுக்கும் உடை வாங்கிக் கொடுங்கள், அவளது முகத்தில் அடிக்காதீர்கள். அவளைச் சபிக்காதீர்கள், அவளுடன் தொடர்பை விட்டுவிட நேர்ந்தால் வீட்டில் மட்டும் தொடர்பைத் துண்டித்துத் கொள்ளுங்கள். இவையே உம் மனைவிக்கு இருக்கும் உரிமைகள்.’’ (அபூதாவுத்)

இங்கு மனைவியுடனான நீதி வலியுறுத்தப்படுவது போல் மனைவியும் கணவன் விடயத்தில் நீதியாக நடந்து கொள்ளல் வேண்டும். அல்லாஹ்வுக்கு மாற்றமில்லாத விடயங்களில் அவனுக்குக் கட்டுப்படுதல், அவனது கண்ணியத்தைப் பாதுகாத்து அதற்காக செயற்படுதல், அவனது பிள்ளைகள், செல்வங்களையும், வீட்டையும் பாதுகாத்தல், அவனது அனுமதியின்றி வீட்டை விட்டு வெளியே செல்லாதிருத்தல், பார்வையைத் தாழ்த்திக் கொள்ளல், சத்தத்தைத் தாழ்த்துதல், நாவைப் பாதுகாத்தல், அவனது உறவினர்களுடன் நீதியாகப் பழகுதல் போன்றன இதில் அடங்கும். ரசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள் ‘‘ஒரு பெண் ஐவேளைத் தொழுகையும் தொழுது, ரமழான் மாதத்தில் நோன்பும் நோற்று வருகின்றாள். மேலும் தன் கற்பைப் பாதுகாத்து கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றாள். இவ்வாறு நடப்பின், அவள் சுவனத்து வாயில்களில் எந்த வாயிலை விரும்புகின்றாளோ, அதன் வழியாக சுவனத்தில் நுழையட்டும்.’’ (மிஷ்காத்)

இவ்வாறு அல்குர்ஆனும், ஹதீஸும் கணவன், மனைவியிடத்து நீதியாக நடப்பது பற்றி வலியுறுத்தியுள்ளன. அத்துடன் குழந்தைகளின் விடயமும் கூறப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

**பலவீனமானவர்களுடனான நீதி**

ஜாஹிலிய்ய சமூகத்தில் பலவீனர்கள் அடக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டார்கள். நீதியாக நடப்போருக்கு மகத்தான கூலியுண்டென்று இஸ்லாம் குறிப்பிடுகின்றது. பசித்தோருக்கு உணவளிக்கவும், நோயாளிக்கு நிவாரணம் வழங்கவும், ஆடையற்றோருக்கும் ஆடை வழங்கவும், தேவையுடையோருக்கு போதுமான வசதிகள் செய்து கொடுக்கவும் இஸ்லாம் பணிக்கின்றது. உணவு, உடை, உறையுள், அவரவர்களுக்குத் தேவையான வற்றை வீண் விரயம் செய்யாது உரிய நபருக்கும், அவரில் தங்கி வாழ்வோருக்கும் வசதி செய்து கொடுக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இமாம் நவவி அல்மஜ்மூ∴)

**பொருளாதார நீதி**

சமுதாயத்தில் பொருளாதாரச் சிக்கல்களின் பிடியிலுள்ளவர்களுக்கு பொருளுதவி செய்வது மிக அவசியம்.

பொதுவாக அல்குர்ஆன் ஸகாத்துடன் தொழுகையையும், இறைவழியில் செலவு செய்வதையும் இணைத்துக் கூறியிருப்பது பொருளாதார நீதி பேணப்படவேண்டும் என்பதற்கு சான்றாகும். அல்லாஹ்வை நினைவு கூரும் எந்த மனிதனும் இவ்விடயத்தில் அலட்சியமாக இருக்கக் கூடாது என்பதையே இது காட்டுகின்றது. அல்குர்ஆனில் “அவர்களின் செல்வங்களில் யாசிப்பவருக்கும், இல்லாதோருக்கும் உரிமை இருக்கின்றது.” (51: 19) “அவர்களின் செல்வங்களில் நிர்ணயிக்கப்பட்ட உரிமை இருக்கின்றது” (70: 24-25) எனக் கூறப்படுகின்றன.

சொத்துப்பங்கீட்டில் நீதியாக செயல்பட இஸ்லாம் பல வழிகளை வைத்துள்ளது.

1. வாரிசுச் சொத்துக்களைப் பங்கிடுதல்
2. ஸகாத், ஸதகா, ஹிபத்
3. பொது நன்மைகளைப் பேணுவதற்காக செல்வங்களின் மீது இஸ்லாமிய அரசு வரி விதித்தல்

செல்வம் மக்களிடையே நீதியாகப் பகிரப்படுவதற்கு இஸ்லாம் வழிகாட்டுகின்றது. செல்வம் ஓரிடத்தில் தேங்கி நிற்பதை இஸ்லாம் விரும்பவில்லை. அது பலருக்கும் பயன்பட வேண்டுமென்றே விரும்புகின்றது. சமூகத்தினதும், மக்களினதும் நலன் கருதி செல்வத்தின் ஒரு பகுதியை அறவிட கலீபாவுக்கு அதிகாரம் வழங்குகின்றது. வறியோரின் தரத்தை உயர்த்துகின்றது. பணத்தை செல்வந்தனிடமும், வறியவனிட மும் ஊடாட விடுகிறது. அது பணக்காரரின் கையிலே ஒட்டிக்கொள்ள விடவில்லை. “உங்களில் செல்வந்தருக்கிடையே மாத்திரம் சுற்றாமலிருக்க (இப்படிக் கட்டளையிடுகின்றான்.” (59: 7)

- **கூட்டுப் பொறுப்பு**
  - ரசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். “மனித குலம் முழுவதும் அல்லாஹ்வின் குடும்பமாகும். மனித குலத்திற்கு அதிக நன்மை செய்பவர்தான் அல்லாஹ்விடத்தில் அதிக அன்புக்குரியவராவார்.” (மிஷ்காத்)
  - ஒவ்வொரு தனிமனிதனும் துன்ப, துயரங்களின் போது யாருடைய உதவியும் இல்லாது தனியே நின்று பரிதவித்துக் கொண்டிருக்குமாறு விடப்படக் கூடாது.

அவரது துக்கங்கள் துயரங்கள் முடிந்தளவு பிறரால் உணரப்பட்டு முடிந்தளவு அவற்றை அகற்ற முயற்சி செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "எவன் மனிதர்கள் மீது கருணை புரிவதில்லையோ அத்தகையவன் மீது இறைவன் கருணை புரிவதில்லை." (புஹாரி)

இஸ்லாம் தனி மனிதர்களின் முக்கியத்துவத்தைக் குறைக்கவுமில்லை. குடும்பத்தைப் புறக்கணிக்கவுமில்லை. அத்துடன் அவன் எந்த சமூகத்தின் அங்கமோ அதன் உரிமைக்காகப் பாடுபடுவதும் அவனது பொறுப்பாகும். இந்த உணர்வை இஸ்லாம் அவனுள் ஏற்படுத்துகிறது. அந்த சமூகத்தை ஆக்கபூர்வமாக வளர்க்க முற்படுவதும் அந்த சமூகத்திற்குச் செய்யும் தொண்டாகும்.

- இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அனைவரும் ஒரு உம்மத் என்ற இலட்சியக் குழுவினராவர். அவர்களுக்கிடையில் இறைமார்க்கத்தின் அடிப்படையிலான சகோதரத்துவம் காணப்படுகின்றது. இரத்த உறவு இல்லாதிருப்பினும் அவர்கள் ஒருவருக்கொருவர் சகோதரர்களே. அவர்களின் உரிமைகளை அவர்களில் இருந்து பறித்துவிட முடியாது. நலம் நாடுதல், அன்பு, பாசம், அவசரகால சேவை, அனர்த்தங் களின் போது உதவுதல், பரிவோடு நடத்தல் அனைத்தும் இதில் அடங்கும்.
- ஒரு நபிமொழியில் இதன் சிறப்புக்கள் பற்றி விளக்கப்படுகின்றது. நபி(ஸல்) அவர்கள் அறிவுறுத்தியிருக்கின்றார்கள். "ஓர் இறை விசுவாசிக்கு உலகில் ஏற்படும் துன்பங்களில் ஏதாவதொரு துன்பத்தை எவர் களைகிறாரோ அல்லாஹ் மறுமை நாளில் அவருக்கு ஏற்படும் துன்பங்களில் ஒரு துன்பத்தை அகற்றுவான். துன்பத்தில் சிக்கி வாடும் ஒருவரை அதிலிருந்து விடுவிக்க எவரொருவர் உதவுகிறாரோ இம்மை மறுமையில் அவருக்கு ஏற்படும் துன்பங்களில் இருந்து அவரை விடுவிக்க அல்லாஹ் வழி செய்வான். ஒரு முஸ்லிமின் குற்றங்குறைகளை ஒருவர் மறைத்தால், அவருடைய குற்றங்குறைகளை இவ்வுலகிலும், மறுமையிலும் அல்லாஹ் மறைத்திடுவான். ஓர் அடியான் தனது சகோதரருக்கு உதவி செய்வதில் ஈடுபட்டிருக்கும் வரை அல்லாஹ் அவருக்கு உதவி செய்துகொண்டிருப்பான்." (முஸ்லிம்)

  இந்த ஹதீஸ் ஒரு முஸ்லிமின் விடயத்தில் கூட்டாகச் செயல்படுவதன் சிறப்பை விவரிக்கின்றது. இறைநம்பிக்கை கொண்டோர் பரஸ்பரம் இணைந்து ஓர் உடல் போல் திகழ வேண்டும். அவ்வுடலின் ஓர் உறுப்பு துயருறுவதை முழு உடலும் உணர்ந்து அதை அகற்ற முயல்கிறது. அத்தகைய தன்மையுடன் இந்த சமூகம் இயங்க வேண்டும் என இஸ்லாம் விரும்புகின்றது. மேலும் இஸ்லாம் பரஸ்பர ஒத்துழைப்பின் மீதும், கூட்டுப் பொறுப்பின் மீதும் சமூகத்தைக் கட்டியெழுப்புகின்றது.

  ஒரு சாதாரண மனிதனைப் பொறுத்தவரையில் அவன் தனது குடும்ப உறுப்பினர்களான பெற்றோர், மனைவி மக்கள், சகோதரர்கள், உறவினர்கள் விடயத்தில் கூட்டுப் பொறுப்பை நிறைவேற்ற கடமைப்பட்டவனாவான். இவர்கள் மீதான பொறுப்புக்களாக அவர்களுக்கு நல்லவற்றை ஏவி தீயதைத் தடுத்து, நல்வழிகாட்ட வேண்டியுள்ளான். தனது பிள்ளைகள் விடயத்தில் அவர்கள் சிறந்த பண்பாடுகள், ஒழுக்க விழுமியங்கள் கொண்டவர்களாக வளர்க்கப்படவேண்டிய பொறுப்புடையவனாவான்.

### கூட்டுப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகள்

- குடும்பத்திற்கும், உறவினர்களுக்கும் செலவு செய்தல் : வசதியுள்ளோர் தனது குடும்பத்துக்கும், வசதியற்ற உறவினருக்கும் அவர் இரத்த உறவு என்பதனாலும், தனது கடமை என்ற வகையிலும் இதனைச் செய்ய வேண்டும். அல்குர்ஆன் இது பற்றிக் கூறியுள்ளதாவது "பந்துக்களுக்கும், ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் அவரவர்களுடைய பாத்தியதைகளைக் கொடுத்து வரவும்" (17: 26)

- கூட்டுக் கடமைகள், பர்ளு கிபாயாக்கள், பொது நலப் பணிகள் போன்றவற்றை நிறைவேற்றல்.
- ஸகாத், ஸதகா, நன்கொடை, வக்ப், வஸிய்யத், உழ்ஹிய்யா, அகீகா போன்றவற்றை நிறைவேற்றுவதன் மூலமும் சமூகத்திற்கான கூட்டுப் பொறுப்பினை நிறைவேற்றல்.
- மனிதர்களுக்கு மத்தியில் சமாதானம் செய்து வைத்தல் :

  மக்களுக்கு மத்தியில் பரஸ்பரம் ஏற்படும் வேற்றுமைகளின் போது சமாதானம் செய்து வைத்தலும் ஒரு கூட்டுப் பொறுப்பாகும். இருவருக்கிடையிலான எதிர்ப்புகள் பல எதிரிகளிடத்தும் பகைமையாக மாறின் அது குரோதமாகவும், போட்டியாகவும் ஏன்? இரத்தம் சிந்தி யுத்தம் செய்யும் நிலைக்கே செல்லலாம் என்ற வகையில் அல்குர்ஆன் இதனை வலிறுத்தியுள்ளது. ''விசுவாசிகள் (யாவரும்) நிச்சயமாக சகோதரர்களே! ஆகவே உங்கள் சகோதரர்களுக்கிடையில் (ஒழுங்கையும் சமாதானத்தையும் நிலை நிறுத்தி) சுமுகமாக இருங்கள். (இதில்) அல்லாஹ்வுக்குப் பயந்து நடவுங்கள். (இதனால்) அவனுடைய கிருபையைப் பெறலாம்.'' (49: 9)

  இவை போன்று பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவி செய்தல், விட்டுக் கொடுத்தல், வாழ்த்துதல், கல்வி புகட்டுதல், கடன் வழங்குதல், இரவல் கொடுத்தல், வாணிபத்தில் கூட்டுச் சேர்த்தல், விவசாயத்தில் பங்குதாரராதல், ஆலோசனை வழங்கல், நல்லதை ஏவுதல், தீயதைத் தடுத்தல் போன்றனவும் அடங்கும்.

- **தலைமைத்துவம்**

  - அரபு மொழியில் ''அல்கியாதா'' எனும் பதப் பிரயோகம் தலைமைத்துவம் எனும் கருத்தில் பயன்படுத்தப்படுகின்றது. பரிபாஷையில் ''அல்-கியாதத்'' என்பது ''மனித இயல்போடு ஒன்றிச் செல்கின்ற, மனித நடத்தையில் தாக்கம் செலுத்துகின்ற, குறித்த இலக்கின்பால் வழிநடத்திச் செல்கின்ற ஒரு கலை'' என அழைக்கப்படுகின்றது.

    மேலும் ''தலைமைத்துவம் என்பது வற்புறுத்தலில்லாத முறைகளினூடாக மக்களைச் செயற்பட ஊக்குவிப்பதன் மூலம் அவர்களை ஒரு திட்டமிட்ட திசையில் செலுத்தும் செயன் முறையாகும்.'' எனவும் குறிப்பிடப்படுகின்றது.

**தலைமைத்துவத்தின் அவசியம்**

- ''விசுவாசிகளே நீங்கள் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள், அவ்வாறே அல்லாஹ் வினுடைய தூதருக்கும், உங்கள் தலைவர்களுக்கும் கட்டுப்படுங்கள்.''

  ''விசுவாசிகளே! உங்களுக்குள் யாதொரு விடயத்தில் பிணக்கு ஏற்பட்டால் அதனை அல்லாஹ்விடமும் அவனது தூதரிடமும் ஒப்படைத்து விடுங்கள். மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் விசுவாசம் கொண்டவர்களாக இருந்தால் அவர்களுடைய தீர்ப்பை நீங்கள் திருப்தியாகவே ஒப்புக்கொள்ளுங்கள். இதுதான் நன்மையாகவும், மிக அழகான முடிவாகவும் இருக்கும்.'' (4: 59)

  தனித்துச் செயற்படுவதையும், பிரிந்து வாழ்வதையும் கண்டிக்கும் இஸ்லாம் சமூகமாக வாழ தலைமை அவசியம் என்பதை வலியுறுத்துகின்றது.

- ''தெளிவான ஆதாரங்கள் வந்த பிறகும், கருத்து முரண்பட்டு பிரிந்து நின்றவர்கள் போல் இருக்காதீர்கள். அவர்களுக்கு சில முகங்கள் கறுத்தும், சில முகங்கள் வெளிறியும் போகும் நாளில் கடுமையான வேதனை காணப்படுகின்றது.'' (3:105-106)

  ''உங்களில் மூன்று பேர் ஒரு பயணம் மேற்கொண்டாலும் ஒருவரைத் தலைவராக நியமித்துக்கொள்ளட்டும்.'' (புஹாரி)

“உமர்(ரழி) அவர்கள் கூறினார்கள்: தலைமைத்துவமின்றி கூட்டமைப்பு இல்லை, அடிபணிதல் இன்றி தலைமைத்துவம் இல்லை...” (தாரமி)

- “நபியவர்கள் கூறினார்கள்: கைகால்கள் துண்டிக்கப்பட்ட ஓர் அடிமை, உங்களுக்கு தலைவராக நியமிக்கப்பட்டு, அவர் அல்குர்ஆனின் மூலம் உங்களை ஆள்வார் எனின் அவருக்கு நீங்கள் கட்டுப்படுங்கள்.”
- நல்ல தலைமைத்துவம் மக்களை உரிய திசையிலே செலுத்த வல்லதாக இருக்கும். அத்திசையானது இஸ்லாத்தை, சாந்தியை உலகளாவிய ரீதியில் எத்தி வைப்பது போன்று பொதுத் தன்மையுடையதாக இருக்கலாம். அல்லது குறித்ததொரு விடயம் சம்பந்தமாக மாநாடொன்றை நடத்துவது போன்று சிறப்புத் தன்மையுடையதாக இருக்கலாம். எப்படியிருப்பினும் கைக்கொள்ளும் வழிமுறைகளும், அடையப் போகும் முடிவுகளும் சம்பந்தப்பட்ட மக்களின் நலனுக்கு நீண்ட கால ரீதியில் துணையாக அமைதல் வேண்டும். மேற்குறித்த அல்குர்ஆன் வசனங்களும், ஹதீஸ்களும் முஸ்லிம்கள் தங்களது விவகாரங்கள் சீராக இடம்பெற தங்களுக்குள் ஒரு தலைமைத்துவத்தை ஏற்படுத்திக் கொள்ளும்படியும், அவ்வாறு தலைமைத்துவம் தோன்றும்போது அதற்குக் கட்டுப்படுமாறும், தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படுவது அல்லாஹ், ரஸூலுக்கு கட்டுப்பட்டு நடப்பதற்கு அடுத்தாற்போலுள்ள தரத்தில் இருப்பதாகவும் குறிப்பிடுகின்றன.

**தலைமைத்துவத்தின் முக்கியத்துவம்**

- மனிதன் சமூகத்தோடு கூடிவாழும் இயல்பில் படைக்கப்பட்டுள்ளான். சமூகமின்றி தனியாக அவன் வாழ்வது கடினம். எனவேதான் மனிதனுக்கு வழங்கப்படும் மிகப் பெரிய கொடுமை அவனை தனிமையில் சிறைவைப்பதாகும் என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த வகையில் உடலிலுள்ள ஓர் உறுப்பு இன்னோர் உறுப்பின் தேவையை வேண்டி நிற்பது போல் மனிதன் இன்னொரு மனிதனின்பால் தேவையுடையவனாக இருக்கின்றான். இவ்வாறு மனிதர்களுக்கிடையிலான தொடர்புகள் அதிகரிக்கின்ற வேளையில் தலைமைத்துவமொன்று இன்றியமையாததாகின்றது. இன்றேல் சீரான, கட்டுக்கோப்பான சமூகமாக, சமூக அமைப்பாக அது இருக்காது.
- சமூகத்தில் தலைமைத்துவமென்பது உடலில் தலையைப் போன்றது. சமூக இலக்குகளை, அதன் செயற்பாடுகளை தலைமைத்துவமே நிர்ணயிக்கின்றது. அது பலமாக, விழிப்பாக இருக்கும் போது சமூகமும் பலமாக விழிப்பாக இருக்கும். அது பலவீனப்படும் போது சமூகமும் பலவீனப்பட்டு வீழ்ச்சியடையும்.

இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் தலைமைத்துவமென்பது இலேசான விடயமல்ல. அதன் செயற்பாடுகள் விரிவடையும் போதெல்லாம் அதன் பொறுப்புக்களும் அதிகரித்துச் செல்லும். ஏனெனில் “நீங்கள் அனைவரும் மேய்ப்பாளர்கள், உங்களில் ஒவ்வொருவரும் அவரது மேய்ப்பைப் பற்றி விசாரிக்கப்படுவீர்கள். இமாம் ஒரு மேய்ப்பாளர். அவர் தனது மேய்ப்பைப் பற்றி விசாரிக்கப்படுவார்” (புஹாரி) என்ற ஹதீஸ் இதன் பொறுப்பு சுமையானது என்பதை வலியுறுத்தி நிற்கின்றது. மேலும் இது அமானிதம் என்பதை மற்றொரு நபிமொழி மூலம் நாம் விளங்கிக் கொள்ளலாம். அபூதர்- அல்கிபாரி (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் தலைமைத்துவப் பதவியொன்றைக் கேட்டபோது நபி (ஸல்) அவர்கள் கூறிய பதில் இதனை வலியுறுத்துகின்றது. “அபூதர் அவர்களே! நீங்கள் ஒரு பலவீனமானவர். நிச்சயமாக அதுவோ ஓர் அமானிதம். அதனை ஒருவர் தகைமையில்லாத நிலையில் ஏற்றுக்கொண்டு அதன் பொறுப்புகளை சரிவர நிறைவேற்றத் தவறினால் அது மறுமை நாளன்று இழிவையும் கைசேதத்தையும் தேடித்தரும்.” (முஸ்லிம்)

இவ்வாறே தலைவரைத் தெரிவு செய்வதும் அமானிதமாகும். ஏனெனில் ''பொருத்த மானவரை பொருத்தமான இடத்தில் வைக்கவில்லையென்றால் அமானிதம் நிறைவேற்றப்படவில்லை என்று பொருள்.'' ''விசுவாசிகளே! உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களை அவற்றின் சொந்தக்காரர்களிடம் ஒப்டைத்து விடுமாறு நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான்.'' (4: 59)

யார் பொருத்தமான ஒருவரைத் தெரிவு செய்யும் விடயத்தில் மௌனித்து தனது கருத்தை வெளியிடுவதிலிருந்து தவிர்ந்து கொள்கின்றாரோ ''அவர் சாட்சியத்தை மறைத்தவர்'' எனும் பட்டியலில் சேர்ந்து விடுகிறார். இதனை அல்லாஹ் எச்சரித்து பின்வருமாறு குறிப்பிடுகிறான். ''சாட்சியத்தை நீங்கள் மறைக்க வேண்டாம், எவரேனும் அதனை மறைத்தால் அவரது இருதயம் நிச்சயமாக பாவத்திற்குள்ளாகி விடுகிறது. நீங்கள் செய்யும் யாவற்றையும் அல்லாஹ் நன்கறிவான்.'' (2: 283)

### தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படுதல்:

தலைமைத்துவம் சீராக இடம் பெறவேண்டுமானால் அத்தலைமைத்துவத்துக்குரிய உரிமைகள் பேணப்படல் வேண்டும். அதாவது தலைமைத்துவத்திற்கு அதன் கீழுள்ளவர்கள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். இதற்கு ஆதாரமாக, அல்குர்ஆன் வசனங்களும் நபிகளாரின் ஹதீஸ்களும் அமைந்து காணப்படுகின்றன.

''விசுவாசிகளே! அல்லாஹ்விற்கு வழிப்பட்டு நடவுங்கள். அவ்வாறே உங்கள் தூதருக்கும் தலைவர்களுக்கும் கட்டுப்படுங்கள்.'' (4: 59) என்ற அல்குர்ஆன் வசனமும் ''உங்களிலே ஹபஷி நாட்டு அடிமை தலைவராக இருந்தாலும் அவருக்கு கட்டுப்பட்டு வழிபட்டு நடவுங்கள்'' என்ற ஹதீஸும் தலைமைத்துவத்திற்கு கட்டுப்பட்டு நடப்பதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

தலைமைத்துவக் கட்டுப்பாட்டை வலியுறுத்திய இஸ்லாம் அதன் கடிவாளத்தை வரையறுத்து வகுத்தும் வந்துள்ளது. ஏனெனில் சர்வாதிகார தலைமைத்துவப் போக்கை இஸ்லாம் முற்றாக வெறுக்கின்றது. எனவே, தலைமைத்துவத்திற்கு சில நிபந்தனைகளையிடுவதனூடாக அதற்கான கட்டுப்பாட்டை வலியுறுத்துகின்றது. இந்தவகையில் பின்வரும் வரையறைகளை அது விதிக்கின்றது.

1. தலைவர் அல்லது ஆட்சியாளர் இஸ்லாமிய நெறிமுறைகளைப் பின்பற்றுபவராக இருக்க வேண்டும்.
2. மக்கள் மத்தியில் நீதியைக் கொண்டு தீர்ப்பளிப்பவராக இருக்க வேண்டும்.
3. மக்களை பாவத்தைக் கொண்டு ஏவுபவராக இருக்கக் கூடாது.

இந்த வகையில் மேற்குறித்த நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் தலைமைத்துவம் காணப்படும்போது, அதற்குக் கட்டுப்பட்டு அடிபணிவது கடமையல்ல, இதனை பின்வரும் நபிமொழி தெளிவாக விளக்கி நிற்கின்றது. ''நிச்சயமாக கட்டுப்பாடு என்பது நன்மையான விவகாரங்களிலேயேதான்'' (புஹாரி)

### தலைமைத்துவப் பண்புகள்

தலைமைத்துவம் சிறப்பாக, சீரான முறையில் இடம்பெற அது தகுதிப் பண்புகளைப் பெற்றிருப்பதோடு சில குணவொழுக்கங்களையும் கடைப்பிடிக்க வேண்டுகிறது. தலைமைத்துவத்தின் வெற்றி அது பெற்றிருக்கும் பண்புகளைப் பொறுத்தே அமையும்.

''அல்லாஹ்வையும் இறுதிநாளையும் உறுதியாக நம்புகிறவர்களுக்குரிய அழகிய முன்மாதிரி நிச்சயமாக அல்லாஹ்வினுடைய தூதரிடமே இருக்கிறது.'' (அல்-அஹ்ஸாப் : 31) என்ற அல்குர்ஆன் வசனம், அவர்கள் அரசியல் வாதியாக, குடும்பத்தலைவராக,

நிர்வாகியாக, வணக்கவாளியாக இருந்தது போன்றே சகல வழிகளிலும் வழிகாட்டக் கூடிய தலைவராகவும் விளங்கி அதன் பண்புகளை விளக்கிச் சென்றார்கள்.

நபி (ஸல்) அவர்கள் பெற்றிருந்த தலைமைத்துவப் பண்புகளைப் பின்வருமாறு தொகுத்துச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். பூரண குணவொழுக்கம், புத்திக்கூர்மை, நல்லாட்சி, பணிவு, பொறுமை, சகிப்புத் தன்மை, வாக்கு மீறாமை, வீரம், உடற்பலம், நல்லுறவு, அன்பு, உளப்பக்குவம், தூரதிருஷ்டி, ஆளுமை, சிறந்த முன்மாதிரி போன்ற பல பண்புகளைப் பெற்றிருந்தார்கள்.

**தலைவரின் கடமைகள்**

இஸ்லாமிய சட்டவல்லுனர்கள் பல கடமைகளை நாட்டின் தலைவர் மீது விதியாக்குகின்றனர். இதில் அல்லாமா அபுல் ஹஸன் அலி அல்மாவர்தி குறிப்பிடும் மார்க்க, பொருளாதார, அரசியல், சமூக ரீதியான பத்துக் கடமைகள் மிகவும் தெளிவானவை. அதன் சுருக்கம் பின்வருமாறு.

1. நாட்டின் இறைமையைப் பாதுகாத்தல்
2. விசுவாசிகள், ஆலோசகர்களின் கருத்துக்களை எடுத்து நடத்தல்
3. தீனைப் பாதுகாத்தல்
4. தண்டனைகளை நிறைவேற்றல்
5. எதிர்ப்புக்களை முறியடித்தல்
6. இஸ்லாத்தை எதிர்ப்போர்களுடன் (நிர்ப்பந்த நிலையில்) ஜிஹாத் செய்தல்
7. ஸகாத், வரிகள் போன்றவற்றை சேகரித்தல்
8. பைத்துல்மாலிலிருந்து வழங்கப்படும் கொடுப்பனவுகளை நிர்ணயித்தல்
9. சட்டங்களைத் தேவையானவிடத்துப் பிரயோகித்தல்
10. நாட்டு விவகாரங்களில் எப்போதும் கண்காணிப்புடன் இருத்தல்

இஸ்லாமியத் தலைமைத்துவத்தைக் கட்டுப்படுத்தும் அடிப்படை விடயங்கள் மூன்றுள்ளன. அவை ஷூறா, நீதி, கருத்துச் சுதந்திரம் என்பனவாகும்.

- **சமூகத்தை வழிநடாத்தும் நிறுவனம் என்ற வகையில் மஸ்ஜித்**
  - நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றபோது மதீனாவின் எல்லையில் (குபா) ஒரு மஸ்ஜிதை நிர்மானித்தார்கள். பின்னர் மதீனாவில் மஸ்ஜிதுந் நபவியை நிர்மாணித்தார்கள். அது வரலாற்றிலும், முஸ்லிம் சமூக நிர்மாணத்ததிலும் முக்கிய பங்கை வகிப்பதோடு மாதிரி மஸ்ஜிதாகவும் விளங்குகின்றது. சமூகத்தை மஸ்ஜித்கள் வழிநடத்த வேண்டும் என்பதற்கும் முன்னுதாரணமாகத் திகழ்கின்றது.
  - மஸ்ஜித், ஜமாஅத் தொழுகைக்கான இடமாக ஆரம்பிக்கப்பட்டாலும், அது முஸ்லிம் சமூகத்தை எவ்வாறு கூட்டிணைப்பது, அவ்விணைப்பை எவ்வாறு கட்டிக் காப்பது என்பவற்றுக்கான பயிற்சிக்களமாகவும் அமைந்தது. ஜமாஅத் தொழுகைக்கான அழைப்பு, நடைமுறை என்பன இதனைச் செயல்வடிவில் பயிற்றுவித்தன. மஸ்ஜிதின் ஆன்மீக செயற்பாடுகளும், உலகியல் செயற்பாடுகளும் சமூக வாழ்வுக்கு உறுதுணையாக இருப்பதால் தான் மஸ்ஜிதுடனான உறவு பாராட்டப்படுகின்றது.
  - ‘‘ஒரு மனிதன் மஸ்ஜிதுக்குச் செல்வதை வழமையாக்கிக் கொண்டிருப்பதைக் கண்டால் அவன் ஈமானைப் பெற்றிருக்கின்றான் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்.’’ (திர்மிதி)

- ‘‘பூமியில் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான இடம் மஸ்ஜிதாகும். அவனுக்கு மிக வெறுப்புக்குரிய இடம் சந்தைகளாகும்.’’ (முஸ்லிம்)
- மஹ்ஷரில் எந்த நிழலுமே இல்லாத அந்நாளில் அல்லாஹ்வின் அர்ஷின் கீழ் நிழல் பெறும் பேற்றை ஏழு தொகுதியினர் பெற்றுக்கொள்வர். அவர்களுள் மஸ்ஜித்களுடன் இறுக்கமான தொடர்பு கொண்டிருந்தவர்களும் ஒரு தொகுதியின ராவர், (புஹாரி).
- யார் தன்னுடைய வீட்டில் இருந்து வுழூ செய்து கொண்டு அல்லாஹ்வின் ஏதாவதொரு மஸ்ஜிதை நோக்கி தனது மார்க்கக் கடமையை நிறைவேற்றச் சென்றாரோ அவருடைய ஒவ்வொரு காலடிக்கும் நன்மை எழுதப்படும். பாவம் அழிக்கப்படும். அந்தஸ்து உயர்த்தப்படும்.(முஸ்லிம்) என்பன போன்ற ஹதீஸ்கள் ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிமுறையாக மட்டும் சொல்லப்பட்டனவாகவன்றி சமூக மேம்பாட்டுக்கான வழிமுறையாகவும் கொள்வதற்கு இடமுண்டு. ஏனெனில் மனிதனுக்கு ஆன்மீக பக்குவத்தை வழங்குவதோடு அவனை சமூக நலனில் அக்கறை கொள்ளவும் வைக்கின்றன. இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் இ∴திகாப் இருந்த காலகட்டத்தில் ஒரு சகோதரனின் தேவையை நிறைவேற்றுவதற்காக வெளியேறியமையும் இதற்கு அவர்கள் கொடுத்த விளக்கமும், இதனை எடுத்துக் காட்டுகின்றன.
- நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுந்நபவியை மையமாக வைத்தே முஸ்லிம் சமூகத்தை கட்டியெழுப்பினார்கள். ஆதலால் அதன் பணிகள் விரிவடைந்திருந்தன. அல்லாஹ் வையும் தனிமனிதனையும் இணைக்கின்ற களமாக மட்டுமன்றி தனிமனிதர்களை இணைக்கின்ற களமாகவும் செயற்படுத்தினார்கள்.
- சமூகம் அதன் தலைவரை எப்போதும் சந்திக்கக் கூடிய இடமாக மஸ்ஜித் அமைந்ததோடு அதனை இலகுபடுத்தும் வழியாகவும் அமைந்தது. நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதின் ஒரு பகுதியில் தமது வாசஸ்தலத்தை அமைத்துக் கொண்டார்கள். தொழுகைக்கு வரும் சந்தர்ப்பங்களில் மக்கள் அவர்களைச் சந்திப்பதற்கு அது வழியாக அமைந்தது. மதீனாவில் குடியிருப்பவர்கள் மட்டுமன்றி மதீனாவுக்கு வெளியே இருந்து வருகின்ற முஸ்லிம்களும், முஸ்லிம் அல்லாதவர் களும், தனித்தும் கூட்டாகவும் சந்திப்பதற்கான இடமாகவும் மஸ்ஜித் அமைந்தது.
- அங்கு சமூக விவகாரங்கள் பற்றி அடிக்கடி கலந்தாலோசிக்கப்பட்டன. வளர்ந்து வரும் புதிய சமூகம் என்ற வகையில் தனிநபர்களும், சமூகமும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கினார்கள். இச்சந்தர்ப்பத்தில் அல்லாஹ்விடமிருந்து கிடைக்கின்ற வஹியும், நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலும், சமூகத்துடன் நடத்திய ஷூறாவுமே கைகொடுத்தன. அவை மஸ்ஜிதில்தான் பெரும்பாலும் இடம்பெற்றன.
- நபி(ஸல்) அவர்களின் காலத்தில் மஸ்ஜித் கல்வி நிலையமாகச் செயற்பட்டது. அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும் அல்குர்ஆன் ஆயத்துக்கள் அங்கு ஓதிக்காட்டப் பட்டன. நபி (ஸல்) அவர்கள் குத்பாக்கள், கலந்துரையாடல் மூலம் பாட போதனை களை நடத்தினார்கள். அஸ்ஹாபுஸ்ஸுப்பா எனப்பட்ட மஸ்ஜிதில் நிரந்தரமாகத் தங்கியிருந்த ஸஹாபாக் குழுவினர் நபியவர்களிடம் கற்றுக்கொண்டதோடு, ஏனைய ஸஹாபாக்களுக்குக் கற்றுக் கொடுக்கும் பணியையும் செய்து வந்தார்கள்.
- சமூகத்தின் பொருளாதாரத் தேவையை நிவர்த்தி செய்யும் இடமாகவும் அது செயற்பட்டது. ஸகாத், ஸதகா, கனீமத் போன்றன கிடைக்கப்பெறும் போது அவை மஸ்ஜிதில் வைத்துப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

- சமூகப் பிரச்சினைகளைக் கலந்தாலோசித்து தீர்த்து வைக்கும் அதே பணியோடு, சமூகத்தில் நிகழும் குறைகளுக்கு இஸ்லாத்தின் அடிப்படையில் தீர்ப்புக் கூறும் நீதிமன்றமாகவும் அது செயற்பட்டது. நபி(ஸல்) அவர்கள் நீதிபதியாக நின்று தீர்ப்பு வழங்கினார்கள்.
- சிலபோது இராணுவ பயிற்சி முகாமாகவும், மருத்துவ முகாமாகவும் கூட அது பணியாற்றியிருக்கின்றது. அதன் வளாகத்தில் கூடாரம் அமைக்கப்பட்டு சிகிச்சை வழங்கிய நிகழ்வுகளும் உண்டு.
- நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னர் தோன்றிய குலபாஉர் ராஷிதீன்களின் காலத்திலும் மஸ்ஜிதுந் நபவியில் இதே பணிகள் இடம்பெற்றன. மாகாண தலைநகர்களில் ஆளுனர்களும் மஸ்ஜித்களை அமைத்து அவ்வாறே செயற்பட்டனர்.
- ஸஹாபாக்கள் மஸ்ஜித்களில் பாடபோதனைகளை நடத்தினார்கள். அவர்களைத் தொடர்ந்து வந்த தாபியீன்களும், தபிஉத் தாபியீன்களும் கூட இதே நடைமுறையைப் பின்பற்றினார்கள். இமாம் மாலிக், ஸஈத் பின் முஸையப் முதலானோர் மஸ்ஜிதுந் நபவியில் வகுப்பு நடத்தினர். ஹி.36 இல் எகிப்தில் அம்ர் இப்னுல் ஆஸ் பள்ளிவாசலில் நாற்பதுக்கு மேற்பட்ட கல்வி வட்டங்கள் காணப்பட்டன. இமாம் ஷாபிஈ, ஐரீருத் தபரி முதலானோர் பாடம் நடத்தினர். ஹி. 361 இல் நிர்மாணிக்கப்பட்ட ஜாமிஉல் அஸ்ஹர் பள்ளி வாசலும் (இன்று அஸ்ஹர் பல்கலைக்கழகமாக மாறியுள்ளது) டியூனீசியாவின் ஜாமிஆ ஸைத்தூனியாவும் இவ்வாறானதே. பக்தாத் ஜாமிஆ பள்ளிவாசலில் கதீப் அல் பக்தாதி பாடபோதனை நடத்தினார். டமஸ்கஸ் ஜாமிஆ உமரிலும் கல்விப் போதனை இடம் பெற்றது. இங்கெல்லாம் சன்மார்க்கப் பாடங்கள் மட்டுமன்றி இலக்கியம், கவிதை, தத்துவம், கணிதம், மருத்துவம் போன்ற பாடங்களும் கற்பிக்கப்பட்டுள்ளன. எனவேதான் "மஸ்ஜித் இபாதத்துக்குரிய இடமாக மட்டுமன்றி முஸ்லிம்களுக்கு மார்க்கக் கல்வியையும், உலகக் கல்வியையும் போதிக்கும் கலாபீடமாகவும் விளங்கியது" என கலாநிதி முஸ்தபா ஸிபாஈ குறிப்பிடுகின்றார்.
- மஸ்ஜித் நூல் நிலையங்கள் தோன்றுவதற்கும், அஸ்ஹாபுஸ் ஸுப்பாக்களின் பணி முன்னுதாரணமாக அமைந்தது. இஸ்லாம் வளர்ச்சியுற்ற காலகட்டத்தில் தோன்றிய மஸ்ஜித்கள் நூலகங்களை அங்கங்களாக வைத்திருந்தன. மதீனா, எகிப்து, டமஸ்கஸ், கைரவான், டியுனேசியா முதலிய இடங்களில் காணப்படும் மஸ்ஜித் நூலகங்களை இதற்கு உதாரணமாகக் காட்டலாம்.
- எனினும் காலவோட்டத்தில் மஸ்ஜித்கள் அவற்றின் விரிவான பணியை சுருக்கிக் கொண்டன. ஆன்மீகச் செயற்பாடுகளுக்கான இடமாக மட்டும் இயங்க ஆரம்பித்தன. உலக விவகாரங்கள் (அரசியல், சமூக, பொருளாதார, கல்வி, கலாசார, சர்வதேச விவகாரங்கள்) பற்றிய செயற்பாடுகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டதோடு அவை ஆன்மீக உயிரோட்டத்தையும் இழந்தன. பிற கலாசாரத் தாக்கங்களுக்குட்பட்டு நெறிபிறழ்ந்தனர். இதனால் முஸ்லிம் சமூகத்தின் வீழ்ச்சி ஆரம்பித்தது.
- இதனை நிவர்த்திப்பதில் சமகாலத்தில் தோன்றிய முஸ்லிம் சீர்திருத்தவாதிகள் பலர் எடுத்த முயற்சிகளின் காரணமாக மீண்டும் மஸ்ஜித்களை இப்பணியில் ஈடுபடுத்தும் வழிகள் திறந்து விடப்பட்டுள்ளன. உலக முஸ்லிம் ஒன்றியம், (றாபிதா) அதற்கான தனியான கிளையொன்றைத் தாபித்துச் செயற்படுகின்றது. எமது நாட்டைப் பொறுத்தவரையும் சமூகப் புனரமைப்புக்கான மையமாக மஸ்ஜித்களை மாற்ற வேண்டிய தேவை உள்ளது. அந்த வகையில்,

  1. பொருத்தமான மஸ்ஜித் நிர்வாகிகளை அமர்த்தல்.
  2. மஸ்ஜித் அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தல்.

3. கல்வி வட்டங்களை ஏற்படுத்தல்.
4. நூலகங்களைப் படிப்படியாகக் கட்டியெழுப்புதல்.
5. ஸகாத் போன்றவற்றைக் கூட்டாக சேகரிக்கவும், வினியோகிக்கவும் ஒழுங்கு செய்தல்.
6. சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான இணக்க சபைகளை ஏற்படுத்தல்.
7. பொதுப்பணிகளில் ஈடுபட தலைமை தாங்குதல். (அரசியல், சமூக, கல்வி, பொருளாதாரம் தொடர்பாக)
8. பள்ளிவாசல் சம்மேளனங்களை ஏற்படுத்தி சமூக ஐக்கியத்துக்காக வழிகாணல்.
9. சமூகச் சூழலை சீரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். (சிறுவர், பெண்கள், இளைஞர், யுவதிகள், தொழிலற்றோர் தொடர்பானவை)
10. பிறசமூகங்களுடனான உறவை நெறிப்படுத்தல்.

போன்றவற்றை மஸ்ஜித்களில் ஏற்படுத்த முயற்சித்தல் வேண்டும்.

- **பிற சமூகத்தவர்களுடனான உறவு**
  - முஸ்லிம் குடியிருப்புக்களை முஸ்லிம்கள் மட்டும் வாழும் குடியிருப்புக்கள், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் குடியிருப்புக்கள், முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் குடியிருப்புக்கள் என மூன்றாக வகுக்கலாம். கிராமிய மட்டத்திலும் சரி, தேசிய மட்டத்திலும் சரி இந்த நிலை காணப்படலாம். இவற்றுள் முதலாம் நிலை தவிர்ந்த ஏனைய இரு நிலைகளிலும் முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர்களுடன் தொடர்புற்று வாழும் நிலை காணப்படுகின்றது. சிக்கலான இவ்வாறான நிலையில் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை இஸ்லாம் விளக்கிக் காட்டுகின்றது.
  - நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத்துக்குப் பிந்திய மக்கா வாழ்க்கைப் பகுதியில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்ந்தார்கள். மதீனா வாழ்க்கைப் பகுதியில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்தார்கள். இருந்தாலும் அவர்கள் முஸ்லிம் அல்லாதவர்களுடன் நேச உறவை வைத்துக் கொண்டார்கள். சிறு பான்மையினராக வாழ்ந்த போது எதிரிகள் -குறிப்பாக குறைஷியர்களால் விளைவிக்கப்பட்ட இன்னல்களை- உரிமை மீறல்களைச் சகித்துக் கொண்டார்கள். பெரும்பான்மையினராக வாழ்ந்தபோது சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு மதிப்பளித்தார்கள். இதே வழிமுறைதான் ஸஹாபா, தாபிஈன் சமூகங்களிலும் பின்பற்றப்பட்டது.
  - ஒரு பன்மைத்துவ சமூகத்தில் வாழுகின்ற முஸ்லிம்கள், பிற சமூகத்தவர்களோடு இணங்கி வாழமுடியுமென்பதை அல்குர்ஆனும், சுன்னாவும எடுத்துக் காட்டுகின்றன. “மனிதர்களில் (அக்கிரமம் செய்யும்) சிலரை, சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருந்தால் கிறித்தவர்களின் ஆலயங்களும், அவர்களுடைய மடங்களும், யூதர்களுடைய ஆலயங்களும், அல்லாஹ்வுடைய திருநாமம் அதிகமாகத் தோத்திரம் செய்யப்படுகின்ற மஸ்ஜித்களும் அழிக்கப்பட்டே போயிருக்கும். (22:40) என்று அல்குர்ஆன் பன்மைத்துவ சமயத்தைப் பின்பற்றும் சமூகத்தில் வாழும் நிலை பற்றிச் சுட்டிக் காட்டுகின்றது. பன்மைத்துவச் சமூகத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்திருக்கிறார்கள்; வாழ முடியும் என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது.
  - ‘‘உம்முடைய இறைவன் விரும்பியிருந்தால் பூமியில் உள்ள அனவருமே ஒன்றுபட்டு விசுவாசித்திருப்பார்கள். (எனவே) மனிதர்கள் (யாவரும்) விசுவாசிகளாகிவிட வேண்டும் என்று அவர்களை நீர் நிர்ப்பந்திக்க முடியுமா?’’ (10:99) என்று நபியவர்களைப் பார்த்து வினா எழுப்புவது மனிதர்கள் எல்லோருமே முஸ்லிம்களாக இருக்க மாட்டார்கள், முஸ்லிம் அல்லாதவர்களும் வாழவே செய்வார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

- முஸ்லிம் அல்லாதவர்களும் மனிதர்கள்; அல்லாஹ்வின் படைப்புகள் என்ற தாராள மனதோடு முஸ்லிம்கள் வாழ வேண்டும் என்பதை இஸ்லாம் எடுத்துக் காட்டுகின்றது. எந்தளவுக்கு எனின் அவர்கள் வணங்கும் தெய்வங்களைக் கூட இழிவாகக் கூறக் கூடாது என அச்சுறுத்துகின்றது. ''(விசுவாசிகளே) அல்லாஹ் அல்லாதவற்றை அவர்கள் (ஆண்டவர்களென) அழைக்கின்றார்களோ அவற்றை நீங்கள் திட்டாதீர்கள். அதனால் அவர்கள் அறியாமையின் காரணமாக வரம்பு மீறி அல்லாஹ்வைத் திட்டுவார்கள்.'' (6:108)

- (இஸ்லாம்) மார்க்கத்தில் நிர்ப்பந்தமே இல்லை. (ஏனென்றால்) வழிகேட்டில் இருந்து (விலகி) நேர்வழி(யடைவது எவ்வாறென்று) தெளிவாகி விட்டது (2:256) என்பதால் முஸ்லிம்கள் எவரும் முஸ்லிம் அல்லாதவர்களை நிர்ப்பந்தித்து இஸ்லாத்தின் பக்கம் அழைப்பதில்லை. ஆனால், இஸ்லாத்தின் சிறப்பை அவர்கள் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டலாம். சிலபோது விவாதிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டால் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அல்குர்ஆன் பின்வருமாறு சுட்டிக் காட்டுகின்றது.

  (விசுவாசிகளே) நீங்கள் வேதத்தையுடையவர்களிடம் (தர்க்கிக்க நேரிட்டால்) மிகவும் அழகிய முறையிலன்றி (அவர்களுடன்) தர்க்கிக்க வேண்டாம். ஆயினும் அவர்களில் எவரேனும் வரம்பு மீறி விட்டால் (அதற்குத் தக்கவாறு நீங்கள் பதில் கூறுவது உங்கள் மீது குற்றமாகாது. அவர்களுடன் தர்க்கித்தால் எங்களுக்கிறக்கப்பட்டதையும் உங்க ளுக்கிறக்கப்பட்ட வேதத்தையும் நாங்கள் விசுவாசிக்கின்றோம். எங்கள் ஆண்டவனும் உங்கள் ஆண்டவனும் ஒருவனே. நாங்கள் அவனுக்குத்தான் முற்றிலும் வழிப்பட்டு நடக்கின்றோம் என்று கூறுவீர்களாக.'' (29:46).

- முஸ்லிம் அல்லாதவர்கள் பற்றி நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளதை அவதானியுங்கள். "எவர் முஸ்லிம் அல்லாத சிறுபான்மையினர் ஒருவரை இம்சிக்கின் றாரோ, நான் அவரின் எதிரியாவேன். நான் எவரின் எதிரியாக இருக்கின்றேனோ மறுமையில் அவருக்கெதிராக வாதிடுபவனாக இருப்பேன்." (தாரிக் பக்தாத்) மேலும் அநீதியிழைக்கப்பட்டவனின் பிரார்த்தனையைப் பயந்து கொள்ளுங்கள். அவன் காபிராக இருந்தாலும் சரியே. அதற்கும் அல்லாஹ்வுக்கும் இடையே எத்தகைய திரையுமில்லை'' (முஸ்னத் அஹ்மத்) என்றும் நபியவர்கள் எச்சரிக்கை செய்திருக்கின்றார்கள். இது மதீனா வாழ்க்கைப் பகுதியில் கூறப்பட்டதால்தான் "முஸ்லிம் அல்லாத சிறுபான்மையினர்" என்று பிரயோகிக்கப்பட்டுள்ளது.

- முஸ்லிம் அல்லாதவர்களோடு நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதை அவதானியுங்கள். நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் யூதர்களுடனும், கிறிஸ்தவர்களுடனும் குறைஷிக் காபிர்களுடனும் வாழ்ந்தார்கள். அவர்களோடு நேச உடன்படிக்கை செய்து கொண்டார்கள். உடன்படிக்கை செய்து கொண்ட அந்த மக்களோடு நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். மற்றவர்களையும் அவ்வாறே நல்ல முறையில் நடத்துமாறு கேட்டுக் கொண்டார்கள்.

- நபியவர்களைச் சந்திப்பதற்காக அபிசீனிய கிறிஸ்தவ குழுவொன்று மதீனா வந்தது. அவர்களை உபசரித்து விருந்தோம்பல் செய்ததைப் பார்த்து ஸஹாபாக்கள் ஆச்சரியப் பட்டார்கள். பின்னர் அதற்கான காரணத்தையும் வினவினார்கள். இவர்கள் என்னுடைய தோழர்களை மிக உயர்ந்த கண்ணியத்தில் வைத்திருந்தார்கள். எனது தோழர்களை இவர்கள் கண்ணியப்படுத்தியதை விட அதிகமாக நான் கண்ணியப்படுத்த விரும்புகிறேன் என்றார்கள். (நுபுவ்வத் 5 ஆம் 7 ஆம் ஆண்டுகளில் முஸ்லிம்கள் அபிசீனியாவுக்கு ஹிஜ்ரத் சென்ற நிகழ்வு)

- நஜ்ரான் பிரதேச கிறிஸ்தவர்கள் மதீனா வந்த போதும் இவ்வாறே நடந்து கொண்டார்கள். அவர்களை மஸ்ஜிதுந் நபவியில் தங்க வைத்ததோடு அவர்களுடைய வழிபாட்டுக்குரிய நேரம் வந்தபோது மஸ்ஜிதின் ஒரு பகுதியில் ஜெபிப்பதற்கும் இடமளித்தார்கள். அவர்கள் தமது மார்க்கம் பற்றி வாதித்த போது அதற்குச் செவி மடுத்தார்கள். கண்ணியமான முறையில் அவர்களுக்குப் பதிலையும் வழங்கினார்கள். எகிப்திய கிறிஸ்தவ ஆட்சியாளர் முகௌகஸ் அனுப்பி வைத்த பரிசுப் பொருள்களை மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள். அப்பரிசுப்பொருள்களில் உள்ளடங்கிய மாரியதுல் கிப்தியாவை தமது ஸுர்ரிய்யத்தாக வைத்துக் கொண்டார்கள்.
- நஜ்ரான் பிரதேச கிறிஸ்தவர்களோடு அவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தம் முஸ்லிம் அல்லாதவர்களை நடத்தும் முறையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. "நஜ்ரான் வாசிளும் அவர்களைப் போன்றோரும் அல்லாஹ்வின் பாதுகாப்பிலும் அவனது நபியும் ரஸூலுமாகிய முஹம்மத் (ஸல்) அவர்களின் பொறுப்பிலும் இருப்பார்கள். அவர்களின் உயிர், சமயம், நிலம், உடைமைகள், உட்பட இங்கிருப்பவர், இல்லாதவர் அடங்கலாக அவர்களின் வணக்கத்தலங்கள், வழிபாடுகள் அனைத்துக்கும் இப்பாதுகாப்பும் பொறுப்பும் உண்டு. எந்தவொரு மதகுருவும் அல்லது துறவியும் அவரது நிலையில் இருந்து நீக்கப்படமாட்டார். அவ்வாறே எந்தவொரு மதக் கடமையை நிறைவேற்றுபவரும் அக்கடமையை நிறைவேற்றுவதிலிருந்து தடுக்கப்படமாட்டார். சட்டபூர்வமாக அவர்களின் கைகளிலுள்ள சிறிய பெரிய அனைத்தும் அவர்களுக்கே சொந்தமானவையாகும். ஒருவர் இவர்களிடமிருந்து ஓர் உரிமையைக் கோரினால் இரு தரப்பினருக்கும் எத்தகைய பாதிப்பும் ஏற்படாத வண்ணம் நீதியான முறையில் தீர்த்து வைக்கப்படும். ஒருவரின் குற்றத்திற்காக இன்னொருவர் தண்டிக்கப்படமாட்டார். இவ்வுடன்படிக்கையின் படி நடப்பதற்கு அல்லாஹ்வும் அவனது தூதரும் கடமைப்பட்டவர்களாவர். (தபகாத் இப்னு ஸ.்.து)
- இவ்வாறு உடன்படிக்கை செய்த நபி(ஸல்) அவர்கள் ''எவர் உடன்படிக்கை செய்து கொண்டிருக்கின்ற (முஸ்லிம் அல்லாத) ஒருவருக்கு அநீதியிழைக்கின்றாரோ அல்லது அவரது உரிமையைக் குறைக்கின்றாரோ அல்லது அவரது சக்திக்கு மேல் பொறுப்புக்களைச் சுமத்துகின்றாரோ அல்லது அவரின் மனவிருப்பின்றி அவரிடமிருந்து ஏதேனுமொன்றைப் பெறுகின்றாரோ அவருக்கெதிராக நான் மறுமையில் வாதிடுபவனாக இருப்பேன்'' (அபூதாவூத்) என எச்சரித்தார்கள்.
- கலீபா உமர் (ரழி) அவர்களின் காலத்தில் பைத்துல் மக்தஸ் கிலாபத்தின் கட்டுப்பாட்டில் வந்தது. கலீபா நேரடியாக வந்து அதனைப் பொறுப்பேற்குமாறு கேட்கப்பட்டார். அவர் அங்கு சென்றபோது அஸர் தொழுகைக்கான நேரம் வந்தது. தேவாலய பிரதம குரு தொழுகையை அங்கேயே நிறைவேற்றிக் கொள்ளுமாறு அனுமதி வழங்கினார். அதனை மறுத்த கலீபா நான் இங்கு தொழுதால் பிற்காலத்தில் கலீபா தொழுத இடம் என்று கூறி முஸ்லிம்கள் உரிமை கோரலாம் எனக் கூறி விட்டு மற்றோர் இடத்தில் தொழுது கொண்டார்கள்.
- அப்போது குத்ஸ் மக்களோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். "அவர்களது தேவாலயங்களில் எவரும் குடியிருக்கலாகாது, அவை அழிக்கப்படக் கூடாது, அவற்றில் எந்தப் பகுதியும் உடைக்கப்படலாகாது, என ஆளுனருக்குச் சுற்று நிருபம் அனுப்பினார்கள். கலீபா உமர் (ரழி) அவர்கள் தமது இறுதிக் காலத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்கள். "திம்மிகளான பிற மதத்தவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறும், அவர்களுடைய உடன்படிக்கைகளை நிறைவேற்றுமாறும், அவர்களுக்காகப் போராடுமாறும், அவர்களின் சக்திக்கு மேல் அவர்கள் மீதான பொறுப்புக்களைச் சுமத்தாதிருக்குமாறும் என்னை அடுத்துவரும் கலீபாவுக்கு நான் உபதேசம் செய்கிறேன். (கிதாபுல் கராஜ்). அவர்கள் எமது அடைக்கலத்தில்

உள்ளவர்கள். அவர்களது உயிர் எமது உயிர் போன்றது, அவர்களின் சொத்துக்கள் எமது சொத்துக்களைப் போன்றவை, (அவை பாதுகாக்கப்பட வேண்டும்) என கலீபா அலி (ரழி) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

- எகிப்திய முஸ்லிம்களின் தொகை பெருகியபோது, ஆளுனராகப் பணியாற்றிய அம்ர் இப்னு ஆஸ் (ரழி) அவர்கள், ஒரு பெண்ணின் வீட்டை உடைத்து பள்ளிவாசலை விரிவு படுத்தினார்கள். ஆளுனர் இதற்காக தன்னுடைய அனுமதியைப் பெற்றுக்கொள்ள வில்லை என அப்பெண் கலீபாவிடம் முறையீடு செய்தார். கலீபா ஆளுனரை விசாரித்த போது, அப்பெண் அளவுக்கதிகமாக இழப்பீட்டுத்தொகையை எதிர்பார்த்ததாகவும் அவளுக்குரிய இழப்பீட்டுத்தொகை பைத்துல் மாலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் பதிலளித்தார். பள்ளிவாசலை இடித்து விட்டு முன்பிருந்தது போலவே வீட்டைக் கட்டிக்கொடுக்குமாறு கலீபா உத்தரவிட்டார்.

- முஸ்லிம் ஆட்சிக்குட்பட்ட முஸ்லிம் அல்லாத பிரஜைகளின் (திம்மிகள்) உரிமைகளை உரியவாறு வழங்க வேண்டும் என்பதில் நபி (ஸல்) அவர்களும், கலீபாக்களும், கண்டிப்பாக நடந்து கொண்டார்கள் என்பதை மேலே கூறப்பட்டவை நிரூபிக்கின்றன. ஆட்சியாளர் மட்டுமன்றி சாதாரண பொது மக்களும் முஸ்லிம் அல்லாதவர்களோடு நேர்மையாகவும் நீதியாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்பதிலும் இஸ்லாம் கண்டிப்பாக இருக்கின்றது. உதாரணமாக, அயல்வீட்டாருக்கு செலுத்த வேண்டிய கடமைகளை விபரிக்கும் போது முஸ்லிம், முஸ்லிம் அல்லாதவர் என்ற வேறுபாடு நோக்கப்படக் கூடாது (4:36) என விதித்துள்ளதைச் சுட்டிக் காட்டலாம். பெற்றோர்கள் முஸ்லிம் அல்லாதவர்களாக இருந்தாலும் அவர்களுக்குரிய உரிமைகள் முஸ்லிம் பிள்ளைகளால் வழங்கப்பட வேண்டும். (31:15) என்பதுவும் இங்கு சுட்டிக் காட்டப்படலாம்.

- எமது நாட்டைப் பொறுத்தவரை நாம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் சில.
  - எமது நாட்டில் வாழுகின்ற இன, மொழி, சமய வேறுபாடுகளைக் கொண்ட எல்லா மக்களும் ஆதம் (அலை) அவர்களின் சந்ததியினர் என நோக்குதல்.
  - அண்டை அயலவர்களோடு சுமுகமான உறவுகளை வளர்த்துக் கொள்ளல், அவர்களின் சுக துக்கங்களில் பங்கேற்றல், அவர்களது தார்மீக உரிமைகளை வழங்குதல்.
  - தவறுகளை மன்னித்து பெருமனதுடன் நடந்து கொள்ளல்.
  - அனர்த்தங்களின் போது மனித நேயத்துடன் உதவுதல், நிவாரண உதவிகளை வழங்குவதில் பங்கேற்றல்.
  - பொது விழாக்கள், வைபவங்கள், போன்றவற்றில் பரஸ்பரம் உதவிக் கொள்ளல், கலந்து கொள்ளல்.
  - பிரதேச, தேசிய நலன்களுக்காக முனைப்புடன் ஒத்துழைத்தல்.
  - இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒன்றுகூடல்கள், கருத்துப் பரிமாறல்கள், கழகங்களை ஒழுங்கமைத்தல்.
  - அகீதா, இபாதா, ஹலால், ஹராம் போன்றவற்றைப் பேணி வாழல்.

- **உயிர்களிடத்தில் அன்பு**
  - ஒரு முஸ்லிம் சமூக வாழ்வில் பிற மனிதர்களுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளையும் உரிமைகளையும் இஸ்லாம் தெளிவுபடுத்தியுள்ளது. அவ்வாறே தன்னை அண்டி வாழ்கின்ற இறைபடைப்புக்களோடு அன்புடனும் கருணையுடனும் நடந்து கொள்ளும்படியும் பணிக்கின்றது.

- உயிரினங்களோடு அன்புடன் நடந்து கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தி கி.பி. 1824இல் இங்கிலாந்தில் ஜீவகாருண்ய மன்றம் தோற்றுவிக்கப்பட்டது. இது மனிதாபிமானத்தின் அடிப்படையில் செயற்படுகின்றது. ஜீவராசிகளுடன் அன்பாக நடந்து கொள்வதன் மூலமோ அவற்றின் உரிமைகளை மீறி நடப்பதன் மூலமோ ஏற்படும் வெகுமதிகள் பற்றி இம்மன்றம் எதனையும் குறிப்படவில்லை. ஆனால் இஸ்லாம் இறைபடைப்புக்களோடு சிறந்த முறையில் நடப்பதை ஒரு வணக்கமாகக் கருதுகின்றது. அவற்றின் உரிமைகளை மீறி நடப்பதை இறை தண்டனைக்குரிய குற்றமாகக் கருதுகிறது.
- இறைபடைப்புக்களுடன் அன்பாக நடந்து கொள்வதை ஈமானை உறுதிப்படுத்தும் ஒரு பண்பாக இஸ்லாம் கருதுகிறது. "அல்லாஹ் மிகவும் இரக்க சிந்தையுடையவன் அவன் அதனையே சகல கருமத்திலும் விரும்புகின்றான்."
- இதனாலேயே இஸ்லாத்தின் வருகைக்கு முன் அன்றைய அரேபியர் மத்தியில் காணப்பட்ட மிருகங்களைக் கொலை செய்தல், எஜமான் இறந்தால் அவரது புதை குழி மீது அவரது கால்நடையைச் சாகும் வரை கட்டி வைத்தல், உயிருடன் உள்ள மிருகத்தின் இறைச்சியை வெட்டி எடுத்துச் சாப்பிடுதல் போன்ற தவறான எல்லா நடைமுறைகளையும் இஸ்லாம் தடுத்தது.
- ஒரு முறை இப்னு உமர் (ரழி) அவர்கள் பாதையில சிலர் ஒரு கோழியைக் கட்டி வைத்து குறிபார்த்துக் கொண்டிருந்தார்கள். இப்னு உமர்(ரழி) அவர்களைக் கண்ட அவர்கள் ஓட ஆரம்பித்தனர். "இவ்வாறு செய்தவர் யார்? இவ்வாறு செய்வோர் சபிக்கப்பட்டவர்கள்" (புஹாரி) என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் என்று சொன்னார்கள்.

  "உயிருள்ள மிருகங்களின் இறைச்சியை வெட்டிச் சாப்பிடுவது பிணத்தைச் சாப்பிடுவதற்குச் சமமானது" (திர்மிதி) என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

  "எவன் ஒரு பறவையை வீணாகக் கொன்றுவிடுகின்றானோ அது மறுமையில், ''நாயனே! இவன் என்னை வீணாகக் கொலை செய்தான்'' எனக் கூறி வாதிடும். (நஸாஈ) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
- உயிர்ப்பிராணிகளைத் துன்பத்திற்குட்படுத்துவது ஒரு சாதாரண விடயமல்ல, இறைவனின் சாபத்தைத் தேடித்தரும், மறுமையில் இறைவனிடம் குற்றவாளியாக நேரிடும் என இஸ்லாம் எச்சரித்துப் போதனை செய்துள்ளது.
- மிருகங்களுடன் அன்பாக நடப்பது இறை அருளையும் சுவர்க்கத்தையும் பெற்றுத் தருகின்றது.
- ஒட்டகை அதனை வளர்ப்பவனுக்கு கண்ணியம் அளிக்கின்றது. ஆட்டிலே அல்லாஹ்வின் அருள் (பரகத்) இருக்கின்றது. (புஹாரி) ''சேவல் கூவும்போது திட்டாதீர், அது உங்களைத் தொழுகைக்காக எழுப்புகின்றது.'' (நஸாஈ)
- "தாகித்த நாயொன்றிற்கு நீர்புகட்டிய ஒரு மனிதனின் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டன." (புஹாரி)
- உயிருள்ள ஒவ்வொன்றின் மீதும் இரக்கம் காட்டுவது நன்மை பெற்றுக்கொள்ளக் காரணமாகிறது. (புஹாரி).
- உயிரினங்களோடு நடந்துகொள்ள வேண்டிய விதிமுறைகள் பல உள்ளன.

**1. இரக்கம் காட்டுதல்**

உயிரினங்களுடன் பரிவோடு நடந்துகொள்வதை பல ஹதீஸ்கள் வலியுறுத்துகின்றன. உ-ம்: நாய்க்கு நீர் புகட்டியதால் பாவங்கள் மன்னிக்கப்பட்டமை, வழிதவறிய மிருகங்கள் தனது தொட்டியில் நீர் பருக இடம் வழங்குவதற்கு இறை கூலி உண்டு.

- இஸ்லாமிய வரலாற்றில் எஜமான் அற்ற கட்டாக் காலி நாய்களது உணவுத் தேவைக்கென வக்ப் சொத்தில் இருந்து "வக்புல் கிலாப்" என ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது.

**2. தீங்கிழைக்காதிருத்தல்**

- உயிரினங்களுக்குத் தீங்கிழைப்பதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. மிருகங்களை வேதனைப்படுத்துவது ஹராம் என சட்டஅறிஞர்கள் கூறியுள்ளனர். உ-ம்: பூனையைத் துன்பப்படுத்திய பெண் நரகம் சென்றாள் என புஹாரியில் வந்துள்ள ஹதீஸ் கூறுகின்றது.

**3. குறித்த உயிரினம் எதற்காகப் படைக்கப்பட்டதோ அந்த வேலையை மட்டும் அதனிடமிருந்து பெறல்**

- நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: ஒருவன் காளை மாட்டின் மீது பிரயாணம் செய்து கொண்டிருந்தான். காளை முகத்தைத் திருப்பி "நான் இதற்காகப் படைக்கப்படவில்லை, விவசாய வேலைக்காக மட்டுமே படைக்கப்பட்டிருக்கின்றேன். (புஹாரி) எனக் கூறியது.

  "உயிரினங்களின் முதுகை ஏறுமேடையாகப் பயன்படுத்த வேண்டாம்" என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

- ஹஸ்ரத் உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) தனது ஆட்சிக் காலத்தில் ஒரு காளை மாட்டில் அல்லது குதிரை, ஒட்டகையில் சுமக்க முடியுமான பாரத்தின் அளவை வரையறுத்தார்கள். அதனை விட அதிகமாகச் சுமக்கச் செய்பவர்களை தண்டித்தார்கள்.

**4. ஓய்வளித்தல்**

- "நீங்கள் பசும் புல் நிறைந்த இடத்தில் பயணம் செய்தால் அதிலிருந்து ஒட்டகம் பயன்பெற வழி செய்யுங்கள், கடும் வறட்சியான காலத்தில் பிரயாணம் செய்தால் அது சிரமப்படாதவாறு நடந்து கொள்ளுங்கள். (முஸ்லிம்)

**5. சண்டை மூட்டக் கூடாது, முகத்தில் அடிக்கக் கூடாது.**

- மிருகங்களின் முகத்தில் அடிப்பதையும் அடையாளமிடுவதையும் நபி (ஸல்) அவர்கள் சபித்தார்கள். (அபூதாவூத்). மிருகங்களிடையே பரஸ்பரம் சண்டையிட வைப்பதையும் தடுத்தார்கள். (அபூதாவூத்)

**6. தீங்கிழைக்கும் பிராணிகள்**

- மனிதனுக்குத் தீங்கிழைக்கும் பிராணிகளை கொல்ல இஸ்லாம் அனுமதித்துள்ள போதிலும் "நிச்சயமாக அல்லாஹ் எல்லாச் செயல்களிலும் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறே விதித்திருக்கின்றான். (முஸ்லிம்)

**7. அறுவைப் பிராணிகள்**

- தப்ஹின் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிமுறைகளை இஸ்லாம் தெளிவாக முன்வைத்துள்ளது.
- எனவே மனிதன் தன் சூழலில் வாழும் உயிரினங்களுடன் ஒன்றி வாழ வேண்டும். இதனாலேயே அல்குர்ஆனும் அவ்வுயிரினங்கள் பற்றி அதிக கரிசனை செலுத்து கின்றது. அல்குர்ஆனில் பகரா (பசு), அன்ஆம் (கால்நடைகள்), அந் நஹ்ல் (தேனீ), அந்நம்லு (எறும்பு), அல்அன்கபூத் (சிலந்தி), அல்பீல் (யானை) போன்ற தலைப்புக்களில் அத்தியாயங்கள் இறக்கியருளப்பட்டமை இதனை உணர்த்துகின்றது.
- உயிரினங்கள் தொடர்பாக குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.

  “மனிதர்களே கால்நடைகளையும் அவனே படைத்திருக்கின்றான். அவற்றில் உங்களுக்காக (குளிரைத் தடுக்கும்) பொருள்களும் பல பிரயோசனங்களும் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றைப் புசிக்கிறீர்கள். நீங்கள் அவற்றை (மேய்த்து) மாலையில் ஓட்டி வரும் பொழுதும், (மேய்ச்சலுக்கு) காலையில் ஓட்டிச் செல்லும் பொழுதும் அவை உங்களுக்கு அழகாயிருக்கின்றன. மிக்க கஷ்டத்துடனன்றி நீங்கள் செல்ல முடியாத ஊர்களுக்கு அவை (உங்களையும்) உங்களுடைய பளுவான சுமைகளையும் சுமந்து செல்கின்றன. நிச்சயமாக உங்கள் இறைவன் (உங்கள் மீது) மிக்க இரக்கமுடையோனும், கிருபையுடையோனுமாக இருக்கின்றான். குதிரை கள், கோவேறு கழுதைகள் என்பவற்றை ஏறிச் செல்வதற்காகவும் (உங்களுக்கு) அலங்காரமாகவும் (அவன் படைத்திருக்கிறான்). இன்னும் நீங்கள் அறியாதவற்றையும் அவன் படைத்திருக்கிறான். (16: 5-8)

  இவ்வசனத்தில் இருந்து புரிந்துகொள்ளக் கூடியவற்றைப் பின்வருமாறு பட்டியல் படுத்தலாம்.

- பிராணிகள் மனிதனோடு நெருங்கி வாழ்பவை, எனவே அத்தகைய மிருகங்களுக்கு உரிய பாதுகாப்பும் முக்கியத்துவமும் அளிப்பது கடமையாகும்.
- பிராணிகளுக்கும் கோபம், ஆசை முதலிய குணாதிசயங்கள் உண்டு.
- மனிதன் அவற்றில் இருந்து தனது பொருளாதாரத்தேவைகளை நிறைவேற்றுவது மட்டுமல்ல இரக்கம் பரிவு அன்னியோன்யம் முதலியவற்றைத் தோற்றுவிக்கும் பண்புகள் அவையிடமுள்ளன. அவை அழகுணர்வையும் தோற்றுவிக்கின்றன.
- **தாவரங்கள் மீது அன்பு**
- மனிதனது சூழலில் உள்ள தாவரங்கள் குறித்தும் இஸ்லாம் தெளிவான சிந்தனையை முன்வைத்துள்ளது. அவை இறை படைப்புக்கள். இறைவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றன. இறைவனுக்கு துதி செய்கின்றன.
- தாவரங்களும் உயிருள்ள இறைபடைப்புக்களாகும். அவற்றால் வலியை உணர முடியும் என நவீன அறிவியல் கூறுகின்றது. “படைப்புக்கள் அல்லாஹ்வின் குடும்ப மாகும். அவனுக்கு மிக விருப்பமானவர்கள் அவனது குடும்பத்திற்கு மிகவும் பயனளிப்பவர்களே.” (புஹாரி) எனவே ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் எல்லாப் படைப்புக்கள் மீதும் நேசம் கொள்ள வேண்டும்.
- மேகத்தில் இருந்து மிக்க பாக்கியமுள்ள மழையை நாம் வருவிக்கச் செய்து, அதனைக் கொண்டு பல சோலைகளையும் (விவசாயிகள்) அறுவடை செய்யும் தானிய மணிகளையும் முளைக்கச் செய்கிறோம். அடுக்கடுக்காக (கனிகள்) நிறைந்த குலைகளையுடைய, நீண்டு வளரும் பேரீத்தம் மரங்களையும் ((முளைப்பிக்கச்செய்து) (அதனை நாம்) அடியார்களுக்கு ஆகாரமாக்கி, அதைக்கொண்டு இறந்த பூமியை நாம் உயிர்ப்பிக்கின்றோம். ( 50:9-11)

- நீரும் அதன் மூலம் உயிர்த்தெழும் தாவரங்களும் இறையருள் எனக் கூறுகிறது. அவ்வருட்கொடைகளை மனிதன் வீணாக்கக் கூடாது. அவற்றைப் பாதுகாக்க வேண்டும். மேம்படுத்த வேண்டும். அது பூமியை வளப்படுத்தும் பணிகளில் ஒன்றாகும்.
- "உங்களில் ஒருவரது கையில் ஒரு ஈத்தம் செடி இருக்கும் நிலையில் மறுமை வரப்போகிறது என்றிருப்பினும் அதனை நட்டி விடுங்கள். (திர்மிதி) என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டதானது தாவரங்களை நடுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டப் போதிய சான்றாகும். "ஒரு முஸ்லிம் நட்ட மரத்தில் இருந்தோ அல்லது விவசாயத்தில் இருந்தோ பறவைகளோ மிருகங்களோ சாப்பிட்டு விட்டால் அதை நாட்டியவனுக்கு அது ஸதகாவாகும். (புஹாரி)
- தாவரங்களை அழிப்பதன் மூலம் புவியின் சமநிலை சீர்குலைகின்றது. மனித வாழ்வை அது பாதிக்கின்றது. அழகை இல்லாதொழிக்கின்றது. புவி உஷ்ணம் அடையக் காரணமாகின்றது. தேவைக்கன்றி மரங்களை வெட்டுவதை இஸ்லாம் தடுத்துள்ளது. அபூபக்ர் (ரழி) அவர்கள் தனது படையினருக்கு கூறிய நீண்ட உபதேசத்தில் மரங்களை வெட்ட வேண்டாம். அவற்றை எரிக்கவும் வேண்டாம். பழம் தரும் மரங்கள் எதனையும் வெட்டவும் வேண்டாம் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.
- இமாரா பின் ஹுஸைமா பின் ஸாபித் (ரழி) கூறுகிறார், உமர் (ரழி) அவர்கள் எனது தந்தையை நோக்கி பின்வருமாறு கூறுவதை நான் செவியுற்றேன். "நீர் உனது பூமியைப் பயன்படுத்திப் பயிரிடாமல் இருப்பதற்கான காரணம் என்ன? அதற்கு எனது தந்தையோ "நான் ஒரு வயது முதிர்ந்த மனிதன். நாளை மரணித்து விடலாம். எனப் பதிலளித்தார். அதற்கு உமர் (ரழி) அவர்கள் "நீர் நிச்சயமாகப் பயிரிட வேண்டும் என்பதில் நான் உறுதிகொண்டுள்ளேன்" என்றார்கள். பின்னர் உமர் (ரழி) அவர்களும் எனது தந்தையோடு சேர்ந்து தமது கையாலேயே பயிரிடுவதைக் கண்டேன். (ஜாமிஉல் கபீர்)
- நிலம் முழுமையாகப் பயன்படுத்தப்படல் வேண்டும். அவற்றில் தாவரங்கள் நாட்டப்பட வேண்டும்; வெறுமனே விடக்கூடாது என்பதில் இஸ்லாம் அக்கறை செலுத்துகின்றது. மேலும் சமூக வாழ்வில் மனிதன் தாவரங்களின் மீது அன்பு செலுத்தி அவற்றை நாட்டி வளர்த்தெடுப்பது ஓர் இபாதாவாகும் என்ற கருத்தை இஸ்லாம் ஊன்றிச் சொல்கிறது.

- **மனித உரிமை**
  - மனிதன் மனிதனாக வாழ வேண்டும். அவன் அல்லாஹ்வின் பிரதிநிதியாகச் செயற்பட வேண்டும். இதற்கு அவன் சுதந்திரமானவனாக இருக்க வேண்டும். அவன் சுதந்திர மானவனாக வாழ்வதற்கு அவனுக்கே உரித்தான உரிமைகள் வழங்கப்பட வேண்டும். மனிதன் பிறக்கும் போது சுதந்திரமானவனாகவே பிறக்கின்றான். அவன் உரிமைகளை அனுபவிக்கும் தேவையோடும் தகுதியோடும் பிறக்கிறான் என்பதே உண்மையாகும்.
  - உலக வரலாற்றில் மனித உரிமை பற்றிய சிந்தனை கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்ப கட்டத்திலேயே தோன்றியது என்றும் கி.பி. 1215ஆம் ஆண்டின் மகா பட்டயம் தான் முதலாவது சுதந்திரப் பிரகடனம் என்றும் கூறப்படுகின்றது. இதன் வளர்ச்சிக் கட்டமாக 1948 ஆம் ஆண்டின் ஐ.நா. மனித உரிமைப் பிரகடனம் அமைந்ததாகவும் பேசப்படுகின்றது. ஆனால் இதற்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்பே இஸ்லாம் மனித உரிமை பற்றி முழுமையாகவே பேசிவிட்டது என்பதை வரலாறு மறைத்து வருகின்றது.

- மனிதன் எங்கிருந்தாலும் எப்படியிருந்தாலும் மனிதன் என்ற வகையில் அவனுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை அனுபவிக்க முடியுமென்பது இஸ்லாத்தின் கருத்தாகும். இஸ்லாம் வழங்கியுள்ள உரிமைகள் மனிதன் என்ற அந்தஸ்துக்காக வழங்கப்பட்டுள்ளனவே தவிர வேறு எந்தத் தகைமைக்குமல்ல. இஸ்லாத்தில் மனித உரிமை அல்லாஹ்வினால் வழங்கப்படுவது. அதனை எவராலும் பறிக்கவோ குறைக்கவோ முடியாது. அது மனிதனால் கொடுக்கப்படவோ திருப்பி எடுக்கப்பட்வோ முடியாது. அது ஒவ்வொருவரையும் கட்டுப்படுத்துவது; நிலையானது; மாறாத்தன்மையுடையது; மாற்றத்துக்கு உட்படாதது; தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படுவது. இவற்றை நோக்கும்போது இஸ்லம் வழங்கியுள்ள மனித உரிமைகள் தெய்வீகத் தன்மை யுடையவை என்பதும் மனிதனது செல்வாக்குக்கு உட்படாதவை என்பதும் தெளி வாகும். ஏனெனில் அரசுகளோ பொது நிறுவனங்களோ உரிமைகளை வழங்கும் போது அவற்றில் மனிதனின் விருப்பு வெறுப்புக்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதனால் தான் சிலபோது அல்லது சிலருக்கு வழங்கப்படும் உரிமைகள் சிலபோது அல்லது சிலருக்கு மறுக்கப்படுகின்றன. இந்த நிலை இஸ்லாத்தில் இடம்பெற மாட்டாது. ஆளுவோரும் ஆளப்படுவோரும் இறந்த காலத்தில் வாழ்ந்தோரும் எதிர் காலத்தில் வாழப்போவோரும் ஒரே விதமான உரிமைகளை அனுபவிப்பர்.
- இஸ்லாம் வழங்கியுள்ள உரிமைகளைப் பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்.

**வாழ்வதற்கான உரிமை**

- தரித்திரத்துக்காக உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள்.... (கொலை செய்யக் கூடாதென்று அல்லாஹ் தடுத்துள்ள எந்த மனிதனையும் நியாயமின்றி கொலை செய்யாதீர்கள்...6: 151)
- இது ஷிர்க்குக்கு அடுத்த மிகப் பெரிய பாவமாகக் கொள்ளப்படுகின்றது.

**உயிரைப் பாதுகாக்கின்ற உரிமை.**

- எவனொருவன் மற்றொருவனை அநியாயமாகக் கொலை செய்கின்றானோ அவன் மனிதர்கள் யாவரையும் கொலை செய்தவன் போலாவான். எவன் ஓர் உயிரை-ஆத்மாவை வாழ வைக்கின்றானோ அவன் மனிதர்கள் யாவரையுமே வாழ வைத்தவன் போலாவான். (5:32)
- இங்கு கொலையில் இருந்து பாதுகாப்பதென்பது அநியாயமாகக் கொலைசெய்யப்படப் போகின்ற ஒருவரைக் காப்பதாக மட்டும் கொள்ளப்படுவதில்லை. நோய், காயம், பட்டினி, நீரில் முழ்குதல் போன்ற மரணத்துக்கு இட்டுச் செல்கின்றவற்றில் இருந்து காப்பாற்றுவதையும் தெரிவிக்கின்றது.

**கற்பைக் காத்துக்கொள்ளும் உரிமை**

- (விசுவாசிகளே) நீங்கள் விபசாரத்திற்கு நெருங்கவும் வேண்டாம். ஏனென்றால் அது மானக்கேடானதாகவும், தீய வழியாகவும் இருக்கின்றது. (17:32)
- நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவரின் உயிர், பொருள், கற்பு ஆகிய மூன்றையும் பாதுகாக்க வேண்டும் என்பதை ஹஜ்ஜதுல் விதா பிரசங்கத்தில் வலியுறுத்தியுள்ளார்கள்.

**அடிப்படை வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை**

- அவர்களுடைய பொருள்களில் (வாய்திறந்து) யாசகம் கேட்போருக்கும் கேட்கா தோருக்கும் பாகமுண்டு. (யாவருக்கும் தானம் செய்வார்கள்) (51:19) மனிதனின் அடிப்படைத்தேவைகளான உணவு, உடை, உறையுள், மருத்துவம், கல்வி, முதலியவற்றை ஒருவரிடமோ பலரிடமோ கேட்டுப் பெறுவதற்காக உரிமை உண்டு.

ஆதரவளிக்க யாரும் இல்லாத போது பொறுப்பு ஆட்சித் தலைமையைச் சாருகின்றது.

**தனி மனித உரிமை**

- இதில் முதலாவது, மனிதன் அடிமையாகவன்றி சுதந்திரமாக வாழக்கூடிய உரிமையாகும். மூன்று மனிதர்களுக்கெதிராக நான் மறுமையில் வாதிடுவேன். அவர்களுள் ஒருவர் மனிதர்களை அடிமைப்படுத்தி அவர்களை விற்று அந்தப் பணத்தில் சாப்பிடுபவர். (புஹாரி) என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இஸ்லாம் அறிமுகமான கால கட்டத்திலும் அதற்கு முன்னரும் பின்னரும் அடிமை முறை இருந்தே வருகின்றது. இவ்வாறான அடிமை முறையை இஸ்லாம் கடுமையாகக் கண்டிக்கின்றது. அவர்களை விடுதலை செய்யுமாறும் அவர்களது உரிமைகளை வழங்குமாறும் கட்டளை இடுகின்றது.

**நீதிமன்ற விசாரணையின்றி தடுப்புக் காவலிலிருந்து விடுதலை பெறுகின்ற உரிமை.**

- நபியவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்த போது சபையில் இருந்த ஒருவர் ''தனது அண்டை வீட்டான் என்ன காரணத்துக்காக கைது செய்யப்பட்டுள்ளார்.'' என கேள்வி எழுப்பினார். நபியவர்கள் பதிலளிக்காமல் தொடர்ந்து உரையாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர் இரண்டாம் முறையாகவும் எழுந்து அதே கேள்வியை எழுப்பினார். நபியவர்களும் உரையைத் தொடர்ந்து கொண்டே இருந்தார்கள். மூன்றாவது முறையாகவும் இதே கேள்வியை எழுப்பினார். நபியவர்கள் கேள்வி எழுப்பியவரின் அண்டை வீட்டாரை விடுதலை செய்யுமாறு கைது செய்தோருக்டுகு உத்தரவிட்டார்கள்.

**யாரோ செய்த குற்றத்திற்காக மற்றொருவரைச் சிறைப்பிடிப்பதில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமை**

- மைந்தன் செய்த குற்றத்திற்காக தந்தையை, நண்பன் செய்த குற்றத்திற்காக நண்பனை என்றவாறு கைது செய்வதை இஸ்லாம் விரும்பவில்லை. குற்றம் செய்யாதவர் தண்டிக்கப்படும் நிலை இங்கு காணப்படுகின்றது. இதனால் தனிமனித உரிமை பாதிக்கப்படுகின்றது. இதனை ''ஒருவரின் சுமையை மற்றொருவர் சுமக்கமாட்டார்.'' (6:164) என்று அல்குர்ஆன் சுட்டிக் காட்டுகின்றது.

**நீதி கோரும் உரிமை**

- விசுவாசிகளே நீதத்தை நிலை நாட்டுவதில் அல்லாஹ்வுக்காக நீங்கள் உறுதியான சாட்சிகளாக இருங்கள். மக்களில் ஒரு சாரார் மீதுள்ள துவேசம் (அவர்களுக்கு) அக்கிரமம் செய்யும்படி உங்களைத் தூண்டாதிருக்கவும் (எவ்வளவு குரோதமிருந்த போதிலும்) நீங்கள் நீதியே செலுத்துங்கள்... (5:18)

**சமத்துவ உரிமை**

- ''மனிதர்களே நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்துதான் சிருஷ்டித்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம்...'' (49: 13)
- எந்த அறபியும் அஜமியை விட மேலானவரல்லர். எந்த அஜமியும் அறபியை விட மேலானவரல்லர். அனைவரும் ஆதமின் மக்களாவர். ஆதம் மண்ணால் படைக்கப்பட்டவர். (பைஹகி)

**துணை போவதற்கும் போகாமலிருப்பதற்குமான உரிமை**

- ''அன்றி நன்மைக்கும் (அல்லாஹ்வுடைய) பயபக்திக்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள். பாவத்திற்கும் அக்கிரமத்திற்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டாம். அல்லாஹ்வுக்கே நீங்கள் பயப்படுங்கள். ஏனென்றால் நிச்சயமாக அல்லாஹ் தண்டிப்பதில் கடுமையானவன்.'' (5:2)

**உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்புப் பெறும் உரிமை**

- ''எவரேனும் யாதொரு விசுவாசியை (அவன் விசுவாசி என்று நன்கறிந்திருக்கும் நிலையில்) வேண்டுமென்றே கொலை செய்தால் அவனுக்குரிய தண்டனை நரகம் தான். அவன் அதில் என்றென்றும் தங்கிவிடுவான். அல்லாஹ் அவன்மீது கோபங்கொண்டு அவனைச் சபித்தும் விடுவான். அன்றி மகத்தான வேதனையையும் அவனுக்குச் சித்தப்படுத்தி வைத்திருக்கிறான்.'' (4:93) இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் நாளில் உங்கள் இறைவனைச் சந்திக்கும் வரை உங்கள் உயிர்களையும் உடைமைகளையும் ஒருவருக்கொருவர் பறித்துக் கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது என நபி (ஸல்) அவர்கள் தமது ஹஜ்ஜதுல் விதா பிரசங்கத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

**மனித கௌரவத்தைப் பாதுகாக்கும் உரிமை**

- ''விசுவாசிகளே எந்த ஆண்களும் மற்றெந்த ஆண்களையும் பரிகாசம் செய்ய வேண்டாம் அவர்கள் (பரிகாசம் செய்யும்) இவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம். (அவ்வாறே) எந்தப் பெண்களும் மற்ற எந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்) அவர்கள் (பரிகாசம் செய்யும்) இவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம். உங்களில் ஒருவர் மற்றவரை இழிவாகக் கூற வேண்டாம். உங்களில் ஒருவர் மற்றவருக்கு (தீய) பட்டப்பெயர் சூட்ட வேண்டாம். விசுவாசம் கொண்டதன் பின்னர் கெட்ட பெயர் சூட்டுவது மிகப் பெரும் பாவமாகும். எவர்கள் (இவைகளில் இருந்து விலகிக்கொள்ளவில்லையோ அவர்களே அக்கிரமக்காரர்களாவர்.'' (49:11)

**தனிப்பட்ட வாழ்வில் கண்ணியத்தைப் பாதுகாக்கும் உரிமை**

- ''விசுவாசிகளே சந்தேகங்களில் இருந்து அனேகமாக நீங்கள் விலகிக் கொள்ளுங்கள் ஏனெனில் சில விடயங்களில் சந்தேகிப்பது பாவமாக இருக்கின்றது. (எவருடைய குற்றத்தையும்) நீங்கள் துருவித் துருவி விசாரித்துக் கொண்டிருக்க வேண்டாம். (49:12)
- ''விசுவாசிகளே உங்களுடையதல்லாத வீடுகளில் நீங்கள் (நுழையக் கருதினால்) அதிலிருப்பவர்களுக்கு ஸலாம் கூறி (அவர்களுடைய அனுமதியைப் பெறாதவரை) நுழையாதீர்கள். இவ்வாறு நடந்து கொள்வது உங்களுக்கே மிக்க நல்லது. (இதனை மறந்துவிடாது) நீங்கள் கவனத்தில் வைப்பீர்களாக.'' (24:27)
- ஒரு மனிதன் தனது சொந்த வீட்டிற் கூட திடீரென்றோ இரகசியமாகவோ நுழையக் கூடாதென நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள். மற்ற மனிதர்களின் வீட்டை உற்றுப் பார்ப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

**கொடுங்கோன்மைக்கெதிராகப் போராடும் உரிமை**

- அக்கிரமத்துக்கு உள்ளானவர்கள் தவிர (மற்றெவரும் யாவரைப் பற்றியும் பகிரங்கமாகத்) தீய வார்த்தைகளைக் கூறிக் கூச்சலிடுவதை அல்லாஹ் விரும்புவதே இல்லை. (4:148)

**கருத்து வெளிப்பாட்டுரிமை**

- விசுவாசம் கொண்ட ஆண்களும் விசுவாசம் கொண்ட பெண்களும் (தங்களுக்குள்) ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாயிருக்கின்றனர். அவர்கள் (ஒருவர் மற்றவரை) நன்மை செய்யுமாறு தூண்டியும் பாவம் செய்யாது தடுத்தும் வருவர். (9:71)
- இவர்களுக்கு நாம் பூமியில் ஆட்சியதிகாரம் வழங்கினால் நல்லதைச் செய்ய ஏவுவார்கள். தீயதைவிட்டும் தடுப்பார்கள். (22:41)
- உங்களில் யாராவது தீமையைக் காண நேர்ந்தால் அதைத் தனது கரத்தால் தடுக்க வேண்டும். முடியாவிட்டால் நாவினால் தடுக்க வேண்டும். அதற்கும் முடியாத நிலையில் இருந்தால் குறைந்த பட்சம் தமது மனத்தாலேனும் கடிந்து கொள்ள வேண்டும். இது ஈமானின் பலவீனமான படித்தரமாகும் (முஸ்லிம்)

**கூட்டம் கூடும் உரிமை**

- (விசுவாசிகளே) உங்களில் ஒரு கூட்டத்தார் தோன்றி அவர்கள் (மனிதர்களை) நன்மையின் பால் அழைத்து நல்லதை ஏவி தீய செயல்களில் இருந்து (அவர்களை) விலக்கிக் கொண்டும் இருக்கவும். இத்தகையோர் தாம் வெற்றி பெற்றவர்கள் (3:104)

**வழிபாட்டுரிமை**

- (இஸ்லாம்) மார்க்கத்தில் நிர்ப்பந்தமேயில்லை. வழிகேட்டில் இருந்து நேர்வழி தெளிவாகி விட்டது.(2:256)
- வேதங்கொடுக்கப்பட்ட மக்களோடு பண்பட்ட அழகிய முறையிலன்றி வாதிக்காதீர்கள். (26: 46)
- அல்லாஹ் அல்லாத எவற்றை அவர்கள் அழைக்கின்றார்களோ அவற்றை நீங்கள் திட்டாதீர்கள் (6:104)

**அரசியல் விவகாரங்களில் பங்கு கொள்ளும் உரிமை**

- அவர்களுடைய ஒவ்வொரு காரியத்தையும் தங்களுக்குள் கலந்தாலோசிப்பார்கள். உங்களில் எவரேனும் மெய்யாகவே விசுவாசம் கொண்டு நற்கருமங்கள் செய்தால் அவர்களுக்கு முன்னர் சென்றவர்களை (பூமிக்கு) அதிபதிகளாக்கிய பிரகாரமே இவர்களையும் நிச்சயமாக பூமிக்கு அதிபதிகளாக்கி வைப்பதாகவும் அவன் விரும்பிய மார்க்கத்தில் இவர்களை ஸ்திரப்படுத்தி வைப்பதாகவும் இவர்களுடைய பயத்தை அமைதியும் பாதுகாப்புமாக மாற்றிவிடுவதாகவும் நிச்சயமாக அல்லாஹ் வாக்களித்திருக்கிறான் (24:55)
- மேலே குறித்த அனைத்து உரிமைகளும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானவை. இஸ்லாம் அறிமுகமான கால கட்டத்தில் ஆண்கள் உரிமையோடு வாழ்ந்தார்கள். விதிவிலக்காக சில பகுதியினர் உரிமைகளை இழந்திருந்தனர். வலியோர் எளியோரை நசுக்கி உரிமைகளை மறுக்கும் நிலை இருந்தது. பெண்களைப் பொறுத்தவரை பெரும்பாலும் உரிமை மறுக்கப்பட்டவர்களாகவே வாழ்ந்தனர். விதிவிலக்காக சிலர் சில உரிமைகளைப் பெற்றிருந்தனர். பெண்களுக்கு வாழும் உரிமை இருக்கவில்லை. கருத்து வெளிப்பாட்டுரிமை, சொத்துரிமை, கல்வி பெறும் உரிமை, மணவுரிமை போன்றன மறுக்கப்பட்டே வந்தன. மறுக்கப்பட்ட எல்லா உரிமைகளையும் இஸ்லாம் வழங்கியது. ஆண்களுக்கும் பெண்களுக்குமான சமவுரிமை என்பது இஸ்லாத்தில் ஏனைய சமூகங்களை விட வித்தியாசமானது. ஆண் பெண் இருபாலாரினதும் இயல்பு, செயற்பாடு போன்றவற்றைப் பொறுத்து சில விடயங்களில் ஆண்களுக்கும், வேறு சில விடயங்களில் பெண்களுக்கும்

முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. தலைமைப் பொறுப்பைப் பொறுத்தவரை ஆண்களுக்கும் பிள்ளை வளர்ப்பைப் பொறுத்தவரை பெண்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதை உதாரணமாக எடுத்துக் காட்டலாம்.

- **உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி I** இஸ்லாத்தில் சமூக வாழ்வின் முக்கியத்துவம், சமூக அமைப்பின் சிறப்பியல்புகள் சமூகத்தின் கேந்திர ஸ்தானம் என்ற வகையில் மஸ்ஜித் பற்றி மாணவர்களுக்கு விளக்குங்கள்.

**படி II** மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து குழுவுக்கு ஒன்றாகப் பின்வரும் தலைப்புக்களை வழங்கி அவை குறித்து தகவல் திரட்ட வழிப்படுத்துங்கள்

- இஸ்லாத்தில் சமூக வாழ்வின் முக்கியத்துவம், சமூக நீதி, கூட்டுப் பொறுப்பு, தலைமைத்துவம் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்
- இன்றைய மஸ்ஜிதுகளின் நிலைகளும் அவற்றைப் புனரமைப்பதற்கான ஆலோசனைகளும்
- இனங்களுக்கிடையே ஆரோக்கியமான உறவுகளைக் கட்டியெழுப்ப இஸ்லாம் வழங்கும் போதனைகள்

**படி III** ஒவ்வொரு குழுவும் தாம் திரட்டியவற்றை சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்

**படி IV** கருத்துப்பரிமாற்றத்தின் சாராம்சத்தை எழுதிக்கொள்ள அறிவுறுத்துங்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை:**


- அல் கஸ்ஸாலி முகம்மத், (2004), *இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள்*, சென்னை, இலக்கியச் சோலை வெளியீடு.
- ஹமுதா அல்அத்தி, (1985), *இஸ்லாம் உங்கள் பார்வைக்கு*, குவைத், I.I.F.S.O
- முஸ்தபா ஸிபாஈ, (1999) *இஸ்லாமிய நாகரிகம்*, சென்னை, இலக்கியச் சோலை.
- நாளிர் எம்.எச்.எம், (1983), *இஸ்லாமிய நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்*, கொழும்பு, அஷ்ஷபாப் பதிப்பகம்.
- அமீன் ஸீ.எம்.ஏ, (1994), *சமூகப் புனரமைப்பில் மஸ்ஜித்களின் பங்கு*, திஹாரிய, ரேஷ்மா பதிப்பகம்.
- மௌதூதி மௌலானா, (2001) *இஸ்லாத்தில் மனித உரிமைகள்*, சென்னை, இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்.
- அலவி ஆஸிம், (2005), *தலைமைத்துவம் ஓர் இஸ்லாமிய அணுகல்*, சென்னை, மெல்லினம் வெளியீடு.
- முகம்கத் குதுப், (1978), *ஐயமும் தெளிவும்*, கொழும்பு, இஸ்லாமிக் பப்ளிகேஷன் சென்டர்.
- முஸ்தபா மணவை, (1996), *இஸ்லாமும் சமய நல்லினக்கமும்*, சென்னை, சௌதா பப்ளிகேஷன்.
- அக்ரம் முகம்மத், (2003), *நடைமுறைக்கேற்ற இஸ்லாம்*, பஸ்யால, முஸல்மான் பதிப்பகம்.
- சுக்ரி எம்.ஏ.எம், (1995), *இஸ்லாமும் மனித உரிமைகளும்*, பேருவல, நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்.

**தேர்ச்சி 9.0 : சமூக வாழ்வுடன் தொடர்பான இஸ்லாமிய சட்ட திட்டங்களையும் போதனைகளையும் அறிந்து அதற்கேற்ப தமது வாழ்வை வடிவமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 9.2:** தொழில்சார் நடவடிக்கைகளில் இஸ்லாமிய விதிமுறைகளைப் பின்பற்றுவார்.

**காலம்** : 40 பாடவேளைகள்

**கற்றல் பேறு** :

- இஸ்லாமியப் பொருளாதார முறையின் சிறப்பம்சங்களை அறிந்து கூறுவார்.
- பொருளீட்டலுக்கு இஸ்லாம் கொடுத்துள்ள முக்கியத்துவங்களையும், ஒழுங்கு விதிகளையும் விளக்குவார்.
- தொழில்சார் நடவடிக்கைகளில் வியாபாரம், விவசாயம், கைத் தொழில், சேவைத் தொழில் தொடர்பான சட்டதிட்டங்களையும் ஒழுங்குகளையும் ஆதாரங்களுடன் முன்வைப்பார்.
- சமூக வாழ்வுடன் தொடர்புடைய கொடுக்கல்-வாங்கல் அம்சங்களை விளங்கி ஏனையவர்களுடன் கருத்துப் பரிமாறிக் கொள்வார்.
- இஸ்லாம் தடுத்துள்ள பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து தவிர்ந்து நடப்பார்.
- இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் முக்கியத்துவங்களையும் சட்ட ஒழுங்குகளையும் விளங்கி எடுத்துக் கூறுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- **இஸ்லாமியப் பொருளாதார வழிமுறையின் சிறப்பம்சங்கள்**
    - மனிதனது தேவைகளையும், அவற்றை நிறைவேற்றப் பயன்படும் இயற்கையின் அருட்கொடைகளையும் இவற்றுக்கிடையிலான மனித நடத்தைகள் பற்றியும் ஆராய்கின்ற ஓர் அறிவியலில், மனிதனது அடிப்படைத் தேவைகளாகக் கருதப்படுவது உணவு, உடை, வாழ்விடம், வருமானம் என்பனவாகும். இவற்றை நிறைவேற்றுவதற்காகவே முதலாளித்துவம், சமவுடமை போன்ற பொருளாதார முறைமைகள் தோன்றின. குறைபாடுகளைக் கொண்ட இப்பொருளாதார முறைமைகள் நாளுக்கு நாள் பொருளாதார ரீதியிலான பிரச்சினைகளையே தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன. வாழ்க்கையின் ஏனைய விடயங்களை ஒதுக்கிவிட்டு பொருளாதார சுபீட்சத்தை மாத்திரம் இலக்காகக் கொண்டு இவை செயற்படுவதால் மனித வாழ்வின் ஏனைய அம்சங்கள் பாதிக்கப்பட்டு வருவதைக் காண்கிறோம்.
    - இஸ்லாம் ஆன்மீக விருத்தியுடன் கூடிய பொருளாதார சுபீட்சத்தையே திட்டமிட்டுள்ளது. எனினும், இவ்விரு வகை அபிவிருத்தியிலும் உலகம் முழுமையாக வெற்றியடைய வேண்டுமாயின் இஸ்லாத்தின் பல்வேறு கூறுகளும் சம காலத்தில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். மாறாக அதன் ஒரு பகுதியை மட்டும் நடைமுறைப் படுத்தி மறுபகுதியைக் கைவிடுவதன் மூலம் எதிர்பார்க்கின்ற முழுமையான அபிவிருத்தியைக் காண முடியாமற் போகும்.

- **இஸ்லாமிய பொருளாதார அமைப்பின் சிறப்பியல்புகள்**

1. அல்லாஹ்விடமிருந்து பெறப்பட்ட தெய்வீகத் தன்மை கொண்டது.

நடைமுறையிலுள்ள பொருளாதார முறைகள் மனித சிந்தனைகளினால் உருவாக்கப் பட்டவைகளாகும். எனவே அவற்றில் மனித பலவீனங்கள் நிறைந்து காணப்படுகின்றன. ஆனால், இஸ்லாமியப் பொருளியல் கோட்பாடு, வஹியின் வழிகாட்டலில் கட்டி யெழுப்பப்பட்டுள்ளதால் அதில் தெய்வீகத் தன்மை காணப்படுகின்றது. இதனால் அது பூரணத்துவம் வாய்ந்ததாகவும் பொருத்தப்பாடுடையதாகவும் உள்ளது.

2. சமகாலத்தில் நெகிழாத் தன்மையும் நெகிழும் தன்மையும் கொண்டு இயங்குகின்ற பொருளாதார முறை

இதன் தெய்வீகத் தன்மை கொண்ட பகுதி நெகிழாத் தன்மை கொண்டதாகவும் இஜ்திஹாதுக்கு அல்லது ஆய்வுக்குரிய பகுதிகள் நெகிழும் தன்மை கொண்டவையாகவும் உள்ளன. இதனால் இப்பொருளாதார முறை எல்லாக் காலத்திற்கும் பொருத்தமானதாக அமைகிறது.

- **நெகிழாத் தன்மை கொண்ட பொருளாதார விதிகள்**

  – இப்பிரபஞ்சத்திலுள்ள வளங்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்குச் சொந்தமானவை. அல்லாஹ் விதித்த சட்டதிட்டங்களுக்கமையவே மனிதன் அவற்றைப் பயன்படுத்த முடியும். "மேலும் வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அனைத்தும் அல்லாஹ் வுக்குரியவை." (53:31)

  – மனிதர்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இவ்வளங்களைப் பயன் படுத்துவதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனிமனிதனதும் அடிப்படைப் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பை இப்பொருளா தார முறை ஏற்றுள்ளது. "அவர்களின் செல்வங்களில் கேட்போருக்கும் கேட்கா தோருக்கும் குறித்ததோர் உரிமை உண்டு" (70:24-25) நபி (ஸல்) அவர்கள், "வசதியற்றோரைப் பொறுப்பேற்பது எனது கடமை; அத்தகையோர் என்னிடம் வரட்டும்" (ஹாகிம்) என்று கூறியுள்ளார்கள்.

  – இஸ்லாமியப் பொருளாதார முறை செல்வச் சுழற்சிக்கு வழிவகுக்கின்றது. எனவே ஒரு சிலரிடம் செல்வம் தேங்கி சமநிலையற்ற நிலை தோன்றுவதை இது தடுத்து விடுகின்றது. "செல்வம் உங்களிலுள்ள பணக்காரர்களுக்கிடையில் மாத்திரம் சுற்றிக் கொண்டிருக்காமல் இருப்பதற்காக..." (59:7) எனும் குர்ஆன் வசனம் இவ்விதியை உறுதிப்படுத்துகின்றது.

  – இஸ்லாமியப் பொருளாதார முறையில் தனிமனித சொத்துரிமை உத்தரவாதமளிக்கப் பட்டுள்ளது. அதாவது சொத்துக்களை வைத்துக்கொள்ளவும் செலவிடுவதற்குமான உரிமை வழங்கப்பட்டுள்ளது. "ஆண்கள் சம்பாதித்தவை அவர்களுக்குரியதாகும். பெண்கள் சம்பாதித்தவை அவர்களுக்குரியதாகும்." (4:32) எனும் குர்ஆன் வசனம் இவ்விதியை உறுதிப்படுத்துகின்றது.

  – இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாட்டில், பொருளாதார சுதந்திரம் மட்டுப்படுத்தப் பட்டிருக்கும். வாழ்வாதாரங்களைத் தேடும்போது குர்ஆனும், ஸுன்னாவும் விதித்த சட்டதிட்டங்களை மீற முடியாது. அது அனுமதிக்கப்பட்ட பொருளீட்டல் முறை, தடுக்கப்பட்ட பொருளீட்டல் முறை என இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. "உங்களின் சொத்துக்களை உங்களுக்கிடையில் நியாயமற்ற முறையில் விழுங்காதீர்கள்." (2:188) எனக் குர்ஆன் விதியமைத்துள்ளது.

- செலவினங்களை ஒழுங்குபடுத்தி வீண் விரயத்தை தடுக்கின்றது. ஆடம்பரங்கள் தவிர்க்கப்படல் வேண்டும். "அளவு கடந்து வீண்விரயம் செய்யாதிருப்பீராக. நிச்சயமாக வீண்விரயம் செய்வோர் ஷைத்தானுடைய சகோதரர்களாக இருக்கின்றனர்" (17:26) எனும் குர்ஆன் வசனம் இவ்விதியைத் தருகின்றது.
- மேற்படி விதிகள் அனைத்தும் கால மாற்றங்களாலோ, பிரதேச வேறுபாடுகளினாலோ மாற்றமடைவதில்லை. எங்கும் எப்பொழுதும் இவை நிலையானதாகவே இருக்கும். கருத்து வேறுபாடுகளற்ற தெய்வீகத் தன்மை கொண்டதாகவே அவை இருக்கும்.

- **நெகிழும் தன்மை கொண்ட அல்லது ஆய்வுக்குரிய விதிகள்**
  - பொருளாதார நடவடிக்கைகளில் அரச தலையீட்டின் அளவைத் தீர்மானிக்கும் நடவடிக்கை.
  - சமூக நீதியை நிலைநாட்டுவதற்கான வழிவகைகளை மேற்கொள்ளல்.
  - சமகால பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டி அமுல்படுத்தல்.
  - பொருளாதாரத் துறைகளைப் பொதுவுடமை தனியுடமையாக மாற்றுவது தொடர்பாக வரையறைகளைக் கொண்டுவருதல்.
  - வேதனங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுத்தல்.
  - வட்டியுடன் தொடர்பான செயற்பாடுகளைத் தெளிவுபடுத்தல்.

மாறா விதி, மாறும் விதிக்கமையவே இஸ்லாமிய பொருளாதார வட்டம் சுழல்வதால் அது சிறந்த பொருளாதார முறையாக நிலைத்து நிற்கின்றது.

3. இயற்கைக்கும் மனித இயல்புக்கும் ஏற்ற பொருளாதார முறை.

   இயற்கைச் சட்டங்களை முறிப்பதற்கோ, மனித இயல்புடன் இரண்டறக் கலந்து வாழ்க்கைக் கோட்பாடுகளை சிதைப்பதற்கோ இஸ்லாமியப் பொருளாதார முறை இடமளிப்பதில்லை. உதாரணமாக விபச்சாரத்தை ஒரு பொருளீட்டும் முறையாகக் கொள்வதை இஸ்லாம் தடுக்கின்றது. அது இயற்கை நியதியை முறிக்கின்றது. மது உற்பத்தி, விநியோகம், பாவனை முதலியவற்றை இஸ்லாம் தடுக்கின்றது. அது மனித இயல்பை மாற்றுகின்றது. "நீங்கள் விபச்சாரத்தை நெருங்காதீர்கள். நிச்சயமாக அது மானக்கேடானதாகும். மேலும் (வேறு கேடுகளின் பக்கம் இழுத்துச் செல்லும்.) தீய வழியாகவும் இருக்கின்றது." (17:32) (5:90-91) போதை தரக் கூடிய எல்லாம் மதுவாகும். எல்லா மது வகைகளும் ஹராமானதாகும். (முஸ்லிம்)

4. இஸ்லாமியப் பொருளாதார முறை ஒழுக்கத்திற்கும், பண்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பொருளாதார முறையாகும். எந்த வகையைச் சார்ந்த உற்பத்தியாக இருந்தாலும் விநியோகமாக இருந்தாலும் நுகர்வாக இருந்தாலும் அது ஒழுக்கத்தை பண்பாட்டைத் தகர்க்குமாக இருந்தால் இஸ்லாம் அதனை அங்கீகரிப்பதில்லை. உதாரணமாக, ஆடையுற்பத்தி, விநியோகம், நுகர்வு, விவகாரங்களில் இஸ்லாமிய விதிமுறைகளை மீறுபவை, திரைப்படத் தயாரிப்பு, வெளியீடு, பார்வையிடல் இஸ்லாமிய ஒழுக்கம், பாண்பாட்டுக்கு முரண்படுமானால் இஸ்லாம் அதனை அனுமதிப்பதில்லை.

5. சமூக நலனுக்கும் தனிமனித நலனுக்கும் இடையில் இனங்காணும் பொருளாதார முறை, நடைமுறையிலுள்ள பொருளாதார முறைகளில் முதலாளித்துவம், தனிமனித நலனை மட்டும் கருத்திற் கொண்டு செயற்படுகின்றது. சமவுடமைப் பொருளாதார முறை, சமூக நலனை மட்டும் கவனத்திற் கொள்கின்றது. ஆனால், இஸ்லாமியப் பொருளாதார முறையில் மனிதனது தனித்துவத்தை முறையாக விருத்தி செய்து கொள்ளவும் சமூக நலனைப் பேணவும் போதனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஒன்றுக்காக மற்றொன்றை இழந்து விடுவதற்கு இஸ்லாம் அனுமதிப்பதில்லை. ஒன்று மற்றொன்றில் சார்ந்து நின்று தேவைகளைப் பூர்த்தி செய்யும் வழிவகைகளையே அது மேற்கொள்கின்றது.

6. இஸ்லாமியப் பொருளாதார முறை ஆன்மீகத் தேவை, லௌகீகத் தேவை என்பவற்றை கவனத்திற் கொண்டு பொருளாதார நடைமுறைகளைச் செயற்படுத்துகின்றது. மனிதன் உடல், ஆன்மா, அறிவு என்பவற்றைக் கொண்டவனாக இருப்பதனால் வெறுமனே இலாபத்தை கருத்திற் கொண்டோ உடலியல் தேவைகளை மாத்திரம் கருத்திற் கொண்டோ பொருளாதார திட்டங்களை அமுல்படுத்தவில்லை. ஆன்மீகத் தேவைகளையும் லௌகீகத் தேவைகளையும் கவனத்திற் கொண்டு பொருளாதாரத் திட்டங்களை அமுல்படுத்துகின்றது. இதனால் மனித விழுமியங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

7. இப்பொருளாதார முறை தெய்வீகத் தன்மை கொண்டதாக இருப்பதனால் அது அருள், அபிவிருத்தி நிறைந்ததாகவுள்ளது. வரலாற்றில் அது சீராக அமுல்படுத்தப்பட்ட காலப் பகுதிகளில் அதன் பொலிவைக் காண முடிந்தது. இப்பொருளாதார முறை கைவிடப்பட்டுள்ளதால் இன்றைய பொருளாதாரம் மனித வாழ்க்கையில் பிரச்சினைகளைக் கொண்டு வந்துள்ளதைக் காணலாம்.

8. இஸ்லாமிய பொருளாதார நடவடிக்கைகள் இபாதத்தாகக் கருதப்படுகின்றது. இப்பொருளாதார முறை அல்லாஹ் விதித்த சட்டதிட்டங்களுக்கமையவே மேற்கொள்ளப்படுவதால் அது இபாதத்தாகவே அமைகின்றது.

- **பொருளீட்டலுக்கு இஸ்லாம் கொடுத்துள்ள முக்கியத்துவம்**

  - பொருளீட்டலுக்கு அல்லது உழைத்து வாழ்வதற்கு இஸ்லாம் கொடுத்துள்ள முக்கியத்துவங்கள்.

  \- மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதியாக இருப்பதனால் அவன் வாழ்வதற்குத் தேவையான வசதிகளை அல்லாஹ் இப்பிரபஞ்சத்தில் ஏற்படுத்தி வைத்துள்ளான். வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவற்றை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலும் வேறு சில வசதிகளை தேடிப் பெற்றுக் கொள்ளும் வகையிலும் வைத்துள்ளான். இவ்வாறு மனிதன் தனக்குரிய வாழ்வாதாரங்களைத் தேடிப் பெறும் முயற்சி பொருளீட்டல் அல்லது உழைப்பு என அழைக்கப்படுகின்றது.

  “அவன்தான் உங்களுக்குப் பூமியை விரிப்பாக ஆக்கி வைத்தான். எனவே, அதன் பல கோணங்களுக்கும் சென்று அவன் உங்களுக்கு அளித்திருப்பவைகளைப் புசிப்பீர்களாக.” (67:15)

  “(ஜுமுஆ) தொழுகை முடிந்ததும் பூமியில் பரந்து சென்று அல்லாஹ்வின் அருளைத் தேடிப் பெற்றுக் கொள்ளுங்கள்.” (62:10)

  இவ்விரண்டு அல்குர்அன் வசனங்களும் உழைத்து வாழ்வதைத் தூண்டிக் கொண்டிருக்கின்றன.

  “தனது கையால் உழைத்து உண்பதை விட வேறு எந்தச் சிறந்த உணவையும் எவரும் உண்ணுவதில்லை. அல்லாஹ்வின் தூதர் தாவூத் (அலை) அவர்கள் தன் கையினால் உழைத்தே சாப்பிட்டார்கள்.” (புஹாரி) இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் உழைப்பைத் தூண்டும் வகையில் அதிகமான போதனைகளை முன்வைத்துள்ளதைக் கண்டு கொள்ளலாம். யாசகம் கேட்டு வந்த ஒருவரை உழைப்பில் ஈடுபடுத்தியமையும், விவசாயி ஒருவரின் கரடு முரடான கரங்களை முத்தமிட்டமையும் இதற்கு சிறந்த உதாரணங்களாகும். ஆகவே தம் பொறுப்பில் உள்ளவர்களுக்காக ஒரு மனிதன் உழைப்பது அல்லது பொருளீட்டுவது பர்ளான காரியமாகும். முஹம்மத் (ஸல்)

அவர்கள் உட்பட இறைதூதர்கள் அனைவரும் உழைத்தே வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதை வரலாறு நிரூபிக்கின்றது.

“உங்களில் எவரும் உழைக்காமல் வருமானத்தைத் தேடிச் செல்லாமல் இருக்கக் கூடாது. “அல்லாஹ்வே எனக்கு உணவளி’ எனப் பிரார்த்தனை செய்தால் மட்டும் போதாது. வானம் தங்கத்தையோ வெள்ளியையோ (உழைக்காமல்) பொழிவதில்லை” என உமர் (ரழி) அவர்கள் மஸ்ஜிதில் உழைக்காமல் முடங்கிக் கிடந்தவர்களுக்கு உபதேசித்தார்கள்.

- பொருளீட்டலோடு தொடர்புடைய இஸ்லாமிய ஒழுங்குகள்

பொருளீட்டலுக்காக வியாபாரம், விவசாயம், கைத்தொழில், சேவைத் தொழில் போன்றவற்றில் ஈடுபட்டாலும் இஸ்லாம் விதித்துள்ள ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிப்பது கட்டாயமானதாகும். பொருளீட்டலின் மூலம் கிடைக்கும் வருமானம் ஹலாலானதாக இருத்தல் வேண்டும்.

“(ஹலாலான) நல்ல பொருள்களிலிருந்து உண்ணுங்கள், நற்கிரியைகள் புரியுங்கள்.” (23:51)

“விசுவாசிகளே! நாம் உங்களுக்கு அளித்தவற்றில் பரிசுத்தமானவற்றையே புசியுங்கள்.” (2:172)

“ஹராத்தை உட்கொண்டு வளர்ந்த எந்த உடம்பும் சுவனம் நுழையாது. ஹராத்தை உண்டு வளர்ந்த உடலனைத்தும் நரகுக்கே தகுதியானவை.” (திர்மிதி)

ஆகவே உழைப்பு ஹராமானதாக அமைந்தால் வெற்றிபெற முடியாது என்பது உறுதியாகின்றது.

- **இஸ்லாம் பொருளீட்டலுக்கு வைத்துள்ள இலக்குகள்**

நடைமுறை உலகில், தனிமனிதர்களும் நிறுவன அதிகாரிகளும் இலாபமடைவதை மாத்திரம் இலக்காகக் கொண்டே உழைப்பில் ஈடுபடுகின்றார்கள். ஆனால், இஸ்லாம் பின்வரும் நோக்கங்களை இலக்காகக் கொண்டே பொருளீட்ட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது.

1. சன்மார்க்க வரம்புகளைப் பேணி உழைப்பின் மூலம் ஹலாலைத் தேடிக் கொள்ளல்.
2. தனது பொறுப்பில் உள்ளவர்களைப் பராமரித்தல்.
3. யாசகம் கேட்பதிலிருந்து தவிர்ந்து கொள்ளல்.
4. தான் செய்யும் உழைப்பின் மூலம் அதன் பலனைப் பெறுபவர்களுக்கு கருணையோடு உதவுதல்.

மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக உழைப்பவர்கள் மறுமையில் அல்லாஹ்வை அச்சமின்றிச் சந்திக்க முடியும். உழைப்பாளிகளது ஊதியங்கள் நியாயமான முறையில் வழங்கப்படுவதும் அவசியமாகும்.

- தொழில் சார் நடவடிக்கைகளில் வியாபாரம்
- இஸ்லாம் அனுமதித்த கொடுக்கல்-வாங்கல்களில் வியாபாரமும் (அல் பய்உ) ஒன்றாகும். “கொடுப்போனும், கொள்வோனும் வியாபாரியும் நுகர்வாளனும் அனுமதிக்கப்பட்ட முறையில் சம்மதத்தின் அடிப்படையில் பிரதியீட்டைப் பெற்றுக்கொண்டு ஓர் உடைமையை ஒருவர் மற்றொருவருக்கு கையளிப்பதைக் குறிக்கும் நடவடிக்கையே வியாபாரம் எனப்படுகிறது.

“அல்லாஹ் வியாபாரத்தை ஆகுமாக்கி, வட்டியைத் தடைசெய்துள்ளான்” (2:275)

உழைப்பில் சிறந்தது எதுவென நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டபோது "உழைப்பில் சிறந்தது கைத்தொழிலும் நேர்மையான வியாபாரமும் ஆகும்" (அஹ்மத்) எனப் பதிலளித்தார்கள்.

மேற்படி குர்ஆன், ஸுன்னா போதனைகள் இஸ்லாம் வியாபாரத்தை அனுமதித்துள்ளது என்பதை உறுதி செய்கின்றன.

- வியாபாரத்துக்கான சகல வழிவகைகளையும் அல்லாஹ் ஏற்படுத்தி வைத்துள்ளான். பூமியின் எல்லாப் பாகங்களிலும் பல்வேறு வகையான பொருட்களை அல்லாஹ் வெளிப்படுத்துகின்றான். அவற்றை தரை மார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் ஆகாய மார்க்கமாகவும் கொண்டு செல்வதற்கான வசதிகளை மனிதன் பெற்றிருக்கிறான். அவற்றைப் பரிமாறிக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் நேர்மையாகப் பயன்படுத்தி வியாபாரத்தில் ஈடுபடுபவனுக்கே நன்மதிப்பும், உயர்வும் இருக்கின்றன.

  "நாணயமும் வாய்மையுமுடைய வியாபாரி மறுமையில் நபிமார்கள், ஸித்தீகீன்கள் (உண்மையாளர்கள்) ஷுஹதாக்களுடன் இருப்பார்" (இப்னு மாஜா)

- இஸ்லாத்தில் வியாபாரம் இபாதத்தாகக் கணிக்கப்பட்டுள்ளதால் அதற்கெனச் சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

- வியாபார விதிமுறைகளில் அது நிறைவேறுவதற்குரிய நிபந்தனைகள் முக்கியமானவை.

  "முஸ்லிம்களே, ஒப்பந்தங்களை நிறைவேற்றுங்கள். (5:1)

  "முஸ்லிம்கள் அவர்களது ஷர்த்துக்களை நிறைவேற்றுவதற்குக் கடமைப்பாடுடையவர்கள்." (அஹ்மத்)

  வியாபார நிபந்தனைகளைப் பின்பற்றுவது முஸ்லிம் வியாபாரிகள் மீது கடமையாகின்றது.

  1. வாங்குவோரும் விற்போரும் சித்த சுவாதீனம் அற்றவராகவோ போதையில் இருப்பவராகவோ, மந்த புத்தியுடையவராகவோ, விபரமறியாத சிறுவர்களாகவோ இருத்தல் கூடாது.

  2. வியாபாரப் பொருள்:

  வியாபாரப் பொருட்கள் சுத்தமானவையாகவும், பயனுள்ளவையாகவும் இருத்தல் வேண்டும். அதற்கு மாற்றமாக நஜீஸானவையாகவோ தடுக்கப்பட்டவையாகவோ பயனற்றவை யாகவோ இருக்கக் கூடாது. உதாரணமாக செத்த பிராணிகள், பன்றியின் மாமிசம், முறையாக அறுக்கப்படாதவை, விக்கிரகங்கள், இசைக் கருவிகள், கீழ்த்தரமான உணர்வுகளை வெளிக் கொணரக் கூடிய இசைத்தட்டுக்கள், புகைப்படங்கள், வீடியோ நாடாக்கள், இறுவட்டுக்கள் என்பவற்றையும் போதைப் பொருட்கள் என்பவற்றையும் விற்பனை செய்வதை இஸ்லாம் தடுப்பதைக் குறிப்பிடலாம். இவை ஆத்மீக, சமூக, பொருளாதார, சுகாதார, ஒழுக்க ரீதியிலான பாதகங்களை ஏற்படுத்தக் கூடியனவாக உள்ளன.

  "தானாகவே செத்ததும், இரத்தமும் பன்றியின் மாமிசமும், அல்லாஹ் அல்லாத பெயர் சொல்லப்பட்டதும் ஆகியவைகளைத்தான் உங்கள் மீது ஹராமாக்கியிருக்கிறான்." (2:173)

  "நிச்சயமாக அல்லாஹ்வாலும் அவனுடைய தூதராலும் மதுபானம், செத்த பிராணிகள், பன்றி, விக்கிரகங்கள் என்பவற்றின் விற்பனை தடைசெய்யப்பட்டிருக்கிறது." (புகாரி)

- வியாபாரப் பொருள், விற்பவருக்குச் சொந்தமானதாகவும், வாங்குபவருக்கு ஒப்படைக்க முடியுமானதாகவும் கையிருப்பிலுள்ளதாயும் இருத்தல் வேண்டும். இன்னொருவருக்கோ, அரசுக்கோ சொந்தமான பொருட்களை விற்க முடியாது. அதேபோன்று கடலில் உள்ள மீன், ஆகாயத்தில் பறக்கும் பறவைகள் என்பவற்றையும் உதாரணமாகக் குறிப்பிடலாம்.

  "சொந்தமற்றவற்றில் வியாபாரமில்லை."

- பொருளும், விலையும் குறிப்பாக அறியப்படாதவை விற்பனை செய்வதற்குத் தடுக்கப் பட்டுள்ளன. எனினும், கண்ணுக்குப் புலப்படாத பொருட்களின் பண்புகள் அறியப் பட்டிருப்பின் விற்பனை செய்யலாம். உ-ம்: தகர மீன், கொள்கல எரிவாயு

3. ஈஜாப் கபூல்

ஒரு வியாபாரி தன்வசமுள்ள குறித்த பொருளை விற்று விட்டதாகக் கூறும் கூற்று ஈஜாப் எனப்படுகின்றது. குறித்த பொருளை தான் வாங்கிக் கொண்டதாகக் கூறும் நுகர்வாளனின் கூற்று கபூல் எனப்படுகிறது. ஈஜாபும் கபூலும் தெளிவான முறையில் வெளிப்படுத்தப்படுவதும், இரண்டுக்குமிடையே கால தாமதமேற்படாமலிருப்பதும் கட்டாயமானதாகும். இமாம் நவவி (ரஹ்) அவர்களின் கூற்றுப்படி நடைமுறையில் சமூகம் ஈஜாப், கபூல் எனக் கருதும் கூற்றுக்கள் சிறிய வியாபார நடவடிக்கைகளில் ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால், பாரிய வியாபாரங்களில் ஈஜாப், கபூல் இன்றி வியாபாரம் செல்லுபடியாகாது என இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள்.

- வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களில் தடுக்கப்பட்டுள்ள அம்சங்கள்

**1. பொய்ச் சத்தியம் செய்தல்.**

வியாபாரத்தில் பொய்ச் சத்தியம் செய்வதன் மூலம் ஒன்றை உறுதிப்படுத்தும்போது ஹராமான நிலை மேலும் கடுமையானதாக மாறிவிடுகின்றது. எனவேதான் நபி (ஸல்) அவர்கள் பொதுவாக சத்தியம் செய்ய வேண்டாமெனவும் குறிப்பாக பொய்ச் சத்தியம் செய்ய வேண்டாமென்றும் தடுத்துள்ளார்கள்.

"சத்தியம் செய்வது விற்பனையை அதிகரிக்கும். ஆனால், அருளைப் போக்கிவிடும்." (புஹாரி)

வியாபார கொடுக்கல், வாங்கல்களில் அடிக்கடி சத்தியம் செய்வதை நபி (ஸல்) அவர்கள் கண்டித்தார்கள். ஏனெனில், இது மனிதர்களை ஏமாற்றுவதற்காகச் செய்யப்படுகின்றது. அல்லாஹ்வின் திருநாமத்திற்குரிய கௌரவத்தை உள்ளத்திலிருந்து போக்கிவிடுகிறது.

**2. அளவை நிறுவையில் மோசடி செய்தல்:**

அளந்து அல்லது நிறுத்து வாங்கும்போது அளவைக் கூட்டி வாங்குவதையும், அளந்து அல்லது நிறுத்து கொடுக்கும்போது அளவைக் குறைத்து விடுவதையும் அளவை நிலுவை மோசடி 'தத்பீப்' என அழைப்பர். இதனை அல்குர்ஆனும் ஸுன்னாவும் வன்மையாகக் கண்டிக்கின்றன.

"அளவை (சரியான அளவுகொண்டு) பூரணமாக அளவுங்கள். எடையை நீதமாக நிறுங்கள். யாதோர் ஆத்மாவையும் அதன் சக்திக்கு மேல் நாம் நிர்ப்பந்திப்பதேயில்லை" (6:152)

"நீங்கள் அளந்தால் பூரணமாக அளவுங்கள். (நிறுத்தால்) சரியான எடையைக் கொண்டு நிறுங்கள். இது (உங்களுக்கு) மிக்க நன்று. மிக்க அழகான பலனையும் தரும். (17:35)

இது பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

“விற்கும் போதும் வாங்கும்போதும் தன் உரிமையைக் கோரும்போதும் தாராளத் தன்மையுடன் நடந்து கொள்ளும் மனிதனுக்கு அல்லாஹ் அருள்பாலிப்பானாக” எனப் பிரார்த்தித்துள்ளார்கள். (புஹாரி, திர்மிதி)

அளவை நிறுவையில் மிக நீதியாக நடந்துகொள்வது அறிவுக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும் ஒரு முஸ்லிம் தனக்கு முடியுமான அளவு இவ்விடயத்தில் நீதியோடு நடந்துகொள்ள வேண்டும். எனவேதான் அல்குர்ஆன் “யாதோர் ஆத்மாவையும் அதன் சக்திக்கு மேல் நிர்ப்பந்திப்பதில்லை” எனக் கூறுகின்றது. ஒரு முஸ்லிம் தனக்கு ஒரு அளவு கோலையும், தான் விரும்புபவர்களுக்கு மற்றொரு அளவுகோலையும் ஏனையவர்களுக்கு இன்னொரு அளவுகோலையும் வைத்துக் கொள்வது நேர்மையானதல்ல. ஒவ்வொரு மனிதரது சொத்திலும் நீதியாகவும் நேர்மையாகவும் நடந்துகொள்ள வேண்டும். அடுத்த மனிதர்களது சொத்தை அநியாயமாக எடுக்கும் மனிதர்கள் மிகவும் பயங்கரமானவர்களாவர்.

### 4. பதுக்கல் - அல்-இஹ்திகார்

பொருட்களைச் சந்தைக்கு வராமல் தடுத்து அல்லது மறைத்து, அதன் மூலம் கேள்வியை ஏற்படுத்தி விலையேற்றத்திற்கு இட்டுச் செல்லும் ஒரு தந்திரமான வியாபார மோசடியே பதுக்கலாகும். இஸ்லாம் தனிநபர் போட்டிக்கும், சந்தையின் இயற்கையான போட்டிக்கும் சுதந்திரம் அளித்திருக்கின்றது. எனினும், பேராசையினால் உந்தப்பட்டு பிறரைத் துன்பத்திற்கும் கஷ்டத்திற்கும் உட்படுத்தி செல்வம் திரட்டுவோரை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இதனால்தான் பதுக்கலைக் கண்டித்து நபி (ஸல்) அவர்கள் பின்வரும் போதனைகளை முன்வைத்துள்ளார்கள்.

“விலை உயர்வை நாடி நாற்பது நாட்கள் தானியத்தை பதுக்கிக் கொள்பவனை அல்லாஹ் உதறித் தள்ளிவிடுவான்.” (அஹ்மத்)

“விலையேறும் வரை பொருட்களைத் தடுத்துக் கொள்பவன் பாவியே” (முஸ்லிம்)

“விற்பவன் இலாபம் பெறுவான். பதுக்கியவன் சபிக்கப்படுவான்.” (இப்னுமாஜா)

இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் மேற்படி ஹதீஸ்களை அடிப்படையாகக் கொண்டு பதுக்கல் இரண்டு நிலைமைகளில் தடைசெய்யப்படுவதாகக் குறிப்பிடுகின்றார்கள்.

அ) நாட்டு மக்களுக்குப் பதுக்கல் தீங்கிழைப்பதாக இருக்கும் நிலை

ஆ) வியாபாரி தனது இலாபத்தை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் தானாகவே செயற்கையாக விலையைக் கூட்டி விற்கின்ற நிலை.

### 5. கலப்படம் செய்தலும் ஏமாற்றுதலும்

விற்பதிலும் வாங்குவதிலும் மனிதர்களோடு தொடர்புடைய எல்லா விவகாரங்களிலும் மோசடியையும் ஏமாற்றுதலையும் இஸ்லாம் தடைசெய்துள்ளது. ஒரு முஸ்லிம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உண்மையோடும் நேர்மையோடும் நடந்துகொள்ள வேண்டும். அற்ப இலாபத்திற்காக அவற்றை இழந்துவிடக் கூடாது. இது பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

“ஒரு பொருளைப் பற்றி (எல்லாவற்றையும்) தெளிவாகக் கூறாமல் எந்த ஒரு பொருளையும் விற்பனை செய்வது ஆகுமானதல்ல. (அப்பொருளின் குறைகளைப் பற்றி) தெரிந்த ஒருவர் அவற்றைக் குறிப்பிடாமல் விடுவதும் ஆகுமானதல்ல. (ஹாகிம், பைஹகி)

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் சந்தைக்குச் சென்று ஒரு வியாபாரியின் தானியக் குவியலினுள் தனது கையை நுழைத்துப் பார்த்தபோது அது ஈரமாக இருக்கக் கண்டார்கள். இது ஏன் என வியாபாரியிடம் கேட்டபோது மழைக்கு நனைந்து விட்டது எனக் கூறினான். அப்போது நபி (ஸல்) அவர்கள் அவனைப் பார்த்து “மனிதர்கள் பார்க்கக் கூடிய வகையில் அதனை மேல் பகுதியில் வைத்திருக்கக் கூடாதா? எனக் கூறி விட்டு எம்மை ஏமாற்றுபவர் எம்மைச் சார்ந்தவரல்லர்” (முஸ்லிம்) என்று எச்சரித்தார்கள்.

**6. திருடப்பட்ட அல்லது கொள்ளையிடப்பட்ட பொருட்களை விலை கொடுத்து வாங்குதல்.**

குற்றங்களைக் களைவது முஸ்லிம்களின் கடமையாகும். குற்றவாளிகளைச் செயலிழக்கச் செய்வதற்கு திருடப்பட்ட, கொள்ளையிடப்பட்ட, நேர்மையீனமாகப் பெறப்பட்ட பொருட்களாகத் தெரிந்த எதனையும் விலைகொடுத்து வாங்குவதற்கு இஸ்லாம் அனுமதிக்கவில்லை. அவ்வாறு வாங்குவது அநீதிக்கு உடந்தையானதாகும்.

“திருடப்பட்டது என்று தெரிந்திருந்தும் திருட்டுப் பொருளை வாங்குபவன் பாவத்தையும் திருடுவதனால் ஏற்படும் அவமானத்தையும் பகிர்ந்து கொள்கிறான்.” (பைஹகி)

திருடப்பட்ட அல்லது சட்ட விரோதமாகக் கையாடப்பட்ட ஒரு பொருள் சட்ட அங்கீகாரம் பெறமாட்டாது. (அதற்கு உரிமையானவனுக்குரிய உரிமை நீங்கி விடுவதுமில்லை.) காலம் கடந்ததாக இருந்தாலும் ஹராம் ஹலாலாக மாட்டாது.

**7. பள்ளிவாசலில் வியாபாரத்தில் ஈடுபடல்**

பள்ளிவாசலில் வியாபாரம் செய்வதை சில அறிஞர்கள் அனுமதித்தாலும் அது விரும்பத்தக்கதல்ல என்பதே பொரும்பாலான அறிஞர்களின் கருத்தாகும்.

“நீங்கள் பள்ளிவாசலில் விற்பவரையோ, வாங்குபவரையோ கண்டால் அல்லாஹ் உனது வியாபாரத்தை இலாபமானதாக அமைக்காதிருக்கட்டும் என அவனுக்குக் கூறுங்கள்” (திர்மிதி) என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இமாம் அஹ்மத் (ரஹ்) போன்றோர் ஜுமுஆவிற்காக அழைப்பு விடுக்கப்பட்டதன் பின்னர் வியாபாரம் செய்வது ஹராமானதாகும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

**8. விலைக் கட்டுப்பாடு - அத்தஸ்ஈர்**

வாங்குவோன், விற்போன் ஆகிய இரு தரப்பினரதும் நலனைக் கருத்திற் கொண்டு பொருட்களுக்கு ஒரு குறித்த விலையை நிர்ணயிப்பதே (நடைமுறையில்) விலைக்கட்டுப்பாடு என அழைக்கப்படுகின்றது.

ஒரு சந்தர்ப்பத்தில் சிலர் ‘அல்லாஹ்வின் தூதரே! பண்டங்களின் விலை அதிகரித்து விட்டது. எனவே விலையைக் கட்டுப்படுத்துங்கள்” என்று கேட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள் “விலை நிர்ணயிப்பவனும், வாழ்க்கை வசதிகளை சுருக்குபவனும், தாராளமாகக் கொடுப்பவனும் வாழ்க்கைக்கு இன்றியமையாதவற்றை வழங்குபவனும் அல்லாஹ்வே. பொருளிலோ, உயிரிலோ நான் அநீதி இழைத்து, அதன் மூலம் யாரும் என்னைக் குற்றம் பிடிக்காத நிலையில் அல்லாஹ்வைச் சந்திக்க விரும்புகின்றேன்” (அஹ்மத்) எனப் பதிலளித்தார்கள்.

அரசு விலைக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவது கூடாது என்பதை இந்த ஹதீஸ் வலியுறுத்துவதாக இஸ்லாமிய அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள். அது அநீதியாகவும் பொருளாதார சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதாகவும் அமைகின்றது. நுகர்வாளரது நலன் பேணப்படுவது போல் வியாபாரியின் நலனும் பேணப்பட வேண்டும். விலைக் கட்டுப்பாடு வியாபாரியின் கெடுபிடிகளுக்கு நுகர்வாளனை உட்படுத்தலாம்.

விலைக் கட்டுப்பாட்டிற்கு இஸ்லாத்தில் அனுமதியில்லையாயினும் முழுச் சந்தையும் பாதிப்படையும் விதத்தில் வியாபாரிகள் நியாயமற்ற முறையில் அதிக அளவில் விலையை நிர்ணயிக்க முற்பட்டால் அரசு தலையிடுவது அவசியமாகும். ஆதலால் பதுக்கலைத் தடுக்கவும், அநீதியை ஒழிக்கவும் விலைக் கட்டுப்பாடு செய்ய வேண்டுமென இமாம் மாலிக் போன்ற அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

- **வட்டி - அர்ரிபா**

    - வியாபாரத்தில் தவிர்க்க வேண்டிய அடுத்த பிரதான அம்சமாக இருப்பது வட்டியாகும். வட்டி சிறிய அளவில் அமைந்தாலும், பெரிய அளவில் இருந்தாலும் ஹராமானதாகும். அல்குர்ஆன் வட்டியைப் பற்றி கீழ்வருமாறு குறிப்பிடுகின்றது.

      "விசுவாசிகளே நீங்கள் (உண்மை) விசுவாசிகளாக இருந்தால் அல்லாஹ்வுக்குப் பயந்து வட்டியில் (இதுவரை வாங்கியது போக) மீதமிருப்பதை (வாங்காது) விட்டுவிடுங்கள். இவ்வாறு நீங்கள் நடந்துகொள்ளாவிட்டால் அல்லாஹ்வுடனும் அவனுடைய தூதருடனும் யுத்தம் செய்யச் சித்தமாகிவிடுங்கள். ஆயினும், நீங்கள் (வட்டி வாங்கியமைக்காக மனம் வருந்தி) மீண்டுவிட்டால் உங்கள் செல்வத்தின் அடிப்படைத் தொகை உங்களுக்குரியது. நீங்கள் அநியாயம் செய்யாதீர்கள். (அவ்வாறே) நீங்கள் அநியாயம் இழைக்கப்படவும் கூடாது." (2:278-279)

      "ஓர் ஊரில் வட்டியும், விபச்சாரமும் பரவி விட்டால் அவ்வூரார் அல்லாஹ்வின் தண்டனையைத் தாமே தங்கள் மீது இறக்கிக் கொண்டோராவர்" என்று நபி (ஸல்) அவர்கள் பகர்ந்துள்ளார்கள். (அல்-ஹாகிம்)

      "அல்லாஹ் வட்டி உண்பவனையும் அதனை உண்ணக் கொடுப்பவனையும் அதற்குச் சாட்சியாக இருப்போரையும் அதனை எழுதுபவனையும் சபித்துள்ளான்" என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (அபூதாவூத்)

      இஸ்லாத்தில் மாத்திரமன்றி முன்னைய வேதங்களான யூத, கிறிஸ்தவ வேதங்களிலும் வட்டி தடைசெய்யப்பட்டே இருந்தது.

    - வட்டியில் இரு வகையான அமைப்புகள் காணப்படுகின்றன. அவையாவன:

      1. ரிபா - அந்நஸீஆ
      2. ரிபா - அல் பழ்ல்

      ரிபா - அந்நஸீஆ என்பது, கடன் கொடுத்தவர் கடன் பெற்றவரிடமிருந்து கால தாமதத்திற்கான பிரதியீடாகப் பெறக்கூடிய தீர்மானிக்கப்பட்ட மேலதிகத் தொகையைக் குறிக்கும்.

      ரிபா - அல் பழ்ல் என்பது, குறைந்த பணத்தை கூடிய பணத்திற்கும் குறைந்த உணவை கூடிய உணவிற்கும் கைமாற்றிக் கொள்வதனைக் குறிக்கும்.

      முதலாவது வகையைப் போன்றே இரண்டாவது வகை வட்டியும் ஹராமாகும். இதுவும் உண்மையான வட்டிக்கு இட்டுச் செல்வதாக அமையும் என்ற காரணத்தினால் விலக்கப்பட்டுள்ளது.

      இதனைப் பற்றி நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: "ஒரு தங்க நாணயத்தை இரண்டு தங்க நாணயத்திற்கும், ஒரு வெள்ளி நாணயத்தை இரண்டு வெள்ளி நாணயத்திற்கும் விற்காதீர்கள். ஏனெனில் நான் வட்டியையிட்டுப் பயப்படுகிறேன்." (முவத்தா மாலிக்)

      ஆறு பொருட்களில் இருந்து இவ்வகை வட்டியைப் பெறுவது விலக்கப்பட்டுள்ளதை ஹதீஸ்களில் இருந்து அறிய முடிகின்றது. அவையாவன: தங்கம், வெள்ளி, கோதுமை, வாற்கோதுமை, ஈத்தம்பழம், உப்பு ஆகியனவாகும்.

      "தங்கத்திற்குத் தங்கமும், வெள்ளிக்கு வெள்ளியும், உப்புக்கு உப்புமாக சமஅளவில் உடனுக்குடன் கைமாற்றிக் கொள்ள வேண்டும். மாறாக அளவைக் கூட்டினால் அல்லது கூட்டுமாறு வேண்டினால் பெற்றவரும், கொடுத்தவரும் ஆகிய இருவரும் வட்டி நடவடிக்கைகளில் ஈடுபட்டவராவார்." (புஹாரி)

ஹதீஸ்களில் குறிப்பாக இந்த ஆறு பொருட்கள் மாத்திரம் கூறப்பட்டுள்ளமைக்கான காரணம் யாதெனில், இவை மனித வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளாக அமைந்திருத்தலேயாகும். தங்கமும் வெள்ளியும் கொடுக்கல் வாங்கல் ஊடகமாகவும் விலைகளுக்கான அளவுகோல்களாகவும் காணப்படுகின்றன. ஏனைய நான்கும் பிரதான உணவுப் பொருட்களாகக் காணப்படுகின்றன. இவற்றில் வட்டி இடம்பெறுவது மக்களைப் பெரிதும் பாதிக்கக் கூடியதாய் அமையும். எனவே மக்களின் நலனைக் கருத்திற் கொண்டே குறிப்பாக இவற்றில் மேலதிகமாகப் பெறுவது விலக்கப்பட்டுள்ளது.

தங்கம், வெள்ளி அல்லாத விலையைத் தீர்மானிக்கக் கூடியவையும் இதில் அடங்கும். (உ-ம்: பணம்)

மேலும் குறித்த நிலையில் உள்ள குறிப்பிடப்படாத உணவுப் பொருட்களும் இதில் அடங்கும். (உ-ம்: அரிசி)

எனவே தங்கம், வெள்ளி போன்றவற்றையோ அவற்றின் இனத்தைச் சேர்ந்தவற்றையோ மாற்றும்போது (உ-ம்: தங்கத்திற்கு தங்கத்தையும், கோதுமைக்கு கோதுமையையும் மாற்றுதல்) இரண்டு நிபந்தனைகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

1. இரண்டும் சமஅளவாக இருத்தல்: இங்கு ரகத்தையோ, தரத்தையோ கவனத்திற் கொள்ளக் கூடாது. உதாரணமாக ஒரு கிலோ சம்பா அரிசியை 1½ கிலோ நாட்டு அரிசிக்கு மாற்றிக் கொள்ளக் கூடாது. அது வட்டியாக அமையும். இதே நடவடிக்கையை ஹலாலான முறையில் அமைத்துக் கொள்ள வேண்டுமாயின் முதலில் நாட்டு அரிசியின் சொந்தக்காரர் அதனை சம்பா அரிசியின் சொந்தக்காரருக்கு பணத்திற்கு விற்க வேண்டும். இங்கு விலை வித்தியாசமாக அமைவது பாதிப்பை ஏற்படுத்தாது.
2. பண்டமாற்றின்போது ஒன்றைக் கொடுத்து மற்றதைத் தாமதப்படுத்திக் கொடுக்கக் கூடாது. மாறாக உடனுக்குடன் கைமாற்றிக் கொள்ள வேண்டும்.

இரு பண்டங்களும் இனத்தில் வேறுபட்டு நோக்கத்தில் ஒத்திருத்தல் (உ-ம்: தங்கமும் வெள்ளியும்) அளவு வித்தியாசம் ஹராமாகாது. ஆனால், இங்கும் காலதாமதம் கூடாது. உதாரணமாக தங்கத்திற்கு வெள்ளியை மாற்றும்போது தவணையிடாது உடனுக்குடன் கைமாற்றிக் கொள்வது நிபந்தனையாகும். ஆனால் அளவில் வித்தியாசம் இருப்பது தவறல்ல. இங்கு குறைந்த தங்கத்திற்கு கூடிய வெள்ளியைப் பெறலாம். இவ்வாறே கோதுமையையும் வாற்கோதுமையையும் மாற்றிக் கொள்ளலாம்.

கைமாறும் இரு பண்டங்களும் இனம், நோக்கம் இரண்டிலும் வேறுபட்டால் குறித்த இரண்டு நிபந்தனைகளுமே அவசியமற்றதாகும்.

மேலும் தங்கம், வெள்ளி, பிரதான உணவுப் பொருட்கள் போன்றவை தவிர்ந்தவற்றில் அளவு வித்தியாசமோ, கால தாமதமோ (தவணையிடல்) பிழையானதல்ல. உ-ம்: ஓர் ஆட்டை இரண்டு ஆடுகளுக்கு மாற்றிக் கொடுக்கலாம்.

வட்டி பொருளாதார ரீதியாகவும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது என்பது தெளிவான ஒன்றாகும். நடைமுறை உலகில் உள்ள பொருளாதார சமூக ரீதியிலான பிரச்சினைகளும் பின்னடைவுகளும் இதற்கோர் எடுத்துக் காட்டாகும்.

- **தொழில்சார் நடவடிக்கைளில் விவசாயம்**
  - இஸ்லாத்தின் பார்வையில் மனிதன் அல்லாஹ்வுடைய பிரதிநிதியாவான். பிரதி நிதித்துவத்தை நிலைநாட்டுவதற்கு இறைத்தூதின் மூலம் வழிகாட்டினான். அதேபோன்று பிரதிநிதியாக வாழ்வதற்கு ஏற்ற வகையில் அவன் பூமியை விரிப்பாக அமைத்து வைத்துள்ளான். அதில் மனிதனுக்குத் தேவையான பயிர் பச்சைகளைப் படைத்துள்ளான்.

அதில் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை வெளிப்படுத்துகின்றான். இவற்றின் மூலமாக மனிதன் தனது உணவுத் தேவையை நிறைவுசெய்து கொள்கின்றான். இந்த வகையில் மனிதன் தனது பொருளாதாரத் தேவைகளில் முக்கிய இடத்தை பெறுகின்ற உணவுத் தேவையை நிறைவு செய்து கொள்வதற்காக மேற்கொள்கின்ற பொருளீட்டல் நடவடிக்கைகளில் ஒன்றுதான் விவசாயமாகும்.

- முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்கள் உலகிற்கு அனுப்பப்பட்டதிலிருந்து உணவுத் தேவைக்காக விவசாயம் மேற்கொள்ளப்பட்டதை வரலாற்றினூடாக அறிந்து கொள்ள முடிகின்றது. இம்முயற்சி மனித சமுதாயத்தால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட அநேகமான நபிமார்கள் விவசாயம் செய்து தமது வாழ்வை நடத்தியதற்கான ஆதாரங்கள் அல்குர்ஆனிலும், ஸுன்னாவிலும் காணப்படுகின்றன. இவ்வுழைப்புக்கு ஏற்ற விதத்தில் பூமியை அல்லாஹ் படைத்திருப்பதாகவும் குறிப்பிடுகின்றான்.

“அன்றியும் அல்லாஹ் உங்களுக்காக பூமியை விரிப்பாக ஆக்கினான். அதில் நீங்கள் செல்வதற்காக விசாலமான பாதைகளையும் அமைத்தான். (71:19-20)

“அவனே வானத்திலிருந்து மழையை இறக்கினான். அதைக் கொண்டு எல்லா வகையான புற்பூண்டுகளையும் நாம் வெளியாக்கினோம். அதிலிருந்து பச்சை(த் தழை)களை வெளிப்படுத்துகிறோம். அதிலிருந்து நாம் வித்துக்களை அடர்த்தியான கதிர்களாக வெளிப்படுத்துகிறோம்.” (6:99)

“இன்னும் காற்றை சூல் கொண்ட மேகங்களாக நாமே அனுப்புகிறோம். பின்னர் வானத்திலிருந்து நாம் மழையைப் பொழிவித்து அதனை உங்களுக்குப் புகட்டுகிறோம். அதனை நீங்கள் சேகரித்து வைப்பதும் இல்லை.” (15:22)

மேற்படி குர்ஆன் வசனங்களில் பூமியை விவசாயம் செய்தவற்கு ஏற்றவாறு அல்லாஹ் அமைத்துக் கொடுத்திருப்பது பற்றி விபரிக்கப்படுவதைக் காண முடிகின்றது. மழை, காற்று, பூமி, பயிர் பச்சைகள் பற்றியெல்லாம் இதில் விபரிக்கப்பட்டுள்ளது. விவசாயம் செய்து, உணவுத் தேவையை நிறைவுசெய்துகொள்ள இவ்வாறு அல்லாஹ் இலகுபடுத்தி வைத்துள்ளான்.

- நபி (ஸல்) அவர்களது போதனைகளும் விவசாயத்துக்கு ஊக்கமளிப்பதாக அமைவதைக் காண முடிகின்றது. எனவேதான் முஸ்லிம்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வந்துள்ளதை வரலாற்றில் காணக் கூடியதாகவுள்ளது.

“ஒருவருக்கு நிலம் இருப்பின் அதில் அவர் பயிர் செய்யவும் அல்லது அதைத் தனது சகோதரனுக்கு தர்மம் செய்து விடவும். அதற்கும் அவரால் முடியாவிடின் தானே வைத்துக் கொள்ளவும்.” (புஹாரி, முஸ்லிம்.)

- இந்த ஹதீஸ் விளை நிலங்களை வெறுமனே விட்டு வைக்காதீர்கள் எனக் கூறுகின்றது. தனக்கு முடியாவிட்டால் அடுத்தவனுக்காவது தர்மம் செய்து விடுமாறு கூறுகின்றது. இந்த ஹதீஸ் பொருளீட்டலில் விவசாயத்தின் முக்கியத்துவம் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

“உரிமை கோரப்படாத நிலத்தை ஒருவர் பயன்படுத்தி வளமாக்கினால் அவரே அதற்கு தகுதி வாய்ந்தவராவார்.” (புஹாரி)

உரிமை கோரப்படாத நிலத்தில் விவசாயத்தில் ஈடுபடுபவனுக்கு நிலம் சொந்தமானது எனக் குறிப்பிடுவது விவசாயத்தின், விவசாயியின் சிறப்பை எடுத்துக்காட்டப் போதுமான தாக உள்ளது. மதீனாவாசிகள் பெரும்பாலும் விவசாயிகளாகவே இருந்திருக்கின்றார்கள். மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்றிருந்த காலப் பகுதியில் அங்கு வாழ்ந்தவர்கள் பேரீத்தம் மரங்களில் மகரந்தச் சேர்க்கை செய்வதற்கான வழிவகைகளைச் செய்து கொண்டிருந்தார் கள். ஸஹீஹ் முஸ்லிமில் பதிவாகியிருக்கும் ஒரு ஹதீஸில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸஹாபிகள் எவ்வளவு தூரம் விவசாய நடவடிக்கைகளில் முன்னேறியிருந்தார்கள் என்பதை இது தெளிவாக்குகின்றது.

"ஒரு முஸ்லிம் ஒரு தாவரத்தை நட்டி அல்லது பயிரை உற்பத்தி செய்து பின்னர் அதனை ஒரு மனிதன், மிருகம் அல்லது வேறு ஒரு பறவை உட்கொண்டாலும் அது அவருக்கு தர்மமாகவே அமையும்." (முஸ்லிம்)

இஸ்லாத்தின் பார்வையில் ஒரு விவசாயி மகத்தான கூலியை இம்மையிலும் மறுமையிலும் பெறுகின்றான் என்பதை இந்த ஹதீஸ் உணர்த்தி நிற்கின்றது. இது முஸ்லிமை விவசாயத்தில் ஈடுபடத் தூண்டுகின்றது.

- ஹதீஸ் தொகுப்பாசிரியர்கள் தரிசு நிலுத்தில் பயிர் செய்தல், விவசாயம், குத்தகைக்கு விடல் போன்ற தலைப்புக்களில் விவசாயம் பற்றிய ஹதீஸ்களைத் தொகுத்து எழுதியுள்ளமையும் சட்டத்துறை அறிஞர்கள் இவை பற்றிய சட்டத் தீர்ப்புக்களை இத்தலைப்புக்களின் கீழ் வழங்கியுள்ளமையும் விவசாயத் துறையில் முஸ்லிம்கள் ஈடுபடுவதற்கான வழிகாட்டல்களாக அமைந்துள்ளன.
- விவசாயத் துறையில் பல பிரிவுகள் இடம்பெறுகின்றன. அவற்றுள் மிக முக்கியமான இரண்டு பிரிவுகள் உள்ளன.

  1. தாவரங்கள், தானியங்களோடு தொடர்பானவை.
  2. விலங்கு வேளான்மை, பறவை வளர்ப்பு

- பொதுவாக இஸ்லாமியப் பொருளியல் கோட்பாட்டில் அல்லாஹ் ஹராமாக்கிய எந்த உற்பத்தியும் விநியோகமும், பிரயோகமும் தடுக்கப்பட்டதாகவே இருக்கும். இவை பெரும்பாலும் மனிதனது உயிர், உடல், அறிவு என்பவற்றைப் பாதிக்கக் கூடியதாகவே இருக்கும். விவசாய உற்பத்திகளும் மேற்கூறப்பட்ட விதத்தில் அமையுமாயின் அவற்றை உற்பத்தி செய்தல், விநியோகித்தல், நுகர்தல் போன்ற காரியங்கள் தடைசெய்யப் பட்டுள்ளன. உதாரணமாக ஹஷீஷ், புகையிலை, கஞ்சா என்பவற்றைக் குறிப்பிடலாம். எனவே அவற்றை ஒரு விவசாயி உற்பத்தி செய்வது ஹராமானதாகும்.
- விலங்கு வேளான்மையிலும் தடுக்கப்பட்டவைகள் இருக்கின்றன. இவற்றுள் முஸ்லிம்களுக்கு ஹராம் எனக் குறிப்பிடப்பட்டவை முஸ்லிமல்லாதவர்களுக்காக உற்பத்தி செய்யவும் முடியாது. உதாரணமாக பன்றி வளர்ப்பைக் குறிப்பிடலாம். ஆனால், இஸ்லாம் அனுமதித்த விலங்கு வேளான்மை நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். அநேகமான நபிமார்கள் இவ்வுழைப்பில் ஈடுபட்டுள்ளார்கள்.

**தொழில்சார் நடவடிக்கைகளில் கைத்தொழில்**

- பொருளியலின் அடிப்படைத் தேவையான உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு எவ்வாறு விவசாயம் உதவுகின்றதோ அவ்வாறே கைத்தொழில் துறையும் வாழ்வின் அதிகமான தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருப்பதைக் காணலாம்.
- எனவேதான் குர்ஆனும் ஸுன்னாவும் இதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதைக் காணலாம். நபி (ஸல்) அவர்களிடம் தொழில்களில் சிறந்தது எதுவென வினவியபோது "கைத்தொழிலும்,ஸ்ரீ பொய் கலவாத வர்த்தகமும்" (அஹ்மத்) எனப் பதிலளித்தார்கள். நபியினால் புகழ்ந்து கூறப்பட்ட ஒரு பொருளீட்டல் நடவடிக்கையாக இதுவுள்ளது. அல்குர்ஆனிலும் கைத்தொழில் துறைக்கான வழிகாட்டல்கள், அதன் தேவை பற்றியெல்லாம் விபரிக்கப்பட்டுள்ளன. நபிமார்கள் எவ்வாறு கைத்தொழில் நடவடிக்கை களில் ஈடுபட்டார்கள் என்ற விளக்கங்கள் எல்லாம் குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் வாழ்வை இலகுபடுத்திக் கொள்வதற்கு மனிதனுக்கு இத்துறை அவசியம் என்பதாகும். எனவேதான் இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் கைத்தொழிலைப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பது ஸுன்னத்தான இபாதத் எனக் பிட்டுள்ளார்கள்.

நடைமுறை உலகில் இரும்பை மையமாக வைத்து பாரிய கைத்தொழில் முயற்சிகள் இடம்பெறுகின்றன. அது வாழ்க்கையை இலகுபடுத்திக் கொள்வதற்கான எல்லா வழிகளிலும் பயன்படுவதைக் காணலாம். அல்குர்ஆனின் பல்வேறு இடங்களில் இரும்பைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு ஸூறாவின் பெயரே 'அல் ஹதீத்' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இரும்போடு தொடர்புடைய கைத்தொழில் முறையும் குர்ஆனில் விபரிக்கப்பட்டுள்ளது.

"இரும்பை நாமே இறக்கினோம். அதில் கடுமையான சக்தியும் மனிதருக்குப் பல வகைப் பயனும் இருக்கின்றது." (57:25)

இவ்வசனத்தை விளக்கியுள்ள குர்ஆனிய அறிஞர்கள் 'கடுமையான சக்தி' என்பது போராயுதத்திற்கு மூலப் பொருளாக இரும்பைப் பயன்படுத்துவதையும் 'பல்வகைப் பயன்' என்பது அன்றாடப் பாவனைகளுக்குத் தேவையான பொருட்கள், கைத்தொழி லுக்குத் தேவையான உபகரணங்கள் உற்பத்தி செய்வதையும் குறிப்பதாக விளக்கமளித்துள்ளார்கள்.

"மேலும் நாம் அவருக்கு இரும்பை மிருதுவாக்கித் தந்தோம்." (34:10-11)

"இன்னும் நீங்கள் போரிடும்போது உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான கவசங்கள் செய்வதை அவருக்கு நாம் கற்றுக் கொடுத்தோம். எனவே இவற்றுக்கெல்லாம் நீங்கள் நன்றி செலுத்துபவர்களாக இருக்கிறீர்களா?" (21:80)

நபி தாவூத் (அலை) அவர்களோடு தொடர்புபடுத்தி வரும் மேற்படி குர்ஆன் வசனங்கள் இரும்போடு தொடர்புடைய கைத்தொழில் துறைகளில் அவர் ஈடுபட்டு வந்தார் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

அல்லாஹ்வின் தூதர் நபி நூஹ் (அலை) அவர்கள் கப்பல் கட்டும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டார்கள். அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக இது மேற்கொள்ளப்பட்டது. இன்று கப்பல் மார்க்கமான கப்பல் போக்குவரத்தே பண்டங்களை நாடுகளுக்கிடையில் ஏற்று இறக்குமதி செய்ய உதவுகின்றது. கப்பல் கட்டும் தொழிற் துறை இன்று விருத்தியடைந்துள்ளது. இதனை அல்குர்ஆன் பின்வரும் அடிப்படையில் விபரிக்கின்றது.

"இன்னும் மலைகளைப் போல் கடலில் செல்பவையும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும்." (42:32)

- நபிமார்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு உழைப்பு முயற்சிகளில் ஈடுபட்டு வந்துள்ளதை வரலாற்றினூடாக காண முடிகின்றது. தாவூத் (அலை) அவர்கள் இரும்பாயுதங்கள் செய்வதில் ஈடுபட்டது போல், ஸகரிய்யா (அலை) அவர்கள் தச்சுத் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். நபி நூஹ் (அலை) அவர்கள் கப்பல் கட்டும் வேலையிலும் ஈடுபட்டுள்ளார்கள். ஸஹாபாக்களில் பெண்மணிகள் கூட கைத்தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். உம்ம ஹாதுல் மு∴மினீன்களில் ஸைனப் பிந்தி ஜஹ்ஷ் (ரழி) வலை பின்னி வாழ்க்கை நடத்தினார்கள்.
- இஸ்லாம் ஈருலக வாழ்வையும் வளப்படுத்துகின்ற கைத்தொழிற் துறைகளில் ஈடுபடுவதையே அனுமதிக்கின்றது. மாற்றமாக அகீதாவை சமூக, வாழ்வை, ஒழுக்கத்தை, பண்பாட்டை சீர்குலைக்கும் எந்தக் கைத்தொழில் துறைகளையும் அனுமதிப்பதில்லை. உதாரணமாக போதைப் பொருள் உற்பத்தி, மோசமான உணர்வுகளை வெளிக்கொண்டு வரக் கூடிய இசைக் கருவிகள், புகைப்பட உற்பத்திகள், மனிதனுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய உற்பத்திகள் என்பவற்றைத் தடைசெய்துள்ளதைக் குறிப்பிடலாம். ஆகவே கைத்தொழில் துறை மூலம் பொருளீட்டுவதும் ஓர் இபாதத் என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்திருப்பது அவசியமானதாகும்.

**தொழில்சார் நடவடிக்கைகளில் சேவைத் தொழில்**

- பொருளீட்டல் நடவடிக்கைகளில் சேவைத் தொழிலும் ஒன்றாகும். ஒரு மனிதன் வழங்குகின்ற சேவை மூலம் தனக்குரிய வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்ளும் முறையென இதனைச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். பல்வேறு வகையான சேவைத் தொழில்கள் காணப்படுவதை அவதானிக்கலாம். அரசாங்க சேவை, தனியார் சேவை, ஆட்சியாளர் பணி, ஆசிரியர் சேவை, மருத்துவ சேவை, தாதிமார் சேவை, இலிகிதர் சேவை, பாதுகாப்புச் சேவை, தொடர்பூடக சேவை, போக்குவரத்துச் சேவை, சுகாதார சேவை எனப் பல்வேறு வகைகளைக் குறிப்பிடலாம். இந்தச் சேவைகளை வழங்குவதற்கு பொறுப்புதாரர்களும் நியமிக்கப்படுவார்கள்.

  பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும்போதும் பதவிகளை வகித்திடும்போதும் பல அதிகாரங்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. பொறுப்புக்களையும் பதவிகளையும் பெற்றவர்களிடம் பலருடைய நல்வாழ்வுக்கான திட்டங்கள் ஒப்படைக்கப்படுகின்றன. இப்பொறுப்புக்களையெல்லாம் நிறைவேற்றிய முறை பற்றி மறுமையில் அவரவர் விசாரிக்கப்படுவார்கள். அல்லாஹ்விடம் அவர்கள் தமது பொறுப்புக்கள், பதவிகள் பற்றி பதில் சொல்லியாக வேண்டும். எனவே ஒவ்வொரு சேவைத் தொழிலிலும் ஈடுபடு பவர்கள் தாம் பெற்றிருக்கின்ற பொறுப்புக்களும், பதவிகளும் அமானிதம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அமானிதம் என்பது அல்லாஹ்வினது கட்டளைகளுக் கிணங்க உலகில் மனிதன் ஆற்ற வேண்டிய பணிகள், சேவைகளைக் குறிக்கின்றது.

  “நிச்சயமாக வானங்களையும் பூமியையும், மலைகளையும் (நம் கட்டளைகளை) அமானிதத்தைச் சுமந்து கொள்ளுமாறு எடுத்துக் காட்டினோம். ஆனால், அதைச் சுமந்துகொள்ள அவை மறுத்தன. அதைப் பற்றி அவை அஞ்சின. ஆனால் மனிதன் அதைச் சுமந்து கொண்டான். நிச்சயமாக மனிதன் (தனக்குத் தானே) அநியாயம் செய்பவனாகவும், அறிவிலியாகவும் இருக்கின்றான்.” (33:72)

  “அமானிதம் இல்லாதவனிடம் ஈமான் இல்லை. அல்லாஹ்வுடனான உடன்படிக்கையும் இல்லை” (அஹ்மத்)

  “நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்புதாரர்கள். உங்களில் ஒவ்வொருவரும் அவரவர் பொறுப்பு பற்றி விசாரிக்கப்படுவீர்கள்...” (புகாரி)

- மேற்படி குர்ஆன் ஹதீஸ் போதனைகள், பொறுப்புக்களின், பதவிகளின் அமானிதத் தன்மை பற்றித் தெளிவுபடுத்துகின்றன. தமது பொறுப்புகளுக்கும் பதவிகளுக்கும் ஒவ்வொருவரும் வகை கூறக் கடமைப்பட்டவர்கள் என்பதும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஆகவே சேவைத் தொழிலில் ஈடுபடும் அனைவரும் நாட்டுத் தலைவருடன் உடன்படிக்கை செய்துகொள்கின்றார்கள். இத்தலைவர்கள் ஆட்சியாளர்களுக்கும் ஆட்சியாளர்கள் அல்லாஹ்வுக்கும் வகை கூறக் கடமைப்பட்டவர்கள். ஆகவே ஒட்டுமொத்தமாக எல்லோரும் பொறுப்பானவர்கள்.

**ஆட்சியாளர்கள்**

- இன்று நாட்டை நிருவகிக்கின்றவர்கள் அனைவரும் அதற்காக ஊதியம் பெறுகின்றார்கள். ஜனாதிபதி முதல் பிரதேச சபை உறுப்பினர் வரை உள்ளவர்கள் அனைவரும் தேசிய பணியாளராவர். இந்த தலைமைத்துவப் பணிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் விடயத்தில் கவனமாக நடந்துகொள்ள வேண்டும். இப்பொறுப்புக்கள் மக்களால் நம்பி ஒப்படைக்கப்படுபவை. இவர்கள் அல்லாஹ்வுக்கும் மக்களுக்கும் பொறுப்புடையவர்கள். இவை மிகப் பெரிய அமானிதங்களாகும். அல்லாஹ் இவ்விடயம் பற்றித் துல்லியமாக விசாரிப்பான்.

ஒரு முறை அபூதர் அல் கிபாரி (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து என்னை ஒரு பகுதிக்கு ஆளுநராக நியமிக்க மாட்டீர்களா? எனக் கேட்டார்கள். இதைக் கேட்டதும் நபி (ஸல்) அவர்கள் அவரது தோள்களைத் தட்டியவராக பின்வருமாறு கூறினார்கள்:

"அபூ தர் அவர்களே! நீங்கள் பலவீனமானவர். இந்தப் பொறுப்பு ஓர் அடைக்கலப் பொருளாகும். இறுதித் தீர்ப்பு நாளில் கண்ணியத்தை இழக்கின்ற நிலைக்கும், அவமானமானதொரு நிலைக்கும் இது இட்டுச் செல்லும். எனினும் இந்தப் பொறுப்பை அதன் எல்லா சுமைகளோடும் ஏற்றுக் கொண்டு ஏற்றுக் கொண்டவைகளை நிறைவுசெய்பவர்கள் காப்பாற்றப்படுவார்கள்" (முஸ்லிம்)

மேற்படி ஹதீஸ் தகுதியானவர்களுக்கு பதவி வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கின்றது. உயர் கல்வித் தகைமை, சிறந்த அனுபவம், நல்ல பண்புகள் எல்லாம் எல்லோரையும் எல்லாப் பதவிகளுக்கும் தகுதியானவனாக மாற்றிவிடாது. யாரால் முறையாகவும் கண்ணியமாகவும் நிறைவேற்ற முடியுமோ அவர்களிடமே பொறுப்புக்களையும், பதவிகளையும், அதிகாரங்களையும் ஒப்படைக்க வேண்டும்.

"ஒரு கூட்டத்தாரில் அல்லாஹ்வுக்கு மிக உவப்பான ஒருவர் இருக்க அவரைப் புறக்கணித்து மற்றொருவரை யார் அக்கூட்டத்தினருக்கு அதிகாரியாக நியமிக்கின்றாரோ அவர் அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் விசுவாசிகளுக்கும் மோசம் செய்துவிட்டார்" (ஹாகிம்)

யூப்ரடீஸ் நதியில் நீர் அருந்தச் செல்லும் ஓர் ஒட்டகைக் குட்டி சங்கடத்திற்குட்பட்டாலும் அதற்கு இந்த உமர் மறுமையில் அல்லாஹ்விடம் பதில் சொல்லியாக வேண்டும்" என உமர் (ரழி) அவர்கள் தனக்கே கூறிக் கொண்டது ஆட்சியாளர்கள் தமது பொறுப்பை எடை போடப் போதுமானதாகும்.

நிழலே கிடைக்காத மறுமை நாளில் ஏழு நபர்களுக்கு அல்லாஹ் தனது அர்ஷின் கீழ் நிழல் கொடுப்பதாகக் கூறியுள்ளான். அவர்களுள் ஒருவர் நீதியுள்ள ஆட்சியாளன் அல்லது தலைவன் (முஸ்லிம்). அதிகாரப் பொறுப்பை சீராக நிறைவேற்றுவதன் சிறப்பும், அவசியமும் இங்கு போற்றப்படுகின்றது. ஆகவே தலைவர்கள், நிருவாகிகள் தமது பணிகளில் பேணுதலுடன் நடந்துகொள்ளக் கடமைப்படுகின்றார்கள்.

இத்தகைய தேசிய பணியாளர்கள் நாட்டுக்கும் குடி மக்களுக்கும் துரோகம் செய்யாதவர்களாகவும் மக்கள் நலனுக்கு தீங்கு செய்யாதவர்களாகவும் நாட்டின் வளங்களை அபகரிக்காதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

- **அரச பணிகளில் ஈடுபடுவோர்**

கல்வி மேம்பாட்டில் பெரும் பங்காற்றுகின்றவர்களே அதிபர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள். ஒரு நாட்டின் மாணவர் சமூகம் இவர்களது கரங்களிலேயே ஒப்படைக்கப்படுகின்றது. இவர்களது அமானிதம் பேணும் தன்மை, சேவைக்கான தகுதி, பொறுப்பாக நடந்துகொள்ளல், தொழிற் தகமை, கடமையுணர்வு என்பனவெல்லாம் இவர்களது சேவையில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

கற்றல், கற்பித்தல் பணி மிகவும் புனிதமானது. ஏனெனில், அல்லாஹ் அறிவின் அடிப்படையில் ஏனைய படைப்பினங்களை விட மனிதனை உயர்த்தி வைத்துள்ளான். எனவேதான் ஓர் மார்க்க அறிஞன் உருவாக்கப்படுவது, இதர துறை சார்ந்த அறிஞர்கள் உருவாக்கப்படுவது இஸ்லாமிய சட்ட அறிஞர்களின் பார்வையில் பர்ளு கிபாயாவாகக் கணிக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயின் நற் பிரஜைகளை, கல்விமான்களை உருவாக்கும் பணியைச் சுமந்தவர்கள் அமானிதப் பணியைச் சுமந்தவர்களாவர்.

“நீ உலகில் (ஆற்ற வேண்டிய) உன் பணியை (நஸீபை) மறந்துவிடாதே! அல்லாஹ் உனக்கு நல்லதைச் செய்திருப்பதைப் போல், நீயும் நல்லதைச் செய்” (28:77)

“அமானிதம் இல்லாதவனிடம் மார்க்கம் இல்லை” (அஹ்மத்)

அதிபர், ஆசிரியர் பதவிகள் தகுதியில்லாதவர்களிடம் ஒப்படைக்கப்பட்டால் நற்பிரஜைகள் உருவாவது சாத்தியமாக முடியாது. ஒரு முறை நபி (ஸல்) அவர்களிடம் நாட்டுப் புற அறபி ஒருவர் வந்து மறுமை நாள் எப்போது வரும் எனக் கேட்டார். “அமானிதம் தொலைந்தால் மறுமையை எதிர்பார்” என விடை பகர்ந்தார்கள். “அமானிதம் தொலைவது எப்படி” என மீண்டும் கேட்க, “ஒரு பொறுப்பு அதற்குத் தகுதியில்லாதவரிடம் ஒப்படைக்கப்பட்டால் மறுமையை எதிர்பார்” என விளக்கமளித்தார்கள். (முஸ்லிம்)

அதிபர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்களுக்கென பொறுப்புகள் வரையறுத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைச் செவ்வனே நிறைவேற்றுவதன் மூலமே கல்வி, ஒழுக்கம், நடத்தை போன்ற விவகாரங்களில் மேனிலையைக் காணலாம்.

“ஒரு மு.்.மின், தனது காரியங்களை நேர்த்தியாகவும் கச்சிதமாகவும் செய்வதைக் காண அல்லாஹ் அவாவுகின்றான்.” (புகாரி)

கல்விச் சேவையிலுள்ளவர்களுக்கு கல்வி, தொழிற் தகமைகள் அவசியமானவை. இன்றேல் அச்சேவையைச் சரிவர நிறைவேற்ற முடியாது. தொழில் தகைமை என்பதில் குறித்த பதவி வேண்டி நிற்கும் அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், இயக்க சக்தி, உறுதிப்பாடு, செயலூக்கம், அணுகுமுறை போன்றன இடம்பெற வேண்டியிருக்கின்றன.

கல்விச் சேவையில் ஈடுபடுபவர்கள் தமது பணியில் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளல் வேண்டும். பின்வரும் இரண்டு விடயங்களில் முக்கிய கவனம் செலுத்தக் கடமைப்படுகின்றார்கள்.

1. உரிய நேரத்தில் சமூகமளித்து தம்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பை செவ்வனே நிறைவேற்றல், கடமை நேரங்களை துஷ்பிரயோகம் செய்யாமல் இருத்தல்.
2. ஊதியத்திற்காக தான் ஆற்றும் கடமையினை தன்னால் இயன்றளவு அர்ப்பணிப்போடு நிறைவேற்றுவதில் போதிய ஆர்வமுள்ளவனாக இருத்தல். இது ஊழியனின் விசுவாசத்திற்கான அடையாளமாகும்.

எனவே கல்விச் சேவைகளில் ஈடுபடுகின்றவர்கள் தமது அமானிதப் பொறுப்பை உணர்ந்து இஸ்லாம் எதிர்பார்க்கும் நற்பிரஜைகளை உருவாக்கும் பணியில் கடமையுணர்வுடன் செயற்பட வேண்டும்.

- **சுகாதார (மருத்துவ, தாதிமார், இலிகிதர்) சேவைகள்**

சுகாதார சேவையிலீடுபடும் மருத்துவர்கள், தாதிமார், இலிகிதர் போன்றோர் அடுத்த மனிதர்களது நலன்களோடு தொடர்புடைய சேவையினை ஆற்றுகின்றார்கள். இவர்களது நடவடிக்கைகள் நாட்டு மக்கள் நலனில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை. எனவே இவ்வாறான சேவைகளிலும் அமானிதம், பொறுப்புணர்வு, தொழில் தகைமை, கடமையுணர்வு என்பன மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

பொதுவாக எந்த சேவைத் தொழிலில் ஈடுபடுபவர்களும் தமது உத்தியோகத்திற்கான உடன்படிக்கையின் படி பணியாற்றும் ஊழியராவர். அவனுக்கு ஊதியம் வழங்கப்படுவதால் அவனுக்குரிய கடமை நேரம் அவனது சேவைக்குரிய நேரமாகும். அப்போது அவனது உள, உடல், சிந்தனா ரீதியிலான அனைத்து ஆற்றலும், திறனும் அவனது உத்தியோகப் பணிக்காக செலவிடப்பட வேண்டும். அவனது வேலை நேரத்தில் நிறைவேற்ற வேண்டிய ஒவ்வொரு கருமத்துக்கும் அவன் பொறுப்பானவன்.

- ஓர் அதிகாரி அல்லது உத்தியோகத்தரின் பணி ஒரு குறித்த வேளையில் தன்னைச் சந்திக்க வருவோரின் தேவைகளை நிறைவேற்றுவதோடு சம்பந்தப்பட்டிருப்பதால் அவரது கடமை நேரம் அந்த மக்களுக்குரிய நேரமாகும். அவர்களது உரிமைகளை அந்த உத்தியோகத்தர் முறைப்படி வழங்க வேண்டும். இதற்கு உதாரணமாக வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்களின் சேவை நேரத்தைக் குறிப்பிடலாம். வைத்தியருக்காக நோயாளர்கள் காத்திருக்க, குறித்த சேவை நேரத்தை ஒரு தனியார் வைத்தியசாலையில் அவ் வைத்தியர் கழிப்பாராயின் எதிர்பார்த்திருக்கும் நோயாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகவே அது கணிக்கப்படும். ஏனெனில், அனைவரது வாழ்விலும் நேரம் பெறுமதியானது. வைத்தியர் சொற்ப நேரம் எனக் கருதுவது நோயாளியின் பக்கத்தில் பெறுமதியானதாக இருக்கலாம். இதேபோன்று ஓர் ஆசிரியர், ஒரு விரிவுரையாளர், ஓர் இலிகிதர், ஒரு தாதி சேவை நேரத்தில் எடுக்கின்ற ஏனையவர்களின் நேரம் அவர்களது வாழ்க்கையில் பெறுமதியானதாக இருக்கலாம். ஒரு மனிதனின் முறைகேடான செயல் ஏனையவர்களின் உயிரை, கல்வியை, வாழ்க்கையைப் பாதிக்கக் கூடியதாக அமையக் கூடாது.

  ஏனைய மனிதர்களின் நேரத்தை திருடும் சேவைத் தொழிலாளர்கள் தெய்வீகக் கடமை என்ற உணர்விழந்த ஊழியர்களாவர். இதற்கு அடிப்படைக் காரணம் அல்லாஹ் தன் மீது சாட்டியுள்ள அடுத்தவர்களுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமை பற்றிய பொறுப்புணர்ச்சி இல்லாமையே. ஆகவே தமது பொறுப்பு பற்றிய அசமந்தப் போக்கினால் அடுத்தவர்களது நலன்களை உதாசீனப்படுத்தி அவர்களின் பெறுமதியான நேர, காலங்களை சூறையாடுபவர்கள் ஒன்றை மறந்துவிடக் கூடாது. உயர் ஊதியம் பெறும் உயர் அதிகாரிகளும் சாதாரண ஊதியம் பெறும் பணியாட்களும் மக்களது வரிப்பணம் மூலம் ஊதியம் பெறுகின்றனர். ஆகவே சேவைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் நீதி நியாயத்தோடு தமது சேவையை வழங்குவது அவர்களது கடமையாகும்.

- **சமூக வாழ்வுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல் அம்சங்கள் அல்லது இஸ்லாமிய வியாபார அமைப்புகள்**

  மனித வரலாற்றின் ஆரம்ப கால வியாபார நடவடிக்கைகள் எளிமையாக இருந்தன. இன்று சமூக, பொருளாதார, கலாசார, தொழில்நுட்ப ரீதியாக உலகம், மாற்றங்களுக்குட்பட்டு வருகின்றது. முன்னர் காணப்படாத கொடுக்கல் வாங்கல் முறைகள், வியாபார ஒப்பந்தங்கள் இன்று இடம்பெற்று வருகின்றன. இவற்றுள் சில இஸ்லாமிய ஷரீஆவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சில நிராகரிக்கப்பட்டுள்ளன. ஆகவே நவீன வியாபார அமைப்புகள் பற்றி அறிந்து கொள்வது அவசியமானதாகும்.

**அங்கீகரிக்கப்பட்ட வியாபார முறைகள்:**

- **முழாரபா**

  நவீன கால இஸ்லாமிய அறிஞர்களில் ஒருவரான அலி ஹபீப் என்பவர் முழாரபாவுக்கு பின்வரும் கருத்தைக் கொடுத்துள்ளார்: "ஒரு தரப்பினரின் மூலதனத்தையும், மற்றொரு தரப்பிரனது உழைப்பையும் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் வர்த்தக முயற்சியின்போது கிடைக்கப் பெறும் இலாபத்தில் இரு தரப்பினரும் பங்குகொள்ளுதல் என்ற வகையில் இடம்பெறும் ஒரு வகைக் கூட்டுப் பங்காண்மை உடன்படிக்கையே முழாரபாவாகும்.

  இஸ்லாம் இதனை அனுமதித்துள்ளது. குர்ஆனும், ஸுன்னாவும் இதனை அங்கீகரித்துள்ளது. இஸ்லாமிய அறிஞர்களும் இது கூடும் என்பதில் ஏகோபித்த கருத்துக் கொண்டுள்ளார்கள்.

வேறு சிலர் "அல்லாஹ்வின் அருளைத் தேடி பூமியின் பல பாகங்களிலும் செல்ல வேண்டியிருக்கும்" (2:198), (62:60), (73:20) என்பன போன்ற வசனங்கள் முழாரபாவை சட்டபூர்வமானது என உறுதிப்படுத்துவதாக முபஸ்ஸிர்கள் உறுதிப்படுத்துகின்றார்கள்.

நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத்திற்கு முன்னர் கதீஜா (ரழி) அவர்களிடமிருந்து முழாரபா அடிப்படையிலேயே வியாபாரப் பொருட்களை ஷாம் நாட்டுக்கு எடுத்துச் சென்றார்கள். ஜாஹிலிய்யா காலத்தில் பிரபல்யமாக இருந்த இந்த வியாபார முறையினை இஸ்லாத்தின் வருகைக்குப் பின்னர் நபி (ஸல்) அவர்கள் அங்கீகரித்தார்கள்.

- முழாரபா செல்லுபடியாவதற்கு இஸ்லாமிய அறிஞர்கள் முன்வைத்துள்ள நிபந்தனைகள்

1. முழாரபா ஒப்பந்தத்திற்கான வார்த்தைப் பிரயோகம்.
2. முழாரபா ஒப்பந்தம் செய்துகொள்வோர் (மூலதன உரிமையாளன், முயற்சியாளன்)
3. மூலதனம்: அதனை வழங்குபவனுக்குச் சொந்தமானதாக அல்லது பயன்படுத்தும் உரிமை பெற்றவனாக இருத்தல். பொருளின் தன்மை, இயல்பு, தொகை, அறிவு முதலானவை குறிப்பாக அறியப்பட்டதாக இருத்தல்.
4. உழைப்பு அல்லது முயற்சி: நட்டத்தை முதலீட்டாளன் பொறுப்பேற்க வேண்டும். முயற்சியாளனே காரணம் எனின் அவர் பொறுப்பேற்க வேண்டும்.
5. இலாபப் பகிர்வு: இரு தரப்பினருக்குமுரிய இலாப விகிதாசாரம் தீர்மானிக்கப்பட்டிருத்தல்.
6. உடன்படிக்கை வரையறுக்கப்பட்டதாய் அமைதல் கூடாது: குறித்த ஊரில் குறித்த பொருளில் இடம்பெற வேண்டும் என வரையறுக்க முடியாது.

கீழ்வரும் நிலைகளில் முழாரபா உடன்படிக்கை முடிந்துவிடும்

1. மேலே கண்ட நிபந்தனைகளில் ஒன்றை இழத்தல்.
2. முயற்சியாளர் பொருட்களைப் பாதுகாப்பதில் கவனக்குறைவாய் இருத்தல் அல்லது உடன்படிக்கையின் நோக்கத்திற்கு முரணாக ஒன்றைச் செய்தல்.
3. முயற்சியாளரோ அல்லது நிதி உரிமையாளரோ மரணித்தல்.

மேலும் முயற்சியாளர் முழாரபா மூலம் பெற்றுக்கொண்ட நிதியைக் கொண்டு மற்றொரு முழாரபா உடன்படிக்கை செய்துகொள்ள முடியாது. அவ்வாறு நடந்துகொள்வது அத்துமீறலாகக் கணிக்கப்படும்.

- **முஷாரகா:**

உலகில் காணப்படுகின்ற உற்பத்தி முயற்சிகள், வியாபார நடவடிக்கைகள் மிகச் சிறிய அளவிலும், பாரிய அளவிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. பாரிய அளவிலான உற்பத்தி, வியாபார நடவடிக்கைகளில் ஒரு தனிநபர் மாத்திரம் ஈடுபட முடியாத சூழ்நிலை ஏற்படுவதுண்டு. இதனால்தான் பலர் ஒன்றுசேர்ந்து முதலிட்டு இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது. முஷாரகா முறையும் அவ்வாறானதொன்றே.

"பலர் ஒன்று சேர்ந்து தத்தமது மூலதனத்தை ஒன்று சேர்த்து ஓர் உற்பத்தி அல்லது தொழில் முயற்சியில் பங்குதாரர்களாக ஈடுபடும் அமைப்பையே இது குறிக்கின்றது."

- முஷாரகா நடவடிக்கைளுக்கான நிபந்தனைகள்

1. மூலதனத் தொகை குறிப்பாக அறியப்பட்டிருத்தல்.
2. மூலதனம் கையிருப்பிலுள்ள பணமாக இருத்தல்.
3. இலாப விகிதாசாரம் தீர்மானிக்கப்பட்டிருத்தல்.

முஷாரகாவில் ஏற்படும் நட்டம் பங்குதாரர்களின் பங்குகளுக்கேற்ப ஏற்றுக்கொள்ளப்படும்.

- **முராபஹா:**

  'முராபஹா' என்ற சொல் 'ரபிஹ' என்ற வினையடியிலிருந்து தோன்றியதாகும். இலாப மடைந்தான் என்பது பொருளாகும். இஸ்லாமிய அறிஞர்கள் இதனைப் பல்வேறு அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தியுள்ளார்கள். இமாம் இப்னு ருஷ்த் இதனைப் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தியுள்ளார்கள்.

  'முராபஹா என்பது ஒரு வியாபாரி தனது விற்பனைப் பொருளின் கொள்விலையை அதனை வாங்க வருபவரிடம் தெளிவுபடுத்தி அதனோடு தான் அப்பொருளை விற்கின்றபோது எதிர்பார்க்கப்படுகின்ற குறிப்பிட்ட இலாபத் தொகையையும் சேர்த்து புதிதாக விலை வைப்பதைக் குறிக்கும்.''

  சாதாரண பொருள் விற்பனையிலிருந்து இது வித்தியாசமானதாகும். சாதாரண விற்பனையில் வியாபாரி விற்பனைப் பொருளின் கொள்வனவு விலையைக் குறிப்பிடாமல் கொள்வனவு விலையோடு இலாபத்தைக் கூட்டி மொத்தத் தொகைக்கு அப்பொருளை விற்பனை செய்வார். முராபஹாவில் கொள்வனவு விலை இலாபம் என்பவற்றை கொள்வனவாளர்கள் அறிந்து கொள்வார்.

  முராபஹா வியாபார அமைப்பு ஷரீஆவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. நான்கு மத்ஹபுடைய இமாம்களும், அதிகமான சன்மார்க்க அறிஞர்களும் இதனை வலியுறுத்தியுள்ளார்கள். இது எந்த வகையிலும் வட்டியோடு தொடர்புடையதல்ல. சாதாரண பொருள் விற்பனையில் பின்பற்றப்படுகின்ற ஷரீஅத் சட்ட ஒழுங்குகளே இதிலும் பின்பற்றப்படுகின்றது. சவூதி அறேபியாவிலுள்ள இஸ்லாமிய சட்ட ஆய்வு மன்றமும் இதனை அங்கீகரித்துள்ளது. எல்லா வியாபார கொடுக்கல் வாங்கல்களுக்கும் இதனைப் பயன்படுத்த முடியும்.

  முராபஹா ஒப்பந்தப்படி விற்பனையாளர் தனது விற்பனைப் பொருளுக்குரிய விலைப் பெறுமானத்தை உடன் காசாக மொத்தமாகவோ, தவணை அடிப்படையிலோ வழங்க முடியும் எனும் நிபந்தனைக்கமையவோ வழங்க முடியும். இவ்விதம் தவணை அடிப்படையில் வழங்கும்போது ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தவிர்க்க கொள்வனவாளனிடம் ஏதும் பாதுகாப்புக்களை முன்வைக்குமாறு கோரலாம்.

- ஷரீஆவின் நிபந்தனைகள்

  1. விற்பவர், வாங்குபவர் (முராபஹா வியாபார ஒப்பந்தம் செய்து கொள்வோர்)
  2. வியாபார ஒப்பந்தத்திற்கான வார்த்தைப் பிரயோகம்
  3. ஈஜாப், கபூல்

- முராபஹாவுக்கான விதிமுறைகள்:

  **பொருளுக்கான நிபந்தனைகள்**

  1. பொருள் சுத்தமானதாகவும் ஆகுமானதாகவும் இருத்தல்.
  2. விற்பவனும் வாங்குபவனும் குறித்த வியாபாரத்தில் பயன் பெறல்.
  3. விற்பனைப் பொருளும் விலையாக வைக்கப்படும் பொருளும் (பணம்) அவரவர்களுக்குச் சொந்தமானதாக இருத்தல்.
  4. பொருளைக் கைமாற்றி உரியவருக்கு ஒப்படைக்க முடியுமாயிருத்தல்.
  5. குறிப்பிட்ட பொருளின் தரம், அளவு, நிறை, பண்புகள், விலை போன்றவற்றை இருவரும் தெளிவாக அறிந்திருத்தல்.
  6. வாங்கிய பொருளைப் பொறுப்பேற்றதன் பின்னர் மற்றவருக்கு விற்றல்.

**முராபஹா பொருளின் விலையைத் தீர்மானிப்பதில் பின்வரும் விடயங்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.**

1. கொள்வனவு விலையை கொள்வனவு செய்ய விரும்புபவருக்கு எடுத்துச் செல்லல்.
2. இலாபத் தொகையை கொள்வனவாளன் அறிந்திருத்தல்.
3. விற்பனைப் பொருளுக்குப் பதிலாகக் கொடுக்கப்படும் விலைப் பொருள் (விற்பனைப் பொருளினது) அதே இனத்தைச் சேர்ந்ததாக இல்லாதிருத்தல்.
4. ஆரம்பத்தில் நுகர்வாளன் வாங்கிய வியாபார நடவடிக்கை ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்டதாக இருத்தல்.

**சாட்சிகள்:** சாட்சிகள் ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது. சிக்கல்கள், பிணக்குகள் தோன்றுவதை இதன் மூலம் தவிர்க்கலாம்.

- **ஸலம் (முற்பணக் கொடுப்பனவு வியாபாரம்)**

காலம் தாழ்த்தி பொருள் ஒப்படைத்தல் முறையில் கொள்வனவு செய்தல் ‘ஸலம்’ எனக் குறிப்பிடப்படுகின்றது. இவ்வியாபார அமைப்பில் பொருளின் விலைக்குரிய முழுப் பணத்தையும் வாங்குபவர் செலுத்திவிட, விற்பனையாளர் குறிப்பிட்ட ஒரு திகதியில் பொருளை ஒப்படைப்பார்.

இவ்வியாபார அமைப்பு குர்ஆன், ஸுன்னா, இஜ்மா அடிப்படையில் அனுமதி பெற்றதாகும். மனிதர்களுக்கு ஏற்படும் ஒரு பொதுவான தேவையை நிறைவுசெய்வதற்காகவே இவ்வமைப்பு அனுமதிக்கப்பட்டுள்ளது. பணமுள்ளவன் பொருளை வாங்க வேண்டிய தேவையிலிருப்பான். பொருளின் சொந்தகாரனோ அதனை உற்பத்தி செய்ய முன்னரோ அல்லது அறுவடை செய்ய முன்னரோ பணத் தேவையுள்ளவனாய் இருப்பான். உதாரணமாக விவசாயிக்கு அறுவடைக்கு முன்னர் ஏற்படும் தேவைகளைக் குறிப்பிடலாம்.

நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது அங்கே இக்கொடுக்கல், வாங்கல் முறை இருந்தது. இதனை ஷரீஅத்துக்கு இணங்கியதாக அமைப்பதற்கான நிபந்தனைகளை நபி (ஸல்) அவர்கள் இட்டார்கள். “எதற்காவது முற்பணம் செலுத்துவோர் குறித்த அளவு, நிறை ஆகிய இரண்டிற்குமே அவ்வாறு செலுத்த வேண்டும். மேலும் காலத்தையும் நிச்சயித்துக்கொள்ள வேண்டும்.

1. விலையாகச் செலுத்தும் பணத்தின் வகையும் தொகையும் தெளிவாக அறியப்பட்டிருத்தல்.
2. விலைக்கான குறித்த தொகை உடன்படிக்கையின்போது செலுத்தப்படல் வேண்டும்.
3. விற்பவரின் பொறுப்பில் பொருள் இருத்தல் வேண்டும்.
4. பொருளின் தரமும் தொகையும் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
5. பொருளைக் கையளிக்கும் காலம், திகதி குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

- **அல்-இஜாரா**

மனிதர்கள் எல்லோரும் தமக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் எப்போதும் சொந்தமாக வைத்திருப்பதில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இரவல் வாங்குதல் மூலம், கூலிக்கு பெறுதல் மூலம், வாடகைக்குப் பெறுதல் மூலம் தமது தேவைகளை நிறைவு செய்துகொள்ள வேண்டி ஏற்படுகின்றது.

“ஒரு நபரிடம் அல்லது ஒரு பொருளிலிருந்து பயன் பெறுவதற்காக குறித்த ஒரு தொகையை பதிலீடாகச் செலுத்தலைக் குறிப்பது இஜாராவாகும்.”

உதாரணமாக ஒரு வாகனத்தை, கட்டடத்தை, பொருளை வாடகைக்கு எடுத்தலையும், ஒரு நபரை கூலிக்கு அமர்த்துவதையும் குறிப்பிடலாம்.

இஜாராவுக்குரிய நிபந்தனைகள்

1. இரு தரப்பினரும் சித்த சுவாதீனமுள்ளோராய் இருத்தல்.
2. பருவ வயதை அடைந்திருத்தல்.
3. உடன்படிக்கை பற்றி இணக்கம் காணப்படல்.
4. வாடகைக்கு விடப்படும் பொருள் பற்றி தெளிவாக அறிந்திருத்தல்.
5. வாடகைக்கு விடும் பொருளை அதன் பயன்பாடுள்ள நிலையில் கையளிக்கும் சக்தியைப் பெற்றிருத்தல்.
6. வாடகைக்கு விடப்படும் பொருள் ஷரீஅத்தில் விலக்கப்பட்டதாகவோ கொடுப்பதற்கு கடமையாக்கப்பட்டதாகவோ இல்லாமல் ஆகுமானதாக இருத்தல்.
7. வாடகை, பணப் பெறுமதியுடையதாகவும் தொகை அறியப்பட்டதாகவும் இருத்தல்.

- **அல்-முஸாரஆ**

ஒரு முஸ்லிம் தனக்குச் சொந்தமான ஒரு பயிர் நிலத்தை பல வகைகளில் பயன்படுத்த முடியும். அவர் விரும்பின், தானே அதில் பயிர் செய்ய முடியும் அல்லது தன்னால் விவசாயம் செய்ய முடியாது எனக் காணும் வேளையில் வேறொருவருக்கு எவ்வித இலாபமும் எதிர்பாராது அந்நிலத்தை இரவலாக கொடுத்துதவ முடியும்.

“உங்களில் ஒருவருக்கு ஒரு நிலம் இருந்தால் அதில் பயிரிடட்டும் அல்லது அதனை தனது சகோதரனுக்கு வழங்கட்டும்.” (புஹாரி)

ஒருவர் தனது நிலத்தை வேறொருவருக்கு விவசாயம் செய்வதற்காகக் கொடுத்து உடன்படிக்கையின் படி மொத்த விளைச்சலில் குறிக்கப்பட்ட விகிதாசாரத்தை பெறலாம். நிலச் சொந்தக்காரர் விவசாயிக்கு விதைகள், உபகரணங்கள் போன்றவற்றைக் கொடுத்து உதவலாம். இவ்வாறு விவசாயத்தில் ஈடுபடுதல் விவசாயப் பங்குடமை என அழைக்கப்படுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் இவ்வமைப்பின் அடிப்படையிலேயே கைபர் பிரதேசத்தில் கைப்பற்றிய நிலங்களை அங்கு வாழ்ந்த மக்களுக்குக் கொடுத்தார்கள். அதாவது அவர்கள் பயிரிட்டு விளைச்சலில் அரைவாசியை நபி (ஸல்) அவர்களுக்கு கொடுப்பது என்ற நிபந்தனையின் பேரில் அந்நிலங்கள் கொடுக்கப்பட்டன. (முஸ்லிம்) இம்முறையினையே கலீபாக்கள், பின்வந்த காலங்களிலும் தொடர்ந்து பின்பற்றி வந்ததாக அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

ஜாஹிலிய்யாக் காலத்தில் நிலத்தின் ஒரு பகுதியின் விளைச்சலை நிலச் சொந்தக்காரர் பெறுவதாகவும் மிகுதியுள்ள பகுதியின் விளைச்சலை விவசாயி பெறுவதாகவும் நிபந்தனையிட்டு அல்லது விளைச்சலில் குறித்த அளவு தானியத்தை நிலச் சொந்தக்காரர் பெறுவதாக நிபந்தனையிட்டு நிலத்தை விவசாயம் செய்ய வழங்கும் முறையொன்று பின்பற்றப்பட்டது. இன்றும் ஒரு சிலர் இதனைப் பின்பற்றுகின்றார்கள். இது அநீதியான முறையாகும். இதனால் விவசாயி பாதிக்கப்படுகின்றான். விளைச்சலுக்கு ஏற்ப இருவரும் பெற்றுக் கொண்டால் பாதிப்பிருக்காது. அதுவே நீதியான முறை. இஸ்லாம் ஜாஹிலிய்யாக் கால முறையைத் தடுக்கின்றது.

பயிர்ச் செய்கையில் ஈடுபடும்போது நிலச் சொந்தக்காரனும், விவசாயியும் பெரும் தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். விவசாயி பயிர்ச் செய்கையில் மிகவும் அக்கறையுடன் நடந்துகொள்ள வேண்டும். நிலச் சொந்தக்காரன் மிகக் கூடுதலான பங்கைக் கேட்கக் கூடாது. இரு தரப்பினருக்குமிடையில் அன்பாதரவும், நல்லுறவும் இருக்க வேண்டும்.

ஒருவர் தனது நிலத்தை வாடகைக்கு விடவும் முடியும். பெரும்பாலான அறிஞர்கள் இதனை ஆகுமானது எனக் குறிப்பிடுகின்றார்கள். நிலத்தை வாடகைக்கு விடக் கூடாது எனும் கருத்தில் வரும் ஹதீஸ்களை வைத்து வாடகைக்கு விடுவது கூடாது எனக் கூறும் அறிஞர்களும் இருக்கின்றார்கள்.

- **பைஉல் முஅஜ்ஜல் அல்லது பைஉத் தக்ஸீத்**

பிற்போடப்பட்ட கொடுப்பனவு வியாபாரம் அல்லது தவணை அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல் வியாபாரம். "இவ்வியாபாரம் ஒப்பந்தத்தில் பொருள் முன்னதாகவும் அதற்குரிய பெறுமதி பின்னரும் வழங்கப்படுவதால் பிற்போடப்பட்ட கொடுப்பனவு வியாபாரம் என வழங்கப்படுகிறது." இவ்வியாபாரத்தில் மூன்று நபர்கள் சம்பந்தப்படு கிறார்கள். விற்பனையாளன், கொள்வனவாளன், தரகர். தரகர் விற்பனையாளனையும் கொள்வனவாளனையும் இணைப்பவராக இருப்பார். கொள்வனவாளனுக்காக பொருளின் விலையை தரகர் வியாபாரிக்கு வழங்குவார். பின்னர் அவ்விலையை விட மேலதிகமான தொகையையும் சேர்த்து கொள்வனவாளனிடம் தவணை அடிப்படையில் தரகர் பெற்றுக் கொள்வார். இந்த வியாபார ஒப்பந்தத்தில் பொருளுக்கான விலை நடைமுறை விலையிலும் கூடியதாகவே காணப்படும்.

இவ்வியாபாரம் நான்கு மத்ஹபுகளையும் சார்ந்த பெரும்பான்மை அறிஞர்களின் கருத்துப்படி ஷரீஆவின் பார்வையில் அனுமதிக்கப்பட்டதாகும். இதில் பெறப்படும் மேலதிக தொகை ஹலாலானது என்கின்றனர். இதனை நவீன கால அறிஞர்களோடு சட்டத்துறை அமைப்புக்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. இவ்வியாபாரம் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டது என சட்ட அறிஞர்கள் கூறுகின்றனர்.

1. "அல்லாஹ் வியாபாரத்தை ஆகுமாக்கி வைத்து வட்டியை தடுத்துவிட்டான்." (2:275)

இவ்வசனம் அனைத்து வகையான வியாபாரத்தையுமே குறிக்கின்றது. உடன் காசுக்கு கொடுத்தாலும், தவணைக் கொடுப்பனவு அடிப்படையில் கொடுத்தாலும் அவை மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டவையாகும்.

2. விசுவாசம் கொண்டவர்களே, நீங்கள் குறிப்பிட்ட தவணை வரை ஒருவருக்கொருவர் கடன் கொடுக்கல், வாங்கல் செய்து கொண்டால் அதை எழுதிக் கொள்ளுங்கள். (2:282)

பிற்போடப்பட்ட கொடுப்பனவு வியாபரத்தில் ஒப்பந்தம் இடம்பெறும் இடத்தில் பொருளின் பெறுமதி பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பொருள் மாத்திரம் கைமாற்றப்படுவதால் இதில் ஒரு வகை கடன் கொடுக்கல் வாங்கல் இடம்பெறுகின்றது. ஆகவே மேற்படி வசனமும் கடன் அடிப்படையிலான வியாபாரத்தை அனுமதித்துள்ளது.

3. பின்வரும் ஹதீஸும் இதனை உறுதிப்படுத்துகின்றது. "யாராவது பேரீத்தம் பழத்தைக் கடனாகக் கொடுத்தால் அதனை அவர் அறியப்பட்ட அளத்தல் அல்லது நிறுத்தல் அளவையில் வரையறுக்கப்பட்ட காலத்துக்கு கடனாகக் கொடுக்கவும்" (முஸ்லிம்).

இங்கு நபி (ஸல்) அவர்கள் பேரீத்தம் பழத்தை வியாபாரப் பண்டங்களில் ஒன்றாகவே குறிப்பிட்டுள்ளார்கள். எனவே வர்ணனைக்கு உட்படக் கூடிய அளக்கக் கூடிய அனைத்துப் பொருட்களையும் பேரீத்தம் பழத்துடன் எமக்கு ஒப்புநோக்க முடியும்.

பின்வரும் நிபந்தனைகளை பிற்போடப்பட்ட கொடுப்பனவு வியாபாரம் பெற்றிருந்தால், அவ்வகை வியாபாரமும், அதன் இலாபமும் ஷரீஆவில் அங்கீகரிக்கப்படும்.

1. ஏமாற்று, மோசடி, பொய் என்பவற்றிலிருந்து நீங்கப் பெற்றவையாக வியாபார முறைமை அமைந்திருத்தல்.
2. வியாபாரப் பொருள் ஷரீஆவில் அனுமதிக்கப்பட்டதாய் இருத்தல்.
3. பணம் செலுத்தப்பட வேண்டிய கால எல்லை வரையறுக்கப்பட்டிருத்தல்.
4. நுகர்வாளருக்குக் கொடுப்பதற்கு முன்னர் விற்பனையாளர் பொருளைக் கையேற்றிருத்தல்.

இவற்றோடு கொடுக்கல், வாங்கலின்போது இரு சாராரும் கைக்கொள்ள வேண்டுமென ஷரிஆ பொதுவாக விதித்துள்ள நிபந்தனைகளும் அடங்கும்.

- **அஸ்ஸம்ஸரா**

இஸ்லாத்தில் தரகராக இருப்பதற்கு தடையேதும் இல்லை. இது விற்பவருக்கும் வாங்குபவருக்கும் இடையில் ஒரு வகைத் தொடர்பை ஏற்படுத்துவதுடன் இலாபகரமான கொடுக்கல் வாங்கலுக்கும் உதவுகின்றது.

இமாம்களான இப்னு ஸீரீன், அதாஉ, இப்றாஹீம், அல் ஹஸன் போன்றோர் தரகராக செயற்படுவதிலும் அதற்காக ஒரு தொகைப் பணத்தைப் பெறுவதிலும் எத்தகைய தவறையும் காணவில்லை என இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்.

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் "இந்த ஆடையை விற்பனை செய்ய வேண்டிய இன்ன விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்தால் மேலதிக தொகை உமக்குரியதாகும்" என்று ஒருவர் இன்னொருவருக்கு கூறுவதில் தவறில்லை என்கிறார். ஆகவே ஒரு தரகர் சேவைக்காக ஒரு கட்டணத்தைப் பெற முடியும் என்பதே பலமான கருத்தாகக் கொள்ளப்படுகின்றது.

- **அத்தஃமீன் (காப்புறுதி அமைப்பு)**

இஸ்லாமிய அரசு தனது ஆட்சியின் நிழலில் வாழும் எல்லாப் பிரஜைகளினதும் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கின்றது. இவ்வுத்தரவாதம் சமூகக் கூட்டுப் பொறுப்பினூடாகவோ அல்லது 'பைதுல் மால்' எனப்படும் திறைசேரி மூலமாகவோ நிறைவேற்றப்படுகின்றது. உண்மையில் பைதுல் மால் அமைப்பே இஸ்லாத்தின் காப்புறுதிக் கம்பனியாக செயற்படக் கூடியதாகும்.

இஸ்லாமிய நாட்டில் வாழும் தனிநபர்களுக்கு அனர்த்தங்கள் ஏற்படும்போது அவர்களுக்கு கைகொடுத்து உதவுவது அரசின் கடமையாகும்.

கடன்பட்ட நிலையில் உள்ளோருக்கும் இஸ்லாம் ஸகாத்தில் இருந்து ஒரு விஷேட தொகையை வழங்குகின்றது. ஸகாத்தைப் பெற தகுதியுடையோரில் கடன்பட்டோரும் ஒரு பிரிவினர் என்பதனை நீங்கள் அறிவீர்கள். இது தவிர இன்னும் பல அமைப்புக்களின் மூலமாகவும் இஸ்லாம் மனிதர்களின் பாதுகாப்பை உறுதி செய்கின்றது.

இந்த வகையில் இஸ்லாத்தின் கொடுக்கல், வாங்கல் சட்டங்களுக்கு முரண்படாத விதத்தில் காப்புறுதி அமைப்புக்களைச் செயற்படுத்துவதில் தவறில்லை. இஸ்லாத்தின் காப்புறுதி அமைப்பு என்பது ஒத்துழைப்பு, கூட்டுப் பொறுப்பு என்பவற்றின் அடிப்படையில் நன்கொடைகளைப் பெற்று இயங்கும் ஒரு நலன்புரி நிறுவனமாகவே பெரும்பாலும் அமையும்.

ஆயினும் இன்று நடைமுறையில் உள்ள நவீன காப்புறுதி கம்பனிகளும் அவற்றின் செயற்பாடுகளும் இஸ்லாத்திற்கும் அதன் அடிப்படைகளுக்கும் முரண்பட்டதாகவே அமைந்துள்ளன.

இதனாலேயே நடைமுறையில் நாம் காணும் ஆயுள் காப்புறுதி உட்பட அனைத்து வகையான நவீன காப்புறுதி அமைப்புகளும் ஹராமானவை என அறிஞர்கள் கருதுகின்றனர். 'மஜ்மஉல் பிக்ஹில் இஸ்லாமி' எனும் இஸ்லாமிய சட்ட மன்றமும் இத்தீர்ப்பையே வழங்கியுள்ளது. சூதுக்குரிய பண்புகள், வட்டி, பிறர் செல்வத்தை எத்தகைய பிரதியீடும் இன்றி பெறும் நிலை ஆகியன நவீன காப்புறுதியுடன் தொடர்புபட்டுள்ளன.

அத்தோடு கொடுக்கல், வாங்கலில் இருக்கக் கூடாத மயக்கமான, தெளிவற்ற தன்மைகள் காப்புறுதி ஒப்பந்தங்களுடன் தொடர்புபட்டிருப்பதனாலும் இவ்வமைப்புகள் விலக்கப்பட வேண்டும் எனக் கருதப்படுகின்றன.

ஆயுள் காப்புறுதி அமைப்பு பெரியளவில் இஸ்லாமிய சட்டத்துடன் முரண்படுகின்றது. ஏனைய காப்புறுதி முறைகளைப் பொறுத்தவரையில் (உ-ம்: அனர்த்தங்களுக்கான காப்புறுதி) அவற்றை சில திருத்தங்கள் செய்வதன் ஊடாக இஸ்லாமிய மயப்படுத்த முடியும்.

உதாரணமாக, நவீன இஸ்லாமிய சட்ட அறிஞரான கலாநிதி யூசுப் அல் கர்ளாவி, அனர்த்தங்கள் மீதான காப்புறுதியை 'நஷ்டஈட்டு நிபந்தனையுடன் கூடிய நன்கொடை' என்ற அடிப்படையில் இஸ்லாமிய முறையில் மேற்கொள்ளலாம் என்கிறார். அதாவது ஒருவர் தனக்கு ஒரு (பொருள்) ஆபத்து ஏற்படும்போது தனக்கு ஏற்படும் இழப்பின் சுமையை குறைக்கக் கூடிய ஒரு தொகையைத் தனக்கு நஷ்டஈடாகத் தர வேண்டும் எனும் நிபந்தனையின் பேரில் தனது கொடுப்பனவை கம்பனிக்கு நன்கொடையாக வழங்குவார். அந்தக் கம்பனி வட்டி அமைப்பைத் தவிர்ப்பதற்காக இருக்கும்போது இக்காப்புறுதி முறை ஷரீஅத்துக்கு உடன்பாடானதாக இருக்கும்.

- **அர்ரஹ்ன் - (அடகு வைத்தல்)**

கடன் பெற்றவர், தான் பெற்ற கடனுக்கு ஈடாக கடன் கொடுத்தவரிடத்தில் பணப் பெறுமதியுள்ள ஒரு பொருளை வைப்புச் செய்வதனை அடகு அல்லது ஈடுவைத்தல் என வழங்குகிறோம். இதனை நீங்கள் விளக்கமாகப் புரிந்துகொள்வதற்காக ஓர் உதாரணத்தைத் தருகின்றோம்.

ஒருவர் இன்னொருவரிடமிருந்து ஒரு தொகைப் பணத்தை கடனாகப் பெறுகின்றார். தான் பெற்ற கடனுக்கு கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை ஒரு நிலத்தையோ ஒரு மிருகத்தையோ விட்டு வைக்கிறார். இச்செயற்பாடே அடகு வைத்தல் என வழங்கப் படுகின்றது.

அடகு வைத்தல் இஸ்லாமிய சட்டத்தில் அனுமதிக்கப்பட்டதாகும். இதற்குக் கீழ்வரும் அல்குர்ஆன் வசனம் ஆதாரமாக உள்ளது.

நீங்கள் பிரயாணத்தில் இருந்து (கொடுக்கல் வாங்கல் செய்ய) எழுத்தாளனைப் பெறாவிட்டால் (ஒரு பொருளை) ஈடாகப் பெற்றுக் கொள்ளுங்கள்." (2:283)

நபி (ஸல்) அவர்களும் இவ்வமைப்பை அங்கீகரித்துள்ளதுடன் அன்னார் ஒரு சந்தர்ப்பத்தில் தன்னுடைய கவசத்தை ஒரு யூதனிடம் ஈடுவைத்து அவனிடமிருந்து உணவுப் பொருளைப் பெற்றுள்ளார். (புஹாரி)

இவ்வமைப்பு சட்டபூர்வமானது என்பதில் இஸ்லாமிய அறிஞர்கள் ஆரம்ப காலம் முதலே ஏகோபித்த கருத்தைக் கொண்டுள்ளார்கள்.

இவ்வடகு முறை உடன்படிக்கை செல்லுபடியாவதற்கு, கீழ்வரும் நிபந்தனைகள் அமையப் பெறல் வேண்டும்.

1. சித்த சுவாதீனம்
2. பருவ வயதை அடைந்திருத்தல்
3. அடகு வைக்கப்படும் பொருள் அல்லது ஆவணங்கள் உடன்படிக்கையின்போது அங்கு காணப்படல்.
4. அப்பொருளை, அடகைப் பெறுபவரோ அல்லது அவரின் பிரதிநிதியோ கையேற்றல்.

அடகு வைத்தல் அமைப்பிலான உடன்படிக்கையின் நோக்கம் கடனைத் திருப்பிப் பெறுவதற்கான உத்தரவாதத்தைப் பெற்றுக் கொள்வதேயன்றி அதன் மூலம் இலாபம் ஈட்டுவதல்ல. எனவே, அடகைப் பெற்றவர் தன்னிடம் அடகாக வைக்கப்பட்டுள்ள பொருளை பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு அப்பொருளில் இருந்து நன்மையடைவது கொடுத்த கடனுக்குப் பெறும் பயனாக அமைவதனால் அது வட்டியாக மாறிவிடும்.

ஆயினும், அடகு வைக்கப்பட்டுள்ள பொருள் சவாரி செய்யக் கூடிய ஒரு பிராணியாகவோ அல்லது பால் சுரக்கக் கூடிய மிருகமாகவோ இருந்தால் அவற்றிற்கு செலவாகும் செல வினங்களுக்கு ஈடாக அவற்றைக் கொண்டு நன்மையடையலாம். இந்த வகையில் குதிரை, மாடு போன்றவைகளாக இருந்தால் ஏறிச்சவாரி செய்யவும் பாரம் ஏற்றவும் முடி யும். பசு, ஆடு போன்றவையாக இருப்பின் அவற்றின் பாலைப் பெற அனுமதி உண்டு.

அடிப்படையில் ஈட்டுப் பொருளின் பயன்கள் அனைத்தும் ஈடுவைத்தவனுக்குக் கிடைக்க வேண்டியவையாகும். அந்த வகையில் அதன் வளர்ச்சியின் விளைவுகள் அனைத்தும் அவனுக்குரியதாகும்.

மேலும் அடகுப் பொருள் அடகைப் பெற்றவனின் கையில் இருக்கும் அமானிதமாகும். அப்பொருளுக்கு ஏற்படும் அழிவும் சேதமும் அவனது அத்துமீறலினாலோ அவனது கவனக் குறைவினாலோ அன்றி நிகழுமாயின் அதற்கு அவன் பொறுப்பாளி அல்ல.

கடன் பெற்றவரால் கடனைச் செலுத்த முடியாமல் போய் விட்டால் அடகுப் பொருள் அடகைப் பெற்றவனுக்குச் சொந்தமாகிவிடாது. இச்சந்தர்ப்பத்தில் அப்பொருள் விற்கப்பட்டு கடன் தொகை கடன் கொடுத்தவருக்கு வழங்கப்படும். மீதம் இருந்தால் அது பொருளின் சொந்தக்காரனுக்கு உரியதாகும்.

கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான தவணை குறிப்பிடப்பட்டு குறித்த திகதியில் கடன் செலுத்தப்படாதிருந்தால் அடகுப் பொருளை விற்பதற்கு அடகைப் பெற்றவனுக்கு அனுமதியுண்டு. இங்கும் மீதி இருந்தால் அது பொருளின் சொந்தக்காரனுக்குரியதாகும்.

- **அல் வகாலா (முகவர் அமைப்பு)**

அல் வகாலா என்ற அறபுப் பதத்திற்கு பொறுப்புச் சாட்டல், ஒப்படைத்தல் எனும் கருத்துக்கள் உண்டு. இங்கு வகாலா என்பதன் மூலம் கருதப்படுவது, ஒருவர் தன்னுடைய ஒரு காரியத்தை மேற்கொள்வதற்கு தனது சார்பில் மற்றொருவரை நியமிப்பதாகும்.

இவ்வமைப்பு இஸ்லாத்தின் அனுமதிக்கப்பட்ட ஒன்றாகும். எல்லோருக்கும் தமது எல்லாப் பொருட்களையும் வேலைகளையும் தாமே முன்னின்று மேற்கொள்ளக் கூடியதாக இருக்காது. பல சந்தர்ப்பங்களில் ஒருவர் தனது சில பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு பிறரின் உதவியை நாட வேண்டி வரும். அவ்வேளைகளில் பொறுப்பை ஏற்றோர் முகவர்களாகவோ பிரதிநிதிகளாகவோ நின்று அப்பொறுப்புக்களை நிறைவேற்றுவர். இவ்வமைப்பை அங்கீகரிக்கும் பல சட்ட வசனங்களைக் காண முடிகின்றது. ஒரு

சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள் அபூ ராபி.். எனும் நபித் தோழரையும் ஒரு அன்ஸாரியையும் (வகீல்) பொறுப்பாளர்களாக வைத்து மைமூனா (ரழி) அவர்களை திருமணம் முடித்துக் கொண்டார்கள். மேலும் நபி (ஸல்) அவர்கள் தன் சார்பில் கடனை அடைத்தல், தண்டனைகளை நிறைவேற்றல் போன்ற பொறுப்புக்களுக்காக பலரை நியமித்துள்ளார்கள்.

இம்முறை இஜ்மாஉ எனும் ஏகோபித்த அங்கீகாரத்தைப் பெற்று வந்துள்ளதுடன் ஒரு வகை ஒத்துழைப்பு என்பதனால் இவ்வமைப்பு மார்க்கத்தில் வரவேற்கத்தக்க ஒன்றாகவும் கொள்ளப்படுகின்றது.

'வகாலா' முறை ஓர் உடன்படிக்கை என்பதால் ஏனைய வியாபார உடன்படிக்கைகளுக்குத் தேவைப்படும் ஈஜாப், கபூல் போன்றன இதற்கும் அவசியமானவை.

இவ்வுடன்படிக்கையைச் செய்துகொண்ட இரு தரப்பினரும் தாம் விரும்பிய பொழுது அதனை வாபஸ் பெறுவதற்கும், முறிப்பதற்கும் உரிமை பெறுவர்.

வகாலா அடிப்படையிலான ஓர் உடன்படிக்கை நிறைவேற்றுவதற்குரிய நிபந்தனைகள் உள்ளன. அந்நிபந்தனைகளில் சில பொறுப்புச் சாட்டுபவருடன் தொடர்பானவையாகும். மற்றும் சில பொறுப்பு சாட்டப்பட்டவருடன் தொடர்புடையவை யாகும்.

பொறுப்புச் சாட்டுபவர் எதில் அதனைச் செய்கின்றாரோ அதனைக் கையாள்வதற்கு பூரண உரிமையுடையோராய் இருத்தல் வேண்டும். உதாரணமாக, சித்தசுவாதீனம் அற்றவர் எவ்விடயத்திலும் எவரையும் தன் சார்பில் நியமிக்க உரிமை வழங்கப்படுவ தில்லை.

பொறுப்பேற்றவர் பிரித்தறியக் கூடியவராக இருத்தல் வேண்டும். குறை புத்தியுடைய வராகவோ, பைத்தியக்காரராகவோ இருத்தல் கூடாது.

பொறுப்புச் சாட்டப்படும் விடயம் பொறுப்பேற்றவருக்குக் குறிப்பாகத் தெரிந்திருத்தல் வேண்டும். ஆனால், பொறுப்புச் சாட்டப்பட்டவரோ அதனைப் பொதுப்படையாக கூறியிருப் பின் பிரச்சினையாக அமையாது. உதாரணமாக ஒருவர் மற்றொருவருக்கு "எனது சார்பில் எனக்காக நீ விரும்பியதை வாங்கவும் " என்றும் வேண்டுவதனைக் குறிப்பிடலாம்.

வகாலா அமைப்பு வாங்குதல், விற்றல், வாடகைக்கு விடல், கடன் கொடுத்தல், அதனைத் திருப்பிப்பெறல் சர்ச்சைகளைத் தீர்த்தல், சமாதான நடவடிக்கைகள் உட்பட எல்லா வகையான உடன்படிக்கைகளுக்கும் பொருந்தும், செல்லுபடியாகும். பொறுப்பேற்றவர் ஆணாகவோ பெண்ணாகவோ இருக்கலாம்.

ஒருவர் தான் நின்று மேற்கொள்ளக் கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் வகாலா அடிப்படையில் பிறருக்குப் பொறுப்புச் சாட்ட முடியும். இது வகாலாவுக்கான ஒரு பொது விதியாகும்.

பிரதிநிதித்துவப்படுத்த முடியாத விடயங்களில் வகாலா செல்லுபடியாகாது. உதாரணமாக தொழுதல், சத்தியம் செய்தல் போன்ற விடயங்களை பிறரைக் கொண்டு செய்விக்க முடியாது.

கீழ்வரும் நிலைகளில் வகாலா உடன்படிக்கை காலாவதி ஆகும்.

1. இரு தரப்பில் ஒருவர் மரணித்தல் அல்லது சித்தசுவாதினத்தை இழத்தல்.
2. வகாலா அடிப்படையில் அமைந்த குறித்த வேலை முடிவடைதல்.
3. பொறுப்புச் சாட்டியவர் பொறுப்பேற்றவரை பொறுப்பில் இருந்து நீக்குதல்.
4. பொறுப்பேற்றவர் தானே பொறுப்பில் இருந்து நீங்கிக் கொள்ளல்.
5. பொறுப்புச் சாட்டப்பட்டது பொறுப்புச் சாட்டியவரின் உடமையில் இருந்து நீங்குதல்.

- **அல் கர்ழ் (கடன்)**

கடன் கொடுப்பது ஓர் உயர்ந்த நற்செயலாகும். "ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு இரு தடவைகள் கடன் கொடுப்பது ஒரு தடவை தர்மம் செய்வதைப் போன்றதாகும்." (இப்னு மாஜா)

இஸ்லாம் யாசகம் கேட்பதைத் தடைசெய்வது போன்று கடன் வாங்குவதைத் தடுக்கவில்லை. மாறாக அதற்கு அனுமதி வழங்குகின்றது. கடன் பெறும் நடவடிக்கையும் ஒரு கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையாகக் கொள்ளப்படுவதனால் அதிலும் ஈஜாப், கபூல் அவசிய மானதாகும்.

பணத்தை மாத்திரமன்றி ஆடைகள், மிருகங்கள் போன்றவற்றையும் வியாபாரப் பொருட்கள் உட்பட அளவை நிறுவைக்கு உட்படுத்தக் கூடியவற்றையும் கடனாகக் கொடுக்க முடியும்.

கடன் வழங்குவது ஒரு வகை உதவியும், ஒத்துழைப்புமேயன்றி உழைப்புக்கான வழியல்ல. எனவே கடன் கொடுத்தவர் தான் கொடுத்த அளவையே கடன் வாங்கியவரிடமிருந்து திருப்பிப் பெறல் வேண்டும். கொடுத்த தொகையை விட கூடுதலாக திருப்பித் தர வேண்டுமென நிபந்தனையிடுவதும் எதிர்பார்ப்பதும் ஹராமாகும்.

ஆயினும், நிபந்தனையிடப்படாத நிலையில் கடன் பெற்றவர் தனது சுயவிருப்பத்தின் பேரில் கடனைத் திருப்பிச் செலுத்தும்போது, பெற்ற தொகையை விட கூடுதலாகக் கொடுக்க அனுமதியுண்டு. அம்மேலதிகத் தொகையை கடன் கொடுத்தவன் பெற்றுக் கொள்வது பிழையானதல்ல. நபி (ஸல்) அவர்கள் தான் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தும்போது பெற்ற தொகையை விட கூடுதலாகக் கொடுக்கக் கூடியவர்களாக இருந்துள்ளார்கள்.

ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் அவர்கள் கீழ்வருமாறு கூறுகிறார்கள்: "அல்லாஹ்வுடைய தூதர் எனக்கு தர வேண்டிய ஒரு கடன் இருந்தது. அன்னார் அதனை திருப்பிச் செலுத்தியதோடு தொகையைக் கூட்டியும் தந்தார்கள்." (புஹாரி, முஸ்லிம்)

ஒருவர் தான் பெற்ற கடனை முடியுமான வரை அவசரமாக திருப்பிச் செலுத்துவதே சிறந்ததாகும். கடன் உள்ள நிலையில் மரணிப்பதையிட்டு நபியவர்கள் பல சந்தர்ப்பங்களில் கடுமையாக எச்சரித்துள்ளார்கள். கடன்காரரின் ஜனாஸா தொழுகையை நடாத்துவதற்கும் நபியவர்கள் பின்வாங்கியுள்ளார்கள்.

கடன் பெற்றவர் கடனைச் செலுத்த முடியாதவாறு நெருக்கடி நிலையில் இருப்பின் கடன் கொடுத்தவர் அவருக்கு அவகாசம் அளிப்பது வரவேற்கத்தக்க ஒரு நற்கருமமாகும். கடனை தர்மம் செய்துவிடுவது அதனை விட மேலானதாகும்.

"அன்றி கடன் வாங்கியவன் கஷ்டத்தில் இருந்தால் (அவனுக்கு) வசதி ஏற்படும் வரையில் எதிர்பார்த்து இருங்கள். மேலும் (இதில் உள்ள நன்மை) நீங்கள் அறிந்தவர்களாக இருந்தால் அதை அவருக்கே நீங்கள் தானம் செய்து விடுவது உங்களுக்கு மிகவும் நன்மை பயக்கும்." (2:280) என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

- **வாரிசுரிமை**

பொருளாதார ரீதியிலான நடவடிக்கைகளில் வாரிசுரிமை தொடர்பான விடயம் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. வாரிசுரிமை என்பது ஒரு மனிதன் இறந்த பின்னர் அவனது சொத்துக்கள் யார் யாரைச் சென்றடைய வேண்டும்? என்னென்ன அளவுகளில் கொடுக்கப்பட வேண்டும்? என்பதை விளக்குகின்ற விடயமாகும்.

உலகில் பிறக்கின்ற மனிதர்கள் ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் தனக்கும் தனது பொறுப்பில் உள்ளவர்களுக்கும் தேவையான பொருட்களைத் தேடிப் பெறுவ துண்டு. தான் தேடியவற்றில் ஒரு சிறு தொகையையோ அல்லது பெரும் தொகையையோ தமது சந்ததியினருக்கு பெரும்பாலும் விட்டுச் செல்வதுண்டு. இச்சொத்துக்களைத் தனது குடும்பமும் இனபந்துக்களும் நியாயமான முறையில் பகிர்ந்து அனுபவிக்க வேண்டும் என்பது அவர்களின் விருப்பமாக இருக்கும். ஆனால் நடைமுறை உலகில் இவ்வாறான அனந்தரச் சொத்துக்கள் நியாயமாகப் பகிரப்படாமல் அவற்றை ஒரு சிலர் அபகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலை ஏற்படாமல் சட்டத்தினால் அவர்களைக் கட்டுப்படுத்தி அவற்றை நியாயமான முறையில் பகிர்ந்தளிப்பதற்கு வழிவகைகள் செய்வது அவசியமாக உள்ளது.

ஆதிகாலம் தொட்டு இதுவரை ஒவ்வொரு சமூகமும் இறந்தவர்கள் விட்டுச் செல்லும் சொத்துக்கள் ஏதோவொரு வகையில் பகிரப்பட்டு வந்துள்ளதைக் காணலாம். உரோமர், கிரேக்கர், ஜாஹிலிய்யாக் காலத்தில் வாழ்ந்தோர், இந்துக்கள், முஸ்லிம்கள் என்போர் இது தொடர்பாக பல்வேறு வகையிலான சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்து வந்துள்ளனர்.

யூதர்களின் வாரிசுரிமைச் சட்டத்தில் மரணித்த ஒருவருக்கு ஆண் குழந்தை இருக்கும் பட்சத்தில் பெண் குழந்தைகளுக்கோ, மனைவிக்கோ வாரிசுச் சொத்தில் எத்தகைய பங்கும் இல்லை எனப் பதியப்பட்டுள்ளது. இதேபோன்று குடும்பத்தில் மூத்தவனுக்கு இளைய சகோதரனின் இரு மடங்கு கொடுக்கப்பட வேண்டும் எனப் பதியப்பட்டுள்ளது. ஆண் மகன் இல்லாதவிடத்து மகளின் மகனுக்கு அச்சொத்துக்கள் வழங்கப்படும். ஆண் மக்களே இல்லாவிட்டால் மகளுக்கு அச்சொத்து வழங்கப்படும்.

ஜாஹிலிய்யாக் காலத்தில் ஆண்பிள்ளைக்கு மட்டுமே சொத்துரிமை வழங்கப்பட்டுள்ளது. அதிலும் வீரனாக இருப்பவனுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது. இந்துக்களின் கொள்கைப்படி பெண்களுக்கு சொத்துரிமை கிடையாது.

இவ்வாறு வரலாற்று ரீதியாக நோக்கும்போது சொத்துரிமை வழங்குவதிலும் பாகுபாடு காட்டப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. ஆண், பெண், மூத்தவன், இளையவன், வீரன்-கோழை என்ற பாகுபாடு பின்பற்றப்பட்டுள்ளதை கண்டுகொள்ள முடிகின்றது. குரோதத்தையும் வேற்றுமைகளையுமே இது தோற்றுவிக்கின்றது. இது மட்டுமன்றி சொத்துக் குவிப்பதற்கும் இது வழிவகுக்கின்றது. ஆகவே வரலாற்று ரீதியாக நோக்கும் போது இஸ்லாம் தவிர்ந்த வாரிசுரிமை தொடர்பான ஏனைய கொள்கைகள் பிரச்சினை களையே தோற்றுவித்துள்ளன என்பது இதன் மூலம் உறுதியாகின்றது.

இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டம் மேற்குறிப்பிடப்பட்ட சட்டங்களைப் போன்று குறுகிய நோக்கங்களைக் கொண்டதாக அமையவில்லை. கீழ்வரும் குர்ஆன் வசனம் அருளப்பட்டது முதல் பெண்களும், சிறுவர்களும் குடும்பத்தில் இருக்கின்ற உறுப்பினர்கள் அனைவரும் தத்தமது நிலமைகளுக்கு ஏற்ப சொத்துக்களில் பங்குபெறும் வாய்ப்புக் கிடைக்கின்றது. “பெற்றாரோ நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற சொத்தில் பெண்களுக்கும் பாகமுண்டு. (அதிலிருந்து சொத்து) குறைவாக இருந்தாலும் சரி அதிகமாக இருந்தாலும் சரியே. இது அல்லாஹ்வினால் விதிக்கப்பட்ட பாகமாகும்.” (4:7)

வாரிசுரிமைச் சட்டம் தொடர்பாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் பங்கு உண்டு என மேற்படி குர்ஆன் வசனம் குறிப்பிடுகின்றது. ஆண்கள் பெண்களை விட பொறுப்புக்களை ஏற்கும் விடயத்தில் ஒருபடி உயர்ந்தவர்கள் எனும் அடிப்படையில் பெண்கள் பெறும் பங்கை விட ஆண்களுக்கு அதிக பங்குகள் இருக்கின்றன என்பதை கீழ்வரும் வசனம் விளக்குகின்றது.

“உங்கள் பிள்ளைகளில் ஓர் ஆணுக்கு இரண்டு பெண்களுக்குக் கிடைக்கும் பங்கு போன்றது கிடைக்கும் என்று அல்லாஹ் உங்களுக்கு உபதேசிக்கின்றான். பெண்கள் மட்டும் இருந்து அவர்கள் தொகையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டிருந்தால் அவர்களுக்கு இறந்துபோனவர் விட்டுச் சென்றதில் 2/3 பாகம் கிடைக்கும். ஒரு பெண்ணாக இருந்தால் அவரின் பங்கு சொத்தில் பாதியாகும்.” (4:11)

முன்னைய காலங்களிலும், நவீன காலங்களிலும் ஒருவரின் வளர்ப்பு மகன் அவரது சொந்த மகனாகக் கருதப்பட்டு வாரிசுரிமைச் சொத்திலும் பங்கு பெறும் நிலை பின்பற்றப்பட்டு வருகின்றது. வளர்ப்பு மகன் சொந்த மகன் அல்ல என்பதை பின்வரும் வசனம் எடுத்துக் கூறுகின்றது.

“(அவ்வாறே!) அல்லாஹ் சுவீகாரப் பிள்ளைகளை உங்களுடைய புதல்வர்களாக ஆக்கவில்லை. வளர்ப்பு மகன் சொந்த மகனாவான் என்று கூறுவது போன்று இவை யாவும் உங்களுடைய வாய்களால் சொல்லும் வெறும் வார்த்தைகளேயாகும். அல்லாஹ் உண்மையையே கூறியிருக்கிறான். இன்னும், அவன் நேர்வழியைக் காட்டுகிறான்.”

நபி (ஸல்) அவர்கள் வாரிசுரிமைச் சட்டத்தின் முக்கியத்துவம் பற்றிப் பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார்கள். இதற்கு ஆதாரமாக பின்வரும் ஹதீஸ் ஒன்றைக் குறிப்பிடலாம்.

“நீங்கள் வாரிசுரிமைச் சட்டத்தைக் கற்று அவற்றை பிறருக்குக் கற்பிப்பீர்களாக! ஏனெனில், அது அறிவின் ஒரு பாதியாகும். மேலும் இக்கலை மறக்கக் கூடியதாகும். இதுவே எனது சமூகத்தில் இருந்து அகற்றப்படும் முதல் அம்சமாகும். (இப்னுமாஜா).

- **வாரிசுரிமையோடு தொடர்புடைய சட்டதிட்டங்கள்**

ஒருவர் தனது மரணத்திற்குப் பின் விட்டுச் செல்கின்ற சொத்துக்கள் வாரிசுச் சொத்துக்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. இச்சொத்துக்கள் வாரிசுதாரர்களிடையே பகிரப்பட முன்னர் அவற்றிலிருந்து நிறைவேற்ற வேண்டிய சில கடமைகள் உண்டு. வாரிசுச் சட்டங்களை அறிய முன்னர் பின்வரும் கடமைகள் பற்றி அறிந்துகொள்வது அவசியமாகும்.

**1 ஜனாஸாவுக்குரிய கடமைகளை நிறைவேற்றுதல்**

ஒரு முஸ்லிம் ஜனாஸாவிற்கு குளிப்பாட்டல், கபனிடல், தொழுவித்தல், அடக்கம் செய்தல் என்ற நான்கு கடமைகள் உண்டு, மரணித்த ஒருவரின் சொத்தில் நிறைவேற்ற வேண்டிய முதன்மையான கடமை இதுவாகும். ஜனாஸாவுக்குரிய கடமைகளில் குறைகள் ஏற்படாத வகையிலும் வாரிசுகளின் உரிமைகளை பாதிக்காத வகையிலும் இதனை நிறைவேற்ற வேண்டும்.

**2. மரணித்தவரின் கடன்களை நிவர்த்தி செய்தல்**

மரணித்தவரின் வாரிசுச் சொத்தில் நிறைவேற்ற வேண்டிய இரண்டாவது கடமை, அவர் நிவர்த்திக்க வேண்டிய கடன்களை வழங்குவதாகும். இரண்டு அடிப்படையிலான கடன்கள் மரணித்த ஒருவருக்கு இருக்கலாம்.

அ) அல்லாஹ்வுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் (உ-ம்: ஸகாத், நத்ர், கப்பாரா, பித்யா)

ஆ) மனிதர்களுக்கு கடன்கள் பட்டிருந்தால் நிவர்த்திக்க வேண்டியவை.

**3. வஸிய்யத்தை நிறைவேற்றல்**

வஸிய்யத் என்பது மரண சாசனம் அல்லது உயிலைக் குறிக்கும். ஜனாஸாவுக்குரிய செலவும், கடனும் போக சொத்தில் எஞ்சியுள்ளதில் இருந்து மரணித்தவரின் வஸிய்யத் நிறைவேற்றப்படும். ஒருவர் தான் இறந்த பின்னர் தனது சொத்தில் இன்னொருவருக்கு வழங்க வேண்டும் எனப் பணிப்பதற்குரிய அதிகூடிய எல்லை 1/3 ஆகும். இப்பாகத்துக்கு மேல் செய்யப்படும் வஸிய்யத் செல்லுபடியாகமாட்டாது. இது பற்றி "வாரிசுகளுக்கு பங்கு கிடைப்பது கடன், வஸிய்யத் ஆகியன கொடுக்கப்பட்டதற்குப் பின்னரே ஆகும்." (4:11)

**வாரிசு சொத்துக்கான நிபந்தனைகள்**

வாரிசுச் சொத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பின்வரும் நிபந்தனைகள் அல்லது ஷர்த்துகள் சிறந்த முறையில் பின்பற்றப்படுதல் வேண்டும். முஸ்லிமைப் பொறுத்தவரை இது விடயத்தில் தெளிவான ஞானம் இருத்தல் வேண்டும்.

1. ஒரு சொத்து வாரிசு சொத்தாக கணிக்கப்படுவதற்கு அதற்குரிய உரிமையாளன் மரணமடைந்திருத்தல் வேண்டும். ஒருவர் காணாமல் போய் நீண்டகாலம் திரும்பி வராதிருந்தால் நீதிபதியின் தீர்ப்புக்கமைய அவரது சொத்து வாரிசுச் சொத்தாகக் கருதப்படும்.
2. சொத்துக்குரியவர் மரணித்த வேளையில் வாரிசுக்காரன் உயிருடன் இருப்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ஒருவர் காணாமல் போய் அவர் திரும்பி வருவது உறுதிப்படுத்தப்படாமல் விட்டால் அவருக்குச் சொத்து ஒதுக்க வேண்டிய அவசியமில்லை. திருப்பி வர வாய்ப்பிருந்தால் சொத்தை ஏற்க வேண்டும். மரணம் உறுதிப்படுத்தப்பட்டால் ஏனைய வாரிசுதாரர்களுக்கு மத்தியில் சொத்தைப் பகிர்ந்து விடுதல் வேண்டும். கர்ப்பத்தில் இருக்கும் சிசுவிற்கும் வாரிசுப் பங்கு ஒதுக்குதல் வேண்டும் என்பது இமாம்களின் கருத்தாகும்.
3. வாரிசுச் சொத்தில் பங்குபெற தடையாகவுள்ள எந்தவொரு அம்சமும் இல்லாது இருத்தல் வேண்டும். வாரிசுப் பங்கைப் பெற தகுதியுள்ள ஒருவன் அதனைப் பெறுவதற்கு பின்வரும் விடயங்கள் தடையாக அமைந்து விடலாம்.

    அ) வாரிசாக இருப்பவர் சொத்துக்குரியவரைக் கொலை செய்தல். "கொலை செய்தவர் வாரிசாக மாட்டார்."

    ஆ) மதவேறுபாடு - ஒரு முஸ்லிம் காபிரின் வாரிசாகவும் இருக்க முடியாது. அதேபோன்று ஒரு காபிர் முஸ்லிமின் வாரிசாகவும் இருக்க முடியாது. "முஸ்லிம் காபிரின் வாரிசல்ல."

    இ) அடிமையாக இருத்தல்.

- **வாரிசு சொத்தில் பங்கு கிடைப்பதற்கான காரணங்கள்**

1. இன பந்தத் தொடர்பு: சொத்தை விட்டுச் செல்பவருக்கும் வாரிசுக்கும் இடையிலான குடும்ப, இரத்த உறவு. (அல் புரூ∴, அல் உஸூல், அல்-ஹவாஷி)
2. திருமணத் தொடர்பு
3. அடிமை எஜமான் தொடர்பு

- **வாரிசுகளின் விபரமும் அவர்களின் பிரிவுகளும்**

மரணித்த ஒருவரின் சொத்துக்களில் உள்ள கடமைகள் நிறைவேற்றப்பட்டதன் பின் மீதமுள்ள சொத்துக்கள் அதனைப் பெற தகுதியுடையவர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்படும். வாரிசு சொத்து பகிரப்படும்போது அனைத்து வாரிசு பெறுபவர்களும் மரணித்தவருமே தொடர்புபடுத்தப்படுவார்கள். வாரிசுகள் மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளார்கள்.

**1. அஸ்ஹாபுல் புறூல்**

குறித்த ஒரு பங்குக்கு உரித்துடையவர்கள் என ஷரீஅத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களே இவர்களாவர். அதாவது இப்பிரிவில் பங்கு பெறுபவர்கள் பர்ள் அடிப்படையில் பங்கு பெறுபவர்களாகக் கொள்ளப்படுகின்றனர். மரணித்தவரின் கணவன், மனைவி, தந்தை, தாய், பாட்டன், பாட்டி, மகள், மகனின் மகள், உடன் பிறந்த சகோதரி, தந்தை வழிச் சகோதரி, தாய் வழிச் சகோதரி, தாய் வழிச் சகோதரன் இவர்கள் இப்பிரிவில் அடங்குவார்கள். மேற்குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு அல்குர்ஆன் அல்லது ஸுன்னா மூலம் நிர்ணயிக்கப்பட்ட பாகங்கள் உண்டு.

**2. அஸபாக்கள்**

முதல் பிரிவினர் பங்குகள் பெற்றுக் கொண்டது போக மீதமுள்ளவற்றைப் பெற தகுதியானவர்கள் இவர்களாவர். அஸபாக்கள் என அழைக்கப்படுகின்ற இவர்கள் மூன்று பிரிவினரில் அடங்குவர்.

அ) நேரடி அஸபாக்கள்: மகன்மார், மகனுடைய மகன், தந்தை, பாட்டன், சகோதரர்கள், சகோதரர்களுடைய ஆண் மக்கள், சிறிய பெரிய தந்தைகள், அவர்களுடைய ஆண் மக்கள்.

ஆ) பிறர் மூலம் அஸபாக்களாவோர்: மகனுடன் மகள், மகனுடைய மகனுடன் மகனுடைய மகள், இரு வழி சகோதரர்களுடன் இரு வழி சகோதரி, தந்தை வழி சகோதரர்களுடன் தந்தை வழி சகோதரி.

இ) பிறருடன் சேர்ந்து அஸபாக்களாவோர்: மரணித்தவரின் மகளுடன் அல்லது மரணித்தவரின் மகனுடைய மக்களுடன் மரணித்தவரின் சகோதரிகள் இருக்கும்போது அச்சகோதரிகள் அவர்களின் அஸபாக்களாக மாறி பங்கு பெறுவர்.

**3. தவில் அர்ஹாம் / அல் அர்ஹாம்**

பொதுவாக தூரத்து உறவினர்களையே இது குறிக்கின்றது. பெரும்பாலும் மரணித்தவருக்கும் தங்களுக்கும் இடையிலான உறவை ஒரு பெண் வழியாக பெற்றுக்கொள்வோரே இப்பிரிவில் அடங்குகின்றனர்.

உதாரணம்: மகளின் பிள்ளைகள், சகோதரிகளின் குழந்தைகள், சொத்துப் பிரிப்பின் போது முதலில் 'அஸ்ஹாபுல் புறூலும்' அதில் மீதமுள்ளவற்றில் 'அஸபாக்களும்' அதன் பின்னரே 'தவில் அர்ஹாமும்' பங்குகளைப் பெறுவர்.

**பங்குகளின் விபரம்**

1. 1/4 பாகம் பெறுவோர்: (2 பேர்) கணவன், மனைவி
2. 1/2 பாகம் பெறுவோர்: (5 பேர்) கணவன், மகள், மகனுடைய மகள், உடன் பிறந்த சகோதரி, தந்தை வழிச் சகோதரி
3. 1/8 பாகம் பெறுவோர்: மனைவி
4. 1/3 பாகம் பெறுவோர்: (2 பேர்) தாய், தாய் வழிச் சகோதர, சகோதரிகள்
5. 1/6 பாகம் பெறுவோர்: (7 பேர்) தந்தை, தாய், பாட்டன், மகளின் மகள், தந்தை வழி சகோதரி, பாட்டி, தாய் வழிச் சகோதரன் அல்லது சகோதரி ஒருவர்.
6. 2/3 பாகம் பெறுவோர்: மகள்மார், மகனின் மகள்மார், இருவழிச் சகோதரிகள்.

- **அல் ஹஜ்ப் - தடைசெய்தல்**

வாரிசுகள் தமக்குரிய பங்கைக் குறைவாகப் பெறும் சந்தர்ப்பங்களும், முற்றாக இழக்கும் சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு. இதுவே ஹஜ்ப் எனப்படுகிறது. அதாவது வாரிசுகளாகச் சிலர் இருப்பதனால் வேறு சிலருக்கு சொத்தில் பங்கு இல்லாமலோ அல்லது குறைந்தோ வருவதாகும். இவ்வாறு பங்கு பெற தடையாக வருபவர் 'அல் ஹாஜிப்' என்றும் தடைசெய்யப்படுபவர் 'மஹ்ஜூப்' என்றும் அழைக்கப்படுவர். இது இரு வகைப்படும்.

1. ஹஜ்புன் நுக்ஸான்: இது சிலர் இருப்பதனால் வேறு சிலருக்கு கிடைக்க இருந்த பங்கு முற்றாக கிடைக்காமல் போவதைக் குறிக்கும். உதாரணம்: கணவன், மனைவி, தாய்
2. ஹஜ்புல் ஹிர்மான்: சிலர் இருப்பதனால் வேறு சிலருக்கு கிடைக்க இருந்த பங்கு முற்றாகக் கிடைக்காமல் போவதைக் குறிக்கும்.

| **மஹ்ஜூப்** | **ஹாஜிப்** |
|---|---|
| 1. பாட்டன் | தந்தை நெருங்கிய பாட்டன் |
| 2. பாட்டி | தாய், நெருங்கிய பாட்டி |
| 3. மகனின் மகன் | மகன், நெருங்கிய மகனின் மகன் |
| 4. உடன் பிறந்த சகோதரன் | மகன், மகனின் மகன், தந்தை, பாட்டன் |
| 5. உடன் பிறந்த சகோதரி | தந்தை, மகன், மகனின் மகன். |

- **வஸிய்யத் - மரண சாசனம் / உயில்**

ஒருவர் விட்டுச் செல்கின்ற சொத்துக்களோடு தொடர்புடைய மற்றுமோர் அம்சம் வஸிய்யத் ஆகும். வஸிய்யத் என்பது ஒருவர் தான் மரணித்த பின் தனது சொத்தில் தான் குறிப்பிடுவோருக்கு வழங்குமாறு பணிப்பதை குறிக்கும். இவ்வாறு ஒருவர் வஸிய்யத் செய்திருந்தால் அவர் இறந்ததன் பின் அதனை நிறைவேற்றி விடுவது உயிருள்ளவர்கள் மீது கடமையாகும். வாரிசுச் சொத்துக்கள் பகிரப்பட முன்னரே வஸிய்யத் நிறை வேற்றப்படல் வேண்டும். இதனை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.

(வாரிசுகளுக்குப் பங்கு கிடைப்பது) கடன், வஸிய்யத் ஆகியன கொடுக்கப்பட்டதற்குப் பின்னரேயாகும்." (4:11)

ஒருவர் தனது சொத்தில் வஸிய்யத் செய்வதாக இருந்தாலும் அதற்கும் சட்ட திட்டங்கள் பேணப்படல் வேண்டும். தனது சொத்தில் 1/3 பாகத்திற்கு மேல் வஸிய்யத் செய்வதற்கு எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள். இதனால் அவரது சொத்துக்குரியவர்கள் அனந்தரக்காரர்கள் பிரச்சினைப்பட வேண்டியேற்படும். அதேநேரத்தில் அனந்தரக்காரர் களுக்கு வஸிய்யத் செய்யவும் முடியாது. வஸிய்யத் செய்பவர் அதனைச் சாட்சிகளோடு செய்வதே சிறந்தது. அதனை எழுத்து மூலம் வைப்பதும் சிறந்ததாகும்.

- **உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி I** இஸ்லாமியப் பொருளாதார முறையின் சிறப்பம்சங்களையும் பொருளீட்டலுக்கு இஸ்லாம் கொடுத்துள்ள முக்கியத்துவத்தையும் விளக்குங்கள்.

**படி II** மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து பின்வரும் தலைப்புகளில் ஒவ்வொன்றை அக்குழுக்களுக்கு வழங்கி அதில் தகவல் திரட்டுமாறு வழிப்படுத்துங்கள்.

i) இஸ்லாம் கைத்தொழில், சேவைத் தொழிலுக்கு கொடுத்துள்ள முக்கியத்து வங்களும் ஒழுங்குகளும்.

ii) சமூக வாழ்வுடன் தொடர்பாக கொடுக்கல் வாங்கல்களில் முழாரபா, முராபஹா, இஜாரா, முஸாரஆ பற்றிய விளக்கம்.

iii) இஸ்லாம் தடுத்துள்ள பொருளீட்டல் முறைகள்

iv) இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் முக்கியத்துவங்களும், சட்டவிதிகளும்

**படி III** ஒவ்வொரு குழு சார்பாகவும் ஒருவரை அழைத்து தமது குழுவினர் திரட்டிய தகவல்களை வைத்து ஒரு தொகுப்புரை வழங்குமாறு அறிவுறுத்துங்கள்.

**படி IV** முன்வைக்கப்பட்ட தொகுப்புரைகளைச் சுருக்கமாக எழுதிக்கொள்ளுமாறு எல்லா மாணவர்களுக்கும் அறிவுறுத்துங்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை:**


- யூசுப் அல் கர்ளாவி (1986), *இஸ்லாத்தில் ஹலாலும் ஹராமும்,* திஹாரிய, ரேஷ்மா பதிப்பகம்.
- கஸ்ஸாலி முஹம்மத் (2004), *இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள்,* சென்னை, இலக்கியச் சோலை பதிப்பகம்.
- கைருல் பஷர் எம்.ஐ. (2010), *மானிட நம்பிக்கைகள்,* கொழும்பு 12, அக்ரா பதிப்பகம்.
- செய்யித் அபுல் அ.்.லா மௌதூதி, (1983), *பொருளாதாரப் பிரச்சினை,* கொழும்பு 09, இலங்கை ஜமாஅதே இஸ்லாமி வெளியீடு,
- அகார் முஹம்மத் ஏ.ஸீ. (1996), *சன்மார்க்க சட்ட விளக்கங்கள்,* பேருவலை, அல்கலம் பதிப்பகம்.
- முஹம்மத் முஜீப் அப்துல் அழீம், (2007), *முதலீட்டு அடிப்படையிலான வியாபாரம்,* பேருவல, நளீமிய்யா இஸ்லாமிய்யா வெளியீட்டுப் பணியகம்.
- அகார் முஹம்மத் ஏ.ஸீ. (1992), *இஸ்லாத்தில் வாரிசுரிமைச் சட்டம்,* மஹரகம, தேசிய கல்வி நிறுவகம்.
- அன்சார் எம்.ஐ. (ஹி.1426), *சொத்துப் பங்கீடு,* அக்கரைப்பற்று, இஸ்லாமிய அழைப்பு வழிகாட்டல் அமையம்.
- ஆதம் முஹ்யித்தீன் (2002), *ஷாபிஈ பிக்ஹின் சட்டக் களஞ்சியம்,* செய்துங்க நல்லூர், தாருல் புஷ்ரா.
- இஸ்மாயில் முஹம்மத் எஸ்.எச்.எம். (1972), *முஸ்லிம் வாரிசுரிமைச் சட்டம்,* சென்னை, அனஸ் புக் சென்டர்.
- அன்வருத்தீன் ஏ. (1987), *இஸ்லாம் இயம்பும் பாகப் பிரிவினை,* தஞ்சாவூர், காஜியார் புக் டிப்போ.

**தேர்ச்சி 9.0 : சமூக வாழ்வுடன் தொடர்பான இஸ்லாமிய சட்ட திட்டங்களையும் போதனைகளையும் அறிந்து அதற்கேற்ப தமது வாழ்வை வடிவமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 9.3:** தவறாகப் புரியப்பட்ட எண்ணக்கருக்களைச் சரியாக விளங்கி மற்றவர்களுக்குத் தெளிவுபடுத்துவார்.

**காலம்** : 40 பாடவேளைகள்

**கற்றல் பேறு** :

- பலதாரமணம், பெண்கள் நிலை, குற்றமும் தண்டனையும், ஜிஹாத் பற்றிய கருத்துகள் தவறாக முன்வைக்கப்படுவதற்கான காரணங்களை இனங்காண்பார்.
- இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் இவை சரியானவை என்பதை வரலாற்றுடனும், நடைமுறை வாழ்வுடனும் ஒப்பிட்டு ஆதாரங்களுடன் நிரூபிப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- **பலதாரமணம்**
  - இஸ்லாம் மனித இயல்புக்குப் பொருத்தமான வாழ்க்கை முறையாக இருப்பதால் அதன் போதனைகளைச் செவியேற்போர், வாசிப்போர், விளங்கிக் கொள்வோர் அதன்பால் ஈர்க்கப்படுவர். இது வரலாற்றில் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. இதனைக் கண்டு பொறாமைப்படுகின்ற அல்லது அதிர்ச்சியடைகின்ற மக்கள் இஸ்லாத்தின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் தவறாக முன்வைத்தும், விமர்சித்தும் பிரசாரம் செய்து வருவதைக் காண்கிறோம்.
  - இவ்வாறு விமர்சனத்துக்குட்பட்ட விடயங்களுள் பலதாரமண முறையும் ஒன்றாகும். 'ஓர் ஆண் சமகாலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைச் சட்டபூர்வமான மனைவியராக வைத்துக் கொள்வதையே பலதாரமண முறை என வழங்குகிறோம். இயல்பினாலும் தவிர்க்க முடியாத காரணிகளாலும் தோன்றுகின்ற பல்வேறு சூழ்நிலைகளில் அது தடுக்க முடியாத ஒன்றாக மாறிவிடுகிறது.
  - "பெண்களில் உங்களுக்கு விருப்பமானவர்களை இரண்டிரண்டாகவோ, மும்மூன்றாகவோ, நான்கு நான்காகவோ நீங்கள் திருமணம் செய்துகொள்ளுங்கள். அவர்களிடையே நீங்கள் நீதியாக நடக்க முடியாதெனப் பயந்தால் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளுங்கள்" (4:3) என்ற அல்குர்ஆன் வசனம்தான் பலதார மணத்துக்கான அனுமதியாகக் கொள்ளப்படுகின்றது.
  - இவ்வாறான ஒரு மணமுறை இஸ்லாத்தினால்தான் முன்வைக்கப்பட்டதெனவும், அது பெண்களுக்கெதிரான அல்லது பால்நிலை சமத்துவத்துக்கு முரணான அம்சம் எனவும் விமர்சிக்கப்படுகின்றது. பலதார மணத்தை இஸ்லாம் தான் அறிமுகப்படுத்தியது என்ற கருத்து பிழையானது.
  - நபி (ஸல்) அவர்களுக்கு (கி.பி. 7ஆம் நூற்றாண்டு) முன்னர் தோன்றிய தீர்க்கதரிசிகள் -நபிமார்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரைக் கொண்டிருந்தார்கள்- என்பதை அல்குர்ஆனின் கருத்துக்கள் நிரூபிக்கின்றன. தவிர, பல மன்னர்களும், பிரபுக்களும், செல்வந்தர்களும், பிரமுகர்களும் ஒரே நேரத்தில் உத்தியோகபூர்வமாகவும், உத்தியோகப் பற்றற்ற நிலையிலும் பலதாரங்களை வைத்திருந்தார்கள் என்பதை கதைகள், இலக்கியங்கள் மட்டுமன்றி வரலாறுகளும் குறித்துக் காட்டுகின்றன.

- “நாகரிகமடைந்த சமுதாயங்கள் பலதார மணத்தோடு ஆரம்பித்திருக்க வேண்டும். உண்மையில் அந்த முறை எல்லா இடங்களிலும் எப்போதுமே இருந்து வந்திருக்கின்றது. அது மிகச் சொற்ப விதிவிலக்குகளைக் கொண்ட ஒரு சட்டமாகும்” என ‘விவாகத்தின் பரிணாமம்’ எனும் நூலில் எம். லெட்லி டானோ என்பவர் இதனை விளக்கிக் காட்டுகிறார்.
- இஸ்லாம் அறிமுகப்படுத்தப்பட்ட ஜாஹிலிய்யாக் காலத்தில் அறபு நாட்டில் கூட பலதாரமணம் வழக்கிலிருந்தது. ‘நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டபோது எனக்கு எட்டு மனைவியர் இருந்தனர்’ என்று உமைரா (ரழி) அவர்களும், தனக்குப் பத்து மனைவியர் இருந்தனரென்று கைலான் (ரழி) அவர்களும் குறிப்பிடுகிறார்கள். இவ்வாறு வேறு பல ஸஹாபாக்களும், ஸஹாபாக்களல்லாதோரும் பல மனைவியரை வைத்திருந்த னர். இவை நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தை அறிமுகப்படுத்து முன்பே உலகில் பலதாரமணம் நடைமுறையில் இருந்தது என்பதை நிரூபிக்கின்றன.
- இஸ்லாம் பலதாரமணத்தை ஊக்குவிக்கவுமில்லை; தடைசெய்யவுமில்லை. ஏனெனில், சமூக வாழ்வில் அது சிலபோது தேவைப்படுகிறது; சிலபோது தேவையற்றதாக அமைகிறது. தனிநபர்களைப் பொறுத்தவரையிலும் சிலருக்குத் தேவைப்படுகிறது; சிலருக்கு தேவையற்றதாக அமைகிறது. ஆதலால்தான் இஸ்லாம் பலதாரமணத்தை ஒரு விதியாக அமைக்காமல் விதிவிலக்காக அமைத்துள்ளது எனலாம்.
- ஹிஜ்ரி இரண்டாமாண்டில் நிகழ்ந்த உஹதுப் போரில் சுமார் எழுபது ஸஹாபாக்கள் ஷஹீதானார்கள். இஸ்லாம் ஒரு சமூக அமைப்பை உருவாக்கி, அது குழந்தைப் பருவத்திலிருந்த ஒரு காலகட்டத்தில் இவ்வாறான இழப்பு பயங்கரமானதாகவே தெரிந்தது. விதவையரும் அனாதையரும் திகைத்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் இஸ்லாம் பலதாரமணத்தைச் சட்டபூர்வமாக அனுமதித்தது. அவர்களுக்கு வாழ்வளிக்கும் வகையில் நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களைத் தூண்டினார்கள். தாமும் விதவையரை மறுமணம் செய்தார்கள். இந்நிகழ்வு அசாதாரண சூழ்நிலைகளில்தான் பலதாரமணம் இடம்பெறுகிறது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.
- அசாதாரண சூழ்நிலைகளில் எண்ணிக்கையை நான்காக வரையறுத்தும் சமநிலை பேண முடியாத சந்தர்ப்பங்களில் ஒன்றாகக் கட்டுப்படுத்தியும் அமைத்துள்ளமை, இஸ்லாம் போதிக்கும் பலதாரமணம் சமூக தேவையையும் நியாயத்தையும் அடிப்படை யாகக் கொண்டது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.
- மறுபக்கமாக, பலதாரமணத்துக்கூடாக குடும்ப, சமூக தீமைகள் இடம்பெறக் கூடாது என்பதற்காக சில வரையறைகளையும் ஏற்படுத்தியுள்ளது. பலதாரமணத்தை
  - அசாதாரண சூழ்நிலையில் அனுமதித்தல்
  - சில நிபந்தனைகளின் கீழ் அனுமதித்தல்
  - மனைவியரை நான்காகக் கட்டுப்படுத்தல்
  - மனைவியரிடையே சமநிலை பேணல்

  என்றவாறு நிபந்தனையிட்டுள்ளது.
- இந்த நான்கு வரையறைகளையும் ஆழமாக அவதானிக்கும்போது, பலதாரமணம் பற்றிய இஸ்லாத்தின் நோக்கம் தெளிவாக விளங்கும். எனவேதான், அனுமதி வழங்கிய அதே சந்தர்ப்பத்தில் ‘அவர்களிடையே நீங்கள் நீதமாக நடக்க முடியாதெனப் பயந்தால் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளுங்கள் (4:3) என்றும் ‘நீங்கள் எவ்வளவுதான் விரும்பினாலும் மனைவியரிடையே சமநிலையை வழங்குவது சாத்தியமாகாது. அதனால் ஒருவர் பக்கம் முற்றிலும் சாய்ந்து மற்றவரை அந்தரத்தில் தொங்கவிடப்பட்டவரைப் போன்று ஆக்கிவிடாதீர்கள் (4:129) என்றும் அறிவுறுத்துகின்றது.

- ‘வாலிபர்களே! உங்களில் சக்திவாய்ந்தவர்கள் திருமணம் செய்துகொள்ளுங்கள் (புகாரி) என்ற ஹதீஸில் குறிப்பிடுகின்ற சக்தி என்பது உடற்பலம், பொருளாதார பலம் என்பவற்றைக் குறிப்பதாக சட்ட அறிஞர்கள் கூறுவர். ஒரு மனைவியை மணப்பதற்கு இவை அவசியமெனின், ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணமுடிப்பதற்கு மேலதிகமாக பலங்கள் தேவை என்பது தெளிவாகின்றது. அவற்றுள் மிக முக்கியமானது பாரபட்சம் காட்டாமையாகும். இதனை நன்கு பக்குவப்பட்டவர்களாலன்றி கடைப்பிடிப்பது சிரமமானது. விருப்பு வெறுப்புக்களுக்கு இடம் கொடுக்காமல் மனைவியரின் தேவை, பாதுகாப்பு,உடல் உள நலன்கள் போன்றவற்றைச் சமநிலையில் வழங்குவது இலகுவானதல்ல. அதனால்தான் பலதாரமணம் சமூகத்தின் பொதுவிதியாக அமையாமல் சிலருக்கு அல்லது சில காலகட்டங்களுக்கான சிறப்பு விதியாக அமைந்துள்ளது எனலாம்.
- ஏற்கனவே கூறப்பட்டது போன்று போர், அனர்த்தம் போன்ற அசாதாரண சூழ்நிலையில் விதிவிலக்காக அனுமதிக்கப்பட்ட ஒன்றை பொதுவிதியாகக் காட்டி விமர்சிப்பது பொருத்தமானதன்று. இஸ்லாத்தின் மீது காழ்ப்புணர்வு கொண்டவர்களால் தவறான முறையில் பிரசாரம் செய்யப்பட்ட கருத்துக்களே இதனைப் பூதாகாரமாக வெளிக்காட்டின.
- முஸ்லிம்களுக்குப் பாலுணர்வு அதிகமென்றும், ஆடைகளை அடிக்கடி மாற்றுவது போல் மனைவியரை வைத்துள்ளனர் என்றும் தவறான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. முஸ்லிம்களும் மனிதர்களே. எல்லா மனிதர்களுக்கும் ஒரே வகையான ஹோர்மோன்கள்தான் சுரக்கின்றன. முஸ்லிம்கள் ஏனையவர்களிடமிருந்து வேறுபடுவது கொள்கையில் மட்டுமே. பௌதிக நிலையில் எந்த வேறுபாடுமில்லை. இஸ்லாம் மனிதனின் இயல்பான பாலுணர்வைக் கட்டுப்பாட்டுடன் தீர்த்துக்கொள்ள திருமணத்தை ஒழுங்குபடுத்தியுள்ளது. இவ்வொழுங்கு முறைகள் பேணப்படாத சமூகங்களில் பாலியல் வன்முறைகளும், ‘‘சின்ன வீட்டுச்’’ சமாச்சாரங்களும் சட்டரீதியிலமையாத வைப்பாட்டிகளும் பாலியல் தொழிலாளர்களும் என பல தவறான மாற்றீடுகள் உருவாகியுள்ளன. இதனால் ஏற்படும் குடும்ப, சமூக தீமைகளிலிருந்து காப்பாற்றவே இஸ்லாம் திருமணத்தையும், பலதாரமணத்தையும் வழங்கியுள்ளது.
- இஸ்லாம் பலதாரமணத்துக்கு இடமளித்துள்ள அசாதாரண சூழ்நிலைகளை இரண்டாக வகுத்துக் கூறலாம்.

  1. சமூக அல்லது பொதுத் தேவை

  போர், அனர்த்தங்கள் போன்ற சூழ்நிலைகளால் ஆண்களை விட பெண்கள் தொகை அதிகரித்தல் இதில் முக்கியமானது. இந்தச் சூழ்நிலை உலக மகாயுத்த காலங்களில் பல நாடுகளில் ஏற்பட்டது. இலங்கையின் மூன்று தசாப்த கால போர்ச் சூழ்நிலையும் விதவையர், அநாதையர்களை அதிகரிக்கச் செய்துள்ளது. இந்நிலைமைகளில் அநாதை, விதவையரின் பொருளாதாரத் தேவைகளை சரி செய்வதற்கான நிவாரணங்கள் ஓரளவாவது கிடைக்கின்றன. ஆனால், அவர்களின் உடலியல், உளவியல் தேவைகளை நிறைவேற்றுகின்ற நிவாரணங்கள் கிடைக்கப் பெறுவதில்லை. இதனால்தான் குடும்ப, சமூக தீமைகள் விரைவாக நுழைந்து விடுகின்றன. ஒவ்வொரு பெண்ணும், தனக்கு அன்பு காட்டி தன்மீது அனுதாபங் கொண்டு புரிந்துணர்வுடன் நடந்துகொள்கின்ற, துன்பங்களைப் பகிர்ந்துகொள்ளும் உள்ளங் கொண்ட ஒரு ஆணைத் தேடுகின்றாள். மணமுடிப்பதற்கூடாக மட்டுமே இதனை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். இதற்கான ஒரு மாற்று வழியாகவே இஸ்லாம் விதவா விவாகத்தை -பலதார மணத்தை- அனுமதித்திருக்கின்றது. இது பெண்களுக்கான பாதுகாப்பாகும்.

2. தனிமனித அல்லது சிறப்புத் தேவை

அ) இயற்கையாகவே சில ஆண்கள் அதிக பாலூக்கமுடையவர்களாக இருப்பர். அவர்கள் ஒரு மனைவியின் மூலம் திருப்தியடையாதபோது வேறு பெண்களைத் தேடுகின்றனர். இது பாலியல் தொழிலை வளர்த்து விடுவதோடு பயங்கர நோய்களுக்கும் வழிவகுக்கின்றது. இதனால் ஆண்களும் பெண்களும் குடும்ப, சமூக தீமைகளுக்கு உட்படுகின்றனர். இதிலிருந்து பாதுகாப்புப் பெற பலதாரமணம் தேவைப்படுகின்றது.

ஆ) பெண்களின் மாதாந்த அசௌகரியப் பிரசவ காலங்கள் தாம்பத்திய உறவுக்கு தடையாக இருப்பதாலும் சிலர் பாலியல் தொழிலாளரை அணுகுகிறார்கள். இதனை இஸ்லாம் தடைசெய்வதால் மாற்றீடாக பலதாரமணத்தை அனுமதிக்கின்றது.

இ) சில மனைவியர் நிரந்தர நோயாளிகளாக மாறும்போது, அவர்களைக் கண்காணிப்ப தற்கும், கணவனது கடமைகளை நிறைவேற்றுவதற்கும் இயலாத நிலைக்கு உள்ளாகின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பெண்களைக் கூலிக்கமர்த்தும் போது தவறு நிகழும் வாய்ப்புக்கள் திறந்து விடப்படுகின்றன. குடும்ப சமூக தீமைகள் உருவாகின்றன. இவற்றிலிருந்து தப்புவதற்கு பலதாரமணம் மாற்றீடாக அமைகின்றது.

ஈ) சில தம்பதியினர் குழந்தைப் பேறின்றிக் கவலைப்படுவர். மனைவி கர்ப்பமாக மாட்டாள் எனக் கண்டறியப்படும்போது தனக்குப் பிள்ளைப் பாக்கியத்தைத் தேடிக்கொள்ள மற்றொரு மனைவியை ஏற்றுக்கொள்வது தவறல்ல. இது, குழந்தைப் பேற்றுக்கு வழியில்லாத பெண்ணை விவாக விலக்குச் செய்வதை விட, பிள்ளைகளைத் தத்தெடுப்பதை விட, பிள்ளைப் பாசத்தை மனதில் அடக்கி வைப்பதை விடச் சிறப்பானதாகும்.

உ) ஒருவர் அதிகமான சொத்துக்களுக்கு உரிமையாளராக இருக்கலாம். அந்தச் செல்வம் பலருக்கும் பிரிந்து செல்ல இது ஒரு வாய்ப்பாக உள்ளது. வாரிசுரிமை பெறுவதன் மூலம் மனைவிமாரும் பிள்ளைகளும் கிட்டிய உறவினர்களும் இதன் மூலம் அதிக நன்மை பெறுவர். குடும்ப சமூக நலனுக்கும் உபகாரமாக அமையும்.

- எவனேதான், 'பலதாரமணமுறை' ஏகதாரமண முறையை விட எவ்வளவோ சிறந்தது. அது தார்மீக ரீதியில் உயர்ந்ததாக இருப்பதால் ஏகதார முறையின் இடத்தைப் பெற்றுக்கொள்ளுமென ஹவலக் எலிஸ் (பாலியலின் உளநூற்கலை பக்.502) என்பார் குறிப்பிடுகின்றார்.
- ஆண் பெண் பாலாருக்கிடையே இயற்கையான உறவை உண்டுபண்ணும் பலதார முறைக்குத் திரும்புவது, விபசாரம், மேகநோய், கருச்சிதைவு, சட்டவிரோதமாக பிறக்கும் குழந்தைகளின் துயரங்கள், ஆண்-பெண் பாலாரின் சனத்தொகை வேறுபாட்டின் காரணமாக ஏற்படும் விவாகமாகாத பெண்களின் துரதிஷ்டம், சோரத்தனம், பொறாமை முதலான கேடுகளிலிருந்து காப்பதற்கு பொருத்தமானது என டாக்டர் லேபொன் என்பார் குறிப்பிடுகின்றார்.
- டாக்டர் அனிபொஸன்ட் அம்மையார் மேற்கத்திய உலகை மையப்படுத்திக் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார். மேனாட்டில் வெளிப் பார்வையில் ஏகதார முறையே இருந்து வருகின்றது. உண்மையில் அங்கிருப்பது பொறுப்பிலிருந்து விடுபட்ட பலதார முறையேயாகும். ஆணுக்கு அலுப்புத் தட்டியவுடன் வைப்பாட்டி கைவிடப்படுகிறாள். ஈற்றில் தெருவில் அலைய வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அவளது எதிர்காலம் பற்றி முதலாவது காதலனுக்கு எந்தப் பொறுப்புமில்லை. பலதாரமணம் நடைமுறை யிலிருக்கும் குடும்பமொன்றில் மனைவியாகவும் தாயாகவும் ஆதரிக்கப்பட்டு வரும் பெண்ணின் நிலையை விட இவளது நிலை பல நூறு மடங்கு மோசமானது.

- மேனாட்டு நகரத் தெருக்களில் இரவில் சுற்றித் திரியும் ஆயிரக்கணக்கான துர்ப்பாக்கியத்துக்கு உள்ளான பெண்களைப் பார்க்கும்போது, பலதாரமண முறைக்காக இஸ்லாத்தைக் குறைகூறும் அவர்களுக்கு நா இருக்க முடியாது. கற்பழிக்கப்பட்ட, சட்டவிரோதமான குழந்தையோடு தெருக்களில் கைவிடப்பட்டு ஆதரிப்பாரோ அடைக்கலம் கொடுப்பாரோ இன்றி போவோர் வருவோர் எல்லோருக்கும் இரையாகி தாய்மையை இழந்து எல்லோரினதும் நிந்தனைக்கு உட்பட்டு இழிவாவதை விட, பலதாரமணத்துக் குட்பட்டு ஒரே கணவனோடு வாழ்ந்து சட்டபூர்வமான குழந்தையைக் கையில் தாங்கிக் கொண்டு மரியாதையோடு வாழக் கிடைப்பது எவ்வளவோ மேலானது.
- இஸ்லாம் பலதாரமணத்தை கட்டாயப்படுத்தவில்லை என்பதையும் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மாத்திரம் அதனை அனுமதித்திருக்கின்றது என்பதையும் அவதானிக்கும் போது குற்றம் சுமத்துவோரின் நிலைப்பாடு பிழையானது என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

- **ஜிஹாத்**

  - பதவிளக்கம்: ஜுஹ்த், ஜஹத என்ற சொல்லிலிருந்தே ஜிஹாத் என்ற சொல் தோன்றியுள்ளது. முழுச் சக்தியையும் ஆற்றலையும் பிரயோகித்து உரிய இலக்கை அடைதல் எனும் கருத்திலும் ஓர் இலக்கை அடைவதற்காக தனது சக்தி, திறன் அனைத்தையும் பயன்படுத்தல் என்ற கருத்திலும் இச்சொல் பயன்படுத்தப்படுகின்றது.
  - ஜிஹாத் என்ற சொல்லுக்கும் ஹர்ப் என்ற சொல்லுக்கும் இடையிலான வேறுபாடு: பொதுவாக அறபியில் ஹர்ப், கிதால் எனும் சொற்கள் போராட்டம், யுத்தம், சண்டை எனும் கருத்துக்களைக் கொடுப்பதுண்டு. ஜிஹாத் என்ற சொல்லில் கைகலப்பு சண்டை என்ற கருத்து இருப்பினும் யுத்தம் அல்லது சண்டை ஜிஹாதின் ஒரு வழிமுறையேயன்றி அதுதான் முழுமையான வடிவம் என்பதாகாது.
  - சுயநலம் அல்லது குறுகிய உலகாயத நோக்கம் முதலானவற்றைக் கொண்ட போராட்டங்கள் 'ஹர்ப்' என்ற சொல்லினால் அடையாளப்படுத்தப்படுகின்றன. ஆனால், ஜிஹாத் என்ற பதம் அவ்வாறன்று. அது இஸ்லாத்தின் தனியான மொழி மரபுச் சொல்லாகும். அன்று வழக்கிலிருந்த யுத்தத்தைக் குறிக்கும் சொல்லான ஹர்ப் என்ற சொல்லுக்குப் பதிலான ஜிஹாத் என்ற சொல் பயன்படுத்தப்பட்டமை இரண்டுக்கும் இடையே வேறுபாடு இருக்கின்றது என்பதற்குச் சான்றுபகர்கின்றது.
  - குர்ஆனில் ஜிஹாத் என்ற சொல் 'பீ ஸபீலில்லாஹ்' என்பதையும் இணைத்தே அநேக இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான காரணம் எல்லாவித சுயநல நோக்கங் களிலிருந்தும் விடுபட்டு உளப்பூர்வமாக அல்லாஹ்வின் திருப்தியை மட்டும் இலக்காகக் கொண்டதாய் ஜிஹாத் அமைய வேண்டும் என்பதாகும்.

    "எவர்கள் ஈமான் கொண்டிருக்கின்றார்களோ அவர்கள் இறை வழியில் போராடுகின்றனர். எவர்கள் நிராகரிப்பாளர்களாக இருக்கின்றனரோ அவர்கள் தாகூத்தின் (ஷைத்தான்) வழியில் போராடுகின்றனர்." (4:76)

    "எவர் அல்லாஹ்வுடைய மாட்சிமையை மேலோங்கச் செய்வதற்காகப் போராடுகின்றாரோ அவரது போராட்டமே இறைவழியிலமைந்த போராட்டமாகும்" (புஹாரி)
  - "அத்துமீறல்களிலிருந்து மக்களைப் பாதுகாத்து சமூக நீதியை உறுதி செய்யும் வகையில் எவருக்கும் அநியாயம் செய்யாமலும், யுத்த மரபுகளை மீறாமலும் அல்லாஹ்வின் கலிமாவை மேலோங்கச் செய்வதற்காக தூய எண்ணத்துடன் அல்லாஹ் காட்டிய வழிநின்று ஒரு முஸ்லிம் மேற்கொள்ளும் சகல முயற்சிகளையும் ஜிஹாத் என்பது குறிக்கின்றது.

- ஜிஹாத், இஸ்லாத்தின் எதிரிகளால் முஸ்லிமல்லாதவர்களிடையே மட்டுமன்றி முஸ்லிம்களிடையேயும் தப்பெண்ணத்தை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமையும் விதத்தில் விமர்சிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஜிஹாதின் இலட்சியத்தையும், அதனை அடைவதற்காக இஸ்லாம் வகுத்துள்ள ஒழுங்குகளையும் அவதானிப்பவர்கள் ஜிஹாதுக்கும் ஏனைய போராட்டங்களுக்குமிடையே வேறுபாடுகள் இருப்பதையும், இஸ்லாத்தின் வழியில் அமைகின்ற ஜிஹாத் நியாயமும் நீதியும் உடையது என்பதையும் கண்டுகொள்வர்.
- மேற்படி ஜிஹாத் பற்றி முன்வைக்கப்பட்டுள்ள தப்பபிப்பிராயங்கள்: இது ஒரு பயங்கரவாதம், வன்முறை, வாளால் அல்லது அதிகாரத்தால் இஸ்லாத்தைப் பரப்புதல், நாடு பிடித்தல், சொத்துக்களைச் சூறையாடுதல் அல்லது கொள்ளையடித்தல், பழிவாங்குதல், அத்துமீறல் என பல்வேறு விதமான குற்றச்சாட்டுகளாகச் சோடிக்கப்பட்டுள்ளன.
- சமாதானம், யுத்தம் என்ற விடயத்தில் சமாதானமே அடிப்படையானது என்பதும் யுத்தம் விதிவிலக்கானது என்பதுமே இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். இஸ்லாம் சமாதானத்தின் பக்கமே அதிகளவு நாட்டம் கொண்டுள்ளது என்பதற்கு கலாநிதி முஸ்தபா அஸ்-ஸிபாஈ தரும் விளக்கம் மிகப் பொருத்தமானதாகும். இஸ்லாம் என்ற பெயர் சமாதானம், அமைதி எனப் பொருள்படும் ‘ஸலாம்’ என்ற சொல்லிலிருந்து பிறந்துள்ளது. இஸ்லாம் என்பது உள்ளம், உயிர், உடல் என்பவற்றால் சத்தியத்துக்கும் நல்லவற்றுக்கும் அடிபணிவதாகும். இம்மையிலும் மறுமையிலும் சக்திமிகு அல்லாஹ்வுக்கு அடிபணிவதாகும். ‘அஸ்ஸலாம்’ என்பது அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களுள் ஒன்றாகும். முஸ்லிம்களின் முகமன் “அஸ்ஸலாமு அலைக்கும்” என்பதாகும். ஒவ்வொரு முஸ்லிமும் தொழுகையின் அத்தஹிய்யாத்தில் நபியவர்கள், முஸ்லிம்கள், நல்லடியார்கள் மீது ஸலாம் கூறி, சமாதானத்துக்காகப் பிராத்திக்கின்றார். அதேபோல ‘ஸலாம்’ என்ற வார்த்தையுடனேயே தொழுகை பூர்த்தி செய்யப்படுகின்றது. தொழுகையின் பின்னராக மஃஸூரான பிரார்த்தனையிலும் ஸலாம் என்ற சொல்லே முன்னுரிமை பெற்றுள்ளது. மக்காவில் மஸ்ஜிதுல் ஹரமின் வாயில்களுள் ஒன்றும், மதீனாவில் மஸ்ஜிதுன் நபவியின் வாயில்களுள் ஒன்றும் ‘பாபுஸ் ஸலாம்’ (சமாதான நுழைவாயில்) எனப் பெயரிடப்பட்டுள்ளன. உலகில் அல்லாஹ்வுக்கு அடிபணிந்து வாழ்ந்தவர்களுக்கு மறுமையில் கிடைக்கும் தங்குமிடம் ‘தாருஸ் ஸலாம்’ (சமாதான இல்லம்) ஆகும். சுவனத்தின் முகமனும் ‘ஸலாம்’ என்ற வார்த்தையே.
- அல்குர்ஆனின் வசனங்களை ஆராய்ந்து நோக்கினால் ஸில்ம் (சமாதானம்) என்ற சொல்லும் அதிலிருந்து பிரிந்த சொற்களும் 133 இடங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதையும் ஹர்ப்-போர் என்ற சொல் ஆறே ஆறு இடங்களில் மாத்திரம் வந்திருப்பதையும் காணலாம். இதிலிருந்து சமாதானம் பற்றிய இஸ்லாத்தின் சிந்தனை மிகப் பலமானது என்பது தெளிவாகின்றது. இஸ்லாத்தைப் பின்பற்றுவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் பலன் சாந்தியின் பாதையை அடைவதே என குர்ஆன் தெளிவாகக் கூறுகின்றது.
  “நிச்சயமாக அல்லாஹ்விடமிருந்து பேரொளியும் தெளிவுமுள்ள ஒரு வேதம் உங்களிடம் வந்திருக்கிறது. (உங்களில்) எவர்கள் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி அதனைப் பின்பற்றுகின்றாரோ அவர்களை அதன் மூலமாக அல்லாஹ் சமாதானத்துக் குரிய வழிகளில் செலுத்துகின்றான்.” (5: 15-16)
- நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் மக்காவில் சொல்லொணாத் துயரங்களுக்கு உட்பட்ட வேளையில் பொறுமையைக் கைக்கொள்ளுமாறே குர்அன் அவர்களைக் கேட்டுக் கொண்டது. ஸஹாபாக்கள் இஸ்லாத்தின் எதிரிகளோடு பேராடுவோம் என நபி (ஸல்) அவர்களிடம் அனுமதி கேட்டபோது, தான் போராட அனுமதிக்கப்படவில்லை எனக் கூறினார்கள். மதீனாவில் வைத்து போராட்டத்திற்கான அனுமதி தாங்கிய இறைவசனம் அருளப்படு முன் அருளப்பட்ட சுமார் எழுபதுக்கும் மேற்பட்ட குர்ஆன் வனங்கள் யுத்தம் பற்றிப் பேசாதிருப்பதிலிருந்து விதிவிலக்காகவே இஸ்லாத்தில் யுத்தம் அனுமதிக்கப்பட்டிருக்கின்றமை தெளிவாகின்றது.

- மனித வாழ்வு, என்றும் ஒரே சீராக அமைவதில்லை. இன்பம், துன்பம், ஏழ்மை, செல்வம் - வசதி என்பன மாறி மாறி வந்து கொண்டிருக்கும். இதேபோல் மனிதர்களது விருப்பு, வெறுப்புகளும் மாறுந் தன்மை கொண்டவையாக இருக்கும். இதன் காரணமாக கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு ஒருவரை ஒருவர் எதிர்த்துக் கொள்வர். இவ்வெதிர்ப்புகள் அனைத்தும் சமாதானமாகவே முடிவடையும் என எதிர்பார்க்க முடியாது. சிலவேளைகளில் இப்பிரச்சினைகளைத் தீர்க்க யுத்தம் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிடும். இதனால்தான் சமாதானத்தை வலியுறுத்தும் பிற வேதங்களில் கூட யுத்தம் அனுமதிக்கப்பட்டிருப்பதை காண்கின்றோம். யுத்தத்தினால் தீமைகள் மாத்திரம் விளையும் என்றிருப்பின் இறை வேதங்கள் ஒருபோதும் அதனை அனுமதித்திருக்காது. மாற்றமாக யுத்தம் மனிதனின் ஆக்கத்திற்கும் வழியமைப்பதால்தான் அது ஒரு சமூகவியல் தேவையாகக் கணிக்கப்படுகின்றது. குர்ஆனின் கருத்து இதனை உறுதிப்படுத்துகின்றது.

  “மனிதர்களில் தீங்கு செய்யும் சிலரை அவர்களின் சிலரைக் கொண்டே அல்லாஹ் தடுக்காவிட்டால் இப்பூமி அழிந்திருக்கும்.” (2:251)

  இவ்வசனம் மனிதனின் சமூக முன்னேற்றத்திற்கும் அவர்களின் பண்பாட்டு நாகரிக விருத்திக்கும் போராட்டம் சிலபோது தவிர்க்க முடியாத ஒன்றாகவும் அமைய முடியும் என எடுத்துக் காட்டுகின்றது. தீமையைத் தட்டிக் கேட்க ஒரு குழு இருக்க வேண்டியதும், அக்குழு அத்தீய சக்தியை விட பலம் மிக்கதாய் இருப்பதும் இன்றியமையாததாகும்.

  இஸ்லாம் பல்வேறு நியாயங்களை அடிப்படையாக வைத்தே ஜிஹாதை அனுமதிக்கின்றது.

  1. இஸ்லாமிய த.ஃவாவிற்கு வழியமைத்துக் கொடுப்பது.
  2. வன்முறைகளை அடக்க உதவி செய்வது.
  3. முஸ்லிம்களது நில புலங்களைப் பாதுகாப்பது.
  4. ஒடுக்கப்படும் மக்களை விடுவிப்பது.

- இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்ற யுத்தங்கள் தற்காப்புப் போர்களேயன்றி இஸ்லாத்தை பலவந்தமாக வாளால் பரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளல்ல. மேற்படி போதனைகளும் யுத்தங்களுக்குரிய காரணங்களும், யுத்தம் இடம்பெற்ற முறைகளும் இதனை உறுதிப்படுத்திக் காட்டுகின்றன.

- முஸ்லிம்களது பலம் குறைந்த படையமைப்புகள், பேணிய யுத்த தர்மங்கள், வெற்றியின் பின்னர் நடந்து கொண்ட முறைகள், ஜிஹாதின் உண்மையான வடிவத்தை எடுத்துக் காட்டுவதோடு பிழையான கருத்துக்களையும் நீக்கி விடுகின்றன.

- ஜிஹாதில் வெற்றி பெற்றதன் பின்னர் அதிகமான சந்தர்ப்பங்களில் மன்னிப்பு வழங்கப்பட்டதை அறிந்துகொள்ள முடிகின்றது. நபி (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் பின்னர் தனது சிறிய தந்தையின் ஈரலைச் சப்பித் துப்பிய ஹிந்தாவைக் கூட மன்னித்தார்கள். கைதிகள் மனிதாபிமான முறையில் நடாத்தப்பட்டார்கள். பத்ர் யுத்தக் கைதிகளுடன் நடந்துகொண்ட முறை இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

- திம்மிகள் எல்லாவிதமான உரிமைகளையும் பெற்று வாழ்ந்தார்கள். “ஒரு திம்மியின் இரத்தம் முஸ்லிமின் இரத்தத்திற்குச் சமனானது” என நபி (ஸல்) அவர்கள் கூறியமை இஸ்லாம் எந்தளவு மனிதாபிமான முறையில் நடந்துகொள்கின்றது என்பதற்கு எடுத்துக் காட்டாகும். இஸ்லாம் கூறும் ஜிஹாத் பயங்கரவாதமாகவும் நிலத்தை ஆக்கிரமிப்பதாகவும், பழி வாங்குவதாகவும் இருந்திருந்தால் மேற்குறிப்பிடப்பட்ட பண்பாடுகள் தோன்றியிருக்காது.

- முஸ்லிம்கள் நாடு பிடித்தல் கொள்ளையிடுதல், இஸ்லாத்தை திணித்தல் என்ற நோக்கத்தில் ஜிஹாத் செய்திருந்தால் சென்ற இடங்களிலெல்லாம் அவர்கள் வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டிருக்கமாட்டார்கள். ஹிஜ்ரி 13க்கும் 100க்கும் இடைப்பட்ட குறுகியதொரு காலப் பிரிவில் இஸ்லாம் மேற்கே பிரனீஸ் மலைத் தொடர் வரையும், கிழக்கே மத்தியாசியா, சீனப் பெருஞ் சுவர் வரையும், தென்கிழக்கே சிந்துப் பிரதேசம் வரையும் அமோக வரவேற்பைப் பெற்றிருக்காது. எல்லாப் பகுதிகளிலும் வாழ்ந்த உயர் குடி மக்களெல்லாம் முஸ்லிம்களை வரவேற்றுக் கௌரவித்து உபசரித்தார்கள். இதற்கெல்லாம் காரணம் முஸ்லிம்கள் ஏற்று வாழ்ந்த இஸ்லாத்தின் சிறப்பும் மகிமையுமாகும்.
- உலகெங்கும் பரந்து சென்ற முஸ்லிம்கள், மனிதர்களை மனித நேயத்துடன் நோக்கினார்கள். எல்லா மனிதர்களும் ஒரு ஆத்மாவிலிருந்து படைக்கப்பட்டவர்கள் என்ற சிந்தனையுடனேயே இருந்தார்கள். மனிதர்களுக்கு மத்தியில் எந்த வேறுபாடும் காண்பிக்கப்படவில்லை. எல்லாவகையிலும் சமூக நீதியைப் பேணினார்கள். அன்றைய முஸ்லிம்கள் ஆயுத பலத்தில் இருக்கும் நம்பிக்கையை விட அல்லாஹ்வின் மீது பலமான நம்பிக்கை வைத்திருந்தார்கள். அதிகாரத்தை கொண்டு எந்தவொரு காரியம் முன்னெடுக்கப்பட்டாலும் அது நிலைத்திருக்கப் போவதில்லை. மேலைத்தேய கீழைத்தேய நாடுகளில் இஸ்லாம் வெகுவாக வேரூன்றியமைக்கு அடிப்படைக் காரணம் அவர்களிடம் காணப்பட்ட இஸ்லாமியப் பண்பாடுகளேயாகும். மனிதர்களை மதித்து மனிதப் பண்போடு அவர்கள் உறவாடினார்கள். இலங்கை போன்ற நாடுகளில் இஸ்லாம் பரவிய முறையை ஆராய்ந்து பார்ப்பதனூடாக இதனை எளிதில் புரிந்துகொள்ளலாம்.
- முஸ்லிம்களும் முஸ்லிமல்லாதோரும் ஜிஹாத் எனக் குறிப்பிடும்போது அவர்களது மனக் கண் முன் வந்துவிடுவது ஆயுதப் போராட்டமேயாகும். இது ஜிஹாதின் வகைகளில் தவிர்க்க முடியாதபோது பயன்படுத்தப்படும் ஒன்றாகும். இமாம் இப்னுல் கையிம் அவர்கள் தனது ‘ஸாதுல் மஆத்’ என்ற நூலில் ஜிஹாதைப் பதின்மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளார்கள். அவற்றுள் நான்கு வகை உள்ளத்துடன் சம்பந்தப்பட்டவை. இரண்டு வகை ஷைத்தானுக்கெதிரானவை. மூன்று சமூகத்தில் எழும் அநியாயத்துக்கு எதிரானவை. எஞ்சிய நான்கு வகைகளும் நிராகரிப்பாளர்கள், நயவஞ்சகர்களுக்கு எதிராக கரம், நாவு, பணம் என்பவற்றை உபயோகித்து முன்னெடுக்கப்படுபவை என வகைப்படுத்தியுள்ளார்கள். ஆகவே அறப் போர் என்பது ஜிஹாதின் பல்வேறு வகைகளில் ஒன்று என்பது நோக்கத்தக்கதாகும்.

- **குற்றமும் தண்டனையும்**

  - நடைமுறை உலகிலுள்ள குற்றவியல் சட்டங்கள் சட்ட வல்லுனர்களது விதிகளாகவும் பிரமாணங்களாகவும் உள்ளன. இவை உளப் பண்பாட்டுப் பயிற்சியையோ, சமூக சீர்திருத்தப் பெறுமானங்களையோ ஏற்படுத்தத் தவறின. குற்றங்களைப் பற்றியும், அவற்றின் தன்மைகள், சட்ட ஆக்க உத்திகள் என்பன பற்றியும் கவனம் செலுத்திய அளவுக்கு அவை குற்றங்களுக்கான தண்டனைகளை வகுப்பதிலோ குற்றங்களைச் சந்தேகமற நிறுவ முயற்சிப்பதிலோ அவை அதிக கரிசனை காட்டுவதில்லை. சிலபோது குற்றவாளியை வாதத் திறமையால் சுத்தவாளியாகக் காணக்கூடிய அளவுக்கு தாழ்ந்துபோன பிரமாணங்களையே கொண்டுள்ளன. இதனால் சமூக அழிவும் சீர்குலைவுமே உருவாகின்றன. சமூக விரோதிகளைப் பாதுகாக்கும் நிலையில் அச்சட்டங்கள் காணப்படுகின்றன. இதனால் உலகத்தில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களின் கை ஓங்கி சமூக உரிமைகள் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

- இஸ்லாம் எல்லா நிலைமைகளிலும் சில அடிப்படைகளைப் பாதுகாப்பதிலும், அவற்றை வளர்ப்பதிலும் அதிக கவனம் செலுத்துகின்றது. அவை (தீன்) மார்க்கம், பொருள், உடல், உயிர், பரம்பரை, புத்தி, மானம் என்பனவாகும். இவை பாதுகாக்கப்படாவிட்டால் ஒழுங்கீனம், அநீதி, அராஜகம் தலை தூக்கிவிடும். இதனால்தான் இஸ்லாம் இவற்றை பாதுகாப்பதிலும், வளர்ப்பதிலும் அதன் கவனத்தைச் செலுத்துகின்றது. இஸ்லாத்தில் குற்றம் தண்டனை பற்றிய கோட்பாடுகளும் இப்பிரமாணங்களுக்கமையவே நிறுவப் பட்டுள்ளன.

- பொதுவாக குற்றமென்பது, குறித்த சட்ட வரையறைகளுக்கு அல்லது உடன்பாடுகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உடன்பட்ட ஒருவர் அதனை மீறுவதனைக் குறிக்கின்றது. அவ்வாறு மீறிய ஒருவனை முன்னைய நிலைக்கு கொண்டு வருவதற்காக மேற்கொள்ளும் மாற்று வழி அல்லது அத்தகைய வரையறைகளிலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்படுகின்ற ஷரீஅத் குறிப்பிடுகின்ற பரிகார நடவடிக்கை தண்டனை என அழைக்கப்படுகின்றது. இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் பருவ வயதையடைந்த, புத்தி சுவாதீனமுள்ள ஒருவர் அல்லாஹ்வும், ரஸூலும் விதித்த ஒன்றை விடுவதும், தடுத்த ஒன்றைச் செய்வதும் குற்றமெனக் குறிக்கப்படுகின்றது. இதனைச் சமூகக் கண்ணோட்டத்தில் குறிப்பிடுவதாயின் ஒரு தனிநபர் அல்லது ஒரு குழுவினரின் இன்னொரு தனிநபரின் அல்லது குழுவினர், உடலுக்கு அல்லது சொத்துக்களுக்கு அல்லது சுயகௌரவத்திற்கு பங்கமேற்படுத்தக் கூடிய விதத்தில் செயற்படுவதையும், செயற்படத் தூண்டுவதையும் குறிக்கின்றது. இவ்வாறான சமூக விரோதச் செயல்களிலிருந்து மார்க்கத்தையும் தனிநபர்களையும் சமூகத்தையும் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற ஷரீஅத் குறிப்பிடுகின்ற பரிகார நடவடிக்கை தண்டனை என அழைக்கப்படுகிறது.

- இஸ்லாம் மேற்குறிப்பிட்ட அடிப்படைகளைப் பாதுகாப்பதற்காக குற்றங்களை வகைப் படுத்தி அவற்றுக்கு மிகப் பொருத்தமான தண்டனைகளை நிர்ணயித்து தனிநபர்களையும் சமூகத்தையும் மார்க்கத்தையும் இஸ்லாமிய அரசையும் பாதுகாக்கின்றது.

- குற்றங்கள் இஸ்லாத்தில் 'ஜராஇமுல் ஹுதூத்' தண்டனைகள் வரையறுக்கப்பட்ட குற்றங்கள், 'ஜராஇமுல் கிஸாஸ் வத்தியா' பழிவாங்கல், நஷ்டஈடு பெறல் எனும் தண்டனைகளையுடைய குற்றங்கள், 'த..ஃஸீர்' குற்றங்கள் அல்லது சாதாரண குற்றங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. சமூகம் எழுந்து நிற்கும் அடிப்படைகளைப் பேணும் வகையில் அதற்கான தண்டனைகளையும் இஸ்லாம் நிர்ணயித்துள்ளது.

- தண்டனைகளை வழங்குமுன் இஸ்லாம் சில அடிப்படைகளைக் கருத்திற் கொள்கிறது.

  1. நிர்ணயிக்கப்படும் தண்டனை குற்றம் நிகழ முன்னர் தடுக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
  2. தண்டனை மிகப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.
  3. தண்டனைகளின் போது குற்றமிழைத்தவனின் பதவி, அந்தஸ்து போன்றனவற்றைப் பொருட்படுத்தலாகாது.
  4. தண்டனைகள் சமூகப் பாதுகாப்பு, சமூக நிலைப்பாட்டை இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும்.
  5. தண்டனைகள் சட்டரீதியானதாக இருத்தல் வேண்டும்.
  6. சாதாரண குற்றங்களின்போது தண்டனைகள் குற்றவாளியைப் பொறுத்து வேறுபடலாம்.

  இஸ்லாமிய தண்டனைகள் கொண்டிருக்கும் இவ்வடிப்படைகள் தவறாக விளங்கப் பட்டுள்ளன. அவை நியாயமானதுதான் என ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள போதிய சான்றுகள் உள்ளன.

- இஸ்லாமிய தண்டனையின் நோக்கங்கள், இலக்குகள் அது தவறாக விளங்கப் பட்டுள்ளதை நீக்கிவிடும்.

    1. அறிவு புகட்டி, நேர்வழி காட்டி நல்ல மனிதர்களாக மாற்றுதல்.
    2. தீமைகளைக் களைந்து சமூக ஒழுங்கையும் நீதியையும் பாதுகாத்தல்.
    3. சமூக, சீர்திருத்தமும் கட்டுப்பாடும்
    4. தனிமனித, சமூக உரிமைகளைப் பாதுகாத்தல்
    5. மக்களை நன்மையின்பால் வழிநடத்தலும் சுயகட்டுப்பாட்டையும் பொறுப்புணர்வையும் ஏற்படுத்தலும்.
    6. குற்றவாளியை நல்வழிப்படுத்தல்.
    7. எதிர்காலத்தில் குற்றம் நிகழாமல் தடுத்தல்
    8. செய்த குற்றத்திற்கு கூலி வழங்கல்

    இவ்வாறான இலக்குகளை அடிப்படையாக வைத்துக் கொண்டே இஸ்லாம் தண்டனை களை அமுல்படுத்துகின்றது. அதன் மூலம் குற்றம் நிகழாத சூழல் ஒன்றை உருவாக்க முயற்சிக்கின்றது.

- இஸ்லாமிய தண்டனைகள் மிலேச்சத்தனமானவை, மிருகத்தனமானவை, மனித உரிமைகளில் தலையிடுபவை, கொடூரமானவை என்றவாறான குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன. உதாரணமாக விபச்சாரம் புரிந்தவனுக்கு நூறு கசையடிகள் அல்லது திருமண முடித்த வனாயின் கல்லெறிந்து கொல்லல், மது அருந்தியவனுக்கு நாற்பது கசையடி, களவெடுத்தவனின் கரம் துண்டிக்கப்படுதல், அவதூறு கூறியவனுக்கு எண்பது கசையடிகள் வழங்குதல், மதம் மாறியவனுக்கு எச்சரிக்கையின் பின்னர் மரண தண்டனை விதிப்பது போன்றவை தவறாகப் புரிந்து கொண்டுள்ளதைக் குறிப்பிடலாம். இவர்கள் இந்தக் குற்றங்களின் மூலம் சமூகம் எழுந்து நிற்கும் அடிப்படைகளை அவை எவ்வாறு பாதிக்கின்றன. எவ்வாறான பாதக விளைவுகளை அவை உலகத்தில் ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை சிந்திக்கத் தவறுகின்றார்கள். இத்தண்டனைகளை அமுல்படுத்தாததன் விளைவாக குற்றங்களைச் செய்வோரின் கைகள் ஓங்கி அது சமூகத்தில் சமூக, பொருளாதார, ஒழுக்க, பண்பாட்டுச் சீரழிவுகளை ஏற்படுத்தியிருப்பதைக் காணத் தவறுகின்றார்கள்.

- இஸ்லாமிய தண்டனைகளுக்கான நியாயங்கள்

1. இஸ்லாம் அல்லாஹ்வினால் உருவாக்கப்பட்ட இவ்வுலகத்தையும் மறுமையையும் தொடர்புபடுத்தியுள்ள பரிபூரண வாழ்க்கைத் திட்டமாகும். அதன் சட்ட யாப்புக்கள் அனைத்தும் ஈருலகத்தையும் தொடர்புபடுத்தியவையாகவுள்ளதால் இவ்விரண்டையும் தொடர்புபடுத்தி ஆராய்கின்றவர்களுக்கே அதனை விமர்சிக்கலாம். வெறுமனே உலகத்தை இலக்காக வைத்துக் கொண்டு சிந்திப்பவனுக்கு இதன் அர்த்தமே புரியாமல் போகும்.
2. இஸ்லாம் என்ன நோக்கங்களை இலக்காகக் கொண்டு தண்டனைகளை அமுல்படுத்து கின்றதோ அந்த நோக்கங்களை அடையக்கூடியதாக இருப்பதனால் அது நியாயமான தாகும். இஸ்லாமியத் தண்டனைகள் அமுல்படுத்தப்பட்ட நபி (ஸல்) அவர்களதும், குலபாஉர் ராஷிதூன்களதும் காலங்களிலும் இஸ்லாமியத் தண்டனைகள் அமுல்படுத்தப்படும் நாடுகளிலும் இதனைக் கண்டுகொள்ள முடிகின்றது.
3. குற்றங்கள் நிகழ்வதைத் தடுக்கக் கூடிய ஒரு சூழலை உருவாக்கியதன் பின்னரே இஸ்லாம் தண்டனைகளை அமுல்படுத்துகின்றது. அதன் நம்பிக்கைக் கோட்பாடுகள், சமூக, பொருளாதார, அரசியல், ஆன்மீக, ஒழுக்கப் போதனைகள் குற்றம் நிகழாத

சூழ்நிலைகளை ஏற்படுத்த வழியமைக்கின்றன. இதற்கு உதாரணம்: திருமணம், பலதாரமணம் என்பன விபச்சாரத்தை தடுக்கும்; இஸ்லாமிய உடை ஆண்-பெண் தொடர்பு சம்பந்தமான ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்படும்போது அங்கே தகாத தொடர்புகள், நடத்தைகள் ஏற்பட வாய்ப்பில்லை. ஸகாத், வாரிசுரிமை, மரண சாசனம், ஸதகா, ஸகாதுல் பித்ர் அமுலாகும் இடத்தில் களவு இடம்பெறுவதற்கு வாய்ப்பில்லை. இஸ்லாம் இவ்வாறானதொரு சூழலிலேயே தண்டனைகளை அமுல்படுத்த முனைவதால் அது நியாயமானதாகவுள்ளது. அதனைத் தவறாகப் புரிந்துள்ளவர்கள் இந்நியாயத்தைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளார்கள்.

4. குற்றம், தண்டனை பற்றி முன்கூட்டியே தெளிவை இஸ்லாம் வழங்கியுள்ளது. மிகத் தெளிவான முறையில் 'ஜராஇமுல் ஹுதூத்', 'ஜராஇமுல் கிஸாஸ் வத்தியா' பற்றி குர்ஆனிலும், ஸுன்னாவிலும் விளக்கப்பட்டுள்ளதால் இஸ்லாத்தை ஏற்ற ஒரு முஸ்லிம் இவற்றை ஏற்று நடப்பது இலகுவாகின்றது. ஸஹாபாக்கள் இதற்கு உடன்பட்டார்கள் என்பதை ஸஹாபியான 'மாஇஸ்' என்பவரின் வரலாற்றுச் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

5. மறுமையில் வழங்கும் தண்டனைகளை வலியுறுத்துவதன் ஊடாக உளப் பக்குவத்தை இஸ்லாம் வழங்குகின்றது. இவ்வாறான உளப்பக்குவம் உள்ளவர்களிடம் குற்றங்கள் நிகழ்வதற்கான வாய்ப்பிருக்காது. மறுமையின் தண்டனையுடன் ஒப்பிடும்போது உலகியல் தண்டனை அற்பமானதே என்ற உளப் பக்குவமுள்ளவர்களாக நபித் தோழர்கள் இருந்தனால்தான் அவர்களிடமிருந்து குற்றங்கள் நிகழ்வது அரிதாகவிருந்தது.

6. தண்டனைகளை வழங்குவதற்கு இஸ்லாம் நிபந்தனைகள் விதித்துள்ளது. குற்றங்கள் சாட்சிகளுடன் நிறுவப்படல் வேண்டும் அல்லது குற்றவாளி தானாக குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். குற்றம் இழைக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கக் கூடாது. அறிவு, சுதந்திரம் உள்ள நிலையில் குற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும். குற்றமிழைக்கும் மனநிலையில் குற்றத்தைச் செய்திருத்தல் வேண்டும். அவ்வாறு விதிக்கப்படும் தண்டனை ஆதாரபூர் வமானதாகவும் தர்க்க வாதத்துக்கும் மதிநுட்பமிக்க பகுத்தறிவுக்கும் பொருத்தமாகவும் இருக்குமேயன்றி அது எவ்விதமான குற்றவியல் கொள்கைகளையும் தழுவியதாகவோ அல்லது ஒரு தேசத்தின் அல்லது தனிநபரின் விருப்பு வெறுப்புகளால் பாதிக்கப்பட்ட தாகவோ இருக்க மாட்டாது.

7. குற்றம் நிகழ்ந்த சூழலைக் கருத்திற் கொண்டு இஸ்லாமியத் தண்டனைகள் அமுல்படுத்தப்படுவதால் அது நியாயமானதாகவுள்ளது. களவெடுத்தவனின் கையைத் துண்டிக்க வேண்டுமென்பது இஸ்லாமியத் தண்டனையாயினும் திருடனுக்குத் திருட்டைச் செய்யத் தூண்டியது அவனுடைய பசியாகவிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்படுமாயின் அவனுக்கு அத்தண்டனை அளிக்கப்படுவதில்லை. உமர் (ரழி) அவர்கள் பசியின் காரணமாக மக்கள் திருடக் கூடும் என்ற சந்தேகம் ஏற்பட்டதால் பஞ்ச காலம் ஒன்றில் திருட்டுக்குரிய தண்டனையை நிறைவேற்றாது விட்டார். இது இஸ்லாமியத் தண்டனை என்ன இலக்கை அடிப்படையாக வைத்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதற்கு சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும்.

8. இஸ்லாம் கண்மூடித்தனமாகத் தண்டனைகளை அமுல்படுத்த இடமளிப்பதில்லை. "சந்தேகத்தின் அடிப்படையில் தண்டனைகளை நிறைவேற்றுவதைத் தவிர்ந்து கொள்ளுங்கள்" இதனை உமர் (ரழி) காலத்தில் இடம்பெற்ற ஒரு வரலாற்றுச் சம்பவம் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. ஹாதிப் இப்னு அபீ பால்தஆவிடம் பணிபுரிந்த சில பையன்கள் முஸ்னா குலத்தைச் சேர்ந்த ஒருவரின் பெண் ஒட்டகை ஒன்றைத் திருடி விட்டதாக உமர் (ரழி) அவர்களிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. உமர் (ரழி) இதனை விசாரித்தபோது அப்பையன்கள் தாம் திருடியதாக ஒப்புக் கொண்டமையால் அவர்களின் கைகளைத் துண்டிக்குமாறு தீர்ப்பளித்தார். மறுகணம் சற்று சிந்தித்து விட்டு "இறைவன் மீது ஆணையாக இப்பையன்களை நீர் வேலைக்கமர்த்தி அவர்களைப்

பட்டினி போட்டதையும் அதன் காரணமாக அவர்கள் அவ்விலக்கப்பட்ட உணவைப் புசிக்க நீர் காரணமாயிருந்ததையும் நான் அறிந்திருக்காவிட்டால் நிச்சயமாக நான் அவர்களின் கைகளைத் துண்டித்திருப்பேன்'' எனக் கூறி அப்பையன்களின் எஜமானை விளித்து "இறைவன் மீது ஆணையாக நான் அவர்களுடைய கையைத் துண்டிக்காமல் விட்டமைக்காக உம்மைத் துன்புறுத்தக் கூடிய ஒரு தண்டத்தை விதிக்கப் போகிறேன்'' என்று கூறி அந்த ஒட்டகையின் விலையைப் போல் இரு மடங்கைத் தண்டமாகச் செலுத்தும்படி அப்பையன்களின் எஜமானனுக்கு உத்தரவிட்டார்.''

ஒருவனுக்கு குற்றச் செயலைச் செய்யத் தூண்டும் ஒரு சந்தர்ப்பமிருப்பின் அவனுக்கு தண்டனை வழங்கப்படுவதில்லை என்பதை இச்சம்பவம் உறுதிப்படுத்துகின்றது.

9. குறிப்பிட்ட குற்றச் செயல்களுக்கு மன்னிப்பு வழங்குவதும் தண்டிக்கப்படுபவனின் குடும்ப நலனில் இஸ்லாம் காட்டும் அக்கறை இஸ்லாமியத் தண்டனை கொடூரமானவை அல்ல என்பதை நிரூபிக்கின்றது. தண்டிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு பொது நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகின்றது.

10. தனிநபர் சுதந்திரம் எல்லைக்குட்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கைக்கு இஸ்லாமியத் தண்டனை உதவுவதால் அது நியாயமானதாகவுள்ளது. ஏனெனில், குற்றமிழைப்பவர் களின் கையோங்கி, அவர்கள் கட்டுப்பாடின்றி வெறுமனே விடப்படுவது சமூக நாசத்திற்கு காரணமாகின்றது.

11. நபி (ஸல்) அவர்களது காலத்திலும், குலபாஉர் ராஷிதூன்கள் காலத்திலும் தண்டனைகள் மிகக் குறைவாகவே அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு அடிப்படைக் காரணங்கள் பல இருக்கின்றன. ஒன்று இஸ்லாமியத் தண்டனைகள் குற்றங்கள் நிகழாமல் இருக்கக் கூடிய சூழலைக் கொண்டு வந்தமை. இரண்டு மக்கள் குற்றங்களி லிருந்து விடுபவதற்கான சமூகச் சூழல் உருவாகியமை. நடைமுறையிலுள்ள தண்டனை முறைகள் குற்றங்களைத் தூண்டிக் கொண்டிருக்கின்றன. அதே நேரத்தில் குற்றம் நிகழ்வதற்கான சகல வாயில்களும் திறந்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

12. இஸ்லாமிய வரலாற்றில் தண்டனைகள் அமுல்படுத்தப்பட்ட விதம் தண்டனைகள் கொடூரமானவையல்ல என்பதையும், தண்டனை வழங்குவதுதான் இஸ்லாம் மார்க்கத்தின் நோக்கமல்ல என்பதும் உறுதியாகின்றது. விபச்சாரம் செய்த ஒரு பெண் நபி (ஸல்) அவர்களிடம் வந்து தனக்கு தண்டனை வழங்குமாறு வேண்டினாள். குழந்தையைப் பெற்றதன் பின்னர் வா என அனுப்பி வைத்தார்கள். குழந்தை கிடைத்ததும் அப்பெண் மீண்டும் வந்தாள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் பாலூட்டியதன் பின்னர் வா என அனுப்பி வைத்தார்கள். இரண்டு வருடங்கள் கழிந்து வந்ததன் பின்னரே அப்பெண்ணுக்கு தண்டனை வழங்கப்பட்டது.

இஸ்லாத்தையும், அதனது தண்டனை முறைகளையும் தவறாகப் புரிந்து கொண்டவர்கள் அது பற்றித் திறந்த மனதுடன் நியாயமாகச் சிந்திப்பதனூடாக ஒரு ஆரோக்கியமான முடிவுக்கு வரலாம் என்பதை மேற்குறிப்பிடப்பட்ட நியாயங்கள் உறுதிப்படுத்துகின்றன.

- **பெண்கள் நிலை**

  - பெண்கள் சமுதாயத்தின் சரிபாதியாகக் கணிக்கப்படுகின்றனர். ஆதலால் எந்தவொரு சமுதாயமும் அவர்களைப் புறக்கணிக்கவோ, அநியாயத்துக்குட்படுத்தவோ முடியாது. அவர்கள் எண்ணிக்கையில் சரிபாதியாகக் காணப்பட்டாலும் சமுதாயத்தில் நல்லதையோ, தீயதையோ ஏற்படுத்துவதில் அதிகூடிய பங்கு அவர்களுக்கு உண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது.

- தாய் ஒரு பாடசாலையாவாள். அவளது சரியான நிருவாகத்தின் மூலம் சிறந்த விழுமியங்களைக் கொண்ட ஒரு பரம்பரையையே உருவாக்கி விடுகிறாள் என்று ஒரு கவிஞன் பாடுகிறான்.
- இன்று பொதுவாக, அறிஞர்கள், சிந்தனையாளர்கள், சீர்த்திருத்தவாதிகள், போதகர்கள், தலைவர்கள் உள்ளிட்ட எல்லோருமே பெண்களின் அந்தஸ்து, கண்ணியம், சமுதாயத்தில் அவர்களின் நிலை, அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள், பால்நிலைச் சமத்துவம் என பல்வேறு தலைப்புகளில் பேசியும் எழுதியும் கருத்துப் பரிமாறியும் ஆராய்ச்சி செய்தும் வருகிறார்கள்.
- கி.பி 586 இல் கூடிய ஒரு மாநாடு, பெண்களை மனிதர்களாகக் கொள்வதா, பிராணியாக ஏற்பதா என வாதிட்டு, அவள் ஆண்களுக்குப் பணிசெய்வதற்காக படைக்கப்பட்டுள்ள மனிதப் பிறவி என்ற தீர்மானத்துக்கு வந்தது. 1995 இல் பீஜிங் நகரில் இடம்பெற்ற மாநாடு பெண்கள் பற்றிய சர்ச்சைகளையே பரிமாறியது.
- வரலாற்றில் வெவ்வேறு காலகட்டங்களில் பெண்கள் எவ்வாறு நோக்கப்பட்டனர் என்பதை விளங்கிக் கொள்வதன் மூலமே இஸ்லாம் அவர்களுக்கு வழங்கிய உயர் அந்தஸ்தின் மகத்துவத்தைத் தெளிவாக விளங்க முடியும்.

**இஸ்லாத்தின் வருகைக்கு முன்**

- சுமேரியர், ஓர் ஆண் திருடினால் அவனுக்குரிய தண்டனையை மெலினமாக வழங்கினர். பெண் தன்னுடைய கணவனின் பொருளைத் திருடினாற் கூட கடுமையான தண்டனை வழங்கினர். சிலபோது அவளது மூக்கை வெட்டி எறிந்தனர்.
- மெசபதேமியர், கருச்சிதைவின் பின்னர் ஒரு பெண் உயிருடனிருந்தாலும் சரி, உயிரற்றிருந்தாலும் சரி கழுமரத்தில் ஏற்றினார்களே தவிர பூமியில் அவளைப் புதைக்கவில்லை.
- கிரேக்கர், தட்டுமுட்டுச் சமான்களை வாங்குவது, விற்பது போல பெண்களை நடத்தினர். மிருகங்களுக்குப் பதிலாகப் பரிமாறப்படும் ஒன்றாகவே கருதினர்.
- உரோமர் பெண்களுக்கு எத்தகைய மதிப்பும் கொடுக்கவில்லை. அவர்கள் நீதி கோரி எந்த நீதிமன்றத்துக்கும் செல்ல முடியவில்லை. திருமணத்தின் பின்னர் அவளது சொத்துக்கள் யாவும் கணவனின் அதிகாரத்துக்குட்பட்டன. அவள் சுயமாக உழைக்கவோ, சொத்துக்களை வாங்கவோ, காக்கவோ, விற்கவோ, உடன்படிக்கை களில் ஈடுபடவோ அனுமதிக்கப்படவில்லை.
- இந்தியர், பெண்களை மரணம், நஞ்சு, நெருப்பு, நரகம், தொற்றுநோய், நாகம் என்பவற்றை விடக் கொடியதாக எண்ணினர். கணவன் சிதையில் எரியும் போது அந்த நெருப்புக் குண்டத்தில் அவளையும் எறிந்தனர்.
- முன்னைய கிறிஸ்தவர் பெண்களை நரகத்தின் வாயில்கள் என்றும், ஷைத்தானின் முதல் உருவமென்றும், தீமைகளின் அன்னை என்றும், கொட்டத்தயாராக நிற்கும் தேள் என்றும் கருதி வந்தனர்.
- அரேபியர், பெண்களைப் மோகப் பொருளாகவும், வியாபாரப் பண்டமாகவும் கருதினர். பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்தனர். அவர்களுக்கு எந்த உரிமையையும் வழங்கவில்லை.
- இத்தகைய பின்னணியில்தான் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைக் கொண்டு வந்தார்கள். அது பெண்களைக் கண்ணியப்படுத்தியது. அவர்களை மனிதர்களாகக் காண்பித்தது. ஆண்களுக்குப் போலவே பெண்களுக்கும் உரிமைகளை வழங்கியது. இஸ்லாம் பெண்களை ஒரு போதும் கண்ணியக்குறைவாகப் பேசியதில்லை.

ஆண்களின் நுகர்வுப் பொருளாகவோ, அடிமையாகவோ நோக்கவில்லை. ஆணுக்குரிய அதே கண்ணியத்தைப் பெண்களுக்கும் வழங்கியது.

**1 ஒரே ஆத்மாவிலிருந்து தோன்றியவர்கள்**

- ஆண், பெண் ஆகிய இரு பாலாரும் ஒரே மூலத்திலிருந்து வந்தவர்கள். மனிதன் என்ற வகையிலும் பொறுப்புக்களைச் சுமந்தவர்கள் என்ற வகையிலும் நற்கூலியைப் பெறுவதிலும் அவர்கள் சமமானவர்களாவர். ''மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரைப் படைத்து) அவரிலிருந்து அவருடைய மனைவியை படைத்தான். பின்பு அவ்விருவரிலுமிருந்து அனேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்திப்) பரவச்செய்தான். ஆகவே அந்த அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து கொள்ளுங்கள்'' (4:1) மக்கள் ஆண் பெண் என வேறுபட்டிருந்தாலும் இருவரையும் ஒரே ஆன்மாவிலிருந்தே படைத்தான். ஆதலால் ஒருவரில் மற்றவர் நிறைவு பெறுகிறார். ''ஒரே மனிதரிலிருந்து உங்களைப் படைத்தவன் அவன்தான். அவருடன் சுகமாக கூடி வாழ்வதற்காக அவருடைய மனைவியை அவரிலிருந்தே உற்பத்தி செய்தான்.'' (7:189) மனித இனத்தின் தோற்றம் ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்து தோன்றியதாகும். எல்லோரும் ஒரே இரட்சகனின் அடிமைகள் என்ற சகோதரத்துவம் அனைவரையும் பிணைத்து விடுகிறது. இதனால் நீங்கள் எல்லோரும் சேர்ந்து வாழ வேண்டும் என அல்குர்ஆன் பணிக்கின்றது. ஆண், பெண்ணின் சகோதரனாவான். பெண், ஆணின் சகோதரி ஆவாள். ''நிச்சயமாக பெண்கள் ஆண்களின் உற்ற சகோதரங்களாவர்.'' (அஹ்மத்)

**2. மார்க்கம், வணக்கம் ஆகியவற்றில் சமத்துவம்.**

- நிச்சயமாக முஸ்லிமான ஆண்களும் பெண்களும், விசுவாசிகளான ஆண்களும் பெண்களும், (இறைவனுக்கு) வழிபடும் ஆண்களும் பெண்களும், உண்மையே கூறும் ஆண்களும் பெண்களும், தானம் செய்யும் ஆண்களும் பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும் பெண்களும், தங்கள் கற்பைக் காத்துக்கொள்ளும் ஆண்களும் பெண்களும், அல்லாஹ்வை அதிகமாகத் துதி செய்யும் ஆண்களும் பெண்களும் -ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் வைத்திருக்கிறான். (33:35)
- ஆண்களை விட பெண்கள் தாழ்ந்தவர்களல்லர்; இரு பாலாரும் சமமானவர்களே என்பதை இந்த வசனம் உணர்த்துகின்றது.

**3. சமூகப் பொறுப்புக்களில் சமத்துவம்**

- விசுவாசம் கொண்ட ஆண்களும் பெண்களும் தாம் (தங்களுக்குள்) ஒருவருக்கொருவர் உற்ற நண்பர்களாயிருக்கின்றனர். அவர்கள் நன்மை செய்யும்படி தூண்டியும், பாவம் செய்யாது தடுத்தும் தொழுகையைக் கடைப்பிடித்து ஸகாத்துக் கொடுத்தும் வருவார்கள். அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் வழிபட்டு நடப்பார்கள் (9:71). பெண்கள் பாவத்தின் வித்து என்றோ, தீமையின் பிறப்பிடமென்றோ, ஆண்கள் கெடு வதற்கு பெண்களே காரணம் என்றோ சிலர் கருதுவது போல இஸ்லாம் கூறவில்லை. முதற்பெண் ஹவ்வாவின் தூண்டுதலாலேயே தடுக்கப்பட்டதை ஆதம் சாப்பிட்டார் என்பர். ஆனால் இருவரும் சேர்ந்து சாப்பிட்டதற்காகவே இருவரும் பாவமன்னிப்புக் கேட்டனர். இதனை அல்குர்ஆன், ''எங்கள் இரட்சகனே நாங்களே எங்களுக்கு தீங்கிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு அருள்புரியாவிட்டால் நிச்சயமாக நாங்கள் நட்டமடைந்தவர்களாவோம்.'' (7:23) என்று கூறுவது அந்தப் பாவத்தில் இருவருக்கும் பங்குண்டு என்பதை எடுத்துக்காட்டுகிறது.

4. **நற்கூலி பெறுவதிலும் சுவனத்தை அடைவதிலும் சம உரிமை.**

- உங்களில் ஆணோ, பெண்ணோ எவர்கள் நன்மை செய்த போதிலும் நிச்சயமாக அதை நான் வீணாக்கிவிட மாட்டேன். (3:95, 16:97,4:124)
- ஒப்பந்தங்கள் செய்வதற்கும், முதலீடு செய்வதற்கும், உழைப்பதற்கும், உழைப்பதை தமக்கென வைத்துக் கொள்வதற்கும் அவளுக்கு உரிமையுண்டு.
- இஸ்லாம் பெண்களை உயர் நிலையில் வைத்து நோக்குகிறது. நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். ''உலகம் முழுவதும் இன்பம் தரும் பொருளாகும். அவற்றுள் தலை சிறந்தது நல்ல பெண்ணாவாள்'' (முஸ்லிம்)

**மனித இனத்தை பெருகச் செய்தல்**

- ஆண்களைப் போலவே பெண்களுக்கும் இதில் பங்குண்டு என்பதால் முற்றிலும் ஆணுக்குச் சமமானவளாகிறாள். மனைவியின் கடமை கணவனின் கடமைக்குச் சளைத்ததல்ல.

**கல்வியைப் பெற்றுக் கொள்ளல்**

- கல்வியைப் பெற்றுக் கொள்வதில் ஆண்களைப் போன்றே பெண்களும் சமமானவர்கள். அறிவைத்தேடிப் பெற்றுக் கொள்வது அனைத்து முஸ்லீம்களதும் கடமையாகும் (புஹாரி) வரலாற்றில் ஆயிஷா (ரழி), பிந்தி ஷிபா, பாத்திமா ஸிர்ஹிந்தி போன்றோர் கல்வித்துறையில் முன்மாதிரியாகத் திகழ்ந்துள்ளர்கள்.

**சமூகப் பணிகளில் பங்கேற்றல்**

- இஸ்லாமிய வரம்புகளைப் பேணி சமூகப் பணிகளில் ஈடுபட இஸ்லாம் பெண்களுக்கு அனுமதியளித்துள்ளது. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் பெண்கள் பொதுவாழ்வில் பல்வேறு துறைகளில் பெரும் பங்காற்றியுள்ளனர். கற்பித்தல், போராடுதல், காயமுற்றோருக்கு மருத்துவ உதவி செய்தல் போன்ற பல துறைகளில் ஆயிஷா (றழி), ரபீதா (றழி), அஸ்மா (றழி) போன்றோர் பணியாற்றியுள்ளனர்.
- இவ்வாறு முஸ்லிம் பெண்ணுக்குக் கிடைத்துள்ள கண்ணியம், மதிப்பு, அந்தஸ்து, உரிமைகள் போன்றன விடுதலைப் போராட்டங்களின் மூலம் கிடைக்கப்பெற்றனவல்ல; அவள் கேட்காமலே இஸ்லாம் அவளுக்கு வழங்கியுள்ளது.
- இஸ்லாம் பெண்களைக் கௌரவப்படுத்தி, பல உரிமைகளையும் அந்தஸ்தையும் வழங்கியுள்ள போதிலும் இஸ்லாத்தின் மீது காழ்ப்புணர்வு கொண்ட சிலர் சந்தே கங்களையும் சர்ச்சைகளையும் முன்வைத்துள்ளனர். அவற்றுல் சில
  - சாட்சிகளாகக் கொள்வதில் சமத்துவமின்மை.
  - பாகப்பிரிவினையில் பாரபட்சம் காண்பித்தல்.
  - தலைமைத்தவத்திற்கு அனுமதி வழங்காமை.
  - தலாக் கூறுவதில் சமத்துவமின்மை.

**சாட்சிகளாகக் கொள்வதில் சமத்துவமின்மை**

- கடன் கொடுக்கல் வாங்கல் பதிவு செய்வது தொடர்பாகவும், அதில் நாணயமாக நடப்பது தொடர்பாகவும் வந்துள்ள வசனத்தில் 'மேலும் நீங்கள் சாட்சிகளாக (அங்கீகரிக்க)க் கூடிய உங்கள் ஆண்களில் (யோக்கியமான) இருவரை (அக்கடனுக்கு)ச் சாட்சியாக்குங்கள். அவ்வாறு (சாட்சியாக்க வேண்டிய) இருவரும் ஆண்பாலாராகக் கிடைக்காவிட்டால் ஓர் ஆணுடன் நீங்கள் சாட்சியாக அங்கீகரிக்கக் கூடிய இரு பெண்களை (சாட்சியாக்க வேண்டும். ஏனெனில், பெண்கள் பெரும்பாலும்

கொடுக்கல் வாங்கல் பற்றி அறியாதிருப்பதால்) அவ்விருவருள் ஒருத்தி தவறிவிட்டாலும் மற்றப்பெண் அவருக்கு அதனை ஞாபகமூட்டிக் கொடுக்கும் பொருட்டு (இவ்வாறு செய்தல்) (2:282)

- இரண்டு பெண்களின் சாட்சியத்திற்குச் சமனாக ஓர் ஆணின் சாட்சியை இஸ்லாம் அங்கீகரித்துள்ளது. உண்மையில் இந்த ஏற்றத்தாழ்வு பெண்ணுக்கோ அல்லது அவளது கண்ணியத்திற்கோ ஒரு குறையல்ல. மாறாக அவள் வியாபார கொடுக்கல் வாங்கல் நடிவடிக்கைகளிலும், சிவில் விவகாரங்களிலும் பரிச்சயமானவள் அல்ல. இதனையே ''ஒருத்தி தவறுவிட்டாலும் மற்றப் பெண் அவளுக்கு (அதனை) ஞாபக மூட்டும் பொருட்டு'' என அல்குர்ஆன் கூறுகிறது. இதனாலேயே பல சட்ட அறிஞர்கள் குற்றவியல், பழிக்குப் பழிவாங்கல் போன்ற நடவடிக்கைகளில் பெண்களது சாட்சிகளை கருத்திற் கொள்வதில்லை. ஏனெனில் இந்தச் சந்தர்ப்பங்களில் பெண்கள் எங்கிருந்தாலும் பெண்மைச் சுபாவத்தினால் அவற்றைப் பார்க்கத் துணியமாட்டார்கள். கதறி ஓடுவதே அவர்களது பண்பாகும். இத்தகு நுணுக்கமான சந்தர்ப்பங்களை விளங்கவோ, விளக்கவோ அவர்களால் முடிவதில்லை. இதேநேரம் பெண்களின் இயல்போடு கூடிய அம்சங்களில் அவள் தனித்தவளாக இருந்த நேரத்திலும் அவளது சாட்சியத்தை மாத்திரம் இஸ்லாம் ஏற்கிறது. கன்னித்தன்மை, பிள்ளைப் பேறு , பாலூட்டல் மற்றும் சில சந்தர்ப்பங்களில் ஓர் ஆணினதும் ஒரு பெண்ணினதும் சாட்சி சமனாகவே நோக்கப்படுவதுண்டு. இதற்கு "லிஆன்'' சந்தர்ப்பத்தை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

### பாகப்பிரிவினையில் பாரபட்சம்

- ஆண் பெண்களிடையே வாரிசுத் சொத்துரிமையில் கூட சமத்துவம் பேணப்படுவதில்லை என குற்றம் சுமத்துவோர் உளர். உண்மையில் இஸ்லாம் இரு பாலார்மீதும் சுமத்தியுள்ள பொருளாதாரச் சுமைகளையும் அதற்கு பதிலாக இஸ்லாம் வழங்கியுள்ள வாரிசு உரிமையின் நியாய பூர்வத்தன்மையையும் அறிந்து கொள்ள வேண்டும். பெண்களின் குடும்பப் பொறுப்புக்களுக்கு முன்னுரிமை வளங்கி உழைக்கும் பொறுப்பை அவள் மீது சுமத்தவில்லை. அப்பொறுப்பு ஆணின் மீதே சுமத்தப் பட்டுள்ளது. அவளோ தாய், மனைவி, சகோதரி, மகள் என்ற எந்த நிலையிலும் இறந்தவரிடமிருந்து வாரிசாகப் பெறுகிறாள். ஆண்கள் வாரிசு உரிமையை கூடுதலாக பெற பல நியாயங்கள் உண்டு. அவனோ குடும்பத்தின் தலைவன் அத்தனை செலவுகளையும் கவனிக்க வேண்டியவன். பெண்களுக்கு ஆணைப்போல எந்தப் பொருளாதாரப் பொறுப்பும் இல்லை. மனைவியாக இருந்தால் கணவன், தாயாக இருந்தால் அவளது ஆண் பிள்ளைகள், மகளாக இருந்தால் தந்தை இப்படி பலரும் அவளை கவனிக்கின்றனர். அவள் என்றும் தங்கி வாழ்பவளாவாள். இதே நேரம் அவள் கணவனிடமிருந்து மஹறாக சொத்துக்களை பெறுகின்ற வாய்ப்பும் கிடைக்கின்றது. இவை அவள் வாரிசிடமிருந்து குறைவாக பெற்றிருந்தால் அதனை நிவர்த்திக்கின்றது. இப்படி அவள் பெறுகின்ற பொருளாதார சமத்துவத்தைப் பல்வேறு கோணங்களில் விளக்கலாம்.

### தலைமைத்துவத்திற்கு அனுமதி வழங்காமை

- பெண்களின் நிருவாகிகளாக ஆண்களே இருக்கின்றனர் (4:34) பெண்கள் மீதான ஆண்களின் தலைமைத்துவம் என்பதன் கருத்து ஆண் பெண்ணைவிட உயர்வானவன் என்பதன்று. தலைமைத்துவம் என்பது ஒரு பொறுப்பு. குடும்ப மட்டத்திலான தலைமைத்துவத்திற்கு ஆணின் தகைமையே மிகப் பொருத்தமானதாகும். "....தனது செல்வங்களிலிருந்து செலவளிப்பதன் காரணமாகவும் ஆண்கள் பெண்களின் நிருவாகிகளாக உள்ளனர்'' (4:34) தலைமைத்துவத்துக்கான சிறப்பான பண்புகள்

காரணமாகவே பெண்களைவிட ஆண்கள் மேலானவர் எனக் குறிப்பிடப்படுகின்றது. குழந்தையை பராமரித்தல் என வரும்போது அங்கு ஆணைவிட பெண் உயர்ந்து நிற்கிறாள்.

- அல்லாஹ் ஆண்களுக்கு அவர்களின் பணியை நிறைவேற்றுவதற்கான தகுதிகளையும் பண்புகளையும் வழங்கி அப்பகுதியில் பெண்களைவிட ஆண்களை உயர்த்தி வைத்துள்ளான். பெண்களுக்கு அவர்களது பணியை நிறைவேற்ற உதவும் சிறப்பான பண்புகளை வழங்கி ஆண்களைவிட அப்பணியில் அவர்களை மேன்மைப்படுத்தி யுள்ளான்.

- ஆணின் தலைமைத்துவப் பொறுப்பு என்பது இங்கு குடும்ப நிருவாகத்திலேயே முதன்மைப் படுத்தப்படுகின்றது. ஒரு பெண் இஸ்லாமிய வரையறைகளைப் பேணி சமூக வாழ்வில் பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில், நிறுவனங்களில் என தலைமை வகிப்பதை இஸ்லாம் ஒரு போதும் மறுக்கவில்லை. அவள் ஒரு நீதிபதியாக, அமைச்சராக, கண்காணிப்பாளராக இருக்க முடியும் என்பதற்கான இஸ்லாமிய சான்றுகள் காணப்படுகின்றன. எனினும் அவள் எல்லா நிலமைகளிலும் அவளுக்கு விதிக்கப்பட்டுள்ள ஷரீஅத் வரையறைகளைப் பேணியவளாக தனது குடும்பத்தின் பால் நிறைவேற்ற வேண்டிய கடமைக் கூறுகளை முறையாக நிறைவேற்ற தனது பதவிகள், பணிகள் தடையாக அமையாது தன்னைக் கண்காணித்துக் கொள்ள வேண்டும்.

**தலாக் கூறுவதில் சமத்துவமின்மை**

- தலாக் சொல்லும் உரிமையில் ஆண்களுக்கு இஸ்லாம் முன்னுரிமை வழங்குகிறது. குடும்ப வாழ்வின் யாதார்த்த பூர்வமான நோக்கங்களை நிறைவு செய்து கொள்ள முடியாதபோது தவிர்க்க முடியாத ஒரு வழி என்ற நிலையில்தான் இஸ்லாம் தலாக்கை அனுமதிக்கின்றது. ஓர் ஆண் மஹர் கொடுத்து மணமுடிக்கிறான். அவனே குடும்பத்தின் தலைவன். குடும்ப நிறுவனத்தை வழிநடாத்துகின்றவன். அத்தகையவன், தான் உருவாக்கிய நிறுவனத்தைத் தகர்த்தெறிய முன்வருவானா? அவன் ஆழமாகச் சிந்தித்த பின்பே தீர்மானங்களுக்கு வருவான். ஆனால் பெண்ணோ உணர்ச்சிகளுக்கு அடிமைப் பட்டு ஆற அமர யோசிக்காமல் அவசர முடிவுகளை எடுக்க முனைபவள். ஆதலால் பலபோது தவறான முடிவுகளுக்கு வருவதற்கான சாத்திக் கூறுகளே அனேகமுள்ளன.

  தலாக் விவகாரத்தில் ஆணுக்கு கூடுதலான உரிமை வழங்கப்பட்டமைக்கு இது ஒரு காரணமாக இருக்கலாம். அதே நேரம் விவாகரத்து விவகாரத்தில் பெண்ணுக்கு விவாக பந்தத்தை பிரிந்து விடுதலை பெறுவதற்கான உரிமையை இஸ்லாம் வழங்கத் தவறவில்லை.

- எனவே தலாக் உரிமை பெண்ணுக்கு முழுமையாக மறுக்கப்பட்டிருந்தாலே பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது எனக் கூற முடியும். ஆனால் அவ்வாறின்றி அவளுக்கும் அதில் உரிமை வழங்கி அவளை இஸ்லாம் கண்ணியப்படுத்தியுள்ளது.

- இஸ்லாம் எல்லா வழிகளிலும் பெண்களை மதித்து உரிமைகளை வழங்கி சமுதா யத்தில் அவர்களைக் கௌரவப்படுத்தியுள்ளது என்பதே உண்மையாகும். எனினும் இஸ்லாத்தின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டோர் கண்மூடித்தனமாகக் கட்டவிழ்த்துவிட்ட விமர்சனக் கணைகள் எத்துணை காணப்பட்டாலும் அவற்றுக்கான பதிலை இத் தெய்வீக மார்க்கம் கொண்டுள்ளது என்பது உண்மையாகும்.

- **உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி I** பலதார மணம், பெண்களின் நிலைபற்றி மாணவர்களுடன் கலந்துரையாடி சிந்தனைக் கிளர்வொன்றை ஏற்படுத்துங்கள்.

**படி II** மாணவர்களை நான்கு குழுக்களாக பிரித்து பின்வரும் தலைப்புக்களில் ஒவ்வொன்றை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்கி அது குறித்து எழுந்துள்ள விமர்சனங்களையும் அவற்றுக்கான பதிலையும் தேட வழிப்படுத்துங்கள்.

குழு 1. பலதார மணம்

குழு 2. பெண்கள் நிலை

குழு 3. குற்றவியலும் தண்டனையும்

குழு 4. ஜிஹாத்

**படி III** ஒவ்வொரு குழுவும் திரட்டியவற்றை தம்மிடையே கலந்துரையாடி பரிமாறிக் கொள்ள வாய்ப்பளியுங்கள்.

**படி IV** ஒவ்வொரு குழுவினரும் தாம் திரட்டிய வற்றை 750-1000 இற்கு உட்பட்ட சொற்களில் ஓர் அறிக்கையாக தயாரித்து கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்து அதில் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுங்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை:**


- அப்துல் அத்தி ஹமூதா, (1985), *இஸ்லாம் உங்கள் பார்வைக்கு* குவைத், I.I.F.S.O.
- கர்ளாவி யூஸுப், பைஸல் மௌலவி, (1985), *த.'.வா பணியில் பெண்கள்* மல்வான, தாருல் அர்கம் வெளியீடு.
- முஹம்மத் குதுப், (1978), *ஐயமும் தெளிவும்*, கொழும்பு-09, இஸ்லாமிய பப்ளிகேஷன் ஸென்டர்.
- ஸாயிக், (1973), *இஸ்லாம் ஓர் அறிமுகம்,* கொழும்பு. இலங்கை இஸ்லாமிய போதனா கழகம் லிமிடெட்.
- அக்ரம் முகம்மத், (2003), *நடைமுறைக்கேற்ற இஸ்லாம்,* பஸ்யால, முஸல்மான் வெளியீடு.
- அல் கர்ளாவி யூஸுப், (1997) *நாளைய முஸ்லிம் பெண்,* பேருவல, அல்கலம் பதிப்பகம்.
- ஜைனுல் ஆப்தீன், (1993), *குற்றச்சாட்டுகளும் பதில்களும்,* சென்னை, இஸ்லாமிய கல்வி வெளியீட்டு நிறுவனம்.
- பாத்திமா ஜனூபா (2000), *இஸ்லாத்தில் பெண்ணுரிமை*, சென்னை, முனீரா பதிப்பகம்.
- மன்சூர் எஸ்.எம். (1999), *உங்கள் இதயத்துடன் இஸ்லாம் பேசுகின்றது,* மாதம்பை, நொலேஜ் பதிப்பகம்.

**தேர்ச்சி 10.0 : ஒழுக்கம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளங்கி அதன் முக்கியத்துவத்தையும் அதனை வளர்க்கும் முறைகளையும் அறிந்து ஒழுகுவார்.**

**தேர்ச்சி மட்டம் 10.1:** ஒழுக்கம் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை கிரகித்து நடைமுறைப்படுத்துவார்.

**காலம்** : 30 பாடவேளைகள்

**கற்றல் பேறு** :

- இஸ்லாம் ஒழுக்கத்துக்கு வழங்கும் முக்கியத்துவத்தை அறிந்து தம்மில் ஒழுக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும் மனப்பாங்கையும் முன்மாதிரியையும் ஏற்படுத்திக் கொள்வார்.
- ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து தன்னிடையே ஆன்மீக செயற்பாடு களை வளர்த்துக் கொள்வார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- **ஒழுக்கம் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம்**
  - இஸ்லாமிய ஷரீஅத்தின் மூலாதாரங்களில் 'குலுக் ஹஸன்', 'அஹ்லாக் ஹஸனா' என்ற சொற்பிரயோகங்கள் நற்பண்புகள், ஒழுக்கவிழுமியங்கள், நல்லொழுக்கம் என்பவற்றைச் சுட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றைக் குறிப்பதற்கு "மகாரிமுல் அஹ்லாக்' என்ற சொற்றொடரும் ஹதீஸில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. 'அதப்', 'ஆதாப்' என்ற பதங்கள் பொதுவாக செயல்களின் ஒழுங்குமுறையை விளக்குவன.
  - அல்லாஹ்வினாலும் அவனது தூதரினாலும் முஸ்லிம்களிடம் இருக்க வேண்டிய பண்புகளும் இருக்கக் கூடாத தீய ஒழுக்கங்களும் வரையறை செய்து வைக்கப்பட்டுள்ளன. மனிதனது மனோஇச்சையும் சமூக சூழலும் கூறுபவை எல்லாம் இஸ்லாமிய ஒழுக்கமாகக் கருதப்படுவதில்லை.
  - நல்லொழுக்கத்துடன் வாழ்வது இம்மையில் மாத்திரமன்றி மறுமையிலும் பயன்தரக் கூடியது. "மறுமைநாளில் முஸ்லிமின் தராசில் நற்பண்பை விட பாரமான எதுவும் இருக்காது'' (திர்மிதி)
  - ஏனைய அமல்கள் போலவே நற்பண்புகளுடனான செயற்பாடுகள் அல்லாஹ்விடத்தில் அங்கீகரிக்கப்படுவதற்கு 'இஹ்லாஸ்' எனும் தூய எண்ணம் அவசியமானதாகும்.
  - இஸ்லாம் அடிப்படையில் அகாயித், இபாதத், முஆமலாத், முனாகஹாத், ஜினாயாத் எனப் பெரும் பகுதிகளாக வகுத்து ஆய்வு செய்யப்படுவது போன்று 'அக்லாகிய்யாத்' ஒழுக்க மாண்புகள் என்ற ஒரு பிரதான பகுதியையும் உள்ளடக்கியுள்ளது. அது ஒரு தனிப் பகுதியாக நோக்கப்படுவது போன்று ஏனைய எல்லாப் பகுதிகளுடனும் இரண்டறக் கலந்ததாகவும் காணப்படுகின்றது.
  - இஸ்லாம் நற்பண்புகளை உயர்ந்த இபாதத்தாகக் கருதுகின்றது. 'நன்மை என்பதே நற்பண்புகள்தான்'' (முஸ்லிம்)

- **வாழ்வில் ஒழுக்கத்தின் முக்கியத்துவம்**

- நல்லொழுக்கம் என்பது நபிமார்களின் -நல்லடியார்களின்- குறிப்பாக முஹம்மத் (ஸல்) அவர்களின் பண்பாகும். அதனை ஏற்று நடப்பது நபியவர்களை முழுமையாகப் பின்பற்றுவதாக அமையும். "நபியே! நிச்சயமாக நீர் மகத்தான நற்குணங்களுடையவராக இருக்கின்றீர்." (68:4)

- முஸ்லிம்களுள் சிறந்தவர் நற்பண்புள்ளவர்தான் என ஹதீஸ்கள் வலியுறுத்துகின்றன.

  "உங்களுள் சிறந்தவர் உங்களுள் சிறந்த பண்பாளரே" (புஹாரி)

- அடிப்படையான வணக்க வழிபாடுகள் கடமையாக்கப்பட்டமைக்கான பிரதான நோக்கங்களுள் ஒன்று நற்பண்புகளை ஏற்படுத்துவதாகும்.

- தொழுகை தீய பண்புகளை அழித்து, நற்பண்புகளை விருத்தி செய்ய வேண்டும்.

  "தொழுகையை நிலைநிறுத்துவீராக. நிச்சயமாக தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும் பாவங்களிலிருந்தும் விலக்குகிறது." (29: 45)

  ஒழுக்கப் பண்புகள் அற்ற தொழுகையாளிக்கு நரகம் இருப்பதாக ஸூறதுல் மாஊன் விபரிக்கின்றது.

- ஸகாத் உளரீதியான, பௌதிக ரீதியான, சமுதாய ரீதியான ஒழுக்க மேம்பாட்டை நோக்காகக் கொண்டது.

  "அவர்களின் செல்வங்களிலிருந்து நீர் ஸகாத்தை எடுத்து, அவர்களைத் தூய்மைப்படுத்தி, பரிசுத்தமாக்கி வைப்பீராக." (9: 103)

- 'ஸதகா' (தர்மம்) என்ற விடயத்தை நபி (ஸல்) அவர்கள் நற்பண்புகளுக்கும் பிரயோகித்துள்ளார்கள்.

  "உனது சகோதரனின் முகத்தைப் பார்த்து புன்னகைப்பது உனக்கு ஸதகாவாகும். (புஹாரி) "வழி தெரியாது தடுமாறுபவருக்கு வழிகாட்டுவதும் உமக்கு தர்மமாகும்." (புஹாரி) "பாதையில் தீங்குகள், முட்கள், எலும்புகள் முதலியவற்றை அகற்றுவதும் உமக்கு தர்மமாகும். (புஹாரி)

- நோன்பு, ஆன்மீகப் பக்குவத்தையும் சிறந்த பண்புகளையும் உருவாக்கும்.

  "விசுவாசிகளே! உங்களுக்கு முன்னிருந்தோர் மீது விதியாக்கப்பட்டிருந்த பிரகாரமே உங்கள் மீதும் நோன்பு நோற்பது விதிக்கப்பட்டுள்ளது. அதனால் நீங்கள் பரிசுத்தவான்களாகலாம். (2: 183)

  "பொய் பேசுவதையும் அதன்படி செயற்படுவதையும் யார் விட்டுவிடவில்லையோ அவர் தனது உணவையும் பானத்தையும் தவிர்ப்பதில் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையுமில்லை." (புஹாரி)

- ஹஜ் நல்லொழுக்கத்தை வளர்க்கும் செயற்பாட்டுக் களமாக அமைந்துள்ளது.

  "ஹஜ்ஜில் சம்போகம் , துர்வார்த்தை பேசுதல், சச்சரவு செய்துகொள்ளல் கூடாது" (2: 197)

- ஒழுக்கப் பண்புகள் ஈமானோடு இணைந்த அம்சமாகும். ஒழுக்கத்தில் பலவீனமாக இருப்பது ஈமானியப் பலவீனத்தைச் சுட்டிக் காட்டும்.

  "ஈமான் கொண்டோரே! அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். உண்மை பேசுபவர் களுடன் சேர்ந்திருங்கள்." (9: 119)

  "யார் அல்லாஹ்வையும் மறுமைநாளையும் ஈமான் கொண்டிருக்கின்றாரோ அவர் நல்லதையே பேசட்டும் அல்லது மௌனமாக இருக்கட்டும்." (புஹாரி)

- நல்லொழுக்கங்களின் அதிகரிப்பு ஈமானை அதிகரிக்கச் செய்யும்.

  "நிச்சயமாக மு.'.மின்களுள் மிகப் பூரணமாக ஈமானுள்ளவர் மிகச் சிறந்த ஒழுக்க முள்ளவராவார்." (திர்மிதி)

- தீய பண்புகள் ஈமானைப் பாதிக்கும்.

  "அல்லாஹ்வின் மீது ஆணையாக அவன் ஈமான் கொண்டவனல்லன்." (மூன்று முறை) என நபி (ஸல்) அவர்கள் கூற, "அவன் யார் இறைதூதரே" என வினவப்பட்டது. அதற்கவர் "யாருடைய தீங்குகளிலிருந்து அவனது அண்டை வீட்டான் பாதுகாப்புப் பெறவில்லையோ அவன்" என்றார்கள். (புஹாரி)

- முனாபிக்கின் (நயவஞ்சகன்) அடையாளங்களும் தீய ஒழுக்கங்களாகும்.

  "மூன்று பண்புகள் யாரிடமிருக்கின்றனவோ அவன் முனாபிக்காவான். அவன் நோன்பு பிடித்து, தொழுது, ஹஜ் செய்து, உம்றாச் செய்து. தன்னை ஒரு முஸ்லிம் எனக் கூறிக் கொண்டாலும் சரியே. அவன் பேசினால் பொய் பேசுவான். வாக்களித்தால் மாறுசெய்வான். நம்பினால் துரோகமிழைப்பான்." (முஸ்லிம்)

- நற்பண்புகளினூடாக முஹம்மத் (ஸல்) அவர்களின் நேசம் கிடைப்பதற்கும் மறுமையில் அவருடன் நெருங்கியிருப்பதற்கும் வாய்ப்பேற்படும்.

  "எனக்கு மிகவும் விருப்பமான, மறுமையில் எனக்கு மிகவும் அருகாமையில் இருக்கக் கூடியவரை நான் உங்களுக்கு அறிவித்துத் தரட்டுமா," (அதனை இரண்டு அல்லது மூன்று முறை திருப்பிக் கேட்டார்கள்.) அதற்கு ஸஹாபாக்கள், 'ஆம், அல்லாஹ்வின் தூதரே' என்றார்கள். அதற்கவர்கள் 'உங்களுள் மிகச் சிறந்த பண்பாளர்' என்றார்கள். (அஹ்மத்)

- **ஆன்மீக மேம்பாடும் ஒழுக்கமும்**

  - மனிதன் உடல், அறிவு, ஆன்மா என்ற மூன்று பிரதான கூறுகளைக் கொண்டவன். அவை மூன்றும் ஒருசேரப் போஷிக்கப்படும் போதுதான் சீர்மையான இஸ்லாமிய வாழ்வு அமையும்.
  - ஆன்மீக வாழ்வுக்கும் ஒழுக்கத்திற்கும் இடையில் மிக நெருக்கமான தொடர்புண்டு. உளரீதியான ஒழுக்கங்கள் என ஒரு தனியான பகுதியே இருக்கின்றது. அந்த வகையில் அவை இரு வகைப்படும்.

    1. ஆன்மீகத்தைத் தூய்மைப்படுத்தும், விருத்தி பெற வைக்கும் ஒழுக்கங்கள்.

    தக்வா, இஹ்லாஸ் (உளத்தூய்மை), குஷூ'.(பயபக்தி), குழூஉ(பணிவு), வர.'. (பேணுதல்) நல்லெண்ணம், நிதானம், அன்பு, கருணை, மன்னிக்கும் மனப்பான்மை, பொறுமை போன்றன ஆன்மீக ஒழுக்கங்களாகும்.

**1. இறையச்சம் (தக்வா)**

- அல்லாஹ் ஏவியவற்றை ஏற்றும், அவன் விலக்கியவற்றை முற்றாகத் தவிர்த்தும் நடப்பதன் மூலம் இம்மை, மறுமையில் அல்லாஹ்வின் வேதனையிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வதையே தக்வா என்கின்றோம்.
- அல்குர்ஆனும், ஹதீஸும் பல இடங்கில் இறையச்சத்தை வலியுறுத்தியுள்ளன.

  "ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வை உண்மையான முறையில் பயப்படுங்கள். நீங்கள் முஸ்லிம்களாகவன்றி மரணிக்க வேண்டாம்" (3: 102)

  "அதிகமாக சுவர்க்கத்தில் நுழைவிப்பது எது என நபியவர்களிடம் வினவப்பட்டது. அதற்கவர் 'இறையச்சமும் நற்பண்பும்' என்றார்கள். (திர்மிதி)

பல நற்பண்புகளின் ஆணிவேராக தக்வாவை அல்குர்ஆன் அறிமுகப்படுத்துகின்றது.

"நீங்கள் நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். அது இறையச்சத்துக்கு மிக நெருங்கியது" (5: 80)

"நீங்கள் மன்னிப்பளிப்பது தக்வாவுக்கு மிக நெருங்கியது" (2: 237)

- தக்வாவினால் ஏற்படும் பலன்கள்

i) அல்லாஹ்வின் நேசத்துக்குரியவர்களாக மாறுதல்:

"அறிந்துகொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் நேசர்கள் -அவர்களுக்கு யாதொரு பயமுமில்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள். அவர்கள் எத்தகையோரென்றால், ஈமான் கொண்டு, இறையச்சம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். (10: 62,63)

ii) மறுமையில் கிடைக்கும் அதிக நன்மைகளும் சுகபோகங்களும்:

"இறையச்சத்தோடு நடந்து கொள்பவர்களுக்கு அவர்களின் இரட்சகனிடத்தில் சுவனபதிகள் உண்டு. அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்." (3: 15)

iii) அல்லாஹ்வின் அருளைப் (ரஹ்மத்) பெற்றுக் கொள்ளல்:

"என்னுடைய அருளோ எல்லா வஸ்துக்களிலும் சூழ்ந்து விசாலமாகியுள்ளது. ஆகவே அதனை (எனக்கு) பயந்து, ஸகாத்தும் கொடுத்து வருகிறார்களே அத்தகையோருக்கும்...." (7: 156)

iv) பிரச்சினைகளுக்குத் தீர்வும் கஷ்டங்களுக்கு விடிவும்:

"எவர் அல்லாஹ்வுக்குப் பயந்து நடக்கிறாரோ அவருக்கு வெளியேறும் வழியை அவன் ஆக்குவான். மேலும் அவர் எண்ணியிராத விதத்தில் அவருக்கு வாழ்வாதாரங்களை வழங்குவான். (65: 2-3)

v) உதவியும் அதிகாரமும்

"நிச்சயமாக இந்தப் பூமி அல்லாஹ்வுக்கே உரியது. இதனை அவன் தன் அடியார்களில் தான் நாடியவர்களுக்கு அனந்தரமாக்கி விடுவான். (நல்ல முடிவு தக்வாவுள்ளவர்களுக்கே)" (7: 128)

vi) பொதுவாக தக்வாவுள்ளவர்களின் தனிமனித, குடும்ப, சமூக, வாழ்வு சீர்மை பெற்றதாகவும் அமைதி நிரம்பியதாகவும் இருக்கும்.

## 2. உண்மை பேசுதல் (ஸித்க்)

- உண்மை பேசுதல் போன்று சமூகத்தின் ஸ்திரத்தன்மையையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தும் வேறு எந்தப் பண்பும் கிடையாது. இதனால்தான் உண்மை பேசுதல் என்ற பண்பு சமூகங்களைக் கட்டியெழுப்பும் அடிப்படை நற்பண்பாகக் கொள்ளப் படுகின்றது.
- அல்குர்ஆனும், ஹதீஸும் பல்வேறு இடங்களில் உண்மை பேசுதலைப் பற்றிப் பேசியுள்ளதோடு, பொய் பேசுவதைத் தடுத்துமுள்ளது.

"ஈமான் கொண்டவர்களே அல்லாஹ்வைப் பயந்துகொள்ளுங்கள். சீரான (உண்மையான) பேச்சையே பேசுங்கள். (33: 70)

“நீங்கள் உண்மையைக் கைக்கொள்ளுங்கள். நிச்சயமாக உண்மை நன்மைக்கு இட்டுச் செல்லும். நன்மை சுவர்க்கத்திற்கு இட்டுச் செல்லும். மனிதன் தொடர்ந்து உண்மை பேசி, அதை அவன் பேணி வந்தால் அல்லாஹ்விடத்தில் அவன் உண்மையாளன் என எழுதப்படுவான். நான் உங்களுக்கு பொய்யை எச்சரிக்கின்றேன். நிச்சயமாக பொய் பாவத்திற்கு இட்டுச் செல்லும். பாவம் நரகிற்கு அழைத்துச் செல்லும். மனிதன் தொடர்ந்தும் பொய் சொல்லி அதிலேயே நிலைத்து நிற்பானாயின் அல்லாஹ்விடத்தில் அவன் பொய்யன் என எழுதப்படுவான்.” (முஸ்லிம்)

- அமானிதத்தைப் பேணுவதும், வாக்குறுதியை நிறைவேற்றுவதும் உண்மைக்குச் செயல் வடிவம் கொடுக்கும் அம்சங்களாகும். உண்மையின் காவலர்கள் மக்களால் விரும்பப்படுவர். செல்வங்களுக்கு பொறுப்புதாரர்களாகப் செயற்படுவர். அவர்களது சாட்சியங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்படும். மறுமையில் அவர்களுக்கு நற்பயன்களுண்டு. மாறாக பொய்யர்களை மக்கள் விரும்பவும் மாட்டார்கள். அவர்களை நம்பவும் மாட்டார்கள். அவர்களது சாட்சியங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மறுமையிலும் தண்டனையும் வேதனையும் அவர்களுக்குண்டு.

**2. பொறுமை (ஸப்ர்)**

- பொறுமை மிகச் சிறந்த பண்பாகும். அல்குர்ஆன் கிட்டத்தட்ட 70 இடங்களில் அது பற்றிக் கூறியுள்ளது.

“பொறுமையாளர்கள் தங்களது கூலியைக் கணக்கின்றி, நிரப்பமாக வழங்கப்படுவர். (39: 10)

“அவர்கள் பொறுமையாக இருந்ததன் காரணமாக சுவனத்தையும் (அணிவதற்கு) பட்டாடையையும் அவன் நற்கூலியாக வழங்குகின்றான்.” (86: 12, 32: 23, 3: 186, 2: 249, 16: 126, 2: 155-157)

“பொறுமையை முறைமையாக ஆக்கிக் கொள்பவனுக்கு அல்லாஹ் பொறுமையை வழங்குகின்றான். இன்னும் பொறுமையைப் பெற்றவரை விட சிறந்த சன்மானத்தை பெற்றவர் எவருமில்லை.” (புஹாரி)

- பொறுமை பலவிதமாக அமையும்.

அ) கீழ்ப்படிதலில் வெளிப்படுத்தப்படும் பொறுமை

இது இஸ்லாம் பணித்த தொழுகை முதலான கடமைகளை நிறைவேற்றுவதில் காட்டப்படும் பொறுமையாகும். அவற்றை மனிதன் வாழ்நாள் முழுவதிலும் தொடர்ந்து நிறைவேற்ற பொறுமை தேவையாகும்.

ஆ) பாவங்களிலிருந்து தடுத்துக் கொள்ளும் பொறுமை. தவறு செய்து விடாமல் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதும், பாவங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதுவும் பொறுமையாகும். பாவமும் குற்றமும் கவர்ச்சிமிக்கவை. அவை இலகுவில் மனிதனை அதல பாதாளத்திற்குள் தள்ளிவிடும்.

இ) துன்பங்களும், கஷ்டங்களும் வாட்டும்போது ஏற்படும் பொறுமை. உயிர், உடமை, குடும்பம், அந்தஸ்து போன்றவற்றில் ஏற்படும் இழப்பின்போது முஸ்லிம் பொறுமை காத்திடுவான். இந்நிலை மு.ஃமினுக்குப் பெரும் நன்மையாகவே முடியும். “ஓரளவு பயத்தாலும் பசியாலும் பொருட்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் நஷ்டத்தாலும் நாம் உங்களைச் சோதிப்போம். என்றாலும் (நபியே) இச்சோதனை களால் ஏற்படும் கஷ்டங்களைச் சகித்துக் கொண்டிருப்போருக்கு நீர் நன்மாராயம் கூறுவீராக” (2: 155)

### 3. அமானிதம் (அமானத்)

- அமானிதம் பேணுதல் ஒரு முஸ்லிமின் வாழ்வில் இருக்க வேண்டிய ஒரு முக்கிய பண்பாகும். 'அமானத்' என்ற சொல்லை மிகவும் விரிந்த பொருளில் இஸ்லாமிய ஷரீஅத் கையாள்கின்றது.

"உங்களில் ஒவ்வொருவரும் ஒரு பாதுகாவலரே. உங்களுக்குக் கீழிருந்தவர்கள் குறித்து உங்கள் ஒவ்வொருவரிடமும் கேள்வி கேட்கப்படும். இமாம் (தலைவர்) ஒரு பாதுகாவலரே. அவர் அவருக்குக் கீழிருந்தவர்கள் பற்றிக் கேட்கப்படுவார். ஒவ்வொரு மனிதனும் தன் வீட்டில் வசிப்பவர்களின் பாதுகாவலனாவான். அவன் அவர்களைப் பற்றி வினவப்படுவான். ஒரு மனைவி தன் கணவனின் வீட்டைப் பாதுகாப்பவள். அவள் அது குறித்துக் கேட்கப்படுவாள். வேலைக்கு அமர்த்தப்பட்டவன் தன் எஜமானின் பொருட்களின் பாதுகாவலனாவான். அவன் அவனுடைய பொறுப்பு குறித்து கேள்வி கேட்கப்படுவான்." (புஹாரி)

**அமானிதம் பேணுதல் பல்வேறு அமைப்புக்களில் அமையலாம்**

அ) தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொருளை, செல்வத்தைப் பொறுப்போடு பாதுகாத்தல்.

நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் போவதற்கு முன்னர் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொருட்களை திருப்பி ஒப்படைப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டே சென்றார்கள்.

"தன்னை நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருட்களைக் காப்பாற்றாதவன் ஈமான் இல்லாதவன். தான் தந்த வாக்குறுதியைக் காப்பாற்றாதவன் இஸ்லாத்தைப் புறக்கணித்தவன்." (ஹதீஸ்)

ஆ) தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பதவியையும், பொறுப்பையும் சீராக நிறைவு செய்தல்.

பதவிகள், பொறுப்புகள் மிகவும் பொருத்தமான ஒருவரின் கையிலேயே கொடுக்கப்படல் வேண்டும்.

அபூதர் (ரழி) தன்னை ஏதேனும் ஒரு பிரதேசத்திற்கு ஆளுநராக நியமிக்குமாறு நபியவர்களிடம் கேட்டபோது 'அபூதர்ரே! நீர் பலவீனமானவர். இந்தப் பொறுப்பு ஓர் அடைக்கலப் பொருளாகும். இறுதித் தீர்ப்பு நாளில் கண்ணியத்தை இழக்கின்ற நிலைக்கும் அவமானமானதொரு நிலைக்கும் இது இட்டுச் சென்றுவிடும். எனினும், இந்தப் பொறுப்பை அதன் எல்லாச் சுமைகளோடும் ஏற்றுக் கொண்டு, ஏற்றுக் கொண்டவைகளை நிறைவு செய்பவர்கள் காப்பாற்றப்படுவார்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

"பொறுப்புக்களை தகுதியற்றவர்களின் கைகளில் ஒப்படைக்கும் காலம் தோன்றியதும் இறுதிநாளை எதிர்பாருங்கள்." (புஹாரி)

இ) செல்வத்தையும், திறமையையும் சரியான அமைப்பில் பயன்படுத்துதல்.

மனிதனின் பொறுப்பிலும் பாதுகாப்பிலும் ஒப்படைக்கப்பட்ட அமானிதப் பொருட்களாக செல்வமும், திறமையும் காணப்படுகின்றன. அவற்றை அல்லாஹ் மனிதனுக்குக் கொடுத்துள்ளான். அவற்றின் பிரயோகம் பற்றி மறுமையில் அல்லாஹ் வினவுவான். அவற்றை அல்லாஹ்வின் திருப்தியை நோக்காகக் கொண்டு ஒரு முஸ்லிம் பயன்படுத்துவான்.

ஈ) இரகசியம் பேணல்:

"அடுத்தவர்களின் இரகசியங்களும் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஓர் அமானிதப் பொருளாகும். அவற்றை வெளியே அம்பலப்படுத்தி விடாமல் நாம் பாதுகாத்திடல் வேண்டும் எனக் கேட்கப்பட்டால் அது அவரிடம் ஒப்படைக்கப்பட்ட ஓர் அடைக்கலப் பொருளே (அமானத்) ஆகும்." (ஹதீஸ்)

கணவன்-மனைவியின் அந்தரங்க வாழ்க்கையின் புனிதத்துவத்தை பாதுகாக்கும் நோக்கில், தாம்பத்திய உறவின் இரகசியங்களை வெளியே சொல்லாமல் பாதுகாப்பதும் அமானிதமாகக் கருதப்படுகின்றது. “இறுதித் தீர்ப்பு நாளில் மிகப் பெரிய சுரண்டல் பேர்வழியாக இறைவன் முன்நிற்பவன் யார் தெரியுமா? எனக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் கீழ்வருமாறு பதிலையும் சொன்னார்கள். ஒருவன் தன் மனைவியை அதிகமாக நேசிப்பான். அதேபோல் மனைவி அவனை நேசிப்பாள். ஆனால், அவன் அவனுடைய மனைவியின் இரகசியங்களை அடுத்தவர்களிடம் சொல்வான்.” (முஸ்லிம்)

மேலே குறிப்பிட்டுக் காட்டப்பட்ட பண்புகள் ஒரு முஸ்லிமிடம் காணப்பட வேண்டிய முக்கிய பண்புகளாகும். இதுபோன்று இன்னும் பல பண்புகள் முஸ்லிமின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்து செயற்பட வேண்டும் என அல்குர்ஆனும், அல்ஹதீஸும் வேண்டுகின்றன. இந்தப் பண்புகள் செயற்பாட்டில் அமையும்போதே முஸ்லிம் சமூகத்தில் வாழும் தனிமனிதர்களும், குடும்பங்களும் பொதுமக்களும் சீரமையையும், அமைதியையும் ஒழுங்கையும் பெற்றுக் கொள்வர்.

2. ஆன்மீகத்தைப் பாதிக்கும் தீய ஒழுக்கங்கள் பெருமை, பொறாமை, கர்வம், தீய எண்ணம், நிபாக், ரியாஉ, மனோஇச்சைக்குக் கட்டுப்படல், அவசர புத்தி, கோபம், சுயநலம் போன்றன ஒரு மு:மின் தவிர்த்துக் கொள்ள வேண்டிய தீய பண்புகளாகும்.

**பொறாமை**

- “விறகை நெருப்பு எரிப்பது போல் நன்மைகளைப் பொறாமை எரித்துவிடும். (அபூதாவூத்)
- “வேதம் கொடுக்கப்பட்டவர்கள், நபியவர்களை எதிர்ப்பதற்கு பொறாமை காரணம்.” (2:119)
- “அடியார்கள் உள்ளத்தில் ஈமானும் பொறாமையும் இணையாது” (ஹதீஸ்)
- “வெட்கமும் ஈமானும் இணை பிரியாதவை” (ஹதீஸ்)
- “அழிப்பவை மூன்றாகும். அடிபணியப்படும் கஞ்சத்தனம், பின்பற்றப்படும் மனோஇச்சை, ஒருவனது தற்பெருமை.” (தபரானி)
- “நபி (ஸல்) அவர்களுடன் பண்பாடில்லாமல் நடப்பது நற்செயல்களை அழித்து விடும்.” (49:2)
- “மனக் கசப்புடன் இருப்பது நன்மைகளை அழிக்கும்.” (திங்கள், வியாழன் நாட்களில் அல்லாஹ்வின் தீர்ப்பு இது)

**பெரும் பாவங்கள்: சில உதாரணங்கள்**

ஷிர்க், நியாயமின்றிக் கொலை செய்வது, சூனியம், வட்டி சாப்பிடல், அனாதையின் பொருளை அனுபவித்தல், மு:மினான அப்பாவிகளான கற்புநெறியுள்ள பெண்கள் மீது படுதூறு கூறுவது, யுத்த களத்தில் புறமுதுகிட்டு ஓடுவது, பெற்றாரைத் துன்புறுத்து வது, இனபந்துக்களது உறவைத் துண்டிப்பது, பொய்ச் சாட்சியம் கூறுவது, தொழுகை, ஸகாத் என்பவற்றை விட்டு விடுவது, மது, விபசாரம், தன்னினச் சேர்க்கை, லஞ்சம், தற்கொலை... போன்றன (முதல் ஏழும் மூபிகாத் எனப்படும்).

**பொய் பேசுதல்**

அ) “தப்பெண்ணங்களைக் கைவிடுங்கள். ஏனெனில் தப்பெண்ணங்களே மிகப் பெரிய பொய்மைக்கு வழிவகுக்கும். (புஹாரி)

“உண்மை திருப்தியைத் தரும். பொய் ஐயங்களுக்கும் சபலங்களுக்கும் வழிவகுக்கும். (திர்மிதி)

“அல்லாஹ்வின் தூதரவர்கள் பொய்யை வெறுத்தது போல் வேறெதையும் வெறுத்த தில்லை. ஒரு மனிதன் பொய் சொன்னான் என்ற செய்தி எட்டினால், அந்த மனிதன் திருந்தி பாவமன்னிப்புத் தேடினான் என்ற மறுசெய்தி வரும் வரை அந்த மனிதனின் கண்ணியத்தையும் மரியாதையையும் காற்றிலே வீசி விடுவார்கள் நபி (ஸல்) அவர்கள்” (அஹ்மத்)

“ஒரு மு.்.மினிடம் எல்லாத் தீமைகளும் இருக்கலாம். ஆனால், அவனிடம் பொய் இருக்கக் கூடாது.” (அஹ்மத்)

ஆ) ஒரு முஸ்லிம் உண்மைக்கும் நேர்மைக்கும் அதிமுக்கியத்துவம் வழங்க வேண்டும். பொய்யை அவன் தவிர்க்க வேண்டும். நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் பொய்யைக் கடுமையாக வெறுத்தார்கள். ஒரு மு.்.மினிடம் காணப்படக் கூடாத ஒன்றே பொய்யாகும். குழந்தை வளர்ப்பிலும், கொடுக்கல், வாங்கலிலும், வாய்மை கடைப்பிடிக்கப்பட வேண்டும். பொய் சொல்லும் பழக்கம் அழிவைத் தேடித் தரும். ஈமானைப் பலவீனப்படுத்திவிடும்.

### பெருமை

அ) பெருமை, கண்ணியம் என்பன எனது ஆடைகளாகும். இவற்றில் ஒன்றையாவது எவன் என்னிடமிருந்து எடுத்துக் கொள்கிறானோ அவனை நரகில் நுழையச் செய்வேன். (முஸ்லிம்)

ஆ) மனிதன் தான் அடையும் செல்வத்தினால், பட்டம் பதவிகளினால், கல்வி, அதிகார, அந்தஸ்துகளினால், வம்சாவழி பாரம்பரியங்களினால், தனது செயல்களினால், பெற்றிருக்கும் உடல் அழகினால் பெருமையடித்துக் கொள்கிறான். இவையெல்லாம் வெறும் பிரமைகள், சோதனைகள் என்பதை ஏனோ மனிதர்கள் பலர் புரிந்து கொள்ளத் தவறிவிடுகின்றனர்.

இ) எனவே மனிதன் இங்கு ஏழையாகவோ - பணக்காரனாகவோ, பலசாலியாகவோ - பலவீனனாகவோ, நோயாளியாகவோ, சுகதேகியாகவோ, அறிவாளியாகவோ- அறிவீனனாகவோ, ஆட்சியாளனாகவோ-அடிபணிபவனாகவோ இருப்பதெல்லாம் இறைவனின் அடியொட்டியேயாகும். எனவே, அவன் தனது மேலான அந்தஸ்திற்காக ஆணவம் கொள்ளவோ, அடுத்தவனைப் பார்த்து எள்ளி நகையாடவோ கூடாது.

ஈ) எவனுடைய உள்ளத்தில் அணுவளவேனும் பெருமை குடிகொண்டிருக்கின்றதோ அவன் சுவனம் செல்ல மாட்டான். (ஹதீஸ்)

உ) “வானங்களின் இறைவனும் பூமியின் இறைவனும் உலகங்கள் யாவற்றின் இறைவனுமாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரித்தாகும். வானங்களிலும் பூமியிலுமுள்ள (சகல) பெருமைகளும், அவனுக்கே சொந்தமானவை. அவனே (யாவரையும்) மிகைத்தோனும் ஞானமுடையோனுமாக இருக்கிறான்” (45:36-37)

ஊ) பெருமையும் புகழும் இறைவன் ஒருவனுக்கே சொந்தமானவை. அவை அவனுடைய பண்புகளுக்கே பொருத்தமானவை. அல்லாஹ்விற்குச் சொந்தமான இப்பண்பை மனிதன் அபகரித்துக் கொள்ள முயற்சிப்பது முறையற்ற செயலாகும்.

எ) இறைவன் முன் மனிதன் தன்னை எந்தளவிற்கு பணிவு மிக்கவனாக ஆக்கிக் கொள்கிறானோ அந்த அளவிற்கு மனிதனின் மத்தியில் அவன் உயர்வும் கண்ணியமும் பெறுவான்.

ஏ) பெருமை மனிதனை இழிவுபடுத்தக் கூடியது. பணிவோ உயர்வையும் வெற்றியையும் நல்கக் கூடியது.

**கோள் சொல்லல்**

புறம் பற்றிக் குறிப்பிடும் அதே இடத்தில் குர்ஆன் கோள் சொல்வது பற்றியும் குறிப்பிட்டிருக்கிறது. ஒரு மனிதன் சொன்ன ஒரு விடயத்தை மற்றொருவனிடம் அப்படியே சொல்வது அல்லது திரிபுபடுத்திச் சொல்வது, அதனூடாக பகைமைகள், குரோதங்கள் வளர்ந்து நட்புறவுக்குக் களங்கம் ஏற்படுத்த முனைவது கோளாகும்.

“நபியே! எடுத்ததற்கெல்லாம்) சத்தியம் செய்யும் எந்த நீசனையும் நீர் வழிப்படாதீர். அவன் சதா (புறம் பேசிக்) குற்றங் கூறி, கோள் சொல்வதையே தொழிலாகக் கொண்டு திரிபவன். (68:10-11)

“கோள் சொல்லித் திரிபவன் சுவனம் நுழையமாட்டான்” (புஹாரி)

நபி (ஸல்) அவர்கள் ஒரு கப்ரின் பக்கத்தால் சென்று கொண்டிருக்கும்போது இக்கப்ரில் உள்ளவர் கோள் சொன்ன காரணத்தினால் வேதனைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார் எனக் குறிப்பிட்டார்கள். (புஹாரி)

**புறம் பேசல்**

(எவருடைய குற்றத்தையும்) நீங்கள் துருவித் துருவி விசாரித்துக் கொண்டிருக்க வேண்டாம். உங்களில் ஒருவர் மற்றெவரையும் புறம் பேச வேண்டாம். (49:1)

“புறம் பேசுதல் என்றால் என்ன என்று நீங்கள் அறிவீர்களா? என நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களை நோக்கிக் கேட்டார்கள். அதற்கு அவர்கள் “அல்லாஹ்வும் அவன் தூதருமே அறிவர்” எனப் பதில் சொன்னார்கள். “உனது சகோதரன் வெறுக்கும் ஒரு அம்சத்தைப் பற்றிக் கூறுவதே புறமாகும்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். “சொல்லும் விடயம் அச்சகோதரினடம் இருந்தாலுமா?” எனக் கேட்கப்பட்டது. “நீ அவனிடம் உள்ளதைக் கூறினால் புறம் பேசிவிட்டாய். இல்லாததைக் கூறினால் அவன் மீது அபாண்டம் சுமத்தி விட்டாய்” என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். (முஸ்லிம்)

புறம் அடுத்தவர்களது கண்ணியம், மானம் ஆகியவற்றைப் பறித்து விடுகின்றது. நாவுகளைப் புறம் பேசுவதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். பேசினால் நல்லதைப் பேச வேண்டும். இன்றேல் மௌனம் சாதிக்க வேண்டும்.

ஒரு மனிதன் விரும்பாத விதத்தில் அவனது தோற்றம், பண்புகள், பரம்பரை பற்றிப் பேசுவதும் புறமாகும். ஒருமுறை ஆயிஷா (றழி) அவர்கள், ஸபிய்யா (ரழி) அவர்கள் குட்டையானவர் எனப் பேசியதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் ஆயிஷாவை நோக்கி “நீர் இப்போது பேசிய வார்த்தையை கடல்நீரில் கலந்துவிட்டால் அது கூட நாசமாகிவிடும் என்றார். (அபூதாவூத்)

“உங்களில் எவனும் தன்னுடைய சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவானா? அதனை நீங்கள் வெறுப்பீர்களே! (புறம் பேசுவதும் அவ்வாறே) நீங்கள் அல்லாஹ்விற்குப் பயந்துகொள்ளுங்கள். (49:12)

**அவதூறு கூறல்**

“எவர் கற்புடைய பெண்கள் மீது அவதூறு கூறி (அதற்கு வேண்டிய) நான்கு சாட்சிகளை அவர்கள் கொண்டு வராவிட்டால், அவர்களை நீங்கள் எண்பது கசையடி அடியுங்கள். பின்னர் அத்தகையவர்கள் கூறும் சாட்சியத்தை எக்காலத்திலும் ஒப்புக்கொள்ளாதீர்கள். நிச்சயமாக அவர்கள் (வரம்பு மீறிய) தீயவர்கள். (24:4)

அவதூறு கூறுவது பெரும் குற்றமாகும். அதற்கு 80 கசையடிகள் வழங்கும்படி இஸ்லாம் கூறுகிறது. அவதூறு பாரதூரமான குற்றம் என்பதனாலேயே கடும் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவதூறு கூறியவரின் சாட்சியத்தை அவர் இறக்கும்வரை ஏற்றுக் கொள்வதில்லை. அவரை பாஸிக் (பெரும் பாவி) என குர்ஆன் குறிப்பிடுகின்றது. ஒருவன் விபச்சாரத்தில் ஈடுபடுவதை இன்னொருவர் காணும் பட்சத்தில் அவர் அது பற்றி எவருடனும் பேசித் திரியலாகாது. ஆனால், நான்கு பேர் சேர்ந்து காண நேர்ந்தால் நேரே நீதிபதியிடம் சென்று தெரிவித்து விபச்சார குற்றத்தை நிரூபிக்கலாம். அவதூறுக்கான தண்டனை இவ்வளவு கடுமையாக அமையக் காரணம் மானத்தை விட உலகில் மிகப் பெறுமதி வாய்ந்த சொத்து வேறு எதுவுமில்லை என்பதனாலாகும்.

- பொதுவாக ஒழுக்க மாண்புகளோடு வாழ்வது ஆன்மீகத்தைச் சீர்ப்படுத்தும். உண்மை பேசி, பிறருடன் அன்பாக நடந்து, பிறர் நலன் பேணிச் செயற்படும்போது அது ஆன்மீகத்தை விருத்தியுறச் செய்யும்.
- அடிப்படையான வணக்க வழிபாடுகள் ஆன்மீக மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டவை. 'இஹ்லாஸ்' என்ற தூய எண்ணமின்றி எந்த இபாதத்தும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எனவே அது பிரதானமானது.
- பொதுவாக தீய பண்புகளுடன் வாழ்வது ஆன்மீகத்தையும் பாதிக்கும். கோள் பேசி, புறம் பேசித் திரிகின்ற ஒருவரின் ஆன்மாவும் மிகப் பலவீனமாக இருக்கும்.
- மேலுள்ள கருத்துக்களை நபி (ஸல்) அவர்கள் இரத்தினச் சுருக்கமாக கீழ்வரும் ஹதீஸில் குறிப்பிட்டுள்ளார்கள்.

  "யார் தனது உள்ளத்தை பரிசுத்தமான ஈமானுடனும் தூய்மையானதாகவும், தனது நாவை உண்மை பேசக் கூடியதாகவும் தனது ஆன்மாவை அமைதி பெற்றதாகவும் தனது பண்புகளைச் சீரானதாகவும் அமைத்துக் கொள்கின்றாரோ அவர்தான் வெற்றி பெற்றவர். (இப்னு ஹிப்பான்)

- **உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி I** ஒழுக்கம், அல்-அக்லாக் என்ற பதம் குறித்து மாணவர்கள் விளங்கி வைத்திருப்பவை பற்றி கலந்துரையாடுங்கள்.

**படி II** மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து பின்வரும் தலைப்புகளை வழங்கி அவை பற்றித் தகவல் திரட்ட வழிப்படுத்துங்கள்.

- ஒழுக்கம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்
- இஸ்லாம் ஒழுக்க வாழ்வுக்குக் கொடுத்துள்ள முக்கியத்துவம்
- முஸ்லிமிடம் காணப்பட வேண்டிய ஒழுக்கப் பண்புகள்
- ஆன்மீக மேம்பாட்டுக்கான இஸ்லாமிய வழிகாட்டல்கள்

**படி III** ஒவ்வொரு குழுவும் திரட்டிய கருத்துக்களை முன்வைத்து கருத்துப் பரிமாற சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV** கருத்துப் பரிமாற்றத்தின் சாராம்சத்தை ஒவ்வொருவரும் எழுதிக் கொள்ள அறிவுறுத்துங்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை:**


- முகம்மத் அல் கஸ்ஸாலி, (2004), *இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள்,* சென்னை, இலக்கியச் சோலை வெளியீடு.
- அகார் முகம்மத் ஏ.ஸீ. (1991), *நபிவழி I, II,* பேருவல, அல்கலம் பதிப்பகம்.
- கஸ்ஸாலி இமாம், (1986), *பதவி மோகம்,* சென்னை, யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்.
- கஸ்ஸாலி இமாம், (1986), *நாயகத்தின் நற்பண்புகள்,* சென்னை, யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்.
- அக்ரம் முகம்மத், (2004), *ஆன்மிக வாழ்வு போதனைகளும் முறைமைகளும்,* பஸ்யாலை, முஸல்மான் பதிப்பகம்.
- சுக்ரி எம்.ஏ.எம். (1999), இஸ்லாமிய வாழ்வியல் கோட்பாடுகள், பேருவல, நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்.
- இஸ்மாயில் எஸ்.எச்.எம். (2000), இஸ்லாமிய ஒழுக்கவியல், குருநாகல், ஜ.அ.ஸு.மு.

**தேர்ச்சி 10.0 : ஒழுக்கம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளங்கி அதன் முக்கியத்துவத்தையும் அதனை வளர்க்கும் முறைகளையும் அறிந்து ஒழுகுவார்.**

**தேர்ச்சி மட்டம் 10.1:** இஸ்லாம் கூறும் ஒழுக்கப் போதனைகளையும் வழிமுறைகளையும் பிரயோகித்து இஸ்லாமிய ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பார்

**காலம்** : 30 பாடவேளைகள்

**கற்றல் பேறு** :

- ஒழுக்கத்தை விருத்தி செய்துகொள்வதற்கான போதனைகளை விளங்கி வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவார்.
- தனிநபர் வாழ்விலும் குடும்ப வாழ்விலும் பின்பற்றத்தக்க ஒழுக்கங்களை அறிந்து கடைப்பிடித்து வருவதோடு, பிறரையும் அதன் வழி நடக்கத் தூண்டுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- **ஒழுக்கத்தை விருத்தி செய்வதற்கான போதனைகளும் நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளும்**
  - இஸ்லாம் அதன் கோட்பாடுகள், வணக்க வழிபாடுகள், சட்டதிட்டங்கள் ஊடாக ஒழுக்கத்தை விருத்தி செய்வதற்கான போதனைகளை வழங்கியுள்ளது.
  - அல்லாஹ் ஒருவன், அவனது சட்டதிட்டங்களை வாழ்வில் எடுத்து நடக்க வேண்டும் என்ற கோட்பாடு, திடஉறுதி, மனஓர்மை, தைரியம், சீர்மை போன்ற ஒழுக்கங்களை ஏற்படுத்துகின்றது. நபிமார்களையும் வேதங்களையும் ஈமான் கொள்வதனூடாக சமூக ஒற்றுமையும், பிறரை மதிக்கும் பண்பும், சமாதான விருப்பமும் உருவாகின்றது. இதுபோன்று "அல் கழா வல் கத்ர்" வேறு பல நற்பண்புகளை நிலைநிறுத்துகின்றது. மனிதனின் ஆரம்பம் பற்றி இஸ்லாத்தின் நிலைப்பாடு சமத்துவம், சகோதரத்துவம், போன்றவற்றுக்கு வழிகாட்டுகின்றது.
  - இஸ்லாம் பணித்துள்ள வணக்க வழிபாடுகள் ஒழுக்கப் பண்புகளை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டவை.
  - கொடுக்கல்-வாங்கல், குடும்ப வாழ்வு, குற்றவியல் தொடர்பான சட்டதிட்டங்கள் என்பன ஒழுக்கவியலை அடிப்படையாகக் கொண்டவை. அளவை நிறுவைகளில் மோசடி செய்யக் கூடாது என்பதும் சமநீதி பேணப்பட வேண்டும் என்பதும் ஏமாற்று, மோசடி, பொய் முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டும் என்பதும் கொடுக்கல்-வாங்கலில் உள்ள அடிப்படை அம்சங்களாகும்.
  - இஸ்லாம் குடும்ப வாழ்வில் நம்பிக்கை, ஒத்துழைப்பு, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, அன்பு, அரவணைப்பு, பொறுப்புப் பகிர்வு என்பன போன்றன நற்பண்புகள் உருவாவதற்கான போதனைகளைக் கொண்டுள்ளது.

    குற்றவியல் சட்டங்களின் அடிப்படையே ஒழுக்க வாழ்வைப் பாதுகாப்பதாக அமைந்துள் ளது. கொலை, மது, அவதூறு, களவு போன்றன மிகத் தெளிவான துர்க்குணங்களாகும்.
  - இஸ்லாம் மறுமையில் கிடைக்கும் அபரிமிதமான நன்மைகளை விபரித்து, ஒழுக்க வாழ்வுக்குத் தூண்டுகோல் வழங்குகின்றது. மறுமையில் முஸ்லிமின் தராசில் மிகப் பாரமானது நற்பண்புகள் என்றும் தனக்கு மிக நெருக்கமாக இருக்கத் தகுதியானவர்

நல்லொழுக்கமுடையவர் என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளமை இதற்கு நல்ல சான்றாகும்.

- நபி (ஸல்) அவர்கள் மனித வாழ்வுக்கு முன்மாதிரியானவர். வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் அவர் ஒரு சிறந்த வழிகாட்டி. எனவே, ஒழுக்கம் சார்ந்த அவரது வாழ்வைப் பின்பற்றுவதும் சிறந்த இபாதத்தாகும்; ஸுன்னாவாகும்.
- இஸ்லாம் வலியுறுத்தும் ஒழுக்கப் பண்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளும் காட்டப்பட்டுள்ளன.
- இஸ்லாமிய அகீதா சீராகவும் உறுதியாகவும் இருக்கும்போது ஒழுக்கப் பண்புகள் நிறைவாக இருக்கும். நபி (ஸல்) அவர்களின் தோழர்களிடம் காணப்பட்ட மிகப் பூரணமான நற்பண்புகள் அவர்கள் ஏற்றிருந்த கொள்கையில் உறுதியாக இருந்தமையாலேயே உருவாயின. எனவே, ஈமானிய உணர்வை அதிகப்படுத்துவதனூடாக நற்பண்புகளை அதிகரிக்கச் செய்யவும் நடைமுறைப்படுத்தவும் அது துணையாக அமையும்.
- இஸ்லாம் கடமையாக்கியுள்ள வணக்க வழிபாடுகளை வெறுமனே ஒரு சடங்காக எண்ணாமல் அவற்றின் தாற்பரியங்களை உணர்ந்து, செயற்படுத்தும்போது ஒழுக்கமாண்புகள் நடைமுறைக்கு வருவது இலகுவாக அமையும்.
- இஸ்லாம் வகுத்துள்ள சட்டதிட்டங்களை அச்சொட்டாகப் பின்பற்றுவதனூடாகவும் ஒழுக்க வாழ்வை நடைமுறைக்குக் கொண்டு வரலாம்.
- வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் இறை உணர்வுடனும் (தக்வா) தூய எண்ணத்துடனும் (இக்லாஸ்) கழிக்கும்போது தீய குணங்கள் உருவாவதற்கு வாய்ப்புகள் அருகிவிடும்.
- ‘‘ஹதீஸுல் முப்லிஸ்’’ ஊடாக இபாதத்களின் அதிகரிப்புக்கு ஏற்ப நற்பண்புகளும் ஒழுக்கவிழுமியங்களும் அதிகரிக்க வேண்டும் என்ற போதனை பெறப்படுவதால் தீய ஒழுக்கங்களைத் தவிர்த்து, நல்லொழுக்கங்களை அமுல்படுத்துவதற்குத் தூண்டுகோள் வழங்கப்படுகின்றது.
- பெற்றோரின் கண்காணிப்பும் வீட்டுச் சூழலும், கல்வித்தாபனம், பள்ளிவாசல் போன்ற பொது நிறுவனங்கள், ஊர்த் தலைமைத்துவம் போன்றன இவ்விடயத்தில் கரிசனையும் கண்காணிப்பும் காட்டுவதனூடாக பொது ஒழுக்க வாழ்வை நடைமுறைப்படுத்தலாம்.

- **முஸ்லிம்களிடம் காணப்பட வேண்டிய தனிமனித, குடும்ப, சமூக வாழ்வோடு தொடர்பான ஒழுக்கப் பண்புகள்**

  - தனிமனிதப் பண்புகள்

    இவற்றை இரண்டாக வகுக்கலாம்.

    1. ஆன்மீக ரீதியான பண்புகள்:

    தக்வா, இஹ்லாஸ், வர.்., ஸுஹ்த், குஷூ.்., முராகபா, முஹாஸபா, தவக்குல், ரிழா, மஹப்பதுல்லாஹ் போன்றன இத்தகைய பண்புகளாகும்.

    2. பொதுவான பண்புகள்

    உண்மை, நாணயம், நன்றியுணர்வு, தூய்மை, இரக்கம், வெட்கம், பொறுமை, அவயவங்களைப் பேணுதல், நேரம் பேணுதல், தியாகம் போன்ற பண்புகளாகும்.

- குடும்ப வாழ்வோடு தொடர்பான பண்புகள்

  அன்பு, விட்டுக் கொடுத்தல், புரிந்துணர்வு, பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்ளல், நிதானம், ஒத்துழைப்பு, முன்னுதாரணமாக வாழ்தல் போன்றன குடும்பம் சார் ஒழுக்க மாண்புகளாகும்.

- சமூக வாழ்வோடு தொடர்பான பண்புகள்

  நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல், பிற மனிதர்கள், உயிரினங்கள் மீது அன்பு வைத்தல், பிறரை மதித்தல், ஸலாம் கூறுதல், தும்மலுக்குப் பதில் கூறுதல், நோய் விசாரித்தல், ஜனாஸாவைப் பின்தொடர்தல், உதவி ஒத்தாசை புரிதல், தீங்கிழைக்காதிருத்தல், கடன் கொடுத்தல், உறவினர், அயலார் நலன் பேணுதல், விட்டுக் கொடுத்தல், மன்னித்தல், ஈகை விருந்தோம்பல், பிறர் விடயத்தில் நீதி பேணல், சமத்துவம், சகோதரத்துவம், தலைமைத்துவம், சமநிலை பேணல், பிறர் நலன் பேணல் போன்றன சமூக வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகளாகும்.

- ஒரு மு.ஃமினிடம் தனிமனித, குடும்ப, சமூக ரீதியான பண்புகள் வாழ்வில் அமுல்படுத்தப்படும் போதுதான் அவனது இஸ்லாமிய வாழ்வு பூரணமடைகின்றது.

- **உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி I** ஒழுக்கத்தை விருத்தி செய்வதற்கான போதனைகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் பற்றியும் முஸ்லிம்களிடம் காணப்பட வேண்டிய ஒழுக்கப் பண்புகள் பற்றியும் மாணவர்கள் விளங்கியிருப்பவை பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**படி II** மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவுக்கும் பின்வரும் தலைப்புக்களை வழங்குங்கள்.

- ஒழுக்கத்தை விருத்தி செய்து நடைமுறைப்படுத்துவதற்கான இஸ்லாமியப் போதனைகள்
- தனிமனிதனிலும், குடும்பத்திலும் ஒழுக்க மாண்புகள் வலிமையிழந்து வருவதற்கான காரணங்களும் அவற்றை நிவர்த்திப்பதற்கான வழிமுறைகளும்.
- சமூக வாழ்வில் ஒழுக்கத்தை மேம்படுத்துவதற்குத் தடையாக உள்ளவற்றை அடையாளம் கண்டு அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகள்.
- பாடசாலை வாழ்வில் ஒழுக்கத்தை கட்டியெழுப்புவதற்கான செயற்றிட்டமொன்றை உருவாக்குதல்.

**படி III** ஒவ்வொரு குழுவும் திரட்டிய கருத்துக்களை முன்வைத்துக் கருத்துப் பரிமாறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV** கருத்துப் பரிமாற்றத்தின் சாராம்சத்தை ஒவ்வொருவரும் எழுதிக் கொள்ள அறிவுறுத்துங்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை:**


- முகம்மத் அல் கஸ்ஸாலி, (2004), *இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள்,* சென்னை, இலக்கியச் சோலை வெளியீடு.
- அகார் முகம்மத் ஏ.ஸீ. (1991), *நபிவழி I, II,* பேருவல, அல்கலம் பதிப்பகம்.
- கஸ்ஸாலி இமாம், (1986), *பதவி மோகம்,* சென்னை, யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்.
- கஸ்ஸாலி இமாம், (1986), *நாயகத்தின் நற்பண்புகள்,* சென்னை, யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்.
- அக்ரம் முகம்மத், (2004), *ஆன்மிக வாழ்வு போதனைகளும் முறைமைகளும்,* பஸ்யாலை, முஸல்மான் பதிப்பகம்.
- சுக்ரி எம்.ஏ.எம். (1999), இஸ்லாமிய வாழ்வியல் கோட்பாடுகள், பேருவல, நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்.
- இஸ்மாயில் எஸ்.எச்.எம். (2000), இஸ்லாமிய ஒழுக்கவியல், குருநாகல், ஜ.அ.ஸு.மு.

# பாடசாலை மட்டக் கணிப்பீடு

# பாடசாலை மட்டக் கணிப்பீடு

## அறிமுகம்

கற்றல் - கற்பித்தல் - மதிப்பீடு ஆகியன கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீடு மதிப்பீட்டை பயன்படுத்த வேண்டும் என்பதும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டிய ஒரு விடயமாகும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்னேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகழும்) மதிப்பீட்டுக் கோட்பாடுகளுக்கிணங்க கற்றல் நடைபெறும் போதே மதிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இடம் பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாக கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ சோதனை நடாத்துவதோ அல்ல. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர்களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு தலையீடாகும். ஆதலால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங்களையும் இனங்கண்டு அவற்றிற்கு பரிகாரம் கண்டவாறு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமாகும்.

கற்றல்- கற்பித்தல் செயன்மூலம் தேடல் செயன்முறையின் பால் மாணவர்கள் வழிப்படுத்தப்படுகின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தை செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சஞ்சரித்து அவர்கள் செய்யும் வேலைகளை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவதோடு மாணவர் ஆற்றல் அபிவிருத்தி எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்கு தக்க அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து அவற்றை மாணவர்கள் சரியாகப் பெற்றுக்கொண்டார்களா என உறுதிப்படுத்தல் கற்றல்-கற்பித்தல் ஊடாகத் நிகழ வேண்டும். அத்தோடு அதற்கு தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். மதிப்பீட்டில் (கணிப்பீட்டில்) ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பொதுவாக பின்னூட்டல், முன்னூட்டல் எனப்படும்.

மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றல் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காகப் பின்னூட்டலையும் மாணவர்களின் திறமைகளையும் ஆற்றல்களையும் இனம்காணும்போது அவற்றை மேன்படுத்த, முன்னூட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல்- கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காக பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர்களுக்கு அவசியமாகின்றது. மதிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் சம்பந்தப்பட்ட ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாக மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்ட மதிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியா்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவா்களின் கற்றல் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் -கற்பித்தல் மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களுக்கும் மாணவா்களுக்கும் பயன்படுத்தத் தக்க அணுகுமுறைப் பேதங்கள் (வகைகள்) சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தினாலும், பரீட்சை திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே அவை தொடர்பாக பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பா் என எதிா்பார்க்கப்படுகின்றது. அப்பேதங்கள் வருமாறு.

1. ஒப்படைகள்
2. செயற்றிட்டங்கள்
3. அளவாய்வுகள்
4. தேடியாய்வுகள்.
5. அவதானிப்புக்கள்
6. கண்காட்சி / முன்வைத்தல்கள்
7. களச் சுற்றுலாக்கள்
8. குறுகிய எழுத்துப் பரீட்சைகள்
9. அமைப்புக் கட்டுரைகள்
10. திறந்த நூல் சோதனைகள்
11. ஆக்கச் செயற்பாடுகள்
12. செவிமடுத்தல் சோதனைகள்
13. செய்முறைச் செயற்பாடுகள்
14. பேச்சுக்கள்
15. சுய ஆக்கங்கள்
16. குழுச் செயற்பாடுகள்
17. எண்ணக்கரு படங்கள்
18. இரட்டைப் பதிவு - ஜேர்னல்
19. சுவா்ப் பத்திரிகைகள்
20. வினா-விடை நிகழ்ச்சிகள்
21. வினா-விடைப் புத்தகங்கள்
22. விவாதங்கள்
23. குழுக் கலந்துரையாடல்கள்
24. கருத்தரங்குகள்.
25. உடனடி ஆயத்தமின்றிய சொற்பொழிவு
26. பாத்திரமேற்று நடித்தல்

அறிமுகம் செய்யப்பட்டுள்ள மேற்படி கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டு முறைகள் அனைத்தையும், எல்லாப் பாடங்களினது எல்லா அலகுகளுக்காகவும் பயன்படுத்த எதிர்பார்கப்படவில்லை. தமது பாடத்திற்கும் குறித்த பாட அலகிற்கும் பொருத்தமான பேதங்களைத் தெரிவு செய்துகொள்வதற்கு அறிவூட்டம் பெற வேண்டும்.

ஆசிரியா் அறிவுரைப்படி வழிகாட்டியில் தமது மாணவா்களின் கற்றல் முன்னேற்றத்தை கணிப்பிடப் பயன்படுத்தக்கூடிய கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டுப் பேதங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசிரியா்கள் தமது மாணவா்களின் முன்னேற்றத்திற்காக அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தல் வேண்டும். இவற்றைப் பயன்படுத்தாது தவிர்த்தல் மாணவர் தமது அறிவாற்றல் மற்றும் உள எழுச்சி, உள இயக்க திறன்களை வளா்த்துக் கொள்வதற்கும் அவற்றை வெளிப்படுத்துவதற்கும் தடையாக அமையும்.

## பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## முதலாம் தவணை

**கருவி இலக்கம்** : **01**

**தேர்ச்சி** : **7.0**

**தேர்ச்சி மட்டம்** : **7.2**

**கருவியின் தன்மை** : **ஒப்படை**

வரலாற்றுக் குறிப்புக்களை ஆதாரமாக வைத்து இலங்கையில் இஸ்லாம் அறிமுகமான பின்னணியை ஓர் ஒப்படை தயாரிக்க ஒவ்வொரு மாணவனையும் வழிப்படுத்துங்கள்.

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | **நியதிகள்** | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| | | **தேர்ச்சி மட்டத்தினை** | | | |
| | | அடைந்துள்ளார் | | அடையவில்லை | |
| 1. | ஒப்படையின் குறிக்கோளை விளக்குதலும் குறிக்கோள்களுக்கும் தலைப்புக்கும் இடையிலான தொடர்பை வெளியிடலும் | 4 | 3 | 2 | 1 |
| 2. | தரவு, தகவல்கள் சேகரிப்பதற்காகக் கையாண்ட முறைகளின் பொருத்தப்பாடு | 4 | 3 | 2 | 1 |
| 3. | தரவு, தகவல் சேகரித்தலும் அவற்றைப் பதிவு செய்தலும். | 4 | 3 | 2 | 1 |
| 4. | பயன்படுத்திய உத்திகளின் பொருத்தப் பாடும் தர்க்கரீதியான தன்மையும். | 4 | 3 | 2 | 1 |
| 5. | முடிவுக்கு வருதலும் அவற்றுக்கு காரணம் காட்டலும் ஆக்கத்தை முன்வைத்தலும். | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி = $\frac{\text{புள்ளிகள்}}{2}$ | | | | 10 |

## பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## முதலாம் தவணை

**கருவி இலக்கம்** : **02**

**தேர்ச்சி** : **8.0**

**தேர்ச்சி மட்டம்** : **8.1**

**கருவியின் தன்மை** : **குழுக் கலந்துரையாடல்**

பெற்றார் பிள்ளைகளுக்கும், பிள்ளை பெற்றாருக்கும் நிறை வேற்ற வேண்டிய கடமை, உரிமைகள் பற்றி மாணவரிடையே குழுக் கலந்துரையாடல் ஒன்றை நடாத்த வழிப்படுத்துங்கள்.

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | **நியதிகள்** | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| | | **தேர்ச்சி மட்டத்தினை** | | | |
| | | அடைந்துள்ளார் | | அடையவில்லை | |
| 1. | கற்றற் செயன்முறையுடன் காட்டும் பொருத்தப்பாடு | 4 | 3 | 2 | 1 |
| 2. | குழுக்கலந்துரையாடலை ஒழுங்கு செய்தல், நெறிப்படுத்தல், தலைப்புக்களை ஒதுக்கிக் கொள்ளல் அறிவுறுத்தல்களைப் பின்பற்றல் | 4 | 3 | 2 | 1 |
| 3. | கலந்துரையாடலை முன்னெடுத்துச் செல்லத் தக்கவாறு விருத்திகரமான வகையில் கருத்துக்களை முன்வைத்தல் | 4 | 3 | 2 | 1 |
| 4. | முன்வைக்கப்படும் கருத்துக்களின் ஆக்கபூர்வமான, கணிசமான, தர்க்க ரீதியான தன்மை | 4 | 3 | 2 | 1 |
| 5. | பொழிப்பாக்கலும் முடிவுகளும் முடிவுக்களுக் கான காரணங்களை முன்வைத்தலும் | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி = $\frac{\text{புள்ளிகள்}}{2}$ | | | | 10 |

## பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## முதலாம் தவணை

**கருவி இலக்கம்** : **03**

**தேர்ச்சி** : **8.0**

**தேர்ச்சி மட்டம்** : **8.1**

**கருவியின் தன்மை** : **குழுக் கலந்துரையாடல்**

விவாக விலக்கு தனி மனிதரிலும் குடும்பத்திலும் சமூகத்திலும் ஏற்படுத்தியுள்ள பாதக விளைவுகள் பற்றியதோர் குழுக் கலந்துரையாடலை மேற்கொள்ள மாணவர்களை வழிப்படுத் துங்கள்.

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | **நியதிகள்** | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| | | **தேர்ச்சி மட்டத்தினை** | | | |
| | | அடைந்துள்ளார் | | அடையவில்லை | |
| 1. | கற்றற் செயன்முறையுடன் காட்டும் பொருத்தப்பாடு | 4 | 3 | 2 | 1 |
| 2. | குழுவாக உரையாடலை ஒழுங்கு செய்தல், நெறிப்படுத்தல், தலைப்புக்களை ஒதுக்கிக் கொள்ளல் அறிவுறுத்தல்களைப் பின்பற்றல் | 4 | 3 | 2 | 1 |
| 3. | கலந்துரையாடலை முன்னெடுத்துச் செல்லத் தக்கவாறு விருத்திகரமான வகையில் கருத்துக்களை முன்வைத்தல் | 4 | 3 | 2 | 1 |
| 4. | முன்வைக்கப்படும் கருத்துக்களின் ஆக்கபூர்வமான, கணிசமான, தர்க்க ரீதியான தன்மை | 4 | 3 | 2 | 1 |
| 5. | பொழிப்பாக்கலும் முடிவுகளும் முடிவுக்களுக் கான காரணங்களை முன்வைத்தலும் | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி = $\frac{\text{புள்ளிகள்}}{2}$ | | | | 10 |

## பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## இரண்டாம் தவணை

**கருவி இலக்கம்** : 01

**தேர்ச்சி** : 8.0

**தேர்ச்சி மட்டம்** : 8.2

**கருவியின் தன்மை** : **உடனடிச் சொற்பொழிவு**

பின்வரும் இரு தலைப்புக்களையும் வழங்கி மாணவர்கள் தயாராவதற்கு 20 நிமிடங்கள் வழங்குங்கள். பின்னர் ஒவ்வொரு வருக்கும் அவற்றுள் ஏதேனும் ஒரு தலைப்பை வழங்கி 7 நிமிடங்கள் உரையாற்ற வழிப்படுத்துங்கள்.

1. வீட்டை இஸ்லாமியமயப்படுத்துவதற்கான வழிமுறைகள்
2. வாழ்வில் ஹலால்-ஹராம் பேணுவதன் முக்கியத்துவம்

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | **நியதிகள் (சொற்பொழிவுக்கு உரிய நியதிகள்)** | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| | | **தேர்ச்சி மட்டத்தினை** | | | |
| | | அடைந்துள்ளார் | | அடையவில்லை | |
| 1. | அணுகுமுறையும் தலைப்பைத் தெளிவாக முன்வைத்தலும் அதன் பொருத்தப்பாடும். | 4 | 3 | 2 | 1 |
| 2. | ஒழுங்கமைப்பு, தலைப்புக்குப் பொருத்தமான வாறு விடயங்களை முன்வைத்தல், மொழிச் செம்மை | 4 | 3 | 2 | 1 |
| 3. | சிறப்பான மொழிப் பிரயோகங்கள், மேற்கோள்கள் போன்றவற்றை பயன்படுத்தல், ஆக்கபூர்வமான தன்மை | 4 | 3 | 2 | 1 |
| 4. | தெளிவு, குரல் கட்டுப்பாடு, முகபாவனை, அங்க அசைவுகள், நேரக்கப்பாடு, சரியான உச்சரிப்பு | 4 | 3 | 2 | 1 |
| 5. | தொகுப்பு, முடிவுகளுக்கு காரணம் காட்டல் | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி = $\frac{\text{புள்ளிகள்}}{2}$ | | | | 10 |

## பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## இரண்டாம் தவணை

**கருவி இலக்கம்** : 03

**தேர்ச்சி** : 9.0

**தேர்ச்சி மட்டம்** : 9.1

**கருவியின் தன்மை** : **குழுக் கலந்துரையாடல்**

தாம் வாழும் பிரதேசத்தில் பிற சமூகத்தவர்களுடனான அந்நியோன்யம் குறித்து குழுக் கலந்துரையாடலொன்றை நடாத்த மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | **நியதிகள்** | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| | | **தேர்ச்சி மட்டத்தினை** | | | |
| | | அடைந்துள்ளார் | | அடையவில்லை | |
| 1. | கற்றற் செயன்முறையுடன் காட்டும் பொருத்தப்பாடு | 4 | 3 | 2 | 1 |
| 2. | குழுவாக உரையாடலை ஒழுங்கு செய்தல், நெறிப்படுத்தல், தலைப்புக்களை ஒதுக்கிக் கொள்ளல் அறிவுறுத்தல்களைப் பின்பற்றல் | 4 | 3 | 2 | 1 |
| 3. | கலந்துரையாடலை முன்னெடுத்துச் செல்லத் தக்கவாறு விருத்திகரமான வகையில் கருத்துக்களை முன்வைத்தல் | 4 | 3 | 2 | 1 |
| 4. | முன்வைக்கப்படும் கருத்துக்களின் ஆக்கபூர்வமான, கணிசமான, தர்க்க ரீதியான தன்மை | 4 | 3 | 2 | 1 |
| 5. | பொழிப்பாக்கலும் முடிவுகளும் முடிவுக்களுக் கான காரணங்களை முன்வைத்தலும் | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி = புள்ளிகள் / 2 | | | | 10 |

## பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## இரண்டாம் தவணை

**கருவி இலக்கம்** : **03**

**தேர்ச்சி** : **9.0**

**தேர்ச்சி மட்டம்** : **9.2**

**கருவியின் தன்மை** : **சுவர்ப் பத்திரிகை**

உயிர்களிடத்தில் அன்பு, இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகள், சமூகத்தை வழிநடாத்தும் நிறுவனம் மஸ்ஜித் ஆகிய அம்சங்களை உள்ளடக்கி மாணவர்களது பல்வேறுபட்ட ஆக்கங்களைக் கொண்டமைந்த ஒரு சுவர்ப் பத்திரிகை தயாரிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | **நியதிகள்** | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| | | **தேர்ச்சி மட்டத்தினை** | | | |
| | | அடைந்துள்ளார் | | அடையவில்லை | |
| 1. | கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் காட்டும் தொடர்பு, பொருத்தப்பாடு | 4 | 3 | 2 | 1 |
| 2. | ஒழுங்கமைவும் பொதுவானதாக இருத்தலும் | 4 | 3 | 2 | 1 |
| 3. | அழகுபடுத்துவதற்காக கையாளப்பட்டுள்ள உத்திகளும் அவற்றின் பொருத்தப்பாடும் | 4 | 3 | 2 | 1 |
| 4. | உள்ளடக்கத்தின் ஆக்கபூர்வமான தன்மையும் தர்க்கரீதியான தன்மையும். | 4 | 3 | 2 | 1 |
| 5. | சுவர் செய்திப்பத்திரிகை என்றவகையில் ஆக்கத்தின் வெற்றிகரமான தன்மை | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி = $\frac{\text{புள்ளிகள்}}{2}$ | | | | 10 |

## பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## மூன்றாம் தவணை

**கருவி இலக்கம்** : **01**

**தேர்ச்சி** : **9.0**

**தேர்ச்சி மட்டம்** : **9.2**

**கருவியின் தன்மை** : **ஒப்படை**

இஸ்லாம் அனுமதித்துள்ள பொருளீட்டல் வழிமுறைகள் பற்றி ஓர் ஒப்படை தயாரிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | **நியதிகள்** | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| | | **தேர்ச்சி மட்டத்தினை** | | | |
| | | அடைந்துள்ளார் | | அடையவில்லை | |
| 1. | ஒப்படையின் குறிக்கோளை விளக்குதலும் குறிக்கோள்களுக்கும் தலைப்புக்கும் இடையிலான தொடர்பை வெளியிடலும் | 4 | 3 | 2 | 1 |
| 2. | தரவு, தகவல்கள் சேகரிப்பதற்காகக் கையாண்ட முறைகளின் பொருத்தப்பாடு | 4 | 3 | 2 | 1 |
| 3. | தரவு, தகவல் சேகரித்தலும் அவற்றைப் பதிவு செய்தலும். | 4 | 3 | 2 | 1 |
| 4. | பயன்படுத்திய உத்திகளின் பொருத்தப் பாடும் தர்க்கரீதியான தன்மையும். | 4 | 3 | 2 | 1 |
| 5. | முடிவுக்கு வருதலும் அவற்றுற்கு காரணம் காட்டலும் ஆக்கத்தை முன்வைத்தலும். | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி = $\frac{\text{புள்ளிகள்}}{2}$ | | | | 10 |

## பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## மூன்றாம் தவணை

**கருவி இலக்கம்** : **02**

**தேர்ச்சி** : **9.0**

**தேர்ச்சி மட்டம்** : **9.3**

**கருவியின் தன்மை** : **விவாதம்**

"இஸ்லாம் ஒன்றே பெண்களுக்கு மகத்தான அந்தஸ்தை வழங்கிக் கௌரவப்படுத்தியுள்ளது" என்ற தலைப்பில் ஒட்டியும் வெட்டியும் பேசும் விதமாக விவாதம் ஒன்றை ஏற்பாடு செய்ய மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | **நியதிகள்** | **புள்ளி வழங்கல் - தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார்** | | **அடையவில்லை** | |
|---|---|---|---|---|---|
| 1. | அணுகுமுறை தலைப்பை தெளிவாக அறிமுகஞ் செய்தல் | 4 | 3 | 2 | 1 |
| 2. | தலைப்புக்குப் பொருத்தமானவாறு விடயங்களை முன்வைத்தலும் ஒழுங்கமைவும். | 4 | 3 | 2 | 1 |
| 3. | தகவல்கள் ஆக்கபூர்வமாகவும் தர்க்கரீதியலும் முன்வைக்கப்பட்டிருத்தல் | 4 | 3 | 2 | 1 |
| 4. | பொருத்தமான முக பாவனையும் அங்க அசைவுகளும் நேரமுகாமையும் | 4 | 3 | 2 | 1 |
| 5. | பொழிப்பாக்கல் - முடிவுகளையும் அம்முடிவுகளுக்கான காரணங்களையும் முன்வைத்தல். | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி = $\frac{\text{புள்ளிகள்}}{2}$ | | | | 10 |

## பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## மூன்றாம் தவணை

**கருவி இலக்கம்** : **03**

**தேர்ச்சி** : **10.0**

**தேர்ச்சி மட்டம்** : **10.1**

**கருவியின் தன்மை** : **குழுக் கலந்துரையாடல்**

இன்று மாணவரிடையே சீரழிந்து வரும் ஒழுக்கப் பண்பாடுகளை விருத்தி செய்வதற்கான வழிமுறைகள் யாவை என்பது குறித்து குழுக் கலந்துரையாடல் ஒன்றுக்கு மாணவர்களை வழிப்படுத் துங்கள்.

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | **நியதிகள்** | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| | | **தேர்ச்சி மட்டத்தினை** | | | |
| | | அடைந்துள்ளார் | | அடையவில்லை | |
| 1. | கற்றற் செயன்முறையுடன் காட்டும் பொருத்தப்பாடு | 4 | 3 | 2 | 1 |
| 2. | குழுவாக்கத்துரையாடலை ஒழுங்கு செய்தல், நெறிப்படுத்தல், தலைப்புக்களை ஒதுக்கிக் கொள்ளல், அறிவுறுத்தல்களைப் பின்பற்றல் | 4 | 3 | 2 | 1 |
| 3. | கலந்துரையாடலை முன்னெடுத்துச் செல்லத் தக்க வகையில் விருத்திகரமான வகையில் கருத்துக்களை முன்வைத்தல் | 4 | 3 | 2 | 1 |
| 4. | முன்வைக்கப்படும் கருத்துக்களின் ஆக்கபூர்வமான, கணிசமான, தர்க்கரீதியான தன்மை | 4 | 3 | 2 | 1 |
| 5. | பொழிப்பாக்கலும் முடிவுகளும், முடிவுக்களுக் கான காரணங்களை முன்வைத்தலும் | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி = $\frac{\text{புள்ளிகள்}}{2}$ | | | | 10 |